உ

# ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

(குறிப்புரை முதலியவற்றுடன்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்.

சென்னை - 90

உ

திருவாவடுதுறை யாதீன

மகாவித்துவான்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

இயற்றிய

# ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்

M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dipl - Geog.

எழுதிய குறிப்புரையுடன்

இரண்டாம் பதிப்பு

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

சென்னை-90

1986

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண் 28

முதற் பதிப்பு—1962
இரண்டாம் பதிப்பு—1986
பிரதிகள்—1000

© டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம், பெஸன்ட் நகர்
சென்னை-90

விலை ரூ. 8

ஜீவன் அச்சகம், சென்னை-5.

# முன்னுரை

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழகம் கண்ட பெரும்புலவர்களுள் ஒருவர். அவர்களிடம் தமிழ் கற்ற மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள், தம் ஆசிரியர்பால் தாம்கொண்ட அன்பைப் பலமுறைகளில் புலப்படுத்தியுள்ளார்கள். அப்புலவர் பெருமானின் நினைவை இந் நூல் நிலையம் போற்றுவது அதன் கடமையென்று கருதி ஆண்டுதோறும் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடவேண்டுமென்றும் அந் நாளில், இயலுமானால் அவர்கள் இயற்றிய பிரபந்தங்களுள் ஒன்றை வெளியிடவேண்டுமன்றும் தீர்மானித்து, அவ்வாறே சென்ற ஆண்டு முதன்முதலாக மயிலாப்பூரில் ரானடே ஹாலில், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ V. சுப்பிரமணிய நாடார் அவர்களின் தலைமையில் 12—4—61 அன்று அந்நாள் கொண்டாடப்பெற்றது. அச்சமயம் திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்ட நாயகிமாலை என்னும் நூல் வெளியிடப் பெற்றது.

அம்முறையில் இவ்வாண்டு சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் வெளியிடப் பெறுகின்றது. அதனை நன்கு ஆராய்ந்து குறிப்புரை முதலியவற்றினை எழுதிச்சேர்த்து அழகுறப் பதிப்பித்து உதவிய உயர் திருவாளர் பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர் அவர்களுக்கு இந்நூல்நிலையம் மிகவும் கடப்பாடுடையது.

*8—4—1962.*

## பதிப்பாளர் குறிப்பு

சேக்கிழார் திருநாளைக் கொண்டாடும் அன்பர்கள் விருப்பத்திற் கிணங்க இரண்டாம் பதிப்பு இப்பொழுது அச்சிடலாயிற்று.

*சென்னை-90*
*1-7-1986*

**டாக்டர் உ. வே. சாமிநாதையர்**
*நூல்நிலையத்தார்*

திரிசிரபுரம் மகாவித்துவான்

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

இயற்றிய

# ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

## முகவுரை

சீர்பூத்த செந்தமிழ் மொழியில் வழங்குகின்ற பலவகைப் பிரபந்தங்களுள் பிள்ளைத்தமிழென்பதுமொன்று. பிரபந்தத் தலைவனைக் குழந்தையாகக் கொண்டு காப்பு முதலியவாகப் பகுத்துக்கொண்டு பாடுவது. அது - ஆண்பாற்பிள்ளைத் தமிழென்றும் பெண்பாற்பிள்ளைத் தமிழென்றும் இரண்டு வகைப்படும். (பிள்ளை-ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாகிய குழவிப் பருவப்பெயர்) ஆண்பாற் பிள்ளைத் தமிழ்நூல்களுள் ஒன்றாகிய குன்றைநகர் குலக்கவியைப் பற்றிய இப்பிள்ளைத்தமிழும் சிறப் புற்றதொன்றாகும். இப்பிள்ளைத் தமிழில் சேக்கிழாரின் பெருமை யையும் அவர் பாடிய திருத்தொண்டர் புராணத்தின் பெருமை யையும் கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோல் கவிசிகாமணி மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் செய்திருக் கிறார். பிள்ளையவர்களின் பெரியபுராணப் பிரசங்கத்தை நாடோறும் கேட்டுவந்த வன்றொண்டச் செட்டியாரென்ற பெருந்தகை "திருத்தொண்டர்களுடைய பெருமைகளை நன்றாக யாவரும் அறியும்படி பெரியபுராணத்தின் வாயிலாகப் புலப்படுத்தி யருளிய சேக்கிழார்திறத்தில் பிள்ளைத்தமிழொன்று ஐயா அவர்கள் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, அஞ்ஞான்று பிள்ளை யவர்கள் "பெரியபுராணத்திற்கு வன்றொண்டர் வாய்மொழி யாகிய திருத்தொண்டத்தொகை காரணமாக இருந்தது; அப்புராணத்தை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழுக்கு வன்றொண்டச் செட்டியாரது வாய்மொழியே காரணமாயிற்று; இது நல்ல அறிகுறி" என்று எண்ணி வியந்து இறையருளின் வலியால் சிலதினங்களில் இச்சீரிய பிள்ளைத்தமிழை யாத்து முடித் தனர். பிள்ளையவர்கள் செய்த பிள்ளைத்தமிழ் நூல்களுள் இறுதியில் செய்தது இதுவேயாகலின், நாத்தழும்பேற அவருடைய முதிர்ந்த அநுபவம், கல்விப்பெருக்கு, மேதாவிலாசம், சொல் வன்மை, சைவசீலம் அனைத்தும் ஒரு தனிச்சிறப்பொடு இதில் மிளிரக்காணலாகும்.

இப்பிள்ளைத்தமிழில் சேக்கிழாரது குலம், குணம், அதிகாரம், கல்வி, பக்தி, ஞானம் முதலியவற்றின் பெருமைகளைப் பலபடியாகப் பிள்ளையவர்கள் பாராட்டியிருக்கிறார். சேக்கிழாரை ஓர் அவதாரபுருஷராகவே கருதி அவர்பால் காழ்த்த பத்திமை பூண்டவராயிருப்பதைக் காணலாம். பெரியபுராணம் பத்தியை மிகுவிக்கும் என்றது இவரது அநுபவத்தால் கண்டவுண்மையாதலின் அதனை நூலகத்து ஆங்காங்கே "என்றும் பத்திரசங்கனி கனியே," "பத்திச்சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ," "புலஞ்சார் பத்தி விளைநிலமே," "ஒழியாப் பத்திக் கடல் வருக" எனப் பாராட்டிச் செல்கிறார். ஏனைய பிள்ளைத்தமிழ் நூல்களைப் போலல்லாமல் இந்நூலுள் காப்புப்பருவம் புது முறையில் பொருத்தமுற அமைக்கப்பட்டிருப்பது போற்றத் தக்கது. பாயிரத்தொடக்கக் காப்புச் செய்யுளிலேயே விநாயகக் கடவுள் வணக்கத்தில் அவரது விசுவரூபத்தைப் பாராட்டியுள்ளமையோடு, "உலகெலாம்" என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குப் பொருள் கொள்ளவேண்டிய முறையையும் அக்காப்பிற் புலப்படுத்தியிருப்பது இவரது நுண்பொருள் காணுமாற்றலுக்குச் சான்று பகரும்.

இனி, இப்பிள்ளைத்தமிழின் வாயிலாகப் பல பேருண்மைகளை இவர் தெரிவிக்கின்றார். குருவணக்கமும் அவையடக்கமும் கூறுஞ் செய்யுளுள், திருவாவடுதுறையாதீனச் சிறப்பையும், ஆதீன குரவர்களின் பரம்பரையையும், உமாபதி சிவாசாரியசுவாமிகளின் அளப்பரிய மகிமையையும், தம் காலத்துக் குருமூர்த்தியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக மகாசந்நிதானத்தின் பெருமையையும் விளக்கியுள்ளார். பிள்ளையவர்கள் தமக்குத் துறைசையாதீனத்திடத்துள்ள பெரும்பற்றுதலை இந்நூலின் தொடக்கத்தும் இறுதியிலும் செவ்வையுறப் பொதிந்து வைத்துள்ளார். இப்பிள்ளைத்தமிழில், பலவகைச் சொல்லணிகள், பொருளணிகள், சொற்சித்திரங்கள் வருணனைகள், புராண வரலாறுகள், நாயன்மார்களின் பெருமைகள், தேவாரத்திலுள்ள மந்தணப் பொருள்களுக்கு விளக்கங்கள், சைவசித்தாந்தப் பேருண்மைகள், வேளாளர் சிறப்பு, தொண்டைநாட்டின் வளச் சிறப்பு ஆகிய இன்னோரன்னவை மெருகுறச் சிறந்து மிளிர்கின்றன. இப்பிள்ளைத்தமிழைக் கேட்ட வித்துவான்கள் அனைவரும் இதனைப் பாராட்டி மகிழ்ந்ததோடன்றிப் பிள்ளையவர்களே மீண்டும் மீண்டும் இதனைப் படிப்பித்துக் கேட்டு இன்பமுறுவதுமுண்டு என்றனர் டாக்டர் ஐயரவர்கள். சுருங்கக்கூறின், தேவாரம் பெரிய புராணம் முதலிய நூல்களில் ஈடுபட்டுள்ள வித்துவான்கள் இந்தச் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் ஈடுபடாமலிரார்.

இத்தகைய பிள்ளைத்தமிழுக்கு மகாவித்துவான் பிள்ளையவர்களின் 148-ஆவது பிறந்தநாள் நினைவு விழாவையொட்டி ஓர் குறிப்புரையெழுதி வெளியிட வேண்டுமென்று, அடியேனை ஒரு பொருட்டாகமதித்து, டாக்டர் ஐயரவர்களின் நூல் நிலையம் பணித்தபோது என்னுடைய சிறுமையையும் பிள்ளையவர்களின் சைவநலப் பெருமையையும் நன்கு உணர்ந்தவனுயினும், அவரருளை முன்னிட்டே எழுதப்புகின் இறையருளும் சேக்கிழார் பேரருளும் என் ஆசிரியப்பெருந்தகை ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகளின் தோன்ருத்துணையும் கைந்நீட்டியுதவுமெனத் துணிவு பிறக்க, ஒல்லும் வகையான் ஒருவாறு குறிப்புரை வரைந்துள்ளேன். இவ்வுரையாக்கத்தில், குணங்கள் காணப்படின் அவை பிள்ளையவர்களின் ஆசியினுலேற்பட்டவை யெனவும், குற்றங்கள் காணப்படின் அவை என் மந்த புத்தியாலேற்பட்டவையெனவும் கொண்டமையுமாறு வேண்டுகின்றேன்.

எனது காலத்தையெல்லாம் வீணுக்காமல் தமிழ்த்துறையிற் செலுத்தி எனக்குத் தோன்ருத்துணையாய் நின்று திருவருள் புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணி யெண்ணி வாழ்த்துகின்றேன்.

பிலவ ௵
பங்குனி ᏞᏝ 19
1—4—62
திருவல்லிக்கேணி.

ஸி. ஜெகந்நாதாசார்யர்.

# மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வரலாற்றுச் சுருக்கம்

திரிசிபுரம் மகாவித்துவான் என்றும் பிற்காலக் கம்பர் என்றும் புகழ்பெற்ற மீனுட்சிசுந்தரம்பிள்ளை கணக்காயர் சிதம்பரம் பிள்ளைக்கும் அவர் மனைவி அன்னத்தாச்சிக்கும் அருமகவாக 1815-இல் ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி திரிசிரபுரம் ஜில்லா அதவத்தூரில் பிறந்தார். சைவ வேளாள மரபினர். இவர் தந்தையார் தூய சைவ ஒழுக்கம் மேற்கொண்டவர். தமிழ் நூல்களில் நல்ல பயிற்சியுள்ளவர். இங்ஙனம் ஒழுக்கமும் கல்வியும் ஒருசேரத்திகழ்ந்த மரபில் வந்த பிள்ளையவர்கள் இளம்பிராயத்திலேயே கல்விகேள்விகளிற் சிறந்து விளங்கினர். நினைவாற்றல் இவருக்கு மிகுதியும் உண்டு. இவர் தமது 16-ஆவது ஆண்டில் காவேரி ஆச்சியை மணம் புரிந்துகொண்டார். இளமையில் சிரபுரம் மௌனமடத்தில் அக்காலத்துத் தங்கியிருந்த திருவாவடுதுறை ஸ்ரீ வேலாயுத முனிவரிடம் இலக்கியங்களும் சமயநூல்களும் கற்றுணர்ந்தார். அறிவுத்தேட்டம் மிகப் பெருக, 'கொங்கெங்கே யெங்கே' என்று நறுமண மலர்களை நாடிச்செல்லும் தேனீ போன்று புலமை சான்ற பலரையும் அடுத்து வழிபட்டு அரிய நூல்கள் பல கற்றுத்தேர்ந்தார். மனைதொறும் ஐயமேற்று வந்த ஒரு பரதேசியுடன் தெருத் தெருவாகச் சென்று பிற்றைநிலை முனியாது நின்று தண்டியலங்காரம் அவரிடம் பாடம் கேட்டனர் என்ப. சில காலம் திருவாவடுதுறை யாதீனத்து, ஆதீனகர்த்தராகவிருந்த வேளூர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் தங்கினர். பின்னர், லக்ஷ்மண பிள்ளை என்பவருடைய ஆதரவு பெற்று, சென்னைக்குச் சென்று அங்கு பல பெரும் புலவர்களின் நட்புரிமையைப் பெற்றுத் தாம் கற்றிருந்த நூல்களில் தமக்கு ஏற்பட்டிருந்த பல ஐயங்களைப் போக்கிக் கொண்டார். அங்கிருந்த பொழுதுதான் மழவை மகாலிங்கையர் என்ற புலவர் பெருமான், இவர் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழைப் புகழ்ந்து பாராட்டிய தென்பர்.

இதன் பின்னர்த் துறைசையாதீனம் சென்று அங்கு ஸ்ரீ அம்பலவாண முனிவரிடம் பல சமய நூல்களும் பிறவும் கற்றதுடன், தாமும் பல மாணவர்கட்குப் பாடம் சொல்லி வந்தார். இவரது தந்தையார் 1840-இல் சிவபதமுற்ருர். இவரிடம் கற்ற மாணவர் பலராவர். பூவாளூர்த் தியாகராச செட்டியார், சவரிராயலு பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, தேவராச பிள்ளை முதலியோர் அவருள் முக்கியமானவர் என்னலாம். மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் துறைசையாதீனம் சின்னப்பட்டத்திருந்தபோது, இப்புலவர் பெருமான், சீகாழிக்கோவை, திருத்தில்லை யமகவந்தாதி, திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைச் செய்தார். 1854-இல் பல சான்ருேர்களும் செல்வர்களும் கூடி இவருக்கு மகாவித்துவான் என்ற பட்டம் அளித்தனர். அப்பொழுது துறைசை ஆதீனத்தலைவர், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் ஆவர். 1869-இல் இப்பெரியார் பரிபூரண தசையடைய, மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆதீனத் தலைவர் ஆனுர். விரைவாகவும் இனிமையாகவும் பாடும் ஆற்றலுடையவராதலின் பிள்ளையவர்களையே செய்யுள் இயற்றித் தருமாறு வேண்டிப் பல புலவர்கள் ஆதீனத் தலைவர்பால் பரிசு பெற்றுச் செல்வதுண்டு என்பர். இவராற்றிய பெரியபுராணப் பிரசங்கத்தைக் கேட்டுவந்த வன்ருெண்டச் செட்டியாரென்பார் சேக்கிழார் திறத்தில் பிள்ளைத்தமிழொன்று செய்தருள வேண்ட, அவர் வேண்டுகோளின்படி சேக்கிழார் பிள்ளைத்தமிழ் சிறப்புறப் பாடிஞர். இதுவே, இவரியற்றிய பிள்ளைத்தமிழ்களுள் இறுதியதாகும். 1871-ஆம் ஆண்டில்தான் டாக்டர் ஐயரவர்கள் இப் பெரியோரை முதல்முதல் சந்தித்தது. அதிலிருந்து நட்பு வரவரப் பெருகி ஐயரவர்கள் பிள்ளையிடம் பல நூல்கள் பாடம் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தமது புலமைத்திறத்துக்கும் கல்வி நிறைவிற்கும் அப்புலவர்பெருமானே காரணம் என்று ஐயரவர்கள் பிள்ளையவர்களை வாயார வாழ்த்தியுள்ளார். 1876 பிப்ரவரி மாதம் தமது தமது 61-ஆவது ஆண்டில் பிள்ளையவர்கள் சிவபதம் அடைந்தார்.

இப்புலவர் சிகாமணி இயற்றிய புராணங்கள் எழுபதின் மேற்பட்டன. பதிகம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, யமகவந்தாதி, திரிபந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, மாலை, தூது என்று பல சில்லறைப் பிரபந்தங்களும் இயற்றியுள்ளார். அவைகளில் 44 பிரபந்தங்களை ஐயரவர்கள் பதிப்பித்துள்ள பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டிற் காணலாம்.

**பண்பும், புலமையும்**

காட்சிக் கெளிமையும், பணிவும் உள்ளவர். உபகார சிந்தை மிகுந்தவர். 'இவருடைய அரிய குணங்களுள் பொறுமை, திருப்தி, தம்மை வியவாமை, பிறர்குற்றம் கூறுமை, பிறரைப் பாராட்டல், இரக்கம், நன்றியறிவு, சிவபக்தி, மாணுக்கர் பாலுள்ள அன்பு முதலியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம்' என்று எழுதுவர் டாக்டர் ஐயரவர்கள். இயற்கையாகவே கவித்துவசக்தி வாய்ந்தவர். 'சுவையற்ற பாடல்களைச் செய்யும் உலைக்கூடமாக இவர் மனம் இராமல், வளம்பெற்ற செய்யுட்களின் விளைநிலமாகவே இருந்தது: செய்யுள் இயற்றுவது இவருக்குத் தண்ணீர் பட்டபாடு' என்று ஐயரவர்கள் எழுதுதல் காண்க.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியருளிய

# ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

## பாயிரம்

### விநாயகக்கடவுள் வணக்கம்

1. மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன
வாய்க்கடைத் தோற்றியவிரு
மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன
மார்பின்முத் தாரமென்னப்
பாமேவு பேருதர பந்தமென வரைசூழ்
படாமெனத் தாளின்முத்தம்
பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை யஞ்சலிப்பாம்
ஏமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியி
னிணங்குற வெழுப்புலகெலா
மென்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளு
மியல்பனைத் துந்தெரித்து
நாமேவு மம்முதலொ டொன்றவினை யுருபுதொக
நான்கனடி யாதிசெய்து
நாற்சீரி ஞெனெறி விளக்கியொளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவிதழையவே.

*[குறிப்புரை :]—எந்த நூற்கும் மங்கலமொழி முதலில் வகுத்துக் கூற வேண்டுமென்பது இலக்கணமாதலின் 'மா' என்று தொடங்கினர். மா - பெருமை. மேவுதல் - பொருந்துதல். வான் பிறை - ஆகாயத்துப் பிறைச்சந்திரன். முடிப்பிறை - விநாயகரின் திருமுடியிற் சூடிய பிறை. வாய்க்கடை - ஆறும்வேற்றுமைத் தொகை. மருப்பு - யானைக்கொம்பு. கோடு - கோடாயுதம். ஆரம் - மாலை. பாமேவு - பரவியிருக்கின்ற; இனி, சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற எனினுமாம். உதரபந்தம் - வயிற்றுக்கட்டு;*

வடமொழித்தொடர். மத்தள வயிறனுதலின், வார்க்கட்டுபோல் உதரபந்தம் வேண்டிற்று. அரை - இடுப்பு. படாம் - ஆடை. முத்தம் - முத்து. வான்பிறை விரவ என இயையும். மேலோங்கு பேருருப் பண்ணவன் - பெரிய உருக்கொண்டு நெடிய ஓங்கிநிற்கும் தேவன்: சர்வவியாபி என்றபடி. விநாயகக் கடவுள் பேருருக் கொண்டு மேலோங்கி வளரும்போது வானத்துள்ள பிறைச் சந்திரன் தோன்றிய முறைகள் கூறியபடி. வான்பிறை, என்ன, என்ன, என்ன, என்ன, என, என, என விரவ மேலோங்கு பேருரு என்றமையால், விநாயகரது விராட்ஸ்வரூபம் வளர்ந்த நிலைகள் குறிக்கப்பட்டன. கயமுகாசுரனைக் கொல்ல அவர் ஒரு கோட்டினைப் பறித்துக் கையிற் கொண்டார் என்ப. இக்கோட்டினையே எழுத்தாணியாக்கொண்டு பாரதம் எழுதினுரென்பதும் நினைக; ''அங்கூரெழுத்தாணிதன் கோடாக வெழுதும் பிரான்'' என்றார் வில்லிபுத்தூரரும். ஏமம்-ஏம் என இடைக்குறை. ஏம் + மேவும் = ஏமேவும்: 'மவ்வீறொற்றழிந்து'. ஏமம் = ஹேமம்: பொன். ஞான சபை - சிற்சபை. இறைவர் - நடராசப்பெருமான். மேனியின் இணங்குற எழுப்பு - வடிவத்திற்குப் பொருந்த எழுப்பிய: சிதாகாச வடிவமாகலின், ஓசை அருள்நாதத்தினின்றும் வானிழலாக எழுந்தது. மறை-வேதவாக்கு: 'உலகெலாம்' என்னுந் தேவ வாக்கை வேதவாக்காக்கொண்டு என்றமையால், பெரியபுராணம் மறைபோல் போற்றத்தக்கதென்றாயிற்று. இறைவனருளிய 'உலகெலாம்' என்பது பெரியபுராணத்து முதற்றிருப்பாட்டின் முதல். உயிர் - ஜீவான்மாக்கள். அருளும் இயல்பு - திருவருட்டிறம். தநு கரண புவன போகங்களைக் கொடுத்தல், உபதேசமொழிகள் வழங்கல் போல்வன; மற்றும், சரியை கிரியை யோக ஞானங்களால் வழிபாடாற்றும் உயிர்கட்கு அருள்செய்யுந்திறம் என்பதுமாம். 'நாமேவு' என்றது, எல்லார் நாவிலேயும் பயிலவேண்டும் என்ற குறிப்பினது; அம் முதல் - 'உலகெலாம்' என்பது. ஒன்ற-இயைய. 'வினையுருபு தொக' என்றது - இடைநிலையும் விகுதியும் தொக்கு நிற்பப் பகுதி மாத்திரமாய் நிற்றல்; எனவே, வினைத்தொகையாக என்றபடி. நான்கனடியாதி - நான்காமடியின் முதலிலுள்ள 'மலர்' என்பது. ஆகவே, 'உலகெலாம் மலர்' என இயைத்துப் பொருள் கொள்ளல் வேண்டும் என்பது பிள்ளையவர்கள் கருத்தாயிற்று. கருத்தாகவே, 'மலர்ச்சிலம்படி' என்று பாடங்கொள்வதோ, 'மலர்போன்ற சிலம்படி' என்று உரைகாணுதலோ பிள்ளையவர்களுக்கு உடன்பாடன்று என்பது விசதம். அருண்மொழித்தேவர்க்கும் இஃதே கருத்தெனக் காட்டப்பட்டது. நாற்சீர் - கலிவிருத்தமாதலின்; 'அளவடி நான்கின் கலிவிருத்தம்மே'. நாற்சீரின் நானெறி விளக்கியதாவது - 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்ற நான்காமடியில், முறையே 'மலரடி' என்பது ஞானத்

தையும், 'சிலம்படி' என்பது யோகத்தையும், 'அடி வாழ்த்தல்' என்பது கிரியையையும், 'அடி வணங்குவாம்' என்பது சரியையை யுங் குறிப்பதாகக் கொள்ளும் முறைபற்றி. இதன் விரிவு வல்லார் வாய்க் கேட்டுணர்க. தழையவே அஞ்சலிப்பாம் என முடியும். (1)

## குருவணக்கமும் அவையடக்கமும்

2. ஓங்குகயி லாயபாம் பரைநந்தி யடிகட்
குறுமரபெட் டாவதுபிற் றோன்றலா யெங்க
ளுயர்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய குரவற்
குற்றபத்தொன் பதாவதுமுற் றோன்றலாய்ப் பொலிந்து
தேங்குசிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்து
திகழுமா பதிசிவனே குன்றையுற மேவித்
திருந்துமேர் வளங்கொண்டு பெருமையின்மே லாகிச்
சிறத்தலாற் செம்மேனிக் குமரவே ளொத்தும்
பாங்குபெறத் துதிக்கையொடோர் கோட்டத்த ஞய
பயிற்சியினக் குமரவே டிருத்தமைய ஞெத்தும்
பரவுசேக் கிழானெனும்பேர் பரித்தலினக் கணேசப்
பண்ணவனே யினிதுயிர்த்த திருத்தாதை யொத்தும்
வீங்குபுகழ் படைத்தவருண் மொழித்தேவன் புராணம்
விரித்துரைத்தா னவனடிதாழ்ந் தென்னறிவிற் கேற்ப
மேயபிள்ளைத் தமிழெனவொன் றுரைப்பலஃ தறிவான்
மிக்கவர்தங் குழாத்தினுக்கு மிக்கநகை தருமே.

(கு-ரை) குரு என்ற வடசொல் - அஞ்ஞானவிருளை யொழிப் பவனென்னு உறுப்புப் பொருள்படும்: (கு-இருள்.) ஈண்டு, உமாபதி சிவாசாரியரைக் குரு என்றது. கயிலாய பரம்பரை - திருநந்தி தேவர் முதற்றொடங்குவது: இறைவனிடம் ஞான நூல் கேட்ட சைவமுதற் குருநாதன் நந்திதேவரே யாதலின் என்க. இந்நந்தி தேவர்க்குப்பின் எட்டாவது குருமூர்த்தமாகுபவர் உமாபதி சிவம்: இந்த உமாபதி சிவாசாரியரே நமது பிள்ளையவர்கள் காலத் துக் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிககுரவற்குப்பத்தொன்பதாவது முன்தோன்றலாவர். 'எங்கள் உயர் திருவாவடுதுறைச் சுப்பிரமணியகுரவர்' என்றமையால், இவ்வாதீனத்திடத்தும் இம்மகாசந்நிதானத்திடத்தும் பிள்ளையவர் களுக்கு இருந்த பக்தியும் சைவநலமும் விளங்கும். சிவப்பிரகாசம் - இது பதினுன்கு சைவசித்தாந்த சாத்திரங்களுளொன்று; இதன் ஆசிரியர் உமாபதி சிவாசாரியர். சிவஞான போதம், சிவஞான சித்தியார் இவைகளைப் பின்பற்றிச் சித்தாந்த நுணுக்கங்களை யெல்லாம் விளக்கிச் சிவம் பிரகாசிக்கச் செய்வது. 'முதலிய'

என்றது, உமாபதி சிவாசாரியர் இயற்றிய ஏனை ஏழு நூல்களையும் குறித்தபடி. அவையாவன:— திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை விளக்கம், சங்கற்பநிராகரணம் என்பன. பொலிந்து, மலர்ந்து, திகழும் உமாபதிசிவனே அருண்மொழித்தேவன் புராணம் விரித்துரைத்தான் என இயையும். இதன் இடைப்பிறவரலாக, அருண்மொழித்தேவன் புகழ் கிளந்தபடி. அருண்மொழித்தேவன் முருகவேளையொத்தும், கணேசரையொத்தும், சிவபிரானையொத்தும் வீங்குபுகழ்படைத்தான் என்றது. இதில், சிலேடை நயம் காண்க. அருண்மொழித்தேவன் - சேக்கிழாரின் பிள்ளைத்திருநாமம். சேக்கிழார்க்கும் முருகனுக்கும் ஒப்பு - குன்றைமேவுதல், ஏர்வளங்கொள்ளல், பெருமையின் மேலாகிச் சிறத்தல் இம்மூன்றிலும். விளக்கம்:—குன்றைமேவுதல் - குன்றத்தூரில் பிறந்து பொருந்தியிருத்தல், குன்றுதோறுடுதல். ஏர்வளங்கொள்ளல் - உழவுவளங்கொண்டு சிறத்தல்; அழகுவளங்கொண்டிலங்குதல். பெருமையின் மேலாகிச்சிறத்தல் - புகழின் மேம்பட்டுத்திகழ்தல், பெரிய மயில்மீது ஏறித் திகழ்தல். குன்றத்தூர், சென்னைக்கடுத்த பல்லாவரத்திற்கருகிலுள்ளது. இது, இக்காலத்துக் குண்ணத்தூர் என வழங்கப்படும். மையில் - மயில் என்பதன் முதற்போலி. சேக்கிழார்க்கும் கணேசருக்கும் ஒப்பு:—துதிக்கையுடையனுதல். ஓர்கோட்டத்தனுதல். விளக்கம்: துதிக்கை - துதித்தல்; யானைத் துதிக்கை. ஓர் கோட்டத்தனுதல் - புலியூர்க்கோட்டத்தையுடையனுதல், ஒற்றைக்கொம்பினையுடையனுதல், கோட்டம் என்பது - பெரிய நாட்டிற்குட்பட்ட பெரும்பகுதி. தொண்டைநாடு புழற் கோட்டம் புலியூர்க்கோட்டம் முதலாக இருபத்துநான்கு கோட்டங்களையுடையதென்க. இவற்றுள், புலியூர்க்கோட்டம் - குன்றத்தூர்நாடு, போரூர்நாடு, மாங்காடுநாடு, அமரூர்நாடு, கோட்டூர்நாடு என்ற ஐந்துநாடுகளைக் கொண்டதென்றுங் கூறுப. கோட்டத்தன் என்பதைக் கோடு அத்தன் எனப்பிரித்துப் பொருள் கோடலுமாம். தமையன் - அண்ணன்: கணேசன்: விநாயகன்- சேக்கிழார்க்கும் சிவபிரானுக்கும் ஒப்பு:—சேக்கிழான் என்ற பேரைத் தரித்தலில், சேக்கிழான் - தாம் உதித்த சேக்கிழார் என்ற மரபை விளக்கியமையால் வந்த பெயர்; இடபத்திற்குரியவர். சே - எருது. கிழான் - உரியவன். குழாம் - கூட்டம். அவனடி தாழ்ந்து - குருவணக்கம் கூறியபடி. குழாத்தினுக்கு மிக்க நகை தரும் - அவையடக்கங் கூறியபடி. ஏனைய பிள்ளைத்தமிழ் போலாது இவ்விரண்டுங் கூறியது பாராட்டற்பாலது.

இச் செய்யுளில், சேக்கிழாரை முருகன், விநாயகர், சிவபிரான் மூவர்க்கும் ஒப்பிட்டிருத்தல் குறிக்கொள்ளத்தக்கது. மற்றும்.

அளவில்சீர்க் குரவரான உமாபதி சிவாசாரியராற் புராணம் பாடப் பெற்று அதனைக்கொண்ட சேக்கிழார்க்கு, யான் பிள்ளைத்தமிழ் பாடுவது என்னே! ஒருகால், பிள்ளையாதலின், பிள்ளைத்தமிழ் பொருந்துவதுபோலும் என்பன நயம். '2)

# 1. காப்புப் பருவம்

## தில்லை வாழந்தணர்

1. கார்கொண்ட சோலைசூ ழாரூர ரோரரைக்
கானம்பி யாரூரர்முக்
காலரைக் காலாக முடிவுசெய் தருண்மாக்
கவித்திசையின் வீற்றிருக்கும்
ஏர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வழுவரும்
எழுவருந் தழுவருமெம
திதயந் தழால்கொண் டுறைந்திடச் செய்தவரை
யெப்போது மேத்தெடுப்பாம்
பார்கொண்ட தொண்டர்வர லாறுசொல் புராணமம்
பலவரரு ளாலமைந்த
படிதெரித் திடவுலகெ லாமெனுஞ் சுருதிநாப்
பண்ணுமீற் றும்பொருத்திப்
பேர்கொண்ட சைவபரி பாடையறி வரியசம்
பிரதாய முதலியாவும்
பிறங்கத் தெரித்தெம்மை யாண்டகுன் றத்தூர்ப்
பிரானைப் புரக்கவென்றே.

[குறிப்புரை:]—காப்புப்பருவம்-காப்பைத்தெரிவிக்கும்பருவம். (தெய்வங்கள்) காத்தற்குக் கூறும் பருவம் என்று விரித்தலுமாம்; பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையைக் கடவுள் பாதுகாக்க வேண்டுமென்று கூறப்படும் பருவத்தைத் தெரிவிக்கும் பாடற் றொகுதியென்பது திரண்டபொருள். இது இரண்டாம் மாதத்திற் கூறப்படும். இந்தக் காப்புப் பருவத்தில், திருமால் சிவன் பார்வதி முதலியோர் கூறப்படுவர் என்பதனை "மங்கலம் பொலியுஞ் செங் கண்மாலே, சங்கு சக்கரந் தரித்த லானும், காவற் கடவு ளாத லானும், பூவினுட் புணர்த லானு முற் கூறிக், கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை, பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே, முழுதுல கீன்ற பழுதறு மிமயப், பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து, நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி, யொற்றைக் கொம்பன் வெற்றி வேலன், எழுவர் மங்கைய ரிந்திரை வாணி, யுருத்திர ருக்கர் மருத்துவர் வசுக்கள், பூப்புனை

யூர்தியிற் பொலிவோ ரனைவரும், காப்பதாகக் காப்புக் கூறல்'' என்பதனாலறியலாம். இந்த மரபை அறவேமாற்றிப் பிள்ளையவர்கள், தமது நூலுக்குப் பாட்டுடைத் தலைவராகச் சேக்கிழார் பெருமானையே கொண்டாராதலின், அவரால் பாட்டுடைத் தலைவராகக் கொள்ளப்பட்டுப் பாடி வழிபடப்பட்ட திருத்தொண்டர்களையே காப்புக் கடவுளர்களாகக் கொண்டு காப்புப் பருவம் அமைத்தார். மற்றும், அன்னோரைத் திருத்தொண்டத் தொகைச் செய்யுண்முறையான் அடைவே வைத்துக்கூறவும் தொடங்கினர் என்பதும் அறியத்தக்கது. திருத்தொண்டர் புராணத்தின் சருக்கப் பெயர்களும் இம்முறையிலேயே அமைக்கப் பெற்றுள்ளமை காண்க.

ஆரூரர் - திருவாரூர்த் தியாகராசப்பெருமான். இவர் 'தில்லை வாழ்ந்தணர்தம் மடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகை செய்தமை குறிக்கப்பட்டது. அவரெடுத்துக்கொடுத்தது எட்டினோர் பகுதியாதலின், ஓரரைக்கால் என்றது. முக்காலரைக்காலாகிய ஏனையவற்றை நம்பியாரூரர் முடிவுசெய்தனர். நம்பியாரூரர் - சுந்தரமூர்த்தி நாயனார். மாக்கவி - சிறந்தபாடல். திசை - ஏழனுருபின்கண் வந்தது. முன் - முன்னாகக் கொண்ட; முதலாகக் கொண்ட. 'வழு அரும் எழுவரும் தழு அரும் எமது இதயம் தழால்கொண்டு' எனப் பிரித்துப் பொருள்கொள்க. வழு - குற்றம். அரும் - அரிய, இல்லாத. எழுவர் - ஏழுநாயன்மார்கள்: அவராவர்:—தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடி மாறனார், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்டர், அமர்நீதியார். தழுவ+அரும், தழுவரும் எனக் குறைந்தது. தழால் - தழுவுதல். 'தழுவரும் - இதயந் தழால்கொண்டு' என்றவிடத்து முரணழகு காண்க. செய்து அவரை எனப்பிரிக்கவும். ஏத்து - முதனிலைத் தொழிற்பெயர். வரலரறு - சரிதம். புராணம் - திருத்தொண்டர் புராணம். இதனைப் பெரிய புராணம் என்பது பெருவழக்கு. படி - தன்மை. தில்லையம்பலவர் 'உலகெலாம்' என்று முதலெடுத்துத்தர, அதனையே சுருதியாகக் கொண்டு [வேத வாக்காகக் கொண்டு] ஆதியிலே மட்டுமன்றித் தமது புராணத்து இடையிலும் கடையிலும் பொருத்திப் பொன்னேபோற் போற்றியுள்ளமை ஈண்டுக் கூறியபடி. தாம் பாடிய நூலின் நடுவண், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்து 216-ஆம் பாட்டில் ''ஓதியேறினர் உய்ய வுலகெலாம்'' என்றும் சேக்கிழார் பொருத்தியுள்ளமை நினைக. பரிபாடை - பரிபாஷை; குழூஉக்குறி போல்வது. சம்பிரதாயம் - தொன்று தொட்ட வழக்கம். முதல்+

யாவும் - முதலியாவும்: 'தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந் துன்னும்' என்றது விதி. பிறங்க - விளங்க. புரக்க - வியங்கோள். புரத்தல் - காத்தல். எடுப்பாம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. புரக்கவென்றே ஏத்தெடுப்பாம் என முடியும். பின்வருஞ் செய்யுட்களிலும் இவ்வாறே முடிவு அமைவது காண்க. (1)

## இலைமலிந்த வேனம்பி

2. இலைமலி யெனுங்கவியு ளெழுபுவன மும்பரசு
மெழுமுனிவ ரேத்தவமர்வா
ரெழுபுரவி வையமிசை யெழுகதிரும் வட்குமணி
யெழுவுநவு முட்குமொளிசான்
மலைமலி புயத்தரெறி பத்தர்முத லெழுபவமு
மாய்த்தவிற லெழுவோரையும்
வாயார வாழ்ந்தித் துதித்தவ ரடிக்கமல
மலர்முடிக் கணியாக்குவாம்
கலைமலி பெரும்புலவர் கைகுவிக் கக்கலைக்
கன்னியின் றேவல் கேட்கக்
கனகசபை யார்முத லளித்தருள வளவாம
கந்துவ மடைந்திருந்தும்
அலைமலி சுணங்கனெனப் பேனென் றுரைத்தருளி
யாம்பெருக் கத்துவேண்டு
மான்றபணி வெனுமொழிப் பொருடேற்று குன்றைநக
ராளியைக் காக்கவென்றே.

(கு - ரை.) இலைமலியெனுங்கவி - திருத்தொண்டத்தொகையின் இரண்டாம் பாடல். புவனம் - உலகம்: பூமி; பூமியிலுள்ளார்க்கு, இடவாகுபெயர். பரசுதல் - துதித்தல். எழு முனிவர் - சப்தரிஷிகள்; அவர் மரீசீ, அங்கிரசன், புலகன், வசிஷ்டன், அத்திரி, புலஸ்தியன், கிருது என்போர் ஒருசாரார்; கசியபன், அத்திரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கௌதமன், ஜமதக்னி, வசிஷ்டன் என்போர் மற்றொருசாரார். அமர்வார் - பொருந்தியிருப்பவர். எழுபுரவி வையம் மிசை எழு கதிர் - ஏழு குதிரைகள் பூட்டிய தேரின்மீது வருகின்ற சூரியன். வையம் - தேர். இனி, 'எழு புரவி' - 'சப்தா' என்னும் பெயருடைய ஒற்றைக் குதிரையுமாம். சூரியன் தேர்மிசை வருதலாகக் கூறுதல் மரபு. வட்கும் - ஒளிமழுங்குதல். எழு - தூண்; கணையமரம். உட்குதல் - அஞ்சுதல், நாணுதல். கதிரும் வட்கும் எழுவுருவும் உட்கும் ஒளிசால் புயத்தர் என இயையும். இதனல் புயத்தின் திரட்சியும் வலியும் பெற வைத்தபடி. மலி - உவமவுருபு. எழுபவம் - ஏழுவகையான் பிறப்பு.

அவையாவன - தேவர், மனிதர். மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன. பவம் மாய்த்தல் - பிறவியைக்கடந்து நீத்தவர். விறல் - வலிமை. எழுவோர் – எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், குங்கிலியக்கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயர் என்போர். அடிக்கமலம் - உருவகம். முடிக்கு அணியாக் குதல் - சூடிக்கொள்ளுதல். கலைக்கன்னி - நாமகள்; சரசுவதிதேவி. ஏவல் கேட்டல் - சொல்லியபடியே செய்தல். 'வெண்டாமரை மயில் சேக்கிழார் திருநாவிற்குடிகொண்டாள்' என்றனர் உமாபதி சிவமும். கனகசபையார் - தில்லைநடராசப்பெருமான். முதல் அளித்தல் - அடியெடுத்துக்கொடுத்தல். அளவா - அளவுபடாத. மகத்துவம் - பெருமை, கைகுவிக்க, கேட்க, அருள, அடைந்திருந் தும் என முடியும். 'அலைமலி சுணங்கனொப்பேன்' என்றுரைத்தது - பெரியபுராணத்தொடக்கத்து அவையடக்கத்துப் பாயிரக்கவியில், ''பெருகுதெண்கடலுற்றுண் பெருநசை, ஒரு சுணங்கனை யொக்குந் தகைமையேன்'' என்றதை. சுணங்கன் - நாய்; நாயினையொப்பேன் என்று அவையடக்கங்கூறியது, பெருக்கத்து அவர் பணிவினைத் தெரிப்பது. அலை - கடலுக்கு, இலக்கணை. மொழி யென்றது - 'பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய, சுருக்கத்து வேண்டு முயர்வு' என்ற திருக்குறளை (963). பொருள் தேற்றுதல் - அம் மொழியின் பொருளை ஒழுக்கத்துக்கொணர்ந்தொழுகி அனைவர்க் கும் தெரியப் பண்ணுதல். குன்றைநகராளி - சேக்கிழார். ஆளி - இ, ஆண்பாற் பெயர் விகுதி. (2)

மும்மையாலுலகாண்ட

3. மும்மைமறை யும்பரவு மும்மையுல கும்புகழு
முமமையாப் பகரமாதி
மும்மையுயிர் குறினெடி றனித்துமத சவ்வூர்ந்து
முதலமையு நாமமுற்றூர்
செம்மைபெறு மும்மையாம் வருணத் துதித்துச்
சிறந்தோங்கு மூர்த்தியார்முற்
செறியுமிரு மும்மையார் செம்பொற் பதாம்புயஞ்
சென்னிவைத் தேத்தெடுப்பாம்
நம்மையருள் சிவபாத விருதய ருளத்துவகை
நண்ணவொண் பொருளாதலா
னுடுமுழ வாரவல மியைதலா லியாவோரு
நாவலர் பிரானெனலால்
வெம்மைதவிர் புகலியார் முதன்மூவ ரும்புகலும்
வேதத் தமிழ்க்கணுள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர்
வேந்தைப் புரக்கவென்றே.

(கு-ரை.) மும்மை - மூன்று: எண்குறித்து வந்தது, "தெரி மாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல. அதர்வம் ஏனை மூன்று வேதங்களினுமடங்குதலின் மறைமூன்று என்றது. வேதம் இதுபற்றித் 'த்ரயீ' என வழங்கப்படும். மும்மை யுலகு - சுவர்க்கம், மத்தியம், பாதலம், மும்மை யர்ப்பு - திருத் தொண்டத்தொகையில் 'மும்மையாலுலகாண்ட' என்று தொடங் கும் மூன்றும் பாடல். யாப்பு - செய்யுள். அகரமாதி மும்மை உயிர் குறில் - அ, இ, உ. நெடில் என்றது - ஊகாரத்தை. இவை, தனித்தும் மதசவூர்ந்தும் முதலமையும் நாமமுற்றார் என்றது - மூர்த்திநாயனார், முருகநாயனார், உருத்திரபசுபதியார்: திருநாளைப்போவார், திருக்குறிப்புத்தொண்டர், சண்டேசுரர் இவர் களை. இத்திரு நாமங்களை வகுத்து ஆராயின், தனித்து உகரத்தை முதலாக்கொண்ட நாமமுடையார் - உருத்திரபசுபதியார்; உகரம் ஊர்ந்த மவ்வை முதலாக்கொண்டவர் - முருகநாயனார்; உகரநெடி லூர்ந்த மவ்வை முதலாக்கொண்டவர் - மூர்த்தியார்; இகரம் ஊர்ந்த தவ்வை முதலாக்கொண்டவர் - திருநாளைப்போவார், திருக்குறிப்புத்தொண்டர்; அகரம் ஊர்ந்த சவ்வை முதலாக் கொண்டவர் - சண்டேசுரர். இங்குக் குறித்த அறுவருள் மூர்த்தி யார் முன்னர்க் கூறப்பட்டவராவர் யாப்பில். ஆதலின், 'மூர்த்தி யார் முற்செரியும் இரு மும்மையார்' என்றது. இந்த மூர்த்தியார் வைசிய குலத்தவராதலின், 'மும்மையாம் வருணத்துதித்து' என்றது. பதாம்புயம் - உருவகம். சென்னி - தலை. ஏத்து - துதி; முதனிலைத் தொழிற்பெயர். முதலிரண்டடிகளில், பிறிதினவிற்சி யணி காண்க. இந்தச் செய்யுளின் மூன்றுமடியில், சேக்கிழாரைத் தேவாரம் பாடிய மூவர் முதலிகளுக்கும் சிலேடை நயம்பட ஒப் புமை குறித்தல் பெறப்படுகின்றது. சிவபாதவிருதயருளத்து உவகை நண்ணவொண் பொருளானவர்-சம்பந்தர்; உழவாரவலமி யைந்தவர் - நாவுக்கரசர்; நாவலர் பிரான் - சுந்தரர். இம்மூவர் திறமும் சேக்கிழாரிடம் அமைந்துள்ளன எனச் சிலேடை நயம்படக்கூறினர். சேக்கிழார் சிவனடியே சிந்திக்கும் அடியவர் மனத்து உவகை நண்ணச் செல்வமாகுபவர்; உழவின் மேன்மை இயைந்தவர்; புராணம்பாடி நாவலர் பிரானனவர் இஃது உணரவைத்தபடி. சிவபாதவிருதயர் - திருஞானசம்பந்தரின் திருத்தமப்பனர்; சிவபிரானடியை மனத்துக் கொண்ட அடியவர் என இருபொருள்படும். ஒண்பொருள் - மிக்க பொருளாகிய குழந்தை; ஒள்ளிய பொருளாகிய செல்வம் என இருபொருள்படும். 'பொருள்' என்பது மக்களுக்காகி வருதலை 'தம்பொருளென்ப தம்மக்கள்' என்ற குறளினும், 'பொரு ளொடு புணர்ந்த பக்கத்தானும்' என்ற தொல்காப்பியத்

தொடாரானும் அறிக. சிவனடியைச் சிந்தித்தல் பெருஞ்செல்வ மாகும் உழவாரவலம் - உழவாரப் படைத் தொண்டின் வலிமை; உழவுத்தொழிலின் மேன்மை என இருபொருள்படும். திருநாவுக்கரசர், உழவாரத் திண்படையருத திருக்கரத்தா ராவர். யாவோரும் - 'ஆஓவாதல் செய்யுளுளுரித்தே.' நாவலர்பிரான் - திருநாவலூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், நாவில்வல்ல கவிஞர்களில் மேம்பட்டவர் என இருபொருள் படும். வெம்மை - கூன்பாண்டியனுக்குற்ற வெப்புநோய். புகலியார் - சம்பந்தர், புகலி - சீகாழிக்குப்பெயர். சூரபன்மனால் வருத்தமடைந்த விண்ணோர் தம்தேவிமாருடன் இத்தலத்தில் வந்து புகலிடமாக்கொண்டு புகலால், 'புகலி' என்று ஒரு பெயர் சீகாழிக்கு வந்தது. மூவரும் புகலும் வேதத்தமிழ் - தேவாரம். தேவாரத்தைத் தமிழ்மறையென்பர். 'ஓதுவார்' என்ற பெயருண்மையும் நோக்குக. மெய்ம்மை - உண்மையான தத்துவப்பொருள். குன்றையூர் வேந்து - சேக்கிழார். (3)

திருநின்றசெம்மையே

4\. திருநின்ற செய்யுள்புக னீற்றறையு ளருகந்தர்
சிந்தைவெந் திடமர்ந்துஞ்
செறிதுயர்க் கடன்மறக் கல்லொடவ ராழவொர்
திரைக்கடற் கன்மிதந்துங்
கருநின்ற கண்டரருள் வெளிசெய்நா வரசர்முற்
கருதுபுக ழெழுவோரையுங்
கருத்திடை யருத்தியி னிருத்திமற் றவர்பதங்
காதலித் துத்துதிப்பாம்
தருநின்ற செங்கைத் தலங்குவித் திடுமுனங்
தையலொரு பாகர்தொண்டர்
சரித்திர மனைத்துமொரு வாதுற நிரம்பத்
தவாமன வறைக்குவிக்க
உருநின்ற சீர்கொள்புலி யூர்க்கோட்ட மேயதற்
கொப்பவுல கேத்தநாளு
மோங்குபுலி யூர்க்கோட்ட மேயகுன் றத்தூ
ரொருத்தரைக் காக்கவென்றே.

(கு - ரை.) திருநின்றசெய்யுள் - திருத்தொண்டத்தொகை யில் 'திருநின்ற செம்மையே' எனத்தொடங்கும் பாடல். செய்யுள் புகல் நாவரசர்முற் கருதுபுகழ்எழுவோர் என இயையும். முதனின்ற வடிகள் - நாவரசர் சிறப்புக்கூறுவன. நீற்றறை - சுண்ணாம்புக் காளவாய். அருகந்தர் - அருகர், சமணர். அவர் -

அச்சமணர், திருநாவுக்கரசரைக் கல்லிற்கட்டிக் கடலிற் பாய்ச்சவும் அக்கல் மிதக்க, அவரையிட்டவர் மறக்கல்லொடு துயர்க் கடலிலாழ்ந்தனர் என்றபடி. தாம் வேகாது தம்மையிட்டவர் மனம் வெந்திடவும், தாம் ஆழாது தம்மையிட்டவர் துயரிலும் பாவத்திலும் ஆழ்ந்திடவும் அற்புதம் விளைத்துச் சிவனருளை யுலகறியவைத்தனர் நாவுக்கரசர். அமர்தல் - விருப்பொடு எழுந்தருளியிருத்தல்: "மாசில்வீணையும்...நீழலே" என்றது நினைக. துயர்க்கடல், மறக்கல் - உருவகம். மறக்கல் - பாவமாகியகல். கல்மிதந்தது - நமச்சிவாயப்பதிகம்பாட. எனவே, சிவனருள் வெளி செய்தபடி. கருநின்றகண்டர் - நீலகண்டர். எழுவோர் - திருநாவுக்கரசர், குலச்சிறையார், மிழலைக்குறும்பர், காரைக்காற் பேயார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள் என்போர். அருத்தி - விருப்பம். ஈண்டு, பிராசம் காண்க. பதம் - பாதம். தரு - கற்பகத்தருவின் தன்மை. தருநின்ற செங்கைத் தலம் - கொடைக்குணம் பேசியபடி. தையலொருபாகர் - உமை பங்கன்: சிவபிரான். ஒருவாது - நீங்காமல், ஒன்றும் விட்டிடாமல்; உற - நன்றாக. மனவறை - உருவகம். குவிக்க - குவித்திடுதற்கு. உரு - அழகு. புலியூர்க்கோட்டம் - சிதம்பரத்துக்கோயில். வியாக்கிரபாதமுனிவரால் பூசிக்கப்பட்ட தலமாதலின், புலியூர் என்று சிதம்பரத்துக்கோர் பெயர். கோட்டம் - கோயில். ஏயதற் கொப்ப - பொருந்தியிருத்தற்கொப்ப. புலியூர்க்கோட்டம் - தொண்டை நாட்டுள் நாலாறுகோட்டத்து ளொன்றுய புலியூர்க் கோட்டம் என்ற பகுதி. குன்றத்தூர் அக்கோட்டத்தது என்று முன்னரே குறித்தாம். இருகோட்டங்களிடையொப்புமை - உலகத்தே நாளுமோங்குதலில். சேக்கிழார் கைத்தலங்குவித்திடு முன்னம் தாம் அவர் மனவறைக் குவித்திடுதற்குப் புலியூர்க் கோட்டம் மேவியுள்ளார் என்பது நயம். (4)

வம்பருவரிவண்டு

5. வம்பரு யாப்புநவில் வம்பரு முலையொரு
மடக்கொடியை வேட்டலின்றி
வண்பிரம சரியநிலை வைகுநா ளேயொரு
மடப்பாவை யைப்பிறப்பித்
தும்பரு வுந்திற லரிக்குருளை போலெழுந்
துவகையார்க் கும்பிறப்பித்
துலாயவர்மு னைவரைவெ லறுவர்பொற் பாதமல
ருச்சிவைத் தேத்தெடுப்பாம்

அம்பரு வாழிமுழு துண்டதிரு முனிவிரித்
தருளிய தமிழ்க்காக்கமா
வருண்மூவ ரருண்மறைப் பொருடெரிய முன்னொருவ
ரருண்மறைப் பொருள்விளக்கு
நம்பரு வித்தியா ரணியமுனி வரனுள
நயப்பயாப் புறவிரித்த
நாவலர் பிரானைத் திருக்குன்றை யருண்மொழி
நலத்தனைக் காக்கவென்றே.

(கு-ரை.) வம்பரு யாப்பு - திருத்தொண்டத் தொகையில் ஐந்தாம் பாடல். நவில் - அந்தப்பாடலில் முதன்முதலிற் கூறப் பட்டுள்ள. நவில் உலாயவர் என இயையும். முதலடிகள் சம்பந் தர் பெருமை குறிப்பன. வம்பு-கச்சு. மடக்கொடி-பெண்ணென்ற மாத்திரமாய் நின்றது. வேட்டல்-திருமணஞ்செய்து கொள்ளல். பிரமசரியநிலை-வேதமோதுதலும் விரதங்காத்தலுமாகிய நியமங் களை மேற்கொண்டொழுகும் முதலாம் ஆச்சிரமநிலை. மடப்பாவை - பூம்பாவை. அவளைப் பிறப்பித்தது - என்பைப் பெண்ணாக்கிய தால். இது, திருமயிலையில் நிழ்ந்த அற்புதம். பிரமசாரியா யிருக்கும்போதே ஒரு பெண்ணைப் பிறப்பித்தது அதிசயமே என்பது நயம். "போதமுண்ட பிள்ளையென்பு பொருகண்மாது செய்ததோ ..... யாது நம்பியரிது?' என்று வினவினர் சிவப்பிரகாசரும். உம்பல்-யானை. திறல்-வலிமை. அரிக்குருளை - சிங்கக்குட்டி. சிறு வயதிலேயே 'பரசமயகோளரி' யாதலின், அரிக்குருளை உவமை யாயிற்று. யார்க்கும் - உம்மை, முற்றும்மை. உலாயவர் - திரு ஞானசம்பந்தர். முன் - முன்னாகக் கொண்ட. ஐவரை வெல் அறுவர் - ஐம்பொறிகளை வென்றடக்கிய ஆறுபேர். அவ் வறுவரா வார்:—சம்பந்தர், கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்க நாயனார், சோமாசிமாறனார் என்போர். ஐவர்-தொகைக்குறிப்பு. ஐம்பொறிகளை 'ஐவர்' என உயர்திணையாக்கூறியது, செறலினால் வந்த திணைவழுவமைதி. பாதமலர் - உருவகம். உச்சி-முடி; தலை. அம்பு-நீர். ஆழி-கடல். கடலுண்ட முனி - அகத்தியர். அகத்தியர் தமிழ் விரித்தருளியதை 'தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்', 'என்றுமுள தென்றமி ழியம்பியிசைகொண்டான்' என்ற கம்பன் வாக்காலும் தெளிக. அருண் மூவர். மூவர் அருண் மறை-தேவாரம். தேவாரம் தமிழ்க்கு ஆக்கமாயிற்று என்றபடி. மறைப்பொருள் தெரிய யாப்புறவிரித்த என மேல் முடியும். யாப்புற விரித்த - செய்யுளாக விரிசெய்த; அதாவது, பெரிய புராணமாகச் செய்த என்றபடி. 'முன்னொருவர் அருண்மறைப்... ...நயப்ப'—இஃது, இடைப்பிறவரல். ஒருவர் - சிவபெருமான். சிவபிரானருளிய வேதத்துக்குப் பாடியங் கண்டவர் வித்தியா

ரணியர். நம்பரு - யாவராலும் விரும்பத்தக்க; நம்பு மேவு நசை யாகும்மே'. வித்தியாரணிய முனிவர் வேதம் உபநிஷத்து முதலானவற்றுக்குப் பாடியங்களும் வியாக்யாநங்களும் செய்தவர். அம்முனிவரனும் உளநயப்ப யாப்புற விரித்தார் சேக்கிழார். 'முனிவரன்' என்பதன்பின் சிறப்பும்மை தொக்கது. அருண்மொழி நலத்தன் - அருண்மொழித்தேவன். நலத்தன் - நன்மையை யுடையவன். (5)

## வார்கொண்டவனமுலையாள்

6. வார்கொண்ட வனமுலை யெனுங்கவியு ளுயர்சைவ
மாண்பினர்க டலைவணக்கி
வாயார வாழ்த்தித் தியானித் திடச்சங்க
மங்கைவரு சாக்கியர்முத
லேர்கொண்ட புகழ்கொடைவை வேலடையு மடையுற்று
மெய்தாது மாகிநின்ற
வினியநக ரடையுமேற் றெளிர்கின்ற வறுவரையு
மிறுவரையு மேத்தெடுப்பாம்
கார்கொண்ட வமணசிந் தாமணியை வளவர்கோன்
கங்குல்பக லாராய்தரக்
கண்டொழித் தாவதிது வேயென்று தொண்டர்தம
கத்துவங் கருதவுய்த்துப்
பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை
பரித்திடச் செயலமைச்சர்
பண்பென றெரித்தருள் றத்தூ ருதித்தவெம்
பரமனைக் காக்கவென்றே.

(கு - ரை.) வார்கொண்ட வனமுலை யெனுங்கவி - திருத்தொண்டத்தொகையில்ஆறும்பாடல்.சாக்கியர்-சாக்கியநாயனார்: இவர் சிவன்கழலே மறவாது கல்லெறிந்தவர். இவர் பிறந்தவூர் கச்சிப்பதிக்கருகிலுள்ள சங்கமங்கை யென்பது. முதல் - முதலாக எண்ணப்பட்ட. புகழ், கொடை, வேல் அடையும் அடையுற்றும் - புகழ், கொடை, வேல் என்ற அடைமொழிகளை முதலிற் பெற்று வந்தும்: அங்ஙன் பெற்று வந்தவர் முறையே சிறப்புலி நாயனார், கழறிற்றறிவார், கூற்றுவநாயனார். "புகழ்வள்ளல் சிறப்புலி, கார் கொண்ட கொடைக்கழறிற்றறிவார். வேற்கூற்றன்" என வந்துள்ளமை நோக்கி. அடை எய்தாதுமாகி நின்றவர்- சாக்கியர். 'நகர்' அடை ஏற்றவர்-சிறுத்தொண்டர், கணநாதநாயனார்: "செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன், கடற்காழிக் கணநாதன்" என வந்துள்ளமை நோக்கி. அறுவர் - மேலே குறித்த ஆறுபேர். இறும் வரையும் - சாகும் வரையும். கார்கொண்ட - அறிவுமயக்கத்தைப்

பொருந்திய. கார் - அறிவுமயக்கமாதலை 'கனவென்னுங் காரறிவாண்மை' (287) என்ற குறளிலுங்காண்க. இனி, 'கார்கொண்ட' என்பதை அமணர்க்காக்கி, அவரது சிந்தாமணியென்னவுமாம். சிந்தாமணி-சீவகசிந்தாமணி. ஐம்பெருங்காப்பியங்களுளொன்று. வளவர்கோன் - அநபாயசோழனை. 'வென்றிவெண்குடை அநபாயன்' (பெரிய புரா: திருமலை: 12) என வந்ததுங் காண்க. ஒழித்து-நீக்கி. ஆவது இதுவே - உறுதிபயப்பதாவது இதுவே. 'இது' என்றது, பிற்கூறிய தொண்டர்தம் மகத்துவம் குறித்தது. அமைச்சர் பண்பு - "அறிகொன் றறியா னெனினும் இறுதி, யுழையிருந்தான் கூறல் கடன்" என்றதும் நினைக. "செவிசுடச் சென்றுங் கிடித் தறிவு மூட்டி, வெகுளினும் வாய்வெரீஇப் பேரா - கவிழ்மதத்த, கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்தும், அம்மாண் பினவே யமைச்சு" என்பர் நீதிநெறிவிளக்கநூலாரும். அநபாய சோழனின் மனமாற்றத்தைத் திருத்தொண்டர் புராண வரலாற்றுச்செய்யுட்களாலுணரலாம். அல்லவை, நல்லவை - வினையாலணையும் பெயர்கள். (6)

## பொய்யடிமையில்லாத

7. பொய்யடிமை யில்லாத செய்யுளி னிலக்கியம்
புகலிலக் கணமெய்ஞ்ஞான
போதநூ லாதியா யாவுமரி றபவுணர்பு
புரகரனை யேதுதித்து
மெய்யடிமை வாய்ந்தசங் கப்புலவர் முதலாய
வித்தக வொழுக்கமிக்கார்
விண்மருவு வார்பரவு மெண்மருமெ மிருதயம்
விடாதமர வேத்தெடுப்பாம்
செய்யமல ராதன மிருந்துபல சாதியுஞ்
சேரப் படைத்ததேவுஞ்
செப்பரிய வாயவவ் வச்சாதி குறிகுணஞ்
செய்கைகுடி கொள்ளுமியல்பு
வெய்யமொழி யுணவுமுன் விரித்தெலா மறியவலா
மெய்யறிஞ ரெனல்விளக்கி
மேம்பட்ட வேளாண் குலக்கதி ரெனுங்குன்றை
விமலனைக் காக்கவென்றே.

(கு-ரை.) பொய்யடிமையில்லாத செய்யுள்-திருத்தொண்டத் தொகையில் ஏழாம்பாடல். செய்யுளின் சங்கப்புலவர்முதலாய என மேல்இயையும், இலக்கியமும், இலக்கணமும், மெய்ஞ்ஞான போத நூலும் என உம்மைவிரித்துப் பொருள்கொள்க. புகல் -

சிறப்பித்துச் சொல்லப்பட்ட. மெய்ஞ்ஞானம்- தத்துவஞானம். யாவும், உம்மை - முற்றும்மை. அரில் தப - குற்றங்கெட; எனவே. ஐயந்திரிபற. உணர்பு - உணர்ந்து; செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். புரகரன் - சிவபிரான்: புரங்களையழித்தவனென்ற படி. ஏகாரம் - பிரிநிலையொடு தேற்றம். சங்கப்புலவர் - கடைச் சங்கப்புலவர். 'தமிழ்ச் சங்கமதிற் கபிலர் பரணர் நக்கீரர்முத ளுற்பத்தொன்பதுபல் புலவோர்' என்றார் நம்பியாண்டார்நம்பி யும். வித்தக ஒழுக்கம் - நல்லறிவுக்கேற்றவொழுக்கம். வித்தகம்- நல்லறிவு, ஞானம். விண் மருவுவார் – தேவர். எண்மர்- பொய் யடிமையில்லாத சங்கப் புலவர்கள், புகழ்ச்சோழர், நரசிங்கமுனை யரையர், அதிபத்தர், கலிக் கம்பர், கலியர், சத்திநாயனர், ஐயடி கள் காடவர்கோன் என்போர். விடாது அமர எனப்பிரியும். செய்ய - சிவந்த. மலராதனம் - திருமாலின் உந்தித் தாமரைப்பூ. தேவு - பிரமன். உம்மை, உயர்வு சிறப்பு. நான்கு முகத்தாலும் செப்பரியவாய என்றபடி, குறி - அடையாளம். குணம் – பண்பு. குடிகொள்ளும் - தங்கும், வசிக்கும், வாழும். வெய்ய மொழி - விரும்பிக்கூறும் பேச்சு. வெய்ய-'வெம்மை' என்ற பண்பினடியாப் பிறந்த பெயரெச்சம்: 'வெம்மை வேண்டல்.' வலர் - வல்லர்: இடைக்குறை. சேக்கிழார் தமது பெரியபுராணத்துப் பலவகைச் சாதியினரின் குறி, குணம், செய்கை, வாழ்க்கை, மொழி, உணவு, முதலிய பலவற்றையும் விரித்துரைக்கும் பெற்றிமை போற்றுதற் குரித்து. கதிர் - இருமடியாகுபெயர். (7)

கறைக்கண்டன் கழலடியே

8. கறைக்கண்டன் யாப்பினைந் ததிகாரி மேலொரதி
காரிமலை மங்கையொருபாற்
கலந்திருக் கவுநிருவி காரிநிர கங்காரி
காரியா காரிநாளு
மறைக்கண் டருஞ்சோதி யோங்காரி யருளேய
வாங்காரி முதலமர்ந்த
வன்கணம் புல்லர்முற் சைவரா மைவரு
மகிழ்ச்சியுற வேததெடுப்பாம்
பிறைக்கண்ட மிதுபகலின் முகினுழைவ ததிசயப்
பெற்றியென் றுடுவார்கண்
பெட்பப் பெருக்கெடுத் துவருபா லாற்றலை
பிறங்குவளை வீசவஃதத்
துறைக்கண்ட நிமிர்கந்தி யஞ்சோலை தவழ்தருந்
தொண்டைவள நாட்டுநாட்டுந்
தொல்புகழ்க் குன்றைவரு பாலரு வாயர்முற்
றேன்றலைக் காக்கவென்றே.

(கு-ரை.) கறைக்கண்டன் யாப்பு - திருத்தொண்டத்தொகையில் எட்டாம் பாடல். யாப்பின் வன்கணம்புல்லர் என மேல் இயையும். ஐந்ததிகாரிமேலோர் அதிகாரி, நிருவிகாரி, நிரகங்காரி, காரியாகாரி, சோதியோங்காரி, அருளேயவாங்காரி இவையனைத்தும் ஒருபொருண்மேல் வந்த பலபெயர்கள்; சிவபிரானைக் குறிப்பன. ஐந்ததிகாரி - ஆக்கி, அளித்து, நீக்கி, மறைத்து, அருளி ஐந்தொழில் புரிந்திடும் அதிகாரிகள் ஐவர்; அவராவார் முறையே பிரமன், விட்டுணு, உருத்திரன், மயேச்சுரர், சதாசிவர். இந்த ஐவர்க்கும் மேலதிகாரி - இவர்களுள் அதிட்டித்து ஏவல்கொண்டு நிற்கும் சிவபிரான். நிருவிகாரி - காமவிகாரமில்லாதவன். நிரகங்காரி - அஹங்கார முதலாகிய தத்துவங்களுக் கப்பாற்பட்டவன். காரி ஆகாரி - விடத்தை ஆகாரமாக்கொண்டவன். காரி - விடம். மறைக்கு அண்டு அரு சோதி - வேதங்களுக்குக் கிட்டுதற்கும் அரிய சோதிஸ்வரூபமான, ஓங்காரி - பிரணவப்பொருளாகுபவர். இனி, சோதி, ஓங்காரி என இரண்டு தனியாக்கொள்ளலுமாம். அருளே அவாம் காரி - அருட்சத்தியையே விரும்பிக் காரியஞ் செய்பவர். முதல் அமர்ந்த - சிவபிரான் முதலாக விரும்பிய. அமர்தல் - விரும்புதல். முன் - முதலாக்கொண்ட. ஐவர் - கணம் புல்லர். காரியார், நின்றசீர்நெடுமாறனார், வாயிலார், முனையடுவார் என்போர். பிறைக்கண்டம்-பிறைத்துண்டு. எனவே, பிறைச் சந்திரன். பெற்றி - தன்மை. ஆடுவார்-நீராடுவார். கண் பெட்ப-கண் விரும்பிப்பார்க்கும்படி. வளை - சங்குப்பூச்சி. கந்தியஞ்சோலை-கமுகஞ்சோலை: கந்தி-கமுகு: கமுகு-பாக்குமரம். பாலாற்றின் அலை சங்குப்பூச்சியை வீசியெறிய அது நீர்த்துறைக்குச் சமீபமாக ஓங்கி வளர்ந்துள்ள கமுகமரங்களின்மேல் தவழ்ந்து செல்வது, முகிலினூடே நுழைந்து பிறைச்சந்திரன் செல்வதொக்கும் என்றார். பிறைச்சந்திரன் சங்குப்பூச்சிக்கும் முகில் கமுகமரத்தின் செறிவுக்கும் உவமை. பட்டப்பகலில் பிறை கண்ணுக்குத்தெரிய முகிலினூடே நுழைவது அதிசயமாயிற்று. ஈண்டு, மயக்கவணியொடு அதிசயவணியும் காண்க. துறைக்கு அண்ட நிமிர் எனப்பிரிக்க. அண்ட - சமீபமாக. நாட்டும் - நிலைபெறச் செய்த. பாலறுவாயர் - சேக்கிழாரின் தம்பியார். முன்தோன்றல் - தமையன் (8)

## கடல்சூழ்ந்தவுலகெலாம்

9. கடல்சூழ்ந்த யாப்பம ரறஞ்சூழ்ந்த நெஞ்சக்
கழற்சிங்க மன்னன்மன்னிக்
கழியா மடங்கழி யிடங்கழி யருட்கே
கருத்துனை செருத்துணையரில்

விடல்சூழ்ந்த சிந்தையொ ரிகழ்த்துணை பெருதுற
விளங்கும் புகழ்த்துணைவய
வேட்புலி யெனுந்திருக் கோட்புலியிவ் வைவரையு
மேன்மேனு மேத்தெடுப்பாம
அடல்சூழ்ந்த தொண்டர்வர லாற்றுவிரி யுலகெலா
மறியத் தெருட்டுகுரவிற்
கமையப் புனைந்ததுகொல சாதிபடை யாளங்கொ
லமையுமெது சொலினுமென்ன
மடல்சூழ்ந்த செங்குவளை மாலையணி திண்டோள்
வலத்தனை நிலத்தனைவரும்
வாயார வாழ்த்துதன் றத்தூ ருதித்தபெரு
வள்ளலைக் காக்கவென்றே.

(கு - ரை.) கடல் சூழ்ந்த யாப்பு - திருத்தொண்டத்தொகையில் ஒன்பதாம் பாடல். அமர் - பொருந்திய. கழற்சிங்க மன்னன் - கச்சிப்பதியிலிருந்தாண்ட காடவர்கோன்; இவன், கைலாயநாதர் கோயிலைக் கச்சியிற்கட்டிய பல்லவமன்னன் இராசசிம்மனுவன். மன்னிக் கழியா மடம் - ஆணவமலம்: இஃது உடன்றோன்றி நிலைபெற்று நீங்காத அறியாமையினுலாவது. அத்தகைய மடமும் கழிந்த இடங்கழி நாயனுர் என்க. 'இவரன்றோ பண்டாரமெனக்கு' என்னும்படி திகழ்ந்தவர். 'மடம்' என்பதன்பின் இழிவுசிறப்பு உம்மைதொக்கது. கருத்து உள் நை செருத்துணை - மனத்துள்ளே நெக்குருகும் செருத்துணை நாயனுர். இவர் "பரமர் செய்ய சடைமுடியிலேறுந் திருப்பூமண்டபத்து மலர் மோந்திடும் மூக்கைத் தடிவன்" என்று சிந்தை நைந்துருகிச் செறுத்தவராவர். அரில் - குற்றம். விடல் - நீங்குதல். ஓர் இகழ்த்துணை பெருது - இகழ்ச்சி ஒருசிறிதும் இல்லாது. இகழ் - இகழ்ச்சி; முதனிலைத்தொழிற்பெயர். துணை - அற்பமும். புகழ்த்துணை நாயனுர் 'எங்கோமானறனை விடுவேனல்லேன்' என்றிராப்பகலும் அருச்சித்தவராதலின், இகழ்ச்சி ஒருசிறிதும் பெருதவராயினுர். வயம் - வெற்றி. வேள் - விரும்புதல். கோட்புலிநாயனுரை 'வயவேட்புலி' என்றது வளவர் தந்திரியாராய் வேற்றுப்புலம்பெருகத் துயர்விளைப்பப் போர் விளைத்துப் புகழ்விளைப்பாராதலின். இனி, வேள் - வேளாண்மையுமாம்: 'வேளாண்குலம் பெருக வந்துதித்தார் கோட்புலியார்' என்றதும் நினைக.

ஐவர் - மேலே குறித்த ஐந்து நாயன்மார்கள். அவராவார்:— கழற்சிங்கன், இடங்கழியார், செருத்துணையார், புகழ்த்துணையார், கோட்புலியார் என்போர்: அடல் - வலிமை: மறந்தும் புறந்தொழா வலிமை. விரிசெய்தவர் சேக்கிழாராதலின், 'தொண்டர்

வரலாற்று விரி' என்றது பெரியபுராணத்தை. தெருட்டுதல் - மனந்தெளியச்செய்தல். குரவிற்கு அமைய - ஆசிரியத் தன்மைக்குப் பொருந்த. குருவாகுபவர்க்குக் குவளைமலர்மாலை யுரித்தென்பது பெற்றும். சாதி - வேளாளர்சாதி. வேளாளர்க்குக் குவளை அடையாளமாலையாகும். சேக்கிழார்திறத்துக் குவளைமாலை யணிவது இருவகையினும் அமையும். வலத்தன் - வலிமையை யுடையவன். அனைவரும் - தில்லைவாழந்தணர், அநபாயன்போன்ற அரைசர், உமாபதிசிவம்போன்ற மெய்ஞ்ஞானிகள் உள்ளிட்ட எல்லாவகையினரும் என்றபடி. (9)

## பத்தராய்ப்பணிவார்கள்

10. பத்தரா யென்றெடுத் தருடிருக் கவியிலிரு
பைங்கோதை யாரைவேட்ட
பான்மைக் கிணங்கவோ ரிருபுதல்வி யார்தமைப்
பயவாம லேபயந்த
சுத்தராய் வன்றொண்ட ரின்றொண்டர் தழுவித்
துதிக்கவைத் தவர்களாய
தொகையுளா ரென்னுமெழு வகையுளார் பொற்பதந்
தொழுதேத் தெடுத்தலசெய்வாம்
நித்தராய் மன்றுண்ட நவில்வா ருவக்கும்வெண்
ணீற்றொளி நிலாவொளியென
நினைந்தணைந் தாங்குக்கு வளைபொலிய வின்றே
னிரம்பவுண வளியடைந்தாங்
கத்தராய் கண்மணித் தொடைபொலி தரப்பொலியு
மம்புயத் தவனைநம்பு
மளவா வளந்துன்று குன்றைநகர் மேயவரு
ளாளியைக் காக்கவென்றே.

(கு - ரை.) 'பத்தராய்' என்றெடுத்த கவி - திருத்தொண்டத் தொகையில் பத்தாம் பாட்டல். கவியில் வன்றொண்டர் வைத்தவர்களாய தொகையுளார் என இயையும். இரு பைங்கோதையார் - பரவையார், சங்கிலியார். வேட்ட - திருமணஞ் செய்துகொண்ட. பான்மை-தன்மை. இருபுதல்வியார் - சிங்கடியார், வனப்பகையார் என்ற இருவர். இவர்களைப் 'பயவாமலே பயந்த' என்றது 'இவரெனக்குத் தூயமக்கள்' எனக்கொண்டு அப்படியே மகண்மையாக் கொண்டமைபற்றி. இவ்விரு பெண்மணிகளும் திருநாட்டியத்தான்குடியினரான கோட்புலிநாயனர் பெற்ற மக்களாவார். சுந்தரர் நாட்டியத்தான் குடிக்கெழுந்தருளியபோது கோட்புலியார் தம் இருமக்களையும் அடிமையாக்கொண்டருள வேண்டிய

போது அன்னூர் அவர்களை மகண்மையாக் கொண்டார். கொண்டதற்கேற்பச் சுந்தரர் தம் பதிகத்துத் தம்மைச் "சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன்" என்றும், "நாவலூரன் வனப்பகையப்பன்" என்றும் கூறிக்கொள்ளல் குறிக்கொள்ளத் தக்கது. சுத்தராய் - மாசுதோயாதவராய்; தூயராய். சிவ பிரானின் ஆஞ்ஞையின்படி கைப்பிடித்த இருவரைத் தவிர ஏனையரிடத்துச் சித்தஞ் சிறிதும் வையாத பெருந்தகையாகலின், 'சுத்தராய்' என்றது. 'துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா!' என்றார் சிவப்பிரகாசரும். மற்றும், பெருமிழலைக் குறும்பரென்னும் பரமயோகி சுந்தரரின் பெருமையையறிந்து அவருடைய திருவடிகளைத் திரிகரணங்களினாலும் வழிபட்டு வணங்குதலே முத்திநெறி யென்று துணிந்தனராதலின் 'சுத்தராய்' என்றதுமாம். வன்றொண்டர் - சுந்தரமூர்த்திகள்: "மற்று நீ வன்மைபேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை" என்று சிவபிரான் கூறியது நினைக. இன் தொண்டர் - இனிய சிவனடியார்கள். தொகையுளார் - தொகையடியார். எழு வகையுளார் - பத்தராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தம் சிவன்பாலே சேர்த்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் என்போர். இவ்வெழுவகையினருடன் தில்லைவாழந்தணரையும் பொய்யடிமையில்லாத புலவரையும் கூட்டத் தொகையடியார் ஒன்பதின்மராவர். நித்தர் - நித்தியர்; என்றும் அழிவில்லாதவர். மன்றுள் நடநவில்வார் எனப்பிரியும். மன்றுள் + நடம் - மன்றுணடம் என வரும்: 'ணளமுன் டணவும், ஆகும் தநக்களாயுங்காலே' என்றது விதி. நவிலுதல் - பழகுதல். நினைந்து - மயங்கவெண்ணி. அணைந்தாங்கு - சேர்ந்ததுபோல. ஆங்கு - உவமவுருபு. குவளை - அடையாளமாலை. குவளை மதியங் கண்டு மலர்வது. அளி - வண்டு. அளி அடைந்தாங்குக் கண்மணித் தொடை பொலிதர என இயைக்க. கண்மணி - உருத்திராக்கம். தொடை - மாலை. பொலிதர, தா - துணைவினை. அக்குமணிக்கு அளி உவமையாயிற்று. இவ்விடத்து, மயக்கவணியொடு வந்த தற்குறிப்பேற்றவணி காண்க. அத்தராய்ப் பொலியும் எனக் கூட்டி - யாவர்க்குந் தலைவராய்த் திகழும் என்னலாம். இனி, அத்தர் ஆய் - சிவபிரானுக்கு ஆதலாகிய. அம்புயத்தவன் - அழகிய புஜத்தையுடையவன், பிரமதேவன் என இருபொருள் கோடலாகும். நம்பும் - விரும்பத்தக்க. 'நம்பு மேவு நசையாகும்மே' அளவாவளம் - அளவுகடந்தவளப்பம். (10)

## மன்னியசீர்மறைநாவன்

11. மன்னிய திருப்பாட்டி லாகார முதலிய
மறந்திராப் பகன்முயன்று
வையத்து வாழ்வார்க ளேக்காத வண்ணநவ
மணியா லயம்புரிந்து
மின்னிய சடைப்பரமர் பிறதளி மறுத்தடை
விதங்கண் டுவந்தபூசல்
வித்தகர்முன் மேயவெழு வோருமெம் மிதயத்து
மேவவைத் தேத்தெடுப்பாம்
பன்னியதொ கையும்வகையு முதலாத லான்முதற்
பகர்சைவ ரேயருளினர்
பரவுவிரி யிறுதியா தலினிறுதி யாரெனப்
படுசைவ ரேயருளினர்
துன்னிய பொருத்தமிது வென்றுலக மகிழ்தரத்
தொண்டர்வர லாற்றைத்துந்
தூவாய் மலர்ந்தவருண் மொழிவான வனையான்ற
தோன்றலைக் காக்கவென்றே.

(கு - ரை.) மன்னிய திருப்பாட்டு – திருத்தொண்டத்தொகையில் பதினோராவது பாடல். பாட்டில் மேயஎன மேல் இயையும். ஆகாரம் முதலிய மறந்து - உணவு முதலியன நீத்து. நோக்காத வண்ணம் என்றது மனத்திலேயே கோயில் அமைத்தமைபற்றி. நவமணியாலயம் என்றது - நிதியமெல்லாம் தினைத்துணைமுதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டாராகலின். மின்னுதல் - ஒளிவீசுதல். பிறதளி - காடவர் கோமான் கச்சியிலெடுத்த கற்றளி. தளி - கோயில். 'மறுத்து' என்றது, 'நீ இங்கு ஒன்றிய செயலை நாளையொழிந்து பின்கொள்வாய்' என்றது நோக்கி. அடைவிதம் கண்டு உவந்த - விரும்பி யெழுந்தருளிய தன்மை கண்டு மகிழ்ந்த. பூசல் வித்தகர் - பூசலார் நாயனார். வித்தகர் - பேரறிவாளர். முன் - முன்னாகக்கொண்டு. எழுவோர் - பூசலார், மங்கையர்க்கரசியார், நேசநாயனார், கோச்செங்கட்சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சடையர், இசைஞானியார். மேவ - பொருந்த. தொகை - திருத்தொண்டத்தொகை. இது, தொகை நூல். இதனை வகைசெய்தவர் நம்பியாண்டார்நம்பி. ஆகவே, வகை நூல், நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர்திருவந்தாதி. இவையிரண்டும் [பெரியபுராணத்துக்கு] முதனூலாதலால், அவையிற்றை முதற்பகர் சைவர்களே அருளினர் என்றது. முதல் - முதனூல். முதற்பகர் சைவர் - ஆதிசைவர். சுந்தரமூர்த்திகளும் நம்பியாண்டார் நம்பியும் ஆதிசைவர்களாவார். விரி - விரிநூல்;

பெரியபுராணம். இறுதியாதலின் - கடைசியாதலால்; அதாவது, பின்னர்ப்பாடியதாதலால். இறுதியார் எனப்படு சைவர் - நான்காம் வருணத்தவராகிய வேளாளர்குடிச் சைவர், சேக்கிழார். பொருத்தம் - முதனூலை முதற்பகர் சைவரும், இறுதி நூலை இறுதியாரெனப்படு சைவரும் அருளியமை. தூவாய் - மானுடம் பாடாத வாய், வானவனை - தேவனை, ஆன்ற, சான்ற, தோன்றல் - ஆண்பாற்சிறப்புப்பெயர். (11)

## 2. செங்கீரைப் பருவம்

1. ஒண்கொண்ட பொதுவகத் துலகெலா முய்யநா
றுலகெலா மென்றதீஞ்சொ
லுவந்தே டெழுத்தாணி கொண்டெழு திரண்டுகை
யூர் புவி யுறப்பதித்து
வண்கொண்ட வொருதாண் மடித்தூன்றி யொருதாள்
வயங்குற வெடுத்தூன்றியொண்
வாய்கவிச் சுவைபொழுக் கறிவிப்ப தெனவமுத
மாட்சிமை யொழுக்கெடுப்ப
வெண்கொண்ட நெற்றிநீ றிளநிலவு மொண்கா
திருங்குழை யிளங்கதிருமவிட்
டெறிப்பவிள முறுவலுந் தோன்றமலர் திருமுக
மெடுத்துவா னளவுநொச்சித்
திண்கொண்ட குன்றையம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

(கு-ரை.) செங்கீரைப் பருவம்-(பிரபந்தத்தலைவனாகிய) குழந்தை செங்கீரையாடுதலைப்பற்றிய பருவம். செங்கீரை யென்பது - குழந்தைகள் சாய்ந்தாடும் ஒருவகை ஆட்டம்: அது - ஒரு காலைப்பதித்து ஒருகாலைத் தூக்கி இருபுறத்தும் தலையசைத்துக் கிளிசாய்ந்தாடுவது போலக் குழந்தையாடுவதென்பர்; ஆகவே, செவ்விய கிளி என்ற பொருளுள்ள செங்கீரம் என்பது - அது ஆடுவதுபோன்ற ஆட்டத்திற்கு ஆகிவந்தது. இப்பருவத்தில், குழந்தை தவழும்போது ஒரு முழந்தாளை யூன்றி ஒரு முழந்தாளை மடித்துத் தூக்கி இருதோளிலும் மாறிமாறித் தலையொன்றும்படி சாய்ந்தாடுதல் கூறப்படுவதை, "இருகை மலரம்புவிபதித்தொரு முழந்தாளிருத்தி யொருதாள் மேனிமிர்த்து", "ஒருதாளுந்தி யெழுந் திருகையும் ஒருங்குபதிந்து நிமிர்ந்து, அருள்பொழி திருமுகமசைய வசைந்தினி தாடுக செங்கீரை" என்ற தொடர்

களாலும் அறியலாம். இந்த முதற் செய்யுளிலும் இஃது கூறப்பட்டிருத்தல் காண்க. செங்கீரை - அழகிய கிளி. இப்பொருளில், கீர என்ற வடசொல் கீரை எனத் திரிந்து வந்ததென்ப. இது, ஐந்தாம் மாதத்திற் கூறப்படும்.

ஒண் - பொலிவு. பொதுவகம் - கனகசபை. நாறுதல் - தோன்றுதல். 'தீஞ்சொல்' என்றது, இறைவனே அசரீரியாக எடுத்துக்கொடுத்த முதலாதலின். வண் - வளம். 'அமுதம்' என்றது, வாயூறுநீரை: இதனைச் சொள்ளுநீரென்பர். இந் நீரொழுக்குப் பின்னர்வருஞ் கவிச்சுவையொழுக்கை முற்கூட்டியறிவிப்பதுபோலுள்ள தென்றூர்: தற்குறிப்பேற்றவுவமை. எண் கொண்ட - மதிப்புக்கொண்ட. நீற்றுக்கு மதிப்புத் திருநீற்றுப் பதிகங்கொண்டு தெளிக. இனி, நெற்றிக்கு அடையாக்கினுமாம். நெற்றித்திருநீறும் காதிருங்குழையும் அடைவே இளநிலவையும் இளஞ்சூரியனொளியையும் எறிப்ப. இள முறுவல் - புன்சிரிப்பு. எடுத்து - தூக்கி. நொச்சி - மதில். திண் - உரம். (12)

2. பொருவரிய தொண்டர்கள் புராணத்து ளிறையருட்
பொலிவா னிரம்புசொற்கள்
போற்றிடு விருப்பநீர் நம்மைமழ வாக்கிவாய்
புகல்குதலை மழலையென்ன
மருவுமொழி யாசையுற் றீர்பய னுறுதென்ன
வள்ளான் மறுத்துரைத்தால்
வார்த்தைப் பயன்கொள வலேந்தக்க சான்றுநீ
வாய்மலர் புராணநின்றும்
ஒருவரிய தாஞ்செப்ப லுற்றபொரு ளென்றகவி
யோதவேண் டுவதினியெவ
னுனதுசொற் பயனுணர்த லிலமென்னின் மழவா
வுவப்பதும் பொய்ம்மையாமே
திருவமிகு குன்றையம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

(கு - ரை.) பொரு - ஒப்பு. நிரம்பு சொற்கள் - நற்பயன் நிரம்பிய சொற்கள். விருப்பம் - விருப்பத்தினல்: மூன்றனுருபு தொக்கது. மழவு - குழந்தைக்குப் பண்பாகுபெயர். மழவு - இளமை: "மழவும் குழவும் இளமைப் பொருள". வாய்புகல் குதலை - வாயினற் பேசுகின்ற பொருள் விளங்காச்சொற்களை; அவைகளை மழலையென்று சொல்லிக்கொண்டாடும்படி மொழி

யாசை பெற்றீர் என்க. வள்ளால் - சேக்கிழாரை நோக்கிய விளி. வலேம் - வல்லமை யுடையேம்; தன்மைப்பன்மை வினைமுற்று. அதற்கு, என் சார்பில் தக்க சாட்சி யொன்றுளது: அது நீர் அருளிய புராணத்திலேயே யுள்ளது: அதுதான் நீக்குதற்கரிய "செப்பலுற்றபொருள்" என்று தொடங்குங்கவி என்கிறார் பிள்ளையவர்கள், கவி - "செப்பலுற்ற பொருளின் சிறப்பினால், அப் பொருட்குரை யாவருங் கொள்வரால், இப்பொருட்கென் னுரை சிறிதாயினும், மெய்ப்பொருட்குரி யார்கொள்வர் மேன்மையால்" என்பது. இச்செய்யுளின் விளக்கம்:—மழலைச் சொற்களைப் பேசலுற்ற குழந்தையின் சிறப்பினாலே அந்தப் பொருள் நிரம்பாத மெனசொற்களுக்கும் யாவரும் பொருள் கொள்வார்கள்: அது போல, இங்குக் கூறத்தொடங்கும் பொருளின் பெருமை நோக்க, என் உரை சிறிதாயினும் மெய்யறிஞர்கள் அபபெருமையையே பார்த்து, ஏற்றுக்கொள்வார்கள் எனபது. எனவே, இனி ஓத வேண்டுவது என்னவிருக்கிறது? உமது சொற்களுக்குப்பய னுணர்தல் என்மாட்டு இல்லையென்றால், பின்னர் உம்மை மழவாக் கொண்டு [இப்பிள்ளைத்தமிழிற்] பாடியுவப்பதும் பொய்ம்மையாகுமே. ஆதலின், 'நும் வார்த்தை பயன்கொள வலேம்' என்றதைச் சாதித்தபடி. எவன் - வினாவினைக்குறிப்பு முற்று திருவம் - அம், சாரியை (13)

3. ஒப்பரிய தொண்டர்தம் மருமையும் பெருமையு
முவக்குமவ ரவர்செய்கையு
முவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமு
மும்பர்கோ னருடட்பமுந்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையு மடையுந்
தவாப்பொரு ளணிச்சிறப்புந்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிநம்வெற் பெனவிளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற் றனபாயன்
மேயவவை யகநயந்து
வியந்துமெப் பாட்டினொடு பாராட்டி மகிழமேன்
மேல்விரித் தருளியபிரான்
செப்பரிய குன்றையம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

(கு - ரை.) உவக்கும் - உவப்பையுண்டாக்குகின்ற. உவமை யில்லா - உவமைகாட்டமுடியாத. நுட்பம் - நுண்மை. திட்பம் -

பத்திவலிமை. உம்பர்கோன்-சிவபெருமான். அருட்டப்பம் = அருள் + தட்பம்; அருளும் குளிர்ந்ததன்மை. தப்பரிய-தவறில்லாத. அடை-அடைமொழிகள். தவா-நீங்காத, கெடாத. பொருளணி-உம்மைத் தொகை. பொருளணிச்சிறப்பு - பொருட்சிறப்பு, அணிச்சிறப்பு. இனி, சிறப்புறப் பொருளணிகள் கூறப்பட்டதெனக்கொள்ளலு மாம். தமிழ்மறை - தேவாரம். இனி, மேல் 'விரித்தருளிய' என வருதலுேக்கி, தமிழ்மறை – திருத்தொண்டத்தொகை என்னவு மாம். மந்தணம் - இரகசியங்கள்: 'தத்துவரகசியம்,' 'கீதா ரகசியம்' என்பதுபோலே கொள்ளவேண்டுவது. வெள்ளிடை - வெட்டவெளி. தவிர்தல் - தங்குதல். எனவே வெள்ளிடை மலை போலே, யாவர்க்கும் எளிதில் விளங்கும்படி என்பது கருதியது. விளங்க, மகிழ, விரித்தருளிய பிரான் என மேல் இயையும். வெப்பரிய - வெம்மையே தெரியாத. நிழற்று - நிழலைச் செய்கின்ற. அநபாயன் அவையினுள்ளோர் நயந்து வியந்து மெய்ப்பாட்டி ஞெடு பாராட்டி மகிழச் சேக்கிழார் புராணம் விரித்தருளினர் என்பது உணரவேண்டுவது. மெய்ப்பாடு - உடம்பிற்றோன்றும் உணர்ச்சிக் குறிகள்: கண்ணீர் துளித்தல், மயிர்க் கூச்செறிதல் போல்வன. (14)

4. தாயவொளி யிருடபுபொன் மாளிகைத் தில்லைச்
சபாநடன நாதர்பெத்தான்
சாம்பானை யுய்த்தனம் நிருவாண தீக்கையாற்
றகு முத்தி யடைவியென்றே
ஆயதிரு முகமுய்த் திடப்பெற்ற கைலாய
வம்பரம் பரையிலளவா
அருளுருவ மாயவ தரித்திட்ட மெய்ஞ்ஞான
வற்புத வுமாபதிசிவன்
நேயமிக விம்மைக்கு மறுமைக்கு மாதார
நிலையதீ தென்றுணர்ந்து
நினதுவர லாறருமை பாராட்டி யருள்செய
நிரம்புமான் மியமடைந்தாய்
தேயநிகழ் குன்றையம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

(கு - ரை.) தாய - தாவிய. தபுதல் - கெடுதல். உய்த்தனம் - அனுப்பியிருக்கிறோம். தீக்கை = தீட்சை: வடசொல்; மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்று பொருள். இத்தீக்கை சமயம் விசேடம் நிருவாணம் என மூவகைப்படும். சமயவிசேட

தீக்கைகள் பெற்றவருள்ளும் பக்குவமுடையார்க்குச் செய்யப்படுவது நிருவாண தீக்கை. ஆசிரியர் சீடனுக்கு இந்தத் தீக்கை செய்யும்போது அத்துவாக்களைச் சோதித்து அவ்வவற்றிலுள்ள கன்மங்களைப் போக்கி, அவனுடைய ஆன்மாவைச் சிவனது திருவருளிலொடுக்கி, அது ஒடுங்கியவழி, மாணிக்கத்தைச் சார்ந்த படிகவொளிபோலத் தற்போதம் ஒடுங்கவும் திருவருட்குணங்கள் விளங்கச் சிவானந்தம் மேலிடவும் செய்வர். இத்தகைய நிருவாணம், சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணம் என இருவகைப்படுமெனவும், முதலது தீக்கை முடிவிலேயே முத்தி பயப்பதெனவும், பின்னது தேக முடிவில் முத்திபயப்பதெனவும், கூறுவர். இவைகளின் பெருமையை வல்லார்வாய்க் கேட்டுணர்க- நிருவாணம், மோக்கம், முத்தி. ஆகவே, நிருவாண தீக்கை யென்பது - மோட்சத்திற்கேதுவாகிய தீட்சை யென்றுயிற்று. ஆய - பொருந்திய. திருமுகம் - கடிதச்சீட்டு. அதாவது:—

**"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசை**
**பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்க முறை" என்பது.**

உய்த்திடப்பெற்ற - கொண்டுவந்து கொடுக்கப்பெற்ற. பெற்ற உமாபதிசிவன் என இயையும். இங்குக் குறித்த வரலாறு:—தில்லையம்பலவனிடத்து அன்புடையவராய்த் திருக்கோயிலுக்கு விறகு வெட்டிக்கொணர்ந்து சேர்ப்பதையே பணிவிடையாகக்கொண்டிருந்த பெத்தான் சாபபான என்ற புலையர் குலவுத்தமற்கு அம்பலவன் கொடுத்தனுப்பிய சீட்டின்படியே உமாபதிசிவம் நிருவாணதீக்கை செய்ய, அச் சாம்பனுர் வீடெய்துதற்கான பரிபக்குவமுடையவராக விருந்தமையால், அவர் முத்தியடைந்தார். இதனுண்மையுணராத சாம்பனுரின் சுற்றத்தாரும் மனைவியும் கலங்கிப்பதறி, அரசனிடம்போய்ச் சுவாமிகள் தீயால் சாம்பனுரை எரித்துவிட்டதாகக் குறைகூறினர். அப்போது அரசனுக்கு உமாபதிசிவம் தீக்கையின் மேன்மையை யெடுத்து விளக்கி, ஆங்கிருந்ததோர் திருமஞ்சனநீரால் வளர்ந்த முள்ளிச் செடியைத் தம் அருட்பார்வையால் நோக்க, அது ஒளிப்பிழம்பாக வானிலெழுந்து மறைந்து சிவத்தோடு கலந்தது. அளவா - அளவிடமுடியாத. அவதரித்திட்ட என்றது தெய்விகப்பிறவி குறித்தற்கு. மெய்ஞ்ஞானம் - தத்துவஞானம். அற்புதம் - வியத்தகு செயல்கள். உமாபதிசிவாசாரியர் ஞானகுரவராயிருந்து பல வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார்: பெத்தான் சாம்பானுக்கு முத்திகொடுத்தமை, கொடிக்கவி கூறிக் கொடியேற்றியமை,

தில்லைவாழந்தணர்கள் சிற்றம்பலமுடையாரது பேடகத்தைத் திறந்து பார்க்கவும் அங்கே திருவடிவத்தைக்காணுது அச்சமுற, அஞ்ஞான்று "நாம் உமாதிபால் அமர்ந்தோம்'' என்று மொழியும் படி வீற்றிருந்தமை போல்வன. நேயம் - விருப்பம். நிலையது ஈது எனப்பிரியும். நிலையது - இருப்பிடம். வரலாறு - சரிதம்: சேக்கிழார்புராணம் உமாபதிசிவன் உணர்ந்து, பாராட்டி, அருள்செய, அடைந்தாய் என இயையும். மான்மியம் - பெருமை: மாகாத்மியம் என்பது சிதைந்து வந்தது. தேயம் - தேசம். நிகழ்தல் - நிலவுதல். (15)

5. பொருந்துமா யிர முகக் கங்கைமர பிற்கதிர்கள்
பொலியுமா யிரமுள்ளவன்
போற்றேன்றி யாயிர மறைக்குமெட் டாச்சென்னி
பொற்பவா யிர முடையகோன்
மருந்துநே ரருள்பெற்ற மைக்கேற்ப வாயிரம்
வயங்குபொற் காணிநீஇய
மண்டப மிவர்ந்தா யிரந்தொண்டர் வரலாறு
வாய்மலர்ந் தவவாவிவாய்
இருந்துசூழ் கொழுவுண்டு புண்டரீ கத்தின்வா
யியைபுல வறத்துவட்டி
யிருஞ்சங்க னம்பேட னத்தழுவி நாணமுற்
றியல்பேடு மற்றென்றுனுஞ்
செருந்துசூழ் குன்றைபம் பதியருண் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே.

(கு - ரை.) ஆயிரம் - பலவென்னும் பொருட்டு. முகம் - வழிக்கால்கள். கங்கை ஆயிரமுகத்தான் இறங்குவதென்பதை "கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கைநங்கை. ஆயிரமாமுகத்தினொடு வானிற்றேன்றும்........... பூவணத்தெம் புனிதனர்க்கே'' என்ற நாவுக்கரசர் திருத்தாண்டகத்துங்காண்க. கங்கைமரபு - வேளாண் குலம். ஆயிரங்கதிர்களுள்ளவன் - சூரியன். ஆயிரம் மறை - அனந்தமான மறைகள். 'அநந்தாவை வேதா:' என்பதுங் காண்க. பொற்ப - விளக்கமுற. சென்னி ஆயிரமுடைய கோன் - சிவபிரான்: "ஆயிரஞாயிறுபோலும் ஆயிர நீண்முடியானும்'' என்றார் நாவுக்கரசர் தேவாரத்தும். மருந்து - சாவாமருந்து தேவாமிர்தம். நேர் - உவமஉருபு. பொற் கால் - அழகிய தூண். நீஇய - நிறுத்தல் பெற்ற. மண்டபம் - [தில்லையிலுள்ள] ஆயிரக்

கான் மண்டபம். இவர்ந்து - சேர்ந்து. ஆயிரம் தொண்டர் - பல சிவனடியார்கள்; தனியடியாரும் தொகையடியாருமாகிய நாயன்மார்கள். ஆயிரம் என்ற சொல் ஒரேபொருளில் பலமுறை வந்தது, சொற்பொருட்பின் வருநிலை. வாய்மலர்ந்தவ - விளி. வாவிவாய் - நீர்நிலையில்: வாய் - ஏழனுருபு. கொழு - (மீன்) நிணம். புண்டரீகம் - தாமரை, இயை - தங்கி. புலவு அற துவட்டி - புலால்நாற்றம் நீங்குமாறு துடைத்து. அனம் - அன்னம்: இடைக்குறை. இருஞ்சங்கு - பெரிய சங்குப்பூச்சி. பேடு - பெடை. சங்கினைப் பேடென்று மயங்கியது, மயக்கவணி. இயல் - பொருந்திய. மற்று - வேறொன்று. உனும் - நினைக்கும்; உன்னும் என்பதன் இடைக்குறை. செருந்து - செருந்தி: ஒருவித பூச்செடி: "செருந்தி காலையே கனகம் மலர்கின்ற சாய்க்காடே" என்றது தேவாரம். பெரிய புராணம் தில்லை ஆயிரக்கான்மண்டபத்து அரங்கேறியது. (16)

வேறு.

6. தோம்பல வுடையேம் பிறவியை யஞ்சேஞ்
சுடர்நின் சினகரமுற்
றூகே மெழுகே மிரவும் பகலுந்
துதியே மாயிடினும்
நாம்பல தேவரை நண்ணே மெண்ணேம்
நயவேம் வியவேமால்
நாண்மலர் பலகொடு நின்னடி யேத்தி
நயத்தலை மேற்கொண்டு
கூம்பல்செய் கையே மெய்யே மிதனிற்
கோமா னீயருளுங்
கூலியை வன்கொ லவாயது நல்கிற்
குலாவு முவப்புறுவேம்
ஆம்ப லவாவுதன் மேய புயாசல
வாடுக செங்கீரை
ஆரரு ளாகர சேவையர் காவல
வாடுக செங்கீரை.

(கு - ரை.) தோம் - தோஷம்; குற்றம். பல என்றது, காமகுரோத லோப மோக மத மாற்சரியங்களையெண்ணி. பிறவியை அஞ்சேம் - மீண்டும் மீண்டும், பிறவியெடுத்தற்குப் பயப்படோம். 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி......செல்லாஅநின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும்' பிறத்தற்கு அஞ்சோம் என்றபடி. சுடர் - விளங்குகின்ற சுடர்சினகரம் என இயையும்.

சினகரம் - கோயில். முன் - இடமுன், தூகேம் - அலகிடேம். 'கோமானின் திருக்கோயில் தூகேம் மெழுகேம்' என்றார் மணி வாசகரும். பல தேவரை - உன்னையொழிந்த வெவ்வேறு தேவரை, எண்ணேம் - ஒருபொருட்டாகவும் நினைக்கமாட்டோம். நயத்தல் - விரும்புதல். வியத்தல் - கொண்டாடுதல். நாண்மலர் - அன்று மலர்ந்த மலர். கூம்பல் செய் கையேம் - அஞ்சலி செய்யுங் கையினையுடையேம். கூம்பல் - குவிதல், கூப்புதல். மெய்யேம் - உண்மையினையே பேசுதலுடையேம். எண்ணேம், கையேம் மெய்யேம் என்ற மூன்றினாலும் மனம், காயம், வாக்கு என்ற திரிகரணங்களின் சுத்தி பெற வைக்கப்பட்டது. இதனின் - இதற்காக. கோமான் - விளி. கூலி - பிரதிபலன். எவன் - வினாவினைக்குறிப்புமுற்று. கொல் - ஐயப்பொருளில் வந்த இடைச் சொல்; அசையுமாம். அவாயது - அவாவியது; [யாங்கள்] விரும்பியது. குலாவுதல் - மகிழ்தல்; 'மறையோர் குலாவியேத்துங் குடவாயில்' (தேவாரம்). எனவே, குலாவும் உவப்பு - மிக்க மகிழ்ச்சி. ஆம்பல் - குவளைப்பூவைக் காட்டியது. ஆம்பல், அல்லி, குவளை அபேதமாக் கோடலுண்டு. அவாவுதல் - விரும்புதல். புயாசலம் - மலைபோன்ற தோள்கள்; உருவகம். ஆம்பல் அவாவுதல் மேய புயாசல என்றது - குவளைமலர் மாலை வேளாளர்க்குரித் தாதல் நோக்கி; இஃது முன்னரும் 'மடல் சூழ்ந்த செங்குவளை மாலையணி திண்டோள் வலத்தனே' எனக் காட்டப்பட்டுள்ளது. அருளாகரன் - அருளுக்கு இருப்பிடமானவன். ஆகரம் - இருப்பிடம். சேவையர் காவலர் - சேக்கிழார். (17)

7. புண்ணிய முதலே பொங்கொளி மணியே
பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலின் முத்தே கள்ளமில் வித்தே
புரையில் சுவைப்பாகே
தண்ணிய வமுதே மண்ணியன் மதியே
தமிழ்நா வலரேறே
சத்துவ நிதியே பொத்திய மலநோய்
சாடு பெரும்பகையே
எண்ணிய வன்ப ருளத்தமு தூற
வினிக்கு நறுந்தேனே
யென்றும் பத்தி ரசங்கனி கனியே
யெந்நா ளினுமெங்கட்
கண்ணிய பொருளே யாய்பவர் தெருளே
யாடுக செங்கீரை
ஆரரு ளாகர சேவையர் காவல
வாடுக செங்கீரை.

(கு - ரை.) முதலே என்றது வடிவுத்தோற்றத்தையும், மணியே என்றது ஞானவொளியையும், பெருவாழ்வே என்றது அனைவர்க்கும் நல்வாழ்வளிக்கும் பெற்றிமையையும் பொள்ளலில் முத்தே என்றது புரையோடாத தூய்மையையும் கள்ளமில் வித்தே என்றது செவ்வை மொழிகளை வித்திப்பழுதுபடாதவாறு நற்பயன் விளைத்தலையும். பாகே, அமுதே, தேனே, கனியே என்றவை எல்லோர்க்கும் பலபட இனிமை பயத்தலையும், மதியே என்றது அஞ்ஞானவிருளைச் சீத்தலையும், நாவலர் ஏறே என்றது கவிஞர்களுள் பீடுநடையுடைமையையும், நிதியே என்றது பழுமரம் பழுத்ததுபோல் பயன்படுதலையும், பகையே என்றது மும்மலங்களும் அறவே தலைகாட்டாவாறு ஒழிக்கும் வீரத்தையும், பொருளே என்றது எய்ப்பினில் வைப்பாய்ப் பயன்படும் விசேடத்தையும், தெருளே என்றது தெள்ளிய ஞானமூட்டுதலையும் காட்டவந்த விளிகளாக் கொள்க. பொய்யா - உண்மையான. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். பொள்ளலில் - உட்டுளையில்லாத; துளையிடப்படாத. புரை - குற்றம். பாகினுக்குக் குற்றமின்மை : உண்ணவுண்ணத் தெவிட்டாமை. மண்ணியல்மதி யென்றது வானியல்மதியினின்று வேறுபடுத்தற்கு. சத்துவம் - சத்துவகுணம், நற்காரியங்களிலேயே நோக்கம் உண்டாக்குவதான குணம்: பொத்திய - மூடிமறைத்த: ஜீவனை மூடிப்போர்த்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்கள். சாடுதல் - ஒழித்தல், போக்குதல். அண்ணிய-கிட்டிய, நெருங்கிய. தெருள்-தெளிவு. (18)

8\. சூழிய மேவிய கொண்டை விளங்கத் தொட்டுக் கட்டிய பொற்
சுட்டி யிலங்கப் புண்டர நீறு துதைந்து நிலாக்கால
வாழிய கனிவா யூறற் றேறன் மார்பின் வழிந்தோட
வடிகா திற்புனை குழையிற் செவ்விய மணியிள வெயில்வீச
வீழிய வாவிய வாயிள முறுவல் விளங்க வரைப்பொன்னுண்
மின்னுக் காலப் பேரெழி னோக்குநர் விழிகள் விருந்துசெய
வாழிய வன்ப ரகத்தமர் செஞ்சுட ராடுக செங்கீரை
ஆரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை.

(கு - ரை.) சூழியம் - உச்சிக்கொண்டையிலணியும் ஆபரணம்: 'விட்டிலகு சூழியம் விழுங்கு சிறுகொண்டை'' (திருவிளை: தடாதகை: 16) சுட்டி - நுதலணி. புண்டரம் - நெற்றி முதலியவற்றில் தரிக்குங் குறி. ஈண்டு, திர்யக் புண்டரம், துதைதல் - நெருங்குதல், மிகுதல். நிலாக்காலுதல் - வெள்ளொளி வீசுதல். வாழிய - அசைச்சொல். ஊறல் தேறல் - ஊறுகின்ற தேன்; சொள்ளுநீர். வடி - தொங்குகின்ற. நீண்ட: 'குழைவிரவு

வடிகாதா' (தேவாரம்). வெயில் - ஒளி. வீழி - வீழிக்கனி: வாய்க்கு ஒப்புக்கூறப்படுவது: 'வீழியின்கனி வாயொரு மெல்லியல்' (கம்ப, பால: புனல்விளை: 28). அவாவிய - உவமவாசகம். அரைப்பொன் நாண் - பொன்னாலாகிய அரைஞாண். அரைநாண் - அரையிற் கட்டுங்கயிறு. மின்னு - ஒளி. எழில் - அழகு. நோக்குநர்-ந்- பெயரிடைநிலை. வாழிய அன்பர் - வாழ்ச்சிபெற்ற அன்பர். அமர் - விரும்பியெழுந்தருளியிருக்கின்ற - சுடர் - உவமவாகு பெயர். (19)

9. **இவர்சரி யையரிவர் கிரியையர் யோகத் தினரிவ ரிவர்ஞான**
**வியல்பின ரிவரி லறத்து வழாதவ ரிவர்துற வறநின்றார்**
**கவர்மன மொழியிவர் பிரமச ரியநிலை கைக்கொண் டோரிவரே**
**கண்குளிர் வேடம் பொருளென நம்பினர் கருதரு மிவராதித்**
**தவர்நிலை யுணரா வருளின னிறைவன் றக்கன வுலகறியச்**
**சாற்றின னனைவ னேயுல கறியச் சாற்றிய படியென்ன**
**வவரவர் செயன்முத லருளிய வல்லவ வாடுக செங்கீரை**
**ஆரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை.**

(கு-ரை.) சரியையாவது - திருக்கோயில் திருப்பணிசெய்தல், சிவமூர்த்தங்களை வழிபடல், அடியார் பூசனைபுரிதல் முதலாகப் புறத்தொழிலாற் சிவபெருமானது உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது - அகத்தொழில் புறத்தொழில் இரண்டினாலும் சிவனது அருவுருவத் திருமேனியாகிய இலிங்க வடிவத்தை நோக்கிச் செய்யும் வழிபாடு. யோகமாவது- தியான சமாதிகளான அகத்தொழிலொன்றினாலே சிவனது அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. ஞானமாவது - சிவனை அரு உருவங்கடந்த திருமேனியுடையராகக் கேட்டல் முதலிய ஞானமுறைப்படி அறிவால் வழிபடுகை. இவற்றைச் செய்தார் முறையே சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் என்னும் பதமுத்திகளை யடைவரென்பர். சரியை முதலியனவும் சிவனையறிதலொப்புமையான் ஞானமேயாகுமென்பது ''விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும், அரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே'' என்ற தாயுமானார் வாக்காலறியலாம். இலறம் - இல்லறம்; தொகுத்தல். கவர்தல் - வசப்படுத்தல்: 'உள்ளங்கவர்கள்வன்'. இனி, கவர்மன மொழியிவர் - வானப்பிரத்த நிலையினரிவர் எனலுமாம்; அங்ஙனங் கொள்ளின், நான்காச்சிரம நிலையும் கூறப்பட்டது காண்க. வேடம்-சிவவேடம்; திருநீறு, உருத்திராக்கம் முதலியவைகளைத் தரித்த வேடம். பொருளென நம்பினர்-மெய்ப்பொருளுனார், கழறிற்றறிவார் போன்றோர். கருதரும்

இவர்-சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர், சண்டேசுரர், அரிவாட்டாயர் போன்றோர். ஆதி-முதலாக. தவர்-தவசிகள்: மேலோர் என்றபடி. உணரா-உணர்ந்து; செய்யாவென்னும் வாய் பாட்டு உடன்பாட்டெச்சம். தக்கன இறைவன் அருளினன் என மாறுக. தக்கன-அவரவர் நிலைக்குத்தக்கபேற்றை. அங்ஙன் அருளுங் காலத்து, 'இவரிவ ரின்னின்ன நிலையினராதலின், அதற்கேற்ப அருளினேம்' என்று, சிவபிரான் தன் சொந்த இறைவடிவில் நின்று உலகறியச் சொல்லவில்லை; அக்குறை தீர அச்சிவபெருமானே உலகறியச் சொல்லியபடி யென்னுமாறு சேக்கிழார் அவதரித்து, அவரவர் செயல் முதலியவற்றை யுணர்ந்து விரித்தருளினரென்பது கருத்து. (20)

10. நந்தி வரைத்தலை யொருமுனி சுரபி நயக்கப் பொழிதீம்பால்
நதியா யங்கங் கோடுபு கூப நயங்கிள ரேரிகுள
மூந்தி யெழுங்கா லோடை தடாக முதற்பல வுந்நிறையா
முழுத்த சுவைப்பா லாக்குபு பின்னும் மூரிக் கடல்புக்குப்
புந்தி யவாவ நிரம்பலின் மாயோன் புரிகண் டுயிலு மிடம்
புகலிது வோவது வோவென வாயப் பொலிதண் டகநாட
அந்தி மதிச்சடை யண்ணற் கினியவ வாடுக செங்கீரை
ஆரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை.

(கு-ரை) நந்திவரை - நந்திதுர்க்கம்; நந்திமலை: இது மைசூர் ராஜ்யத்திலுள்ளது. இம்மலையிலிருந்து பாலாறு உற்பத்தியாகிறது. தலை - ஏழனுருபு. முனி-வசிட்டன். சுரபி-பசு: காமதேனு. நயக்க-மனமுவந்து. நதியாய் அங்கங்கு ஓடுபு பலவும் நிறையா என மேலி யையும். ஓடுபு-ஓடி: செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மேல், 'ஆக்குபு' என வருவதும் இதுவே. கூபம் - கிணறு: வாவி. நயம் - இனிமை. கால்-வாய்க்கால். நிறையா - நிறைத்து: உடன் பாட்டெச்சம். "துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால், பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே, அங்கணித் திலஞ் சந்தன மகிலொடு மணிகள், பங்கயத் தடம் நிறைப்பவந் திழிவது பாலி" என்றனர் சேக்கிழாரும். (திருக்குறிப்பு: 21) முழுத்த - முதிர்ச்சிபெற்ற: எஞ்சுதலின்றி எனவுமாம். மூரி - வலிமை. கடலுக்கு வலிமையாவது - உலகினை ஆக்கல், அளித்தல், அழித்தல். புந்தி - மனம். அவாவ - விரும்புமாறு, மகிழுமாறு. மாயோன் - விட்டுணு. புரி - விரும்பி. கண்துயிலும் இடம் - பள்ளி கொள்ளுமிடம். இதுவோ - பாலாறுநிரப்பிய இந்த இடமோ. அதுவோ - அந்தத் திருப்பாற் கடலோ. புகல் - செல்வாயாக. எனவாய் - என்று கூறும்படியாக. பாலாறு கடல்புக்கு நிரப்பலின்,

விட்டுணு துயிலும் பாற்கடலோ இது என மயங்கவைக்குமென்பது கருதியபொருள். பொலி அத் தண்டகநாட என இயைக்க. தண்டக நாடு காஞ்சி நகரினைச் சூழவிருந்த நாடு: இட்சுவாகுவின் புத்திரனை தண்டகனுண்ட நாடாதலின் அப்பெயர் பெற்றது. 'தன்னையே வேண்டித் தழன்மகஞ்செய்யத் தண்டகற் கெண்டிசையரசு, தன்னை யீந்திடலாற் றண்டகபுரமாந் தனிப்பெயர் பெற்றதத் தனியூர்' எனற கந்த புராணமும் ஒரு சார் நினைக. குன்றத்தூரும் இந்நாட்டினைச் சேர்ந்தது என்பது குறிப்பு. அந்த மதி-பிறைச்சந்திரன் (21)

## 3. தாலப்பருவம்.

1. வெண்ணந் துரறி வயிறுளைந்து
வீற்று வீற்ருக் கருவுயிர்த்த
வெண்ணித் திலத்தை யரித்தெடுத்து
வெள்வாய்க் களமர் கரைகுவிக்க
வண்ணந் துவரென் றுவமிக்கும்
வாயோ திமரீர் குடைந்தெழுந்து
மற்றக் குவியன் மேலிவர்ந்து
மருவி முதிரா வெயில்காயக்
கண்ணந் துறவுண் டெழுதநமக்
களமர் மராள முட்டையினைக்
கதிர்நித் திலமென் றுறக்குவித்தோங்
கடையே மயங்கி யெனநாணுந்
தண்ணந் துறைசேர் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ.

(கு - ரை.) தாலப்பருவம்:—தாயர் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி நாவையசைத்துப் பாடும் பருவத்தைக் கூறும் பகுதி: (தாலம் = தாலு: நாக்கு). இது - எட்டாம் மாதத்திற் கூறப்படும்; 'எட்டாந்திங்களி னியற்ருலாட்டலும்' என்பது பிங்கலந்தை.

நந்து - சங்கு. உரறுதல்-முழுங்குதல், ஒலித்தல்: 'உரு முரறு கருவிய பெருமலை பிற்பட' (மலைபடு:357) வயிறுளைதல், கருவுயிர்த்தற்கு. உளைதல் - நோதல். வீற்றுவீற்ரு - தனித்தனியே. நித்திலம்-முத்து. அரித்து - கொழித்து: களமர் - உழவர். களமர் வாய் வெளுப்புக் கள்ளுண்டலால். வண்ணம் - (வாயின்) நிறம். துவர்-பவளம். வாயினையுடைய ஓதிமம் என்க. ஓதிமம்-அன்னப்பறவை,

மற்று-பிறகு. குவியல், நித்திலக் குவியல். இவர்ந்து - உட்கார்ந்து. மருவி-பொருந்தி. முதிரா வெயில்-இளவெயில். கள் நந்துற உண்டு எனப் பிரியும். நந்துற - செருக்குமிக. நந்து - முதனிலைத்தொழிற் பெயர். நந்துதல் - செருக்குதல்; 'யான் செலின் நந்திச் செறிற் சாம்புமிவள்' (கலித்:78) காண்க. மராளம் - அன்னம். எழுதரும்-தா, துணைவினை. உற - மிகுதியாக. மயங்கிக் குவித்தோம் கடையேம் என மாறுக. சங்கீன்ற முத்துக்களைத்தாம் குவித்திருப்பவும், அக்குவியலின்மேல் அன்னம் ஏறி இளவெயில் காயவே, கள்ளுண்ட செருக்கும் அதிகப் படக்களமர் தாம்குவித்தவை இன்னவென்பதுந் தெரியாது அறிவு மயங்கி, 'நித்தில மென்றெண்ணி அன்னத்தின் முட்டையைக் குவித்துவிட்டோமே, யாம் கடையேம்' என்று தம்மை நொந்து நாணினர் என்க. ஈண்டு, ஏதுவணியின் யங்கமாக்கொண்ட மயக்கவணி காண்க. கடையேம் - கடைப்பட்டவராயினேம்: உபயோகமில்லாதவர்களாயினேம் என்றபடி: இச்சொற் பிரயோகத்தில், மருதநிலவுழவரைக் 'கடைஞர்' என்று கூறும் தொனியுங் காண்க. நாணும் - நாணுதற்கிடனுன. தண் - குளிர்ந்த. அம் - அழகிய, சகல ஆகம பண்டித - எல்லா வேத சாத்திரங்களிலும் வல்லவனே! ஆகமம் - வேத சாஸ்திரங்கள். அவைகளில் பாண்டித்தியம் உடையவராகலின், 'தெய்வச் சைவா' என்றது. தெய்வம் - தெய்வத் தன்மை. (22)

2. நண்பா லெவரு முறத்தரிக்கு
நலங்கூர் நீற்றின் வெள்ளொளியால்
நாவா லெவரு மரமுழக்க
நாளுஞ் செயவாம் பேரொலியால்
எண்பாற் புலவ ரமுதுகொளற்
கெந்த விடத்து நெருங்குதலால்
ஏர்சா லரம்பை யெழுதலினு
லியனு கேசன் வைகுதலாற்
கண்பாற் கரிதோய் திருமடந்தை
காமுற் றிடலான் மாளிகைமேற்
கருமால் கிடந்து கண்டுயிலுங்
காட்சித் திறனுற் பொங்கியெழுந்
தண்பாற் கடனேர் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ.

(கு-ரை.) நண்பு - அன்பு. தரிக்கும் - பூசும். கூர் - மிகுதிப் பொருளில் வரும் உரிச்சொல். நீறு - திருநீறு. அரமுழக்கம் - 'ஹர

ஹுர' என முழங்குதல். ஆம் - ஆகும். எண்பால் - மதிக்குந் தன்மையையுடைய. புலவர் - கற்றறிஞர், தேவர் என்ற இருபொருளில் வந்தது. புலவர் அமுதுகொளல்-புலவர்கள் உணவு கொளல்: புலவர்கள் சேக்கிழார் பாடிய அமுதமான பாடல்களைச்சுவைத்தல் எனினுமாம். தேவர்கள் அமுதமுண்ணல் என்பது மற்றொரு பொருள். ஏர் - அழகு. அரம்பை - வாழைமரம், தேவமாதர் என்ற இருபொருளிலும் வந்தது. இயல் - பொருந்திய. நாகேசன்-திருநாகேச்சுரர், ஆதிசேடன் என்ற இருபொருளிலும் வந்தது. கரி - மை. திருமடந்தை - இலக்குமிதேவி. காமுற்றிடல் - விரும்பித் தங்குதல். எனவே, எல்லாரும் செல்வமுடையரென்றபடி. மால் - மேகம், திருமால் என்ற இருபொருளிலும் வந்தது. 'ஆல்' உருபுகள் கூடி 'நேர்' என்பதனோடு இயைந்தது.

வெள்ளொளி பரவல், பேரொலியெழல், புலவர் அமுதுகொள நெருங்குதல், அரம்பை எழுதல், நாகேசன் வைகுதல், திருமடந்தை காமுறல், கருமால் கண்டுயிலல் - இத்தன்மைகளில் குன்றத்தூர் பாற்கடலையொத்திருக்கிறது எனச்சிலேடை நயம்பெறக் கூறியது இது. (23)

3\. முந்த வெழுமாற் றுயர்பொன்னுன்
முழுச்செம் மணியான் மாளிகையு
முதுசூ ளிகையுந் தெற்றிகளு
முகப்பும் பிறவு மமைதலினல்
இந்த நகரம் பொன்னகரத்
தினுமிக் கிமைத்தல் விதியுளத்தி
லெண்ணி யாடூஉ மகடூஉவா
மெல்லா வுயிரும் விழியிமைத்தல்
நந்த வருட்சம் பந்தர்மண
நண்ணி யவர்க்குங் கதிகொடுத்த
நலம்போ லிதுசார் புவியகத்து
நகர்க்கெ லாஞ்செய் தனனென்று
சந்தத் தவர்சொல் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ.

(கு-ரை.) சூளிகை-நிலாமுற்றம். தெற்றி-திண்ணை. முகப்பு-கட்டிடத்தின் முன்னிடம். பொன்னகரம்-அமராவதி. இமைத்தல்-விளங்குதல்; கண்ணிமைத்தல் என்ற பொருளும் தொனிப்பது

காண்க. விதி-பிரமன். ஆடூஉ-ஆண். மகடூஉ-பெண். நந்த-மிகுமாறு, தழைக்குமாறு. அருள்-கடவுளருளைப்பெற்ற. மணம்-திருமணம். திருஞானசம்பந்தர் நல்லூர்ப்பெருமணத்தில், தமது கலியாணங்காணவந்த அனைவரையும் அவர்கள் பிறவிநோய்தீரும் பொருட்டு ஆங்குத் தோன்றிய சோதியினுட் புகச்சொல்லி நற்கதி பெறச்செய்த நலம் இங்குக் குறிக்கப்பட்டது. இது-இக்குன்றை நகர். புவியகத்து-புவியில் இமைத்தலை விதி யெண்ணி விழியமைத் தல் நந்த நகர்க்கெலாஞ் செய்தனன் என முடியும். சந்தத்தவர் - பாடுகின்ற புலவர்கள். (24)

4. முரிவில் வயிரங் கால்யாத்த
முழுமா ளிகைபாற் கடல்கடையா
முன்னந் திருமா லுருவொத்து
முயங்கு மெனவு மதற்கருகே
பிரிவில் கருநீ லங்குயிற்று
பெருமா ளிகையக் கடல்கடைந்த
பின்ன ரன்னு னுருவொத்துப்
பிறங்கு மெனவு மதற்கருகே
யெரிவில் விடுசெந் துகிர்மாட
மெயில்சூழ் காஞ்சி யடைந்தன்னு
னெய்து முருவொத் ததென்று
மெந்நா வலருங் கொண்டாடச்
சரிவில் வளஞ்சால் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ.

(கு-ரை) முரிவில் = முரிவு + இல் - முறிக்கப்படமாட்டாத. வயிரம் வெண்மை நிறமுடையது. கால் - உபசருக்கம். யாத்த - கட்டப்பட்ட, முழுமாளிகை-மாளிகைமுழுவதும். முயங்கும் - பொருந்தியிருக்கும். பிரிவில் = பிரிவு + இல்-பிளவுபடாத. கருநீலம் - கரிய நிற நீலமணி. குயிற்று - பதிக்கப்பட்ட. பாற்கடல்கடை தற்கு முன்னர் வெண்ணிறமுடையராயிருந்த விட்டுணு, அக்கடல் கடைந்தபின்னர் ஆலகாலவிடவேகத்தால் கரியநிறமுடைய பச்சை வண்ணராயினர் என்பதும், பின்னர், காஞ்சியில் இறைவனை வழி பட்டுச் சிவப்புநிறம்பெற்றுப் பவளவண்ணராயினர் என்பதும் ஈண்டுக் கூறிய விடயம். வெண்ணிறமுடையவர், கருநிறமாகியதை "வருகனல் வல்விடந்தாக்கி மாயவன் வெண்ணிறமேனி, கருகி னன்று தொடங்கிக் கரியனெனப் பெயர்பெற்றான்" என்றது காஞ்

சிப்புராணமும், வில் - ஒளி. துகிர் - பவளம். எயில் - மதில். காஞ்சி எயிற்கோட்டத்தினது என்பதும் நினைக. ஒத்தஃது ஒத்தது: ஆய்தம் விரித்தல். என்றும்-எனவும். எனவும் எனவும் என்றும் கொண்டாட என இயையும். சரிவில்=சரிவு+இல்: சரித லில்லாத, தாழ்வுபடாத. வயிரம் பதித்த மாளிகை, கருநீலங் குயிற்றிய மாளிகை, செந்துகிர் பதித்த மாடமாளிகை - மூன்றும் திருமாலின் மூவகை நிறமும் பெற்றுத் திகழ்ந்தன என்ற நயம் பாராட்டற்குரித்து. (25)

5. சோறு மணக்கு மடங்களெலாந்
தூய்மை மணக்குஞ் சிந்தையெலாஞ்
சுவண மணக்கு மாடையெலாந்
தொங்கல் மணக்குந் தோள்களெலாஞ்
சேறு மணக்குங் கழனியெலாஞ்
செல்வ மணக்கு மாடமெலாந்
தென்றன் மணக்கு மேடையெலாந்
தெய்வ மணக்குஞ் செய்யுளெலா
நீறு மணக்கு நெற்றியெலா
நெய்யே மணக்குங் கறிகளெலா
நெருப்பு மணக்குங் குண்டமெலா
நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறு மணக்குங் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ.

(கு-ரை.) மடம் - அறச்சாலை. தூய்மை, காம வெகுளி மயக்க மாகிய முப்பகையின்மையாலாயது. சுவணம் - சுவர்ணம்: பொன். மணத்தல் - விளங்குதல். ஆடை - பீதாம்பரத்தைக் குறித்தது. தொங்கல் — தொடங்கி யசைவது என மாலைக்குக் காரணக்குறி. சேடைவைத்தலால் கழனிகளில் சேறு மணக்குமென்றது. மணத்தல் - பொருந்துதல். தென்றல் மணக்கும் - தென்றல் வந்து கூடும். மேடை—உயர்ந்த இடம். செய்யுளெலாம் - அவ்வூரிற் றோன்றிய பாடல்களெலாம், தெய்வம்மணக்கும்-தெய்வத்தன்மை பொருந்தியிருக்கும். தெய்வம்-தெய்வத்தன்மை என்ற பொருளில் வருதலை 'தெய்வமே கமழுமேனி' (சீவக-1718) என்ற விடத்துங் காண்க. நெய்யே, ஏகாரம் பிரிநிலை. எண்ணெய் கலவாதது என்ற படி. நெருப்பு - அக்னி: வேதாக்கினி: முத்தீ. குண்டம் - ஓம குண்டம். நேயம் மணத்தல் - அன்பிற் கலத்தல். சாறு -

திருவிழா; உற்சவம். மணத்தல் - நேர்தல். எனவே, சாறு மணத்தல் - திருவிழாப்பொலிவு நீங்காதிருத்தல். 'மணக்கும்' என்ற சொல் பலமுறை வர சந்தர்ப்பத்திற்கேற்பப் பொருள் கொள்ளப்பட்டது. (26)

6. துங்க மிகுந்த வருந்தவ மேவிய தோலா நாத்திரண
தூமாக் கினியரு டொல்காப் பியமே தோன்றுமிலக்கணமாப்
பங்க மிலாச்சம யாதி யடைந்து பராஞ்சிவ சின்னமுறும்
பாக மரூஉம்பக் குவரே கேட்கப் படுமதி காரிகளா
வங்க மெடுத்துழ றுன்ப மொழிந்தின் படைவது வேபயனு
வற்புத மேவிய தொண்டர் புராணம தருள்கரு ணைக்கடலே
சங்க மரீஇயமர் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யம்புய ருலோ தாலேலோ.

(கு - ரை.) துங்கம் - உயர்ச்சி. தோலா - தோற்காத; ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். திரணதூமாக்கினி - தொல்காப்பியரின் இயற்பெயர். இவர், பார்க்கவ குலத்தவரான சமதக்னியின் புதல்வர். தோன்றும் - பொருந்திய என்றபடி. ஆ - ஆக வென்பதன் விகாரம். தொல்காப்பியமே இலக்கணமா என்றது - தொல்காப்பியத்தையே இலக்கணத்திற்கு அடிப்படையாகக் கொண்டமைந்தது பெரியபுராணம் என நிறுவியபடி. இதனுல், பவணந்தியாரது நன்னூல்போன்ற இலக்கணநூல்களைத் தழுவாது, பண்டைய இலக்கணத்தையே மேற்கொண்டனர் சேக்கிழார் எனக்குறித்தபடி. பங்கம் - குற்றம். சமயாதி - சமயம், விசேடம். நிருவாணம் என்ற மூவகைப்பட்ட தீக்கை. சமய தீக்கையாவது - சீடனைச் சம்பாத ஓமத்தால் தூய்மைசெய்து சைவாசாரத்துக்கு அதிகாரியாக்கும் வண்ணஞ் செய்யப்படுவது. விசேட தீக்கையாவது - சமய தீக்கையின் பின்னர் சீடனது ஆன்மாவை வாகீசுவரனுல் வாகீசுவரியின் கருப்பநாடியிற் செலுத்தி மீள வாங்கிச் சிவபுத்திரனுகச் செய்து சிவபூசை முதலியவற்றிற்கும் யோகநெறிக்கும் சைவாகமங்களையோதுதற்கும் அதிகாரியாக்கும் வண்ணஞ் செய்யப்படுவது. நிருவாண தீக்கையாவது - மேற்கூறியவருள்ளும் பக்குவமுடையார்க்குச் செய்யப்படுவது. இதனைப் பற்றி முன்னரே செங்கீரைப்பருவத்து நான்காஞ்செய்யுளிற் குறித்துள்ளேன். இவ்வாறு, தீக்கைபுரிந்து மலநீக்கஞ்செய்து நன்ஞானத்தையுதிப்பித்துத் திருவருட் பேரின்பத்தை யடையச்செய்யும் முறை சைவசமயத்தின் தனிச்சிறப்பாகு மென்பர். இதன் அருமைபெருமைகளை வல்லார்வாய்க் கேட்டுணர்க. பராம் - பராவும்: பெயரெச்சத்தினீற்றுயிர்மெய்சென்றது. சிவ சின்னம் - நீறு, உருத்திராக்கம் முதலியன புனைதல். பாகம் - மனப்பரிபாகம்.

மருஉம் - மருவும். பக்குவர் - சத்திநிபாதர்: சத்திநிபாதம் - பக்குவமுடைய ஆன்மாவிலே திருவருள்பதிகை. 'மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்திநிபாத மேவுதலும்' என்றது சித்தியாரும். அதிகாரிகள் - தகுதியுடையவர்கள். அங்கம் - சரீரம்; உடம்பு. உழல் துன்பம் - பிறவித்துன்பம். 'பிறந்திளைத்தேன்' என்றார் மணிவாசகரும். இன்பு - பேரின்பம்; சிவானந்தம். அற்புதம் மேவிய தொண்டர்புராணம் என்றது - செயற்கரிய செய்த பெரியோரைப் பற்றியதாகலின். சங்கம் - சங்குகள், சபைகள் என்ற இருபொருளிலுங் கொள்ளலாம்; சங்குகளெனக்கொண்டால் குன்றையோடியையும்; சபைகளெனக் கொண்டால் திருமுனியோடியையும். குன்றை - குன்றத்தூர்; மருஉ. சேக்கிழாரைத் 'திருமுனி' என்றது மநநசீலராதலின். தழைதல் - செழித்தல். புயல் - உருவகம். (27)

7\. அடியார் பெருமையு மருமையு நாளு மறியம் பலவாண
ரவர்வர லாறு விரித்துரை செய்பவ ராரென வுட்கருதிக்
கடியார் மற்றவ ரன்பத் தனையுங் கண்காண படிசெய்து
காமரு முதலு மெடுத்தரு ளினரிக் கடல்சூழ் புவியிடையிப்
படியார் பெற்றார் தமிழ்மான் மியமெப் பாடைக ளுக்குளதிப்
பாக்கிய நந்தவ மென்று பலோரும் பகரப் படுபவதீந்
தடியார் தடிசூழ் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய லேலோ தாலேலோ.

(கு-ரை.) அவர் - அவ் வடியார்கள். ஆர் - யார் என்பதன் மருஉ. கடி - விளக்கம். அன்பு - பக்தி. கண் காண்படி செய்து - ஞானக் கண்ணுக்கு விஷயமாக்கி. கண் - ஞானக்கண். காமரு - காமர் + மருவு; காமர் என்பது கடைக்குறைந்து நிற்க, மருவு என்பதன் ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டு மவ்வீறு சந்தியாற் கெட்டது. இங்ஙன் கொள்ளாது அடியார்க்குநல்லார், 'காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வரும் என்பதாயிற்று' என்பர் (சிலப்:4:40). முதல் - 'உலகெலாம்'. பெற்றார் - சிவனருள் பெற்றார். மான்மியம் - மகிமை. பலோர் - பல்லோர்; தொகுத்தல். பகரப்படுபவ - விளி: பகர்தற்குக் காரணமாயுள்ளவனே! தீம் தடி - இனிய கருப்பங்கழி; கரும்பு. தடி - வயல்: 'பங்கமிட்டெறிந்தன தடிகள்' (இரகு: நாட்:21)
(28)

8\. பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ
பயனில தாகுஞ் சிந்தா மணிவழி
படர்த லெனப்போதித்

துத்திச்சுமையொரு தோள்வைத் திடுபு
லுயர்த்தோன் மனமடியா
ருறுசெய னுடைப் புரிமதி வலவ
வொலாவரு கந்தர் திற
முத்தித் திறமல வென்றள விலர்பான்
முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயற்கண் மடைச்செறி
முத்த மனைத்தினையுந்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய
ருலோ தாலேலோ.

(கு - ரை.) பத்தி - அன்பு: சிவபிரானிடத்தும் அவனடியாரிடத்தும் பதியும் அன்பு. நனி - மிகுதிப் பொருளில் வரும் உரிச்சொல். சொட்டச்சொட்ட - அடுக்கு, மகிழ்ச்சிதெரிவிப்பது; இனி, மிகுதி காட்டுவ தெனினுமாம். சிந்தாமணி வழி படர்தல்- சீவகசிந்தாமணி போதிக்கும் வழிச்செல்லுதல்: சமணபோதனைகள் அடங்கிய நூல் சிந்தாமணி என நினைக. போதித்து - [அநபாய சோழனுக்கு] அறிவூட்டி. உத்தி - பாம்பின் படப் பொறி : இங்கு பாம்புக்கு ஆகுபெயராகி, மேல் வருஞ்'சுமை' என்பதனை நோக்கி ஆதிசேடனைக் காட்டுவது. எனவே, உத்திச் சுமை - பூமி. ஆதிசேடன் இப்பூவுலகைத் தன் தலைகளால் தாங்குகிறான் என்பது மரபு. அவன் தலையால் தாங்கும் பூவுலகைத் தன் ஒற்றைத் தோளில் வைத்துப் புரப்பவன் அநபாயன் என்று அவன் வென்றிச் சிறப்பும் காத்தலெளிமையும் கூறியபடி. புல்-புலி என்றது, திவாகரம். புலியைக்கொடியாக உயர்த்தியவன் - சோழன், இங்கு அநபாயன். அநபாயன் மனம் அடியார் உறுசெயல் நாடப் புரிந்தவர் - சேக்கிழார். இதன் விவரம் முன்னரே காப்புப் பருவச் செய்யுள் 6-இல் காட்டப்பட்டது. வலவ-வல்லவரே: விளி. ஒலா- ஒல்லா என்பதன் இடைக்குறை: பொருந்தாத, மாறுபட்ட, அருகந்தர் - சமணர். திறம் - வழி; 'அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்' (பொருந. 230) என்றவிடத்துங் காண்க. என்று - என்று கொண்டு தேறி. அளவிலர்-அளவில்லாத பல்லோர். பால் முற்றி - நல்வினைமுதிர்ந்து. சிவம் - முத்தி. முயல்செயல் - வினைத் தொகை. மடைச்செறி-ஏழனுருபு தொக்கது. முத்தம்-முத்து. தத்துதல் - தாவிக்குதித்துச் செல்லுதல். (29)

9. ஈற்றுத் தலையொரு மவுலி புனைந்தா
லென்னச் சொல்லணியொன்
றெய்திப் பொலியப் பொருளணி யாயின
வெவ்விட னும்வீற்று

வீற்றுக் கிடையிறை பட்டன வமைய
விளம்பு வனப்பினெடு
மேய முதற்பொரு ளாதிய மூன்றும்
வேண்டுமி டத்தெய்த
ஆற்றுப் புனனு மப்பொருள் கோண்முத
லறைமற் றுள்ளனவு
மமையத் தொண்டர் புராண நவின்றவ
வடருபு சூழ்ந்தபசுந்
தாற்றுக் கதலிக் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யந்தழை யும்புய
ருலோ தாலேலோ.

(கு - ரை.) இச்செய்யுள் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் அமைந்த சீர்மை தெரிப்பது. ஈற்றுத்தலை - செய்யுளினிறுதியில். மவுலி - கிரீடம்: மவுலிபுனைந்தாலென்ன என்றது தற்குறிப்பேற்றவுவமை. சொல்லணி - சொல்லலங்காரம்: மடக்கு, பிராசம் போல்வன. எடுத்துக்காட்டாகச் சில கூறுவாம்:— கமழ்சாறூர் கஞ்சாறூர், சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர், புடைத்தெங்கும் உடைத்தெங்கும், இருதிறத்தீரும்தீரும் கைதவம் பேசமாட்டேனென்று கைதவனுஞ் சொன்னான், மிக்க திருவிளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார் - இன்னோரன்னவை. பொருளணியாயின இறைபட்டன அமைய என இயையும். பொருளணி - தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, வேற்றுப்பொருள்வைப்பு, தற்குறிப்பேற்றம், ஒட்டு இன்னோரன்னவை. எவ்விடனும் - பயிலுகின்ற இடங்களிலெல்லாம். வீற்று வீற்றுக் கிடை - தனித்தனியாகக் கிடந்து. இறைபட்டன- சிந்திப் பரவினவாய். விளம்பு - சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற. வனப்பு - [நூலிற்கு] அழகு. இவை பத்து:—சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்ததாதல் என்பன. முதற்பொருளாதிய மூன்று - முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள். முதற்பொருள் - நிலமும் பொழுதும். கருப்பொருள் - தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, செய்தி, யாழ், பண் முதலியன. உரிப்பொருள் . அந்தந்தத் திணைகளுக்குரிய நிகழ்ச்சிகள். இவை, புணர்தல் முதலிய ஐந்தும் அவற்றினிமித்தங்கள் ஐந்தும். வேண்டுமிடத்து எய்த-எங்கு வேண்டுமோ அந்த விடத்திற்குப் பொருந்திவர. ‘ஆற்றுப்புனல் நாமப் பொருள்

கோள்முதல்" என்றது எட்டுவகைப் பொருள்கோள்களை. அவை யாவன-யாற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி மாற்று என்பன. அறை - சொல்லப்படுகின்ற. 'மற்று உள்ளன'— யாவகைகள், சந்தங்கள், நூற்பயன் போல்வன. அடருபு-அடர்ந்து. தாறு-குலை. கதலி-வாழை. (30)

10. மண்டலை வேலைப் புவியிற் பத்திசெய்
மார்க்க மறிந்தவரார்
வண்சுவை யமுத வொழுக்கென வார்த்தை
வழங்கத் தெரிகுநரார்
கொண்டலை நேர்பக டூர்தரு கூற்றங்
குதித்துய்ந் திடவலரியார்
கொற்றக் கைலைக் கணநா தர்களொடு
கூடுபு மகிழ்பவரார்
விண்டலை யாரும் பெறலரு மின்பம்
விராவுந் திறலினரார்
விமலா நீயவ தாரஞ் செய்யா
விடினென மேயவபைங்
தண்டலை சூழுங் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய
ருலோ தாலேலோ.

(கு-ரை.) 'விமலா நீ அவதாரஞ் செய்யாவிடின்' என்பதை முதலிற்கூட்டிப் பொருள்கொள்க. மண்டு-நெருங்கிய; தொடர்ந்து வருகின்ற வேலை - கடல்; ஆவீறு ஐயான வடசொல். ஆர் - யார் என்பதன் மரூஉ. ஒழுக்கு – தாரை. தெரிகுநர், ந்-பெயரிடைநிலை. கொண்டல் – மேகம். பகடு - எருமைக்கடா. நேர்தல் - ஒப்பாதல்: கருநிறத்தில் ஒப்பு. கூற்றம்-யமன். யமனுக்கு ஊர்தி எருமைக்கடா என்பது பிரசித்தம். குதித்தல் - கடத்தல்: தப்புதல்: 'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' என்றது குறளும் (269). வலர் + யார் = வலரியார்: "தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்' என்றது விதி. கொற்றம் – வெற்றி. கூடுபு - கூடி: செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். விண்தலை - மோட்சலோகத்தில்; தலை-ஏழனுருபு. ஆரும் - யாரும். விராவும் - அடையும்படி செய்யும். இனி, விண்டலையாரும்-விண்ணுலகத்துத் தேவர்களும் எனினுமாம். திறல் - வல்லமை. ஆர், ஆர், யார், ஆர் ஆர் என மேயவ! என்று இயையும். என - என்று வினவிக் கொண்டாடும்படி. மேயவ -

பொருந்தியவனே! விளி. பை - பசுமை. தண்டலை - சோலைக்குப் பண்புத் தொகையன்மொழி. (31)

## 4. சப்பாணிப்பருவம்

1. விழையற முதற்கல்வி யறியுநுண் ணறிவுமம்
மேதைக் கிணங்கொழுக்கு
மேயவிவை யுடையார்த் தழீஇயவாசொ லினிதேற்கு
மேம்பாடு மாறுகருதா
மழைநிகா கொடைத்திறனு நனிவரூஉ தினியீட்டு
மாண்புமாற் றலரையஞ்சா
வன்மையு மிடங்கால முதலறித லுங்கடிய
மாற்றநவி லாதகுணமும்
உழையரும் விருப்பமறி யாதடக் குதலுநல
னோங்குகாட் சிக்கெளிமையு
முடையனிவ னுலகுவத் தற்குரிய னென்றுளத்
துன்னியிறை புனையமணிகள்
தழையுமுடி தொட்டுக் கொடுத்தருண் மலர்க்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே.

(கு-ரை.) சப்பாணிப் பருவம்:—பிரபந்தத்தலைவனாகிய குழந்தை கையுடனே கையைச்சேர்த்துக் கொட்டும் பருவத்தைக் கூறும் பகுதி. இது - ஒன்பதாம் மாதத்திற் கூறப்படும்: ஒன்பதாந் திங்களி லுயர் சப்பாணியும்' என்பது, பிங்கலந்தை. பாணி-கை.

விழை - விரும்புதற்குரிய. அறம் முதற் கல்வி அறியும் நுண்ணறிவும் - அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் நான்கினையுங் கொடுக்குங் கல்வியை யறியும் நுண்ணிய அறிவும். 'அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்றது நன்னூல். மேதை - பேரறிவு. நுண்ணறிவு, மேதை - பரியாயப் பெயர்கள். ஒழுக்கு - ஒழுக்கம்; நடத்தை. 'கற்றபின் நிற்க வதற்குத் தக' என்றது குறளும் (391). உடையார்த்தழீஇ - உயர்திணையில் இரண்டனுருபு தொக, அதன்முன் வலி மிக்கது. தழீஇ - சேர்ந்திருந்து. சிற்றினஞ்சேராமை, பெரியாரைத் துணைக் கோடல் கூறப்பட்டன. மாறு - கைம்மாறு. பிரதியுபகாரம். கருதா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் மேல், 'அஞ்சா' என வருவதும் இது. மழை - மேகம். வருதினி - சேனை. ஈட்டுதல்.

திரட்டுதல். மாற்றலர் - பகைவர். இடமறிதல், காலமறிதல் அரசற்கு இன்றியமையாதன. முதல் என்றதனால், வலியறிதல் குறித்தபடி. கடிய மாற்றம் - கடுஞ்சொல்; அதாவது, கேள்வியினும் வினையினும் கடியவாய சொல். 'கடுஞ்சொல்லனல்லனேல் மீக்கூறு மன்ன னிலம்' என்றார் வள்ளுவரும். உழையரும் - பக்கத்திலிருப்பவர்களும்; அதாவது, நெருங்கி உடனிருந்து பழகுவோர்களும். உம்மை - உயர்வுசிறப்பும்மை. விருப்பம் அறியாது - தன் இங்கிதத்தை உணர்ந்துகொள்ளாதபடி. காட்சிக்கெளிமை- முறைவேண்டினார்க்கும் குறைவேண்டினார்க்கும் எளிதில் காணத்தக்கவனாயிருத்தல்: அதாவது, பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையவனாயிருத்தல். உலகு – இடவாகுபெயர். உளத்து உன்னி - [வேளாளகுலதிலகராகிய நீர்] மனத்திலெண்ணி. இறை -அரசன்: அநபாய சோழன். முடி தொட்டுக்கொடுத்தருள் மலர்க்கையென்றது - சோழ மன்னரது முடிசூட்டுவிழாவில் அவ்வரசர் சூடும் முடியை ஒருசார் வேளாண் மரபினர் கைதொட்டெடுத்துக்கொடுக்கும் வழக்கம் பற்றியென்க. இம்மரபினை, "வெண்ணெயூர்ச் சடையன் றங்கள், மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" (யுத்த: திருமுடி சூட்டு: 38) என்று இராமபட்டாபிஷேகத்தின் போது கம்பர் குறித்திருத்தலாலும் தெளியலாம். சேக்கிழாரைப் 'பானு' என்றது, உதயகிரியிலெழுகின்ற சூரியன் உலகிற்பரந்துள்ள இருளைப்போக்கித் தன்னொளியைப்பரப்புதல்போலச் சேக்கிழார் குன்றையாங்குன்றுதித்து மக்களது உளத்துப் பரந்திருந்த அஞ்ஞானவிருளைப்போக்கி ஞானவொளியைப் பரப்பினராதலினென்க. (32)

**2.** **கார்க்கோல மாலோன் புரந்தருள்வ னெனுமொழிமு**
**கமனுண்மை வேளாண்மையைக்**
**கருதலபி தானங்கொள் குலமே யெனப்பனூல்**
**கற்றவரியம்ப மறையோர்**
**போர்க்கோல மன்னரெட் டியர்மூவர் புறமெனப்**
**புகன்மூவர் பசிவருத்தம்**
**போக்கின மெனக்களிப் புறவிலே கருமது**
**புகன்றுமகிழ் தலைசிறப்ப**
**வார்க்கோல முலைமங்கை பங்கர்தளி முற்பலவும்**
**வண்பூசை யொடுசிறப்பு**
**மாறுது பொலியமழை வளனுஞ் சிறப்பவன**
**வாப்பெருமை வாய்ந்தமேழி**

தார்க்கோ லொடுந்தொடுஞ் செங்கைத் தலங்கொண்டொர்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே.

(கு - ரை.) மாலோன் - திருமால். புரந்தருள்வன் - காத்தற் கடவுளாக உலகுபுரப்பன். முகமன் - உபசாரவார்த்தை: துதி மொழி: உண்மை - உண்மையாக. கருத - கருதுமாறு. அபிதானங் கொள்குலமே - பெயரைக்கொண்ட குலமே. அபிதானம் - பெயர். ஆகவே, வேளாண்மையைக் கருதுமாறு. பெயர்கொள்குலம் - வேளாண்குலம். குலமே, ஏகாரம் - பிரிநிலை. என - புரந்தருள்வது என. பனூல் - பன்னூல் என்பதன் தொகுத்தல். இயம்ப, களிப்புற, தலைசிறப்ப, சிறப்ப, தொடுஞ்செங்கை என முடியும். மறையோர் - பிராமணர். மன்னர் - க்ஷத்திரியர். எட்டியர் - வைசியர். மூவர் - இந்த மூவர். புறமெனப் புகல் மூவர் - இழிந்தோர் எனப்பேசப்படும் அநுலோமர், பிரதிலோமர், சங்கரர் ஆகிய மூவகையினர். போக்கினம் - போக்கிக்கொண்டோம். இலேகரும் - தேவரும்; உம்மை - உயர்வுசிறப்பு. அது புகன்று - 'பசிவருத்தம் போக்கினம்' என்பது சொல்லி. மகிழ் - மகிழ்ச்சி: முதனிலைத் தொழிற்பெயர். தலைசிறப்ப-மிகுதியாக்கொள்ள; தலை-உபசருக்கம். தேவர்களும் பசிபோக்கினமென்றது - முட்டுறாது அவியுணவு பெற்றமையின். வார்-கச்சு. கோலம்-அழகு. மங்கைபங்கர்-சிவ பிரான். தளி - கோயில். பூசை-நித்தியபூசை. சிறப்பு - விசேட உற்சவம்: திருவிழா. இது, நித்தியத்திற் றாழ்வுதீரச் செய்யும் நைமித்திகமாகும். பொலியும்படி மழைவளனுஞ் சிறப்ப என்க. மழையில்லையேல் பூசை சிறப்பு இவை பொலியாவென்பதை "சிறப் பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" (18) என்ற குறளாலும் அறிக. சேக்கிழார் புராணத்து "தம்பதிகுன் றத்தூரில் மடவ ளாகந் தானாக்கித் திருக்கோயில் தாபித் தங்கண், செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போ லீதுந் திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்றி, அம்புவியில் அங்காங்க வைப வங்கட் கானபரி கலந் திருநாள் பூசை கற்பித், திம்பர்புகழ் வளவன்அர சுரிமைச் செங்கோல் இமசேது பரியந்தம் இயற்று நாளில்" என்ற பாடலை ஈண்டு நினைக. தார்க்கோலொடும் மேழி தொடுதலால் ஏற்படும் நல்வினைவுகள் கூறப்பட்டன. அளவா - அளவுபடாத. மேழி - கலப்பை- தார்க்கோல் - தாற்றுக்கோல். கைத்தலம் - இருபெயரொட்டு. (33)

3. மேவாத பாயுடைஇத் தலைமயிர் பறித்துழறன்
மேயசமயப் பாழ்ங்குழி

**வீழ்ந்தவர்மு னச்சமய கண்டனம் பேசியது**
**விடவாற்று திருவாயினின்**
**றோவாத பிரதாப மொருகதி ரெனத்தோன்றி**
**யுள்ளகோ கனகமெல்லா**
**முறமலர்த் திடவவைகை யொப்பாயி னேமென்**
**றுறப்பொலித றேறுபன்னு**
**ராவாத மியமெனவ பயநல்கி யுண்மைநிலை**
**யருளுங்கை நின்றெழுபுக**
**ழாலோ னெனத்தோன்றி யெல்லாங் குவித்ததென்**
**றுன்றோ ரெடுத்துரைக்குந்**
**தாவாத வொளிகிளர்நி னங்கைத் தலங்கொண்டொர்**
**சப்பாணி கொட்டியருளே**
**தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு**
**சப்பாணி கொட்டியருளே.**

(கு-ரை.) இப்பாடல் சேக்கிழார் அநபாயனையும் அவனவையினுள்ளாரையும் திருத்திப்பணிகொண்டமையை ஆன்றோர் எடுத்துரைக்கும்படி குறிப்பது. மேவாத - பொருந்தாத பாயுடுத்தல், தலையிர் பறித்தல் - சமண சமய ஒழுக்கங்கள். 'பறிதலைக்கையர் பாயுடுப்பார்களை' என்றார் சம்பந்தரும். சமயம் என்றது சமணசமயத்தை; இதனைப் 'பாழ்ங்குழி' என்று இழித்தலை 'சமண்நீசர் புறத்துறையாம், அவ் வாழ்குழியின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி' (திருநாவு:73) என்ற சேக்கிழாரின் வாக்கிலும், 'குளிர்பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் விழுந்து அளறுபாய்ந்து' என்ற உமாபதி சிவத்தின் வாக்கிலும் காணலாம். வீழ்ந்தவர்-அநபாய சோழனும் அவனவையிலுள்ளாரும். அரசன் எவ்வழி அவ்வழி குடிகளன்றோ! சமணப்பாழ்ங்குழியில் வீழ்ந்தனர் என்றது - சமணரது சிந்தாமணியை மெய்யென்று வரிசைகூற உளமகிழ்ந்து பலபடப் பாராட்டிக் கேட்டமை. சமயகண்டனம் பேசி-'சமணர் பொய்ந்நூல் இது மறுமைக் காகாது: இம்மைக்கும் அற்றே' என்று கண்டித்துப் பேசியமை. அது விட-[அவகதையாகிய] அச்சிந்தாமணியை விட்டொழிக்க. ஆற்று - செய்கிற. ஓவாத-நீங்காத. பிரதாபம்-மேம்பாட்டுப்பொலிவு. ஒரு கதிர்-ஒப்பற்ற சூரியன். உள்ளம் கோகனகம் எல்லாம் - மனமாகிய செந்தாமரைகளை யெல்லாம். உள்ள கோகனகம் - இருபெயரொட்டு. சூரியன் தாமரை மலர்களை மலர்த்துதல் இயல்பு. அவை-அவ்வுள்ளத் தாமரைகள். கையொப்பு ஆயினேம் - கையொப்பமிட்டமை போலாயினேம்; உடன்பட்டமை யாயினேம்; எழுத்துப்பட்டோ மென்றபடி. பொலிதல் - விளங்குதலை; தேறுபு - தேறி. அன்னார் - சமண்ப்பாழ்ங்

குழியில் வீழ்ந்த அவர்கள். ஆவா - இரக்கக் குறிப்பிடைச்சொல். தமியும் - கதியற்றவர்களாேனும்: 'தமியனேன் தனிமை தீர்த்தே' (திருவாச: 5, 68). என - என்று குரலெழுப்ப. அபயம் நல்கி - அபயதானமீந்து; அடைக்கலமாய் ஏற்றுக்கொண்டு. உண்மைநிலை அருளும் - தத்துவத்தை யுபதேசித்தருளும் எழு - தோன்றும். ஆலோன் - சந்திரன். ஆல் - நீர்: பாற்கடலிலிருந்து தோன்றிய வனாதலின், சந்திரன் ஆலோன் எனப்பட்டான். எல்லாம் - முன் மலர்த்திய உள்ளக் கோகனகங்களையெல்லாம். குவித்தது - தொகுத்து [ச் சைவத்தில்] ஒன்றுபடச்செய்தது. உரைக்கும் ஒளி என இயையும். தாவாத - அழியாத.

சேக்கிழாரின் திருவாயினின்றெழுந்த பிரதாபம் சூரியனைப் போலே சூடேற்றி உள்ளத்தாமரைகளையெல்லாம் மலர்த்தியது; அவர் திருக்கையினின்றெழுந்த புகழ் சந்திரனைப்போலே குளிரச் செய்து உள்ளத்தாமரைகளையெல்லாம் குவித்து ஒன்றுபடச் செய்தது. பிரதாபத்தைச் சிவப்பு நிறமுடையதாகவும், புகழை வெண்மைநிறமுடையதாகவும் வருணித்தல் கவிசமயமாதலின், அதற்கேற்பச் சூரியனையும் சந்திரனையும் முறையே உவமையாகக் கூறிய நயம் பாராட்டத்தக்கது. ஈண்டு, "தனது கீர்த்தியுந் திறற்பிர தாபமுந் தரைமேல், அனல்செய் கோபமு முல்லையு மெனவெங்கு மமைத்துப் புனித மாமவை தம்மையும் பொதிந்து கொண் டென்னப், பனிவி சும்பினிற் சிவந்து வெண்ணிறம்படைத் தன்றே" என்ற காஞ்சிப்புராணச்செய்யுளையும், 'தண்மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை......புகழ்போலெங்கும் பரந்துள தால்' என்ற கம்பராமாயணவடிகளையும் நினைக. (34)

4. துருமமலர் கொய்துநீ ராடிநீ றிட்டுகனி
தூயக ணிருந்துநேரே
துலங்குமொரு குறியிலா வாகனமெ னுதலோடு
தோன்றிடச் செய்வதன்று
பெருமவடி யேங்களைப் புரவென்று தாழ்பவர்
பெருஞ்செல்வ மெய்தியைய
பிறங்குநா ராயணவு பநிடத முரைத்தபடி
பெற்றருடி யிவர்வணக்கங்
கருமமுத லெம்மலமு நீத்தின்ப மெய்தக்
கடைக்கணித் திடுதியென்று
கனிந்துவேண் டுவதன்று சிறுவருத் தமுமிலாக்
காரிய மவாவினின்றேந்

தருமசின கரமாங் கரங்குவித் தையவொரு
சப்பாணி கொட்டியரு ள
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே.

(கு - ரை.) துருமம் - மரம். துருமமலர் - கோட்டுமலர். தூயகண் - பரிசுத்தமான இடம். குறியில் - திருவுருவத்தில்; இலிங்கத்தில். ஆவாகனம் - எழுந்தருளும்படி மந்திரத்தால் தெய்வத்தை அழைக்கை. எணுதல் - எண்ணுதல் என்பதன் தொகுத்தல்; எண்ணுதல் - தியானித்தல். தோன்றிடச் செய்வது - பிரத்தியட்சமாகும்படி செய்வது. அன்று - யாம் [உம்மிடத்து] வேண்டுவதன்று. பெரும - விளி. ஐய - விளி. புர - காப்பாற்றுவாயாக; வியங்கோள்வினைமுற்று, தாழ்பவர் - வணங்குபவர். 'அடியேங்களைப் புர' வென்று தாழ்பவராகிய இவரது வணக்கத்தைப் பிறங்கு நாராயணவுபநிடதமுரைத்தபடி பெற்றருடி; [தாழ்பவர்] பெருஞ்செல்வமெய்திக் கருமமுதல் எம்மலமும் நீத்து இன்பமெய்தக் கடைக் கணித்திடுதி என்று கனிந்து வேண்டுவது அன்று என முன்பின் கூட்டிப்பொருள்கொள்க. அருடி-அருளுதி. வணக்கத்தைப் பெற்றருடி என முடியும். நாராயணவுபநிடதம் உரைத்தபடியாவது - ''யாரை, மதியினிற் குறித்தியாவர் வணங்கினும் அவ்வணக்கம், துதிகெழு நினவே யென்று சொலும்'' (திருநாகைப் புராணம்) எனபது. கருமம்முதல் எம்மலமும் - கன்மம், ஆணவம், மாயை, மாயேயம், திரோதானம் என்னும் ஐம்மலங்கள். அருடி, கடைக்கணித்திடுதி என்று [யாம் உம்மிடத்துக்]கனிந்து வேண்டுவதன்று; பின் வேண்டுவது கரங்குவித்து ஒரு சப்பாணி கொட்டுதலே. தருமசினகரமாம் கரம் - தருமத்திற்கு ஆலயமான கை. (35)

5. எண்ணியவை யெண்ணிய படிக்கடி யவர்க்கருளு
மீசனருளா லருளுரு
வீனசம யத்தொடக் கெல்லா மொழித்தன
மெனக்கைதட் டுதலுமோவாத்
திண்ணிய மலச்செருக் கெல்லா மொழித்தனந்
தீர்ந்ததவ் வாதையென்று
செப்பிக்கை தட்டுதலு மிந்திரன் மலர்க்கணன்
றேந்துழா யவன்வாழ்க்கையு
நண்ணிய வெழுங்கருத் துந்தவிர்ந் தனமென்று
நாடிக்கை தட்டுதலுநேர்
நவிலநம் பரமகுரு சாமியென் றியாவரு
நயக்கவவ தாரஞ்செய்தாய்

தண்ணிய மலர்க்கைத் தலங்குவித் தையவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே.

(கு - ரை.) அருள்உறு - அருள்பொருந்தாத; எனவே மருள் பொருந்திய. ஈனசமயம் - நீச சமயங்கள். தொடக்கு - பாசம், பற்று: 'தொடக்கெலா மறுத்தநற் சோதீ' (திருவாச: 37, 10). ஓவா - நீங்காத. திண்ணிய - [உடன்தோன்றி எளிதில் விட்டு நீங்காது] வலிமையுடைய, செருக்கு - அகந்தை. வாதை - துன்பம். மலர்க்கணன் - மலர் இடமாக்கொண்ட பிரமன். துழாயவன் - திருமால். நண்ணிய - நண்ணுதற்காக: செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கைதட்டுதலும், கைதட்டுதலும், கைதட்டுதலும் [நின்கைதட்டுதலுக்கு] நேர்நவில ஒரு சப்பாணிகொட்டியருள் எனமுடிக்க.நேர்நவில-ஒப்பென்று சொல்லும்படி.அவதாரஞ் செய்தாய் -தெய்விகப்பிறவி யென்றபடி. இதனால்,சேக்கிழார் ஈனசமயத் தொடக்கெல்லாம் ஒழித்தவரென்பதும், மலச்செருக் கொழித்து வாதை தீர்த்தவரென்பதும், பிரமவிஷ்ணு இந்திராதி பதவிகளையடையும் விருப்பத்தையும் தவிர்த்து அவைகளினும் மேலான சிவகதிபெற வழிகாட்டியவரென்பதும் பெறவைக்கப்பட்டன.

(36)

வேறு

6. வம்பிட் டொளிர்முலை மாதுமை காண
மணிப்பொது நடனஞ்செய்
வார்முன மனைநந் துருகிட நிற்றன்
மதித்தவர் முதனல்க
நம்பிட் டருமறை யோர்கை குவித்து
நயந்து வியந்துடனே
நறுவிரை நல்கி யலங்கல் புனைந்து
நகும்பரி வட்டமெடுத்
தம்பிட் டொளிர்சடை யவரே யிவரென்
றையமறத் தெளியா
யாத்திடு முன்னர் நன்னர் விபூதிய
தள்ளுபு கொள்ளுகெனக்
கும்பிட் டேற்ற திருக்கை குவித்துக்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி.

(கு - ரை.) வம்பு - கச்சு, மணி - அழகிய, பொது - தில்லையம் பலம்; 'கோலமார் தரு பொதுவினில் வருகென' (திருவாச: 2 128), உமைகாண நடனஞ்செய்வார் என்றது - பச்சிளங்குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பதுபோல, திருநடங்கண்டு நற்பயனெய்தமாட்டாத பக்தாத்மாக்களுக்குத் தான்கண்டு நற்பயனை அவர்க்கு உதவுபவள் என்ற உண்மை தெரிவித்தற்கு. முன்-சந்நிதியில். நிற்றல் மதித்து - நிற்றலைப்பார்த்து. முதல் 'உலகெலாம்'. நம்பிட்டு - விரும்பி. 'நம்பு மேவு நசையாகும்மே', மறையோர் - தில்லைமூவாயிரவர்; தீட்சிதர். உடனே - பரபரப்பாய். விரை - வாசனைப் பொருள்கள். அலங்கல் - மாலை. நகும் - விளங்குகின்ற. பரிவட்டம் - கோயில் மரியாதையாகத் தலையைச் சுற்றிக் கட்டும் கடவுளாடை. அம்பு -நீர்; கங்கை, இட்டு-வைத்து. சடையவர் - சிவபெருமான். தெளியா - தெளிந்து. பரிவட்டம் எடுத்து யாத்திடு முன்னர் - என இயையும். யாத்திடுதல் - தலையைச்சுற்றிக் கட்டுதல். நன்னர் - நன்றாக. அள்ளுபு - அள்ளி. கொள்ளுக என - பெற்றுக்கொள்வீராக என்று கொடுக்க; வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். மறையோர் நல்கி, புனைந்து எடுத்து, யாத்திடுமுன்னர் அள்ளுபு கொள்ளுகென ஏற்ற கை என இயையும்.

நடராசப்பெருமானின் திருமாலையும் திருநீறும் திருப்பரிவட்டமும் அளிக்கப்பட்டுச் சேக்கிழார் பெருமைசெய்யப்பட்டதை "உள்ளலார்புரம் நீறெழக்கணை யொன்று தொட்டுயர் மன்றில் வாழ், வள்ளலார்திரு மாலை யுந்திரு நீறு மெய்ப்பரி வட்டமும், எள்ளலாரல ரென்று சேவையர் காவ லர்க்கிவை யினிதளித், தள்ளலார்வயல் நீடு தில்லையில் அணைவ ருங்களி கொண்டபின்" என்ற உமாபதிசிவன் வாக்காலும் அறிக. நாவலன் -புலவன். (37)

7\. உண்ட லுடுத்தன் மணத்தன் முதற்பல
வுன்னுபு நன்னயமா
ருத்தம வென்றடை யாதுல ரெண்ண
மொருங்கு தெரிந்தனையார்
தண்ட லிலாமகிழ் பூப்ப மலர்க்கைத்
தலம்விரி யாதுகுவி
தருமோர் பழக்கமு னுள்ளதி யாங்கள்செய்
தவம்வறி தாங்கொல்லோ
கண்டல் செறிந்த கருங்கடல் வண்ணன்
கலிகெழு பாற்கடன்மேற்
கண்டுயில் வதுபொர வெண்சுதை தீற்றிய
காமரு மாளிகைமேற்

கொண்ட லுறங்குங் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி.

(கு - ரை.) மணத்தல் - திருமணஞ்செய்து கோடல். பல - பல காரியங்களை. உன்னுபு - நினைத்துக்கொண்டு. நல் நயம் ஆர் உத்தம - நல்ல நீதிகள் பொருந்திய உத்தமனே! இது, சேக்கிழாரை நோக்கிய விளி. ஆதுலர் - வறியவர். ஒருங்கு - ஒருசேர. அனையார் - அவ்வறியவர். தண்டல் இலா - தடையிலாத, குறைதலில்லாத. இலா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். மகிழ் - முதனிலைத்தொழிற்பெயர். கைவிரியாது - இல்லையென்னுமல். கைவிரித்தல் - இல்லையென்று மறுத்தலைக்காட்டும். கைகுவிதல் - அள்ளிக்கொடுத்தலைக்காட்டும். முன் உள்ளது - முன்னரே பிறவியிலிருந்து உனக்கு ஏற்பட்டுள்ளது; 'கொடையும் பிறவிக்குணம்'. செய்தவம் - சப்பாணிகொட்டவேண்டுமென்று வேண்டிச்செய்யுந் தோத்திரம். தவம் - தோத்திரம். வறிதாங் கொல்லோ - வறி தாகப் போகும்படி செய்யாதே என்பது குறிப்பு. கண்டல் - தாழை, நெய்தல் நிலத்தது. கலி - ஆரவாரம். பொர - உவமவுருபு. சுதை - சுண்ணும்பு. பாற்கடல் - வெண்சுதை தீற்றிய மாளிகைக்கும், கருநிறவண்ணன் துயிலுதல் - கொண்டல் உறங்குதற்கும் உவமை. கொண்டல் உறங்குதல் - மேகம் தங்குதல். (38)

8. படியிடை யொருபை திரவரு ணனைபுரி
பாவல ரைந்திணையும்
பகுத்தொரு முப்பொரு ளோடும் விரித்துப்
பயனு கத்தெய்வங்
கடிதலில் சினகர முள்ளன வோதக்
கற்பித் தவநெஞ்சங்
கனியக் கனியக் கண்ணீர் வாரக்
கவிபா டியவிறைவ
ஒடிவரி தாமிரு பன்னிரு கோட்டத்
துள்ளொரு கோட்டமலா
தொருகோட்ட டமுமுற வில்லாய் நல்லா
யுலவா வளமைப்பல்
குடிக ணெருங்குங் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி.

(கு-ரை.) படியிடை - பூமியில். பைதிரம் - நாடு: 'வளனறு பைதிரம்' (பதிற்றுப். 19,18) ஐந்திணை - குறிஞ்சி, பாலை. முல்லை, மருதம், நெய்தல். முப்பொருள் - முதல், கரு, உரிப்பொருள்கள். பயனுக - பிரயோசனமாக. கடிதல் இல் - விலக்குதலில்லாத! எனவே, எழுந்தருளியிருக்கின்ற. சினகரம் - கோயில். கற்பித்தவ- விளி: கற்பித்தது தமது பெரியபுராணத்துத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தின் மூலமாக. ஆங்குத் தொண்டை நாட்டு வருணனையில் ஐந்திணையிலுள்ள சினகரங்கள் கூறப்பட்டிருத்தல் ஈண்டுக் கருதியது, 'திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந் திணைவளமுந் தெரித்துக்காட்ட, மருத்தொண்டைவாய்ச்சியர்சூழ் குன்றைநகர்க் குலக்கவியே வல்லான் அல்லால்'' என்ற காஞ்சிப்புராண அடிகளை ஒருசார் நினைக. ஓதுவோரும் கேட்போரும் நெஞ்சங்கனிந்துருகிக் கண்ணீர்வார்தல் - எண்பான் சுவையொடு பத்திச்சுவையும் நனிசொட்டச்சொட்டக்கவிகளமைந்திருத்தலின் என்க. ஒடிவு அரிதாம் - அழிவில்லாத. இருபன்னிரு கோட்டம்- இருபத்துநான்கு கோட்டங்கள். அவையாவன:-புழற்கோட்டம், புலியூர்க்கோட்டம், ஈக்காடு, மணவூர், செங்காடு, மையூர், எயில், தாமல், ஊற்றுக்காடு, களத்தூர், செம்பூர், ஆமூர், ஈத்தூர், வெண் குன்றம், பலகுன்றம், இளங்காடு, காலியூர், சிறுகாரை, படுவூர், கடிகை, செந்திரிகை, குன்றபத்திரம், வேங்கிடம், வேலூர்க் கோட்டம் என்பன. இவற்றுள் ஒரு கோட்டம் என்றது - புலியூர்க் கோட்டத்தை- இந்தப் புலியூர்க்கோட்டமலாது ஒரு கோட்டமும் இல்லாதவன் எனச் சமத்காரமாகக் கூறியபடி. ஒருகோட்டமும்- ஒருவிதமனக்கோணலும். உறவு. - பொருந்துதல். இல்லாய், நல்லாய் - விளிகள். உலவா - குறையாத. (39)

9\. நாடிய விரிநூல் சொற்றிடு திறனு னன்னூ லாசிரிய
னகுபா சுரமுத லுரைசெய் தலினு னவிலுரை யாசிரிய
னீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தோறு
மாடிய ஞானத் திறனுற லான்ஞா ஞசிரி யனுநீயென்
ருன்ருேர் பலரும் புகழப் படுபவ வகில மெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி.

(கு-ரை.) விரிநூல்-திருத்தொண்டர்புராணம். நகு-விளங்குகின்ற. பாசுரம் முதல் உரைசெய்தல் - திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்து, ''வாழ்க வந்தணர் வானவ ரானினம்'' என்று தொடங்கும் திருப்பதிகப்பாடல்களுக்கு உரைகண்டு பாடியிருத்தல் போல்வன. ''வெறியார் பொழிற் சண்பையர் வேந்தர் மெய்ப் பாசுரத்தைக், குறியேறிய வெல்லை யறிந்து கும்பிட்டே னல்லேன்,

சிறியே னறிவுக் கவர்தந் திருப்பாதந் தந்த, நெறியே சிறிதுயா னறிநீர்மை கும்பிட்டே னன்பால்'' என்று சேக்கிழார் கூறியதும் ஒருசார் நோக்குக. அகிலம் - உலகம். இப்பாடலில், சேக்கிழார் நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானசிரியர் என்ற நான்கு பெருமையும் பெற்றுள்ளார் என்பது நாட்டப்படுகிறது. திருத்தொண்டர் புராணமாகிய விரிநூலைச் சொற்றதனுல் நூலாசிரியராகவும், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்து, அவர் வைகையிலே ஏடிடப்பாடிய "வாழ்க வந்தணர் வானவ ரானினம்'' என்று தொடங்கும் திருப்பதிகப்பாடல்களுக்கு உரை கண்டு பாடியிருத்தலால் உரையாசிரியராகவும், பரசமயக்குழியில் வீழாமலும், வீழ்ந்தவர் கரையேறுமாறு போதித்த பெற்றிமையால் போதகாசிரியராகவும், இங்ஙனம் பல்வகையினும் உதவித் தத்துவஞானம் தலைக் கட்டச்செய்தலால் ஞானசிரியராகவும் திகழ்கின்ருர் சேக்கிழார் என்றது. (40)

10. நிலவிய நாகே சுரரினி தமர்தலி னிகழ்நா கேசுரமாய்
நீன்மணி மாட நிலாவலி னிந்திர, நீல பருப்பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தாலொளி காலர தனகிரியாய்க்
கருடப் பச்சை யிலாலியா வோருங் காண்மர கதமலையா
யுலவிய வெண்சுதை தீற்று மிலாலோங் கொருகை லைக்கிரியா
யுத்தம மார்பல வேதுவி னுலினு முரைதரு பற்பலவாய்க்
குலவிய வளமார் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி.

(கு-ரை.) சேக்கிழார், சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரமென்னுஞ் சிவதலத்தினிடத்தே தமக்கு அன்பு மிக்கிருத்தல் பற்றித் தம் குன்றத்தூரிலும் ஓர் ஆலயப்பிரதிட்டைசெய்து அதற்குத் திருநாகேச்சுரமென்று பேரிட்டு, அதில் நித்திய நைமித்திக உற்சவங்களை வழுவாது நடப்பித்துக்கொண்டுவரச் செய்தனராதலின், 'நாகேசுரமாய்' என்றது. ஆதிசேடன் பூசித்த காரணத்தால் நாகேசுரர் எனப்பட்டார். நீல் - நீலமென்பதன் கடைக்குறை. கலவிய - கலந்த.செம்மணி - மாணிக்கம். காலுதல்- வெளி விடுதல். இல் - வீடு, மாளிகை. உலாவிய - வியாபித்த, சூழ விருந்த. கைலைக்கிரி-வெள்ளிமலை, ஸ்ரீ கைலாயம். உத்தமம் ஆர் - சிறப்புப்பொருந்திய. இனும் - இன்னும். உரைதரும் பற்பலவாய்- சொல்லத்தகும் பற்பலவாய்ப் பொருந்தி.

இப்பாடலில், குன்றத்தூர் பலசிவதலங்களுக்கும் ஏதுகாட்டி ஒப்பிடப்பட்டிருக்கிறது. நாகேச்சுரர் எழுந்தருளியிருத்தலின் திருநாகேச்சுரத்திற்கும், நீலமணிமாடங்கள் நிலவுதலின் திருவிந்திர

நீல பருப்பதத்திற்கும், மாணிக்கமாடங்கள் ஒளிகாலுதலின் இரத்தினகிரியென்னும் திருவாட்போக்கிக்கும், கருடப்பச்சை மாளிகைகள் இருத்தலின் மரகதமலையென்னும் திருவீங்கோய் மலைக்கும், வெண்சுதைதீற்றிய மாளிகைகள் இருத்தலின் திருக் கைலாயத்திற்கும் ஒப்புக்கூறப்பட்டது. இந்திரநீலபருப்பதம் - இது வடநாட்டுத் தலங்களுளொன்று. தேவேந்திரன் பூசித்த தலம். சம்பந்தரும் இத்தலத் தேவாரத்தின் திருக்கடைக்காப்பிலே 'இந்திரன் தொழு நீல பர்ப்பதம்' என்று கூறுதல் காண்க. வாட் போக்கி - இது, சோழநாட்டுத்தலம். இரத்தினகிரி என வழங்கப் படுவது. ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் உண்டான போரில் வாயுதேவன் மேருமலையிலிருந்து வெளிவீச வந்ததொரு சிகர மாதலின், கிரி எனப்பட்டதென்பர். ஆரியதேசத்தரசனொருவன் மாணிக்கம் வேண்டித் தலங்கடோறுஞ் சென்று கிடைக்கப் பெறுமல் இங்குவர, சிவபெருமான் ஒரு நீர்த்தொட்டியைக்காட்டி, அதைக் காவிரி நீரினுல் நிரப்பும்படி சொல்ல, அரசன் அவ்வாறு செய்தும் அத்தொட்டி நிறையாமலிருக்க அவன் வெகுண்டு உடை வாளையோச்ச நினைக்கச் சிவபிரானுர் அவ்வாளைப் போக்கிவிட்டு இரத்தினத்தைக் காண்பித்தருளவும், அரசன் அதனை விரும்பாது, சிவபணிவிடைசெய்து முத்திபெற்றதலம் இது. அப்பரால் பாடப் பெற்றது. திருவீங்கோய்மலை - இது சோழநாட்டுத் தலம்; சுவாமி யின் பெயர்-மரகதாசலேசுரர். அம்மையின் பெயர் - மரகதவல்லி யம்மை. அகத்தியமுனிவர் ஈ ரூபமாகச்சென்று இறைவனைத் தரிசித்த தலம். சம்பந்தர்பாடல் பெற்றது. ஸ்ரீகயிலாயம் - வட நாட்டுத்தலம். மூவர் பாடலும் பெற்றது. (41)

## 5. முத்தப் பருவம்

1. திருப்பஞ் சாதி மறையுணர்மட்
 டேவ ராதி நால்வர்களுஞ்
 செறிந்த மற்றை மூவர்களுந்
 தீரா விருவல் வினைத்தொடர்பா
 லுருப்பஞ் சாரும் பிறந்தைமரீஇ
 யுறமேற் போயுங் கீழிழிந்து
 முழற லாய பெருந்தாக
 மொருங்கு மாய்த்தின் பொருங்கடைய
 விருப்பஞ் சாரு மெய்யடியார்
 மிக்க தொகையா ரொன்பதின்மர்
 மேய தனியா ரறுபதின்மர்
 மேலு மூவர் சரித்திரமாங்

கருப்பஞ் சாறு மொழிமதுரக்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே.

(கு-ரை.) முத்தப்பருவம்-வாய் முத்தந் தருமாறு குழந்தையைக் கூவியழைக்கும் பருவத்தைப் பற்றிய பகுதி: இது, பதினோராம் மாதத்திற் கூறப்படும்: "பத்தினொடொன்றில் முத்தங் கூறலும்" என்றது, பிங்கலந்தை.

பஞ்சாதி - வேதப்பகுதிகள்: தனித்தனி பெரும்பாலும் ஐம்பது வார்த்தை கொண்ட எசுர்வேதப்பகுதி. மறை - வேதம். மண் தேவர் - பூசுரர், பிராமணர், அந்தணர். நால்வர் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர். செறிந்த - கலப்பினாலாய. மூவர்கள்- அநுலோமர், பிரதிலோமர், சங்கரர். தீரா - நீங்காத, இருவினை - நல்வினை, தீவினை. நல்வினையும் 'பிறத்தற்கு ஏதுவாகிப் பொன் விலங்கு போன்றது என்ப. தொடர்பு - பாசம். இருவினைப்பாசத்தாற் பிறவி யுண்டாவது. உருப்பம் - வெப்பம். பிறந்தை - பிறவி. மரீஇ - மருவி, பொருந்தி. மேற்போயும் கீழிழிந்தும் உழறல்- உயர் பிறவியிலும் தாழ்பிறவியிலும் மாறிமாறிப்பிறந்து அவத்தைப் படுதல். பெருந்தாகம் - பேர்விருப்பம். 'துன்பம் உழத்தொறூஉங் காதற்று உயிர்' என்றார் குறளிலும். ஒருங்கு - ஒருசேர. இன்பு - பேரின்பம்; வீடு. மாய்த்து, அடைய, பொழி என மேலியையும். மிக்க - கூட்டமாயுள்ள. தொகையார் ஒன்பதின்மர் - தில்லைவாழந்தணர் முதலிய தொகையடியார் ஒன்பதின்மர்: காப்புப்பருவச் செய்யுள் 10 உரையிற் காண்க. தனியார் அறுபதின்மர் மேலு மூவர் - திருநீலகண்டர் முதலிய அறுபத்துமூவர். தாகம் மாய்த்து இன்படையச் செய்வது கருப்பஞ்சாறு என்ற நயமும் காண்க. அனகன் - குற்றமற்றவன். அனக - விளி. (42)

2. எண்ணிற் பொலிபல் புலவர்குழாத்
தெய்தி நும்மோ டியாமொருவே
மென்று கூறி யெம்பெருமா
னிருந்தாய் தருநன் னயமுடைத்தாய்
மண்ணிற் பொலிபு கயிலாய
வரைக்க ணிவர்ந்தம் மாதேவன்
வடிகா தகம்புக் குள்ளுருக்கும்
வளமை யுடைத்தாய் வளத்தருவாழ்

**விண்ணிற் பொலிவார் களும்வியப்ப**
**வெள்ளென் பழத்திற் குயிரருளி**
**வெங்க ராக்கொண் டதுமீட்கு**
**மிக்க விறலிற் றாயெங்கள்**
**கண்ணிற் பொலிசெந் தமிழ்மணக்குங்**
**கனிவாய் முத்தந் தருகவே**
**கனகக் குன்றை யனகசெழுங்**
**கனிவாய் முத்தந் தருகவே.**

(கு - ரை.) இப்பாடலில், செந்தமிழின் பெருமைகளிற் சில கூறப்படுகின்றன. அவை :- இறைவன் சங்கத்திருந்து ஆராய்ந்தமை, கயிலாயம் இவர்ந்து மாதேவனையும் உள்ளுருக்கியமை, எலும்பைப் பெண்ணாக்கியமை, முதலையுண்ட பாலனை யழைத்தமை.

எண்ணில் - எண்ணிக்கையினாலே; ஐந்தனுருபு ஏதுப்பொருளில் வந்தது. திருத்தொண்டத்தொகையில்: ''தமிழ்ச்சங்கமதிற்... முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்'' என்றது காண்க. ஒருவேம் - ஒருத்தராவேம்: தனித்தன்மைப்பன்மை. உங்களை விட்டுப் பிரியேம் என்ற பொருளுந் தொனிப்பது காண்க ''கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ்'' என்ற திருவிளையாடற் புராணமும் நினைக. இருந்து ஆய்தரு நன்னயமுடைத்தாய் மண்ணிற் பொலிபு எனப் பிரியும். நன்னயம் - சொன்னயம், பொருணயம், அணிநயம் போன்றவை. பொலிபு-பொலிந்து; வினையெச்சம். இவர்ந்து-ஏறி; காரைக்காலம்மையின் கயிலாயச்செலவு தொனியாக் குறித்தபடி. மாதேவன் கேட்டுருகும் வளமையுடைத்தாய் என்றது-''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும், மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி, அறவா! நீ யாடும்போதுன் அடியின் கீழிருக்க'' என்று காரைக்காலம்மையார் கூறியமை நோக்கி. வடி - தொங்குகின்ற. வளத்தரு - கற்பகமரம். விண்ணிற் பொலிவார்களும் - தேவர்களும்; உம்மை, உயர்வுசிறப்பு. அழன் - பிணம். வெள்ளென்பு அழன் - வெள்ளெலும்பாயிருந்த பிணம். வெள்ளென்பு அழத்திற்கு உயிரருளியது - எலும்பைப்பெண்ணாக்கியது. இது, பூம்பாவை வரலாறு: திருமயிலையில் சம்பந்தர்செய்த அற்புதம். கரா - முதலை. வெங்கராக்கொண்டது மீட்டது - முதலையுண்ட பாலனையழைத்தது. அது, திருப்புக்கொளியூரில் சுந்தரர் செய்த அற்புதம். விறல் - வலிமை; ஆற்றல். நன்னயமுடைத்தாய், வளமையுடைத்தாய், விறலிற்றாய், பொலி செந்தமிழ் எனக் கூட்டுக. ''முதலையுண்ட பாலனை யழைத்ததும்...எலும்பைப்

பெண்ணுருவாக்கண்டதும் தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்'' என்றது திருவிளையாடற்புராணமும். கண்ணிற் பொலி - கண்ணினும் பாதுகாக்கும்படி விளங்குகின்ற; இனி, கண்ணின் முன்னே பொலிகின்ற எனினுமாம். தமிழில் இனிமைபடப் பாடும்போது மெய்ப்பாடுகள் கண்ணுக்குத் தெரியும் படி நிகழ்தல் காணலாம். செந்தமிழின் ஏற்றங்கூறி அத்தகைய தமிழ்மணக்குங் கனிவாய் என்றமையால் சேக்கிழாரின் தமிழ்ப் பெரும்புலமை தெரிந்தபடி.

எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு:—மயிலாப்பூரிலே சிவ நேசர் என்ற வைசியர் தம்மகளாகிய பூம்பாவையைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்க்கு உரிமையாகக் கருதி வளர்த்து வருகை யில், ஒருநாள் அப்பெண் பாம்புதீண்டி இறந்தாள்: நாயனாரது உடைமையாகக் கருதியிருந்தது பற்றித் தந்தையார் அவளைத் தகனஞ்செய்த எலும்பை ஒரு குடத்திலிட்டுக் கன்னிமாடத் திலிருத்திப் பாதுகாத்துவந்தார்.' நாயனார் திருவொற்றியூர்க்கு வந்தபோது சிவநேசர் எதிர்கொள்ள, பூம்பாவையின் செய்தியை யறிந்து சம்பந்தர் மயிலை சார்ந்து, சிவபெருமானைத் தரிசித்தபின் அக்குடத்தை வருவித்து 'மட்டிட்ட புன்னை' என்னும் பதிகம்பாடி அவ்வெலும்பைப் பெண்ணாக்கியருளினர் என்பது.

முதலையுண்ட பாலனை யழைத்த வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புக்கொளியூரையடைந்தபோது ஒரு வீட்டில் மங்கல வொலியும் அதற்கெதிர் வீட்டில் அழுகையொலியும் கேட்க, அதன் காரணத்தை வினவினர்; அதன் பயனாக, மங்கலவொலி மனையில் உபநயனம் நடைபெறுகின்றதென்றும், அதற்கெதிர் மனையில் உபநயனம் நடக்கும் சிறுவனொடு வயது ஒத்திருந்த பார்ப்பனச் சிறுவனொருவன் பல வருடங்கட்கு முன் முதலை யொன்றால் விழுங்கப்பட்டதால் அதை நினைந்து அழுகை நிகழ் கின்றதென்றும் அறிந்தனர். பின்பு, சுந்தரர் முதலையிருந்த நீர் நிலையை யடைந்து, திருப்புக் கொளியூர்ச் சிவபிரானை நினைத்து ''உரைப்பாருரை யுகந்து'' என்று பாட்டுப்பாட, முதலை தான் விழுங்கிய பார்ப்பனப்பிள்ளையைக் கரையில் விட்டுச் சென்றது என்பது. (43)

3\. சொல்லும் பொருளு நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி யமைய வமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து

வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல விலக்கியமே
வேறு காதென் றுலகேத்த
அல்லும் பகலு மம்பலவ
ரருடற் காய வரும்பணிசெய்
தருள்பெற் றுய்ந்த வடியார்த
மருமை பெருமை பாராட்டிக்
கல்லுங் கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே.

*(கு - ரை.) இப்பாடலில், திருத்தொண்டர்புராணம் மூல இலக்கியமாகக்கொண்டாடும் பெற்றியது என்பது ஏதுகாட்டிக் குறிக்கப்பட்டது. தோட்டி - அழகு. சுருங்கச்சொல்லல் முதலாய பத்து அழகுகளையும் தாலப்பருவத்து 9-ஆஞ் செய்யுளுரையிற் கூறினேம். சிவம்பெருக்கும் நூலாதலின், 'அறக்களைந்து' என்றது. வெல்லுந் தகைய முரண் - சிந்தாமணி போன்ற பிறநூல்களெவை யும் தன்னையொக்குமாறின்றி வென்று மேம்படும் வலிமை. விலக்கு விலக - தவிர்வனவற்றைத் தவிர்த்து; வழுக்கள், மலைவு போன்ற வற்றை 'விலக்கு' என்றார். விதி தழுவுதல் - விதித்தவற்றை ஏற்றுக்கோடல். மூல இலக்கியம் - 'ஆதிகாவியம்' என்பது போலக்கொள்க; 'தப்பில் பெருங்காவியமாய்' என்றார் உமாபதி சிவமும். வேறு ஆகாது - இதைக்காட்டிலும் வேறொன்றில்லை. ஏத்தக் கவிபாடும் என மேலியையும். அருடற்கு ஆய - அருள் செய்தற்கு ஏதுவாய. கல்லும் கரையக் கவிபாடும் - இதில், கல்லின் முகமாகக் கவியின் உயர்வை விளக்குதலால், உயர்வு சிறப்பு.* (44)

4. எண்ணி யிதுசெய் திடினிதனு
லெய்தப் படுவ தி:தெய்தா
திரியப் படுவ தி:துண்மை
யெய்தப் படலாற் பயனின்றேல்
கண்ணி யவதை மறந்தொழிக
நள்ளார் முனேமே லிப்பொழுது
நயந்து படர்ந்து பொருவமே
னமேத யாகு நகுவாகை

தண்ணி மயம்போற் புகழ்ப்போர்வை
தாங்கற் காய கருமமிது
தப்பா தாற்றப் பொருள் வருவாய்
தவாதுண் டாமென் றிடைமுதலார்ங்
கண்ணி வளவற் குரைத்தருள்செய்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே.

(கு - ரை.) இப்பாடலில், சேக்கிழார் முதலமைச்சராய் வளவற்கு உரைசெய்த உறுதிமொழிகள் கூறப்பட்டுள்ளன. அவையாவன: — (1) எண்ணி இது செய்திடின் இதனால் எய்தப் படுவது இஃது, எய்தாது இரியப்படுவது இஃது என்ற உண்மை தெளிதல் (2) ஒன்றை யடைதலாற் பயனில்லையேல் அதனை மறந்தொழிதல் (3) பொழுதறிந்து பகைமேற்சென்று வாகை சூடல் (4) புகழ்க்கு ஏதுவாய கருமங்களையே செய்தல் (5) பொருள் வருவாய்வரும் வழிகளைத் தப்பாது ஆற்றுதல் என்பன. இவைகளைத் திருக்குறள் அமைச்சியலினும் உணரலாம்.

இரியப்படுவது - கைகூடாமற்போவது. நள்ளார் - பகைவர். படர்ந்து - சென்று. நகுவாகை - விளக்கஞ்செய்யும் வெற்றி. வென்றோர் வாகைப்பூச் சூடுவர்; எனவே, வாகை வெற்றிக்கு இலக்கணை. இமயம் போற்புகழ் - ''இமயம் போல நிலீஇய ரத்தைநீ நிலமிசையானே'' என்ற புறமும் (166) நினைக. ஆய - பொருந்திய. ஆற்ற - செய்ய. தவாது - தவறாது. ஆர்ங்கண்ணி - ஆத்திப்பூவாலாகிய முடிமாலை. ஆர் + கண்ணி - ஆர்ங்கண்ணி: 'ஆரும்...மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்' (தொல். எழுத். புள்ளி: 68) ஆத்திப்பூமாலை சோழனுக்குரியது. வளவன் - சோழன்: ஈண்டு, அநபாயன். (45)

5. நிலஞ்சார் தெய்வக் கற்பகமே
நிமல ஞான வாரிதியே
நீடுஞ் சைவப் பெருவாழ்வே
நிலவா நின்ற குணக்குன்றே
வலஞ்சார் பெருநா வலரேறே
மாறு வருட்சிந் தாமணியே
மதிப்பார் மதியு ளெழுஞ்சுடரே
வாழ்த்து வார்தம் பெரும்பேறே
புலஞ்சார் பத்தி விளைநிலமே
போக்கு வரவில் பூரணமே
புந்திக் கினிக்குஞ் சுவையமுதே
போற்றி யினிமே லொருதாயர்

கலஞ்சார் முலைப்பா லருந்தாத
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே.

(கு - ரை.) நிலஞ்சார் தெய்வக் கற்பகமே - வேற்றுமை யணியின் பாற்படும். நிமல ஞானம் - குற்றமற்ற சிவஞானம். வாரிதி - கடல். நீடும் - நிலைத்திருக்கும்; 'நெடுஞ்செல்வம் நீடின்றி யாங்கே கெடும்' (குறள். 566). வலம் - வெற்றி. ஏறு - சிங்கம். சிங்கம் போன்றவர்க்கு உவமையாகுபெயர். அருள்மாரு சிந்தா மணியே என மாறுக. சிந்தாமணி - நினைத்தவை யாவற்றையும் தரும் தெய்விகமணி. மதி - புத்தி. புலம் - அறிவு, போக்குவரவு இல் - இறப்பு பிறப்பில்லாத. பூரணமே - (கடவுள் ஸ்வரூபமாய்) நிறைவுள்ளவனே! புந்தி - அறிவு, மனம். கலம் - ஆபரணம். இனிமேல் ஒரு தாயர் முலைப்பாலருந்தாத - மீண்டும் பிறவாத; பிறவியை வென்ற என்றபடி; பிறிதினவிற்சியணி. (46)

6. நூலாறு தேர்ந்தவ ருஞற்றுமக் குண்டங்க
ளோக்கியழல் பாய மேய
நுவல்புலவ ருதரகுண் டத்திற் சருப்பாய
நோன்மைசான் மேக மெல்லாஞ்
சாலாறு பாயவலை யெறியுததி பாயத்
தவாதருவி வரைகள் பாயத்
தையலார் குரிசிலார் மேற்சம்ப ராரிபொழி
சரமெலாம் பாய மலரிற்
காலாறு பாயவம் மலர்மதுப் பாயக்
கமழ்ந்தபட் டத்தி னின்றுங்
கற்பங் கழுத்தொடிய வாளைபா யப்பொய்கை
கருமேதி பாய மிக்குப்
பாலாறு காலாறு பாய்தொண்டை நன்னாட
பவளவாய் முத்த மருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே.

(கு - ரை.) நூலாறு தேர்ந்தவர் – சாத்திரங்கள் விதித்தவழி களைச் செவ்வனறிந்தவர்; வேதாங்கங்கள் ஆறினும் வல்லவர் எனினுமாம். உஞற்றும் - செய்யும். குண்டங்கள் - ஓமகுண்டங்கள். குண்டம் - குழி. அழல்பாய -ஓமத்தீச் சொலித்தெரிய. மேய - விண்ணிற் பொருந்திய. நுவல் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற புலவர் - தேவர். உதரகுண்டம் - வயிறு: இருபெயரொட்டு. சரு-

தேவர்க்குக் கொடுக்கும் உணவு; அரிசி கோதுமை முதலியவற்றை நெய்பாலோடு கலந்து சமைத்த உணவு இது. வேள்வித்தீயில் மந்திரபூர்வகமாக இடப்படுவதன்மூலம் இவ்வுணவைத் தேவர்கள் பெறுவர் என்பது அறியவேண்டுவது. நோன்மை - வலிமை. பெருமை. சாலாறு பாய - நீர்நிறைந்த ஆறுகளாகப் [பெருக் கெடுத்துப்] பாய. சால் - நிறைவு. உததி - கடல். [உதகம் - ஜலம். அதையுடையது, உததி.] தவாது - இடைவிடாது. அருவி - மலையின்வீழ்புனல். வரை - மலை. தையலார் - பெண்கள். குரிசிலார் - ஆடவர். சம்பராரி - மன்மதன்: இவன் சம்பரன் என்ற அசுரனைக்கொன்றவன். சரம் - மலரம்புகள். காலாறு - வண்டு: கால்கள் ஆறைக்கொண்ட வண்டுக்கு அடையடுத்த ஆகுபெயர். கமழ்ந்த - பூநிரம்பியிருத்தலால் நறுமணமுள்ள. பட்டம் - நீர்நிலை. கற்பம் - கற்பகம். வாளைமீன்களின் கொழுமை வளம் தெரித்தபடி. மேதி - எருமை. காலாறு - கால் + ஆறு - கால்வாய்கள் வழியாக. பாலாறு - தொண்டைநாட்டிலோடும் நதி. "பாலாறுவளஞ்சுரந்துநல்கமல்கும்...தொண்டைநாட்டுள்" என்றார் உமாபதிசிவாசாரியாரும். (47)

7. மேயபல வாரியர் குழாத்தினுட் பூரியர்
விராயதென வாய தூய
வெள்ளோதி மக்குழா நிலைகுலைய மேதிகால்
விசைத்தெழீஇப் பாய வாங்க
ணுயவெடி வாளையோர் பருகிலாங் கலிமோத
வதினுதிர் பழத்தின் வெருவி
யம்மேதி கரையேற வதுகண்ட வவ்வாளை
யாயவா லாமை தீரத்
தூயநெடு வானீர் துளைந்தாடி மீளிற்
றொடக்குநீங் காமை யெண்ணிச்
சோதிமதி மண்டலங் கீண்டமுத தாரையொடு
துளையக் கிழக்கி றங்கும்
பாயதட மலியுந் திருத்தொண்டை நன்னாட
பவளவாய் முத்த மருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே.

(கு - ரை.) ஆரியர் = ஆர்யர்: பூஜிக்கத்தக்கவர்: வடசொல்; பெரியோர். பூரியர் - அற்பர்; கீழோர். விராயதென - சேர்ந்தாற் போல. ஓதிமம் - அன்னம். குழாம் - கூட்டம். மேதி - எருமைகள்; பால்பகாவஃறிணைப்பெயர், பூரியரென்ற பன்மைநோக்கி.

வெள்ளோதிமம் - ஆரியர்களுக்கும் கருமேதி பூரியர்களுக்கும் உவமை. கால்விசைத்து எழீஇ - கால்கொண்டு வேகமாக எழுந்து ஆங்கண் - அத் தடத்தில். வெடி வாளை - அச்சமுற்ற வாளை. இனி, வெடி - தாவுகையுமாம்: 'வெடிபோன பருவவாளை' என்றார் அரிச்சந்திர புராணத்திலும். (விவாக: 218). ஏர்பு - எழுந்து; செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இலாங்கலி - தென்னை மரம். பழம் - தென்னம்பழம், நெற்றுக்கள். வாளைமோதப் பழமுதிர்தல் - ''பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத் தெங்கின், தாளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கினெழப்பாய்ந்த வாளை'' என்றார் சேக்கிழாரும். (திருநாளைப்: 4) வாலாமை - அசுத்தம்: தீட்டு வானீர் - ஆகாசகங்கை. மீளில் - மீண்டாலும். சோதிமண்டலம் - சந்திரமண்டலம். தாரை - ஒழுக்கு. சந்திரன் அமுதமுடையவன். துனைய - விரைவாக. கிழக்கு - கீழிடம்: 'கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே' (குறுந்: 337). பாய - பரவிய. மேதிகள் விசைத்தெழ அதனாலச்சமுற்ற வாளைமீன் கரையையடுத்தாற்போலுள்ள தென்னைமரங்களின் தாளில் அம் மரங்கள் அசையும்படி முட்டிப்பாய, அதனால் அத்தென்னைமரங் களிலிருந்து நெற்றுக்கள் உதிர்ந்து விசையாக அந்நீர்நிலையில் வீழ்ந்தன; பழம் வீழ வெருவிய அம் மேதிகள் கரையேற, அது கண்ட வாளை தனக்கேற்பட்ட அசுத்தம் போக்குதற்காகத் தூய நீரிலாட வானத்துத்துள்ளிப்பாய்ந்து ஆகாசகங்கையில் துளைந் தாடி, மீண்டும் நீர்நிலையிற் போனால் தீட்டுநீங்காமையை யெண்ணி, அந்நீர்நிலையையும் பரிசுத்தமாக்கச் சந்திரமண்டலத் தைக் கீறி அங்குள்ள அமுததாரையோடுகூட விரைவாகக் கீழிறங் கும் என்று தொடர்புயர்வுநவிற்சியணிபடக் கூறினர். (48)

8. மிக்குவரு வெள்ளத் தெதிர்ந்தேறு பருவரால்
வேகத் துநண்டு போதும்
வேழத்தை முட்டுபு வெகுண்டு வெடிகொண்டுதாய்
விண்ணந் துளைத்து விரைவிற்
புக்குமகிழ் மழவிளங் கன்றது தெறித்தெழீஇப்
போயதெங் கென்று நாடும்
புந்திப் பெருங்காம தேனுவின் மடித்தலப்
பொம்மல்குழை வெய்த முட்டத்
திக்குநிக ழப்பசுப் பொழிகின்ற பால்வரால்
செய்த புழையூ டிறங்கித்
திரைகரை யெறிந்துவரு குடிஞைக்கு முன்புதான்
செய்தபெய ரைப்பு துக்கும்

**பக்குநவி லருவளம் படுதொண்டை நன்னாட**
**பவளவாய் முத்த மருளே**
**பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான்**
**பவளவாய் முத்த மருளே.**

(கு-ரை.) வேழம் - யானை. முட்டுபு - முட்டி. வெடி கொண்டு - பயந்து. தாய் - தாவி. விண்ணம் - விண்; ஆகாயம்; அம் - சாரியை, துளைத்து, புக்கு, முட்ட என இயையும். மழவிளம்- ஒருபொருட் பன்மொழி; கன்றது, அது - பகுதிப்பொருள்விகுதி. தெறித்து எழீஇ - துள்ளியெழுந்து, தெளித்தல் - துள்ளுதல்: 'மறி தெறித் தாடா' (சிலப்:17) 'தாவுபு தெறிக்கு மான்மேல்' (புறநா: 259). புந்தி-மனம். மடித்தலம்-இருபெயரெட்டு. பொம்மல்-பால் கட்டியிருத்தலால் பருத்த பருமன். குழை-நெகிழ்வு. துள்ளிச்சென்ற கன்றை நாடும் காமதேனுவின் மடியில் பருவரால் முட்ட. திக்கு நிகழ் அப்பசு - எனப்பிரிக்க. திக்குநிகழ் - எட்டுத்திக்கிலும் புகழ் பெற்ற. முட்டின வரால் செய்த துளைவழி பாலிறங்கிப் பாலாறாகப் பெருகிற்று என்றபடி. புழை-துவாரம், துளை குடிஞை-நதி; இங்குப் பாலாறு. முன்பு தான் செய்தபெயர் - முன்னொருகால் தன் திருமடியினின்று சொரிந்தபால் நந்திமால்வரைமிசையினின் றிழிந்து பெருகியோடிப் பாலாறு என்று பெயர் அழைக்கும்படி செய்தமை. இந்த விவரம் செங்கீரைப்பருவத்து ஈற்றுச்செய்யு ளிற் குறிக்கப்பட்டது. புதுக்கும் - புதுப்பிக்கும்; அதாவது, மீண்டும் புதுவழியிற் பெறச்செய்யும். பக்கு - பகுத்து. பக்கு நவில் அரு - பகுத்துச் சொல்லமுடியாத. (49)

**9. வீங்குகரு மேதிபிணர் படுதட மருப்பினால்**
**விடுபடாக் கடுவேலி வாய்**
**விடநீக்கி யுட்புகூஉ மென்கரும் பினைமென்று**
**மென்றுதின் றிடவ ழிதரா**
**வாங்குநிகழ் சாறப் படப்பையை நிரப்பிமே**
**லரம்பையந் துடவை மோதி**
**யாருகி நெற்போ ரடங்கச் சுமந்துசென்**
**றலையாழி யிற்க லந்து**
**தேங்குதிடர் செய்துவரு மாற்றியந் தமிழ்வாய்ச்**
**செறிந்துவர லாலினி மையாய்த்**
**திகழ்கின்ற தென்றெண்ணி யாடுநர்க ளுண்டுமகிழ்**
**தேக்கவெந் நாளுஞ் செயும்**

பாங்குபடு செல்வமென் பாற்றெண்டை நன்னுட
பவளவாய் முத்த மருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே.

(கு - ரை.) *வீங்கு - பருத்த. பிணர் - சருச்சரை; சுரசுரப்பு. தட - வளைந்த. மருப்பு - கொம்பு. விடுபடா - எளிதில் விடுவிக்க முடியாத: எளிதில் தளராத. கடுவேலி - வலிமைமிக்க வேலி. வாய்விட - இடம் விடும்படி. விடுபடா வேலி வாய்விட - முரணழகு காண்க. 'வாய்விடநீக்கி யுட்புகு' என்றதால் எருமையின் கடு வலிமை பெறப்படும். மென்று மென்று - அடுக்கு சுவைமிகுதிபற்றியது. வழிதரா - [கடைவாய்வழி] வழிந்து. ஆங்கு நிகழ் சாறு அப் படப்பையை எனப்பிரியும். சாறு- கருப்பஞ்சாறு. படப்பை-சோலை. அரம்பையந்துடவை - அழகிய வாழைத்தோட்டம். அடங்க-முழுவதும். ஆழி- வட்டவடிவமுடையது எனக் கடலுக்குக் காரணக்குறி. திடர் - மேடு; திட்டு. உருவம் மாற்றி-உப்புத்தன்மையையும் மாற்றி; உம்மை, இறந்தது தழீஇயது. தமிழ்-இனிமை; 'வண்டு தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரையே' (கம்ப:கிட்: பம்பை:28) தமிழ் நிலப்பரப்பு என்பதும் தொனி. சாறு, நிரப்பி, மோதி, சுமந்துசென்று, கலந்து, செய்து, மாற்றி, வரலால் திகழ்கின்றது என முடியும். ஆடுநர்கள் - கூத்தர். மகிழ்தேக்க - மகிழ்ச்சி பெருக. பாங்குபடு - நன்மையை யுண்டாக்கக்கூடிய. மென்பால் - மருதம்* (50)

10. நீலநேர் மாதரொடு காலநேர் மைந்தர்க
ணெருங்கிவிளை யாடு பாலி
நெடுவெள்ள முவராழி யுட்புக வளர்குழீஇ
நிறைமலர்கொய் பொழில்வா விவாய்
வாளைதா யெழவிடபம் வைகுதேத் தடைகீற
மடையுடைந் தென்ன வழியு
மதுவெள்ள மும்புகக் களமர்கள் கருப்பாலை
வழிசாற்று வெள்ளமு மெழீஇ
யாளைமோ தும்படி புகக்கண்ட வறிஞரே
ழாழியு மிதன்க ணுய
வான்றநுண் ணறிவின ராயினென் றேதவமை
யாப்பெரு வளங்கு லாவும்
பாலைவாய் கந்திமென் பாற்றெண்டை நன்னுட
பவளவாய் முத்த மருளே
பரவுசீ ருலகெலாம் வுரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே.

(கு-ரை.) நீளை - நீளாதேவி. இவள் விட்டுணுவின் பத்தினி யருள் ஒருத்தியாவள். பாலி - பாலாறு, உவராழி - உப்புக்கடல், அனூர் - அன்னூர் என்பதன் தொகுத்தல். பொழில்வாவி - பொழி லிடத்து வாவி. தாய் - தாவி. விடபம் - கொம்பு. வைகுதல் - தங்குதல். விடபம் வைகு தேத்தடை - கொம்புத்தேனடை. தேன் + அடை = தேத்தடை; அத்துச்சாரியை பெற்றது. என்ன - உவமவுருபு. மது - தேன்; களமர்கள் - உழவர்களின். கருப்பாலை - கரும்பு + ஆலை: மென்றொடர்க்குற்றியலுகரம் வன்றொடராயிற்று. வழி - வழிந்தோடும். எழீஇ - எழுந்து. 'ஆனை' என்பதன்பின் சிறப்பும்மை தொக்கது. பாலிவெள்ளம் உவராழியுட் புக, மது வெள்ளமும்புக, சாற்று வெள்ளமும்புகக் கண்ட அறிஞர் "ஆன்ற நுண்ணறிவினராயின, ஏழாழியு மிதன்கண் ஆய" என்று ஓத — என இயைத்துப் பொருள் காண்க. ஏழாழி - ஏழுவகைக் கடல்: அவை - உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு என்பன. ஆய - பலவின்பால்வினைமுற்று; உண்டாகின்றன, உள என்ற பொருளது. ஏழாழியும் இதன் கண் ஆய என்றது எவ்வகை யெனில், — 'பாலி வெள்ளம்' என்றதால் நன்னீரும் பாற்கடலும் குறிக்கப்பட, பின அப்பாலினாலாகும் தயிர் நெய்க்கடல்களும் இனம்பற்றிக் குறிக்கப்பட்டன. 'உவராழியுட் புக' என்றதால், உவர்நீர்க்கடலும், 'மதுவெள்ளம்' என்றதால், தேன்கடலும், 'கருப்பாலை வழிசாற்று வெள்ளம்' என்றதால் கருப்பஞ்சாற்றுக் கடலும் குறிக்கப்பட்டன. அமையா - நீங்காத. வாய் - பொருந்திய. கந்தி - கமுகு; பாக்குமரம். (51)

## 6. வாரானைப் பருவம்

1\. மண்டல மதிக்குமணி யாத்தவுச் சிப்பூவும்
வண்பட்ட முஞ்சுட்டியும்
வாகுவல யமுமதா ணியுமுதய வெயில்செய
மகத்துவத் தொண்டர்சீர்த்தி
விண்டல மதிக்கவெழு செய்யவாய்ப் புகழெழுதல்
விழையவெழு குறுமுறுவலும்
வெண்ணீறு முத்தமா லிகையுமிள நிலவுசெய
வெய்யே மனத்தடத்துங்
தண்டலமை யாதலர் சரோருகப் பதமேற்
சதங்கையுந் தண்டையுமொளி
தவாஞெகிழி யும்படீஇக் கலகல விரட்டவுயர்
சைவநிலை யெங்குநிகழக்

**கொண்டலமர் கொடைகொண்ட கரதலச் சேவையார்**
**குலசிகா மணிவருகவே**
**கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு**
**குன்றைப் பிரான்வருகவே.**

(கு-ரை) வாரானைப் பருவம்—பிரபந்தத்தலைவனாகிய குழந்தையை யருகில் வருமாறு அழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதி. 'வருகைப் பருவம்' என்றும் இது வழங்கப்படும். இது பன்னிரண்டாம் மாதத்தில் நிகழும்: "ஆண்டுவரையி னீண்டுவருகென்றலும்" என்பது பிங்கலந்தை. [வாரானை-தொழிற்பெயர்: வா-பகுதி. ஆனை - தொழிற்பெயர் விகுதி. ரகரவொற்று - விரித்தல்.]

மண்டலம் மதிக்கும் மணி - நிலவுலகத்தையே விலையாக மதிக்கச்செய்யும் மணி; அல்லது நிலவுலகத்தோர் கொண்டாடும்படி சிறந்த மணி. மணியால்யாத்தவுச்சிப்பூ என்க. இனி, யாத்த-பதித்த எனவுமாம், உச்சிப்பூ - குழந்தையின் தலையிற் செருங்கவிடும் ஓரணி. பட்டம் – நெற்றிப்பட்டம். சுட்டி – நெற்றியின் மேற்பாகத்தில் தொங்குமாறு கட்டப்பட்டுள்ள அணி. வாகுவலயம்-தோளணி. மதாணி - பதக்கம் போல்வது; மார்பிலணிவது. 'மார்பிடை மதாணி காணேன்' (திருவிளையாடற் புராணம்: மாமனாக). வெயில் - ஒளி. சீர்த்தி - மிகுபுகழ், உரிச்சொல். 'சீர்த்திமிகு புகழ்' (தொல். சொல்: உரி: 16) சீர்த்தியெழு செய்யவாய் என்க. செய்ய - சிவந்த. வாய்ப்புகழெழுதல் - வாயினின்று புகழ் புறப்படுதல். விழைய - ஒப்ப: ஓர் உவமவாய்பாடு. குறுமுறுவல் - புன்சிரிப்பு- வெள்ளிய குறுமுறுவல் புகழெழுதலுக்கு ஒப்பு. புகழ் வெண்மை நிறமுடையதாக் கூறல் கவிமரபு. (சப்பாணிப்பருவச் செய்யுள் 3-நோக்குக). மாலிகை - மாலிகா, ஆவீறு ஐயான வடசொல்; மாலை. வெய்யேம் - கொடியேமாகிய எங்கள், தாபத்திரயங்களால் தபிக்கப்பட்ட எங்கள். தன்மைப் பன்மைக் குறிப்பு வினையாலணையும் பெயர். மனத்தடத்தும் - உம்மை, இழிவுசிறப்பு. தண்டல் அமையாது அலர் - தடையில்லாது அலர்கின்ற: எப்போதும் அலர்கின்ற. சரோருகப்பதம்-திருவடியாகிய தாமரை. ஸரஸ்+ருஹம் = ஸரோருஹம்; குளத்தில் முளைப்பது; தாமரைக்குக் காரண விடுகுறி. சதங்கை, தண்டை, ஞெகிழி - காலணிகள். தவா-நீங்காத. ஞெகிழி-சிலம்பு. படிஇ-ஒன்றோடொன்றுபட்டு. கலகல, இரட்டைக்கிளவி. இரட்ட-ஒலிக்க. உதயவெயில்செய, இளநிலவுசெய, இரட்ட, நிகழ, வருக எனமுடியும். கொண்டல்-நீர்கொண்ட மேகம்: தொழிலாகுபெயர். அமர் - உவமவாசகம். இனி, கொண்டலின் தன்மை யமைந்த கொடை, கொண்டலும் விரும்பும் கொடை எனினுமாம். கொண்ட-குடிகொண்ட. கரதலம்- இருபெயரொட்டு. சேவையார்

குலம் - சேக்கிழார் மரபு; 'சேக்கிழார் திருமரபு சிறந்ததன்றே' என்றனர், உமாபதி சிவாசாரியரும். சேவை [இடபத்தை] வைத்துக் கொண்டு உழவுத் தொழில் புரிபவராதலால், சேவையார் எனப் படுவர். அந்த மரபிற்றோன்றிச் சிறப்புற்றவராதலால், சேவையார் குலசிகாமணி என்றது. சிகாமணி - உச்சியிலணியும் மணிபோலச் சிறந்தவனே! சடாடவி-சடைக்காடு: வடமொழித் தொடர். கொன்றைச் சடாடவி—"கான்மணக்குஞ் சடைக்காட்டிற் கவின் மணக்குங் கடிக்கொன்றை" என்றார் குமரகுருபரரும். மன்று - சபை; சிற்சபை. பராவி-துதித்து. மகுடமாயமைத்த இத் தொடரின் நெடிலோசை மிகவும் சுவையுடைத்து. (52)

2. நிலவுவிரி மதியுமொண் பனியு முவவாவெனினு
நெஞ்சமெப் பொழுதுநெக்கு
நெக்குருகு வார்மதியு மத்தகையர் கட்பனியு
நேரேயு வத்தல்செய்வ
கலவுசெம் மையுமணமு முடைமைக் கிணங்கவெவர்
கடையினவை யுள்ளவேனுங்
காமுறுவ வளிவிரா வுறமலர்வ வாயகோ
கனகநறு மலரிரண்டு
முலவுதலி லன்புசெறி யுந்தலைப் பெயராமை
யுள்ளவே னும்பெயர்த்தே
யுவகையெங் கட்குவர மறுசமய ருக்கெலா
முட்குவர முறுவலித்துக்
குலவுபுக ழேபோர்வை யாக்கொண்ட சேவையார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே.

(கு - ரை.) மதி - சந்திரன். ஒள் பனி - மிக்க பனி. உவவா (உலகத்திலுள்ள தாமரைமலர்கள்) மகிழமாட்டா. உவவா என்பதற்கு எழுவாய், கோகனக நறுமலர் என்பது. எனினும்-என்றாலும். நெஞ்சம் - (தம்) மனம். நெக்கு நெக்கு - மிக நெகிழ்ந்து. உருகுவார் - உருகுகின்ற அடியார்களுடைய. மதி - புத்தி. அத்தகையர் - அப்படிப்பட்ட அடியவரின். கண் பனியும் - கண்களிலிருந்து (மகிழ்ச்சியினால் பெருகுகிற) கண்ணீர்த் துளியையும். உவத்தல் செய்வ-மகிழ்தலைச்செய்யப்பெற்றன. உவத்தல் செய்வ, காமுறுவ, மலர்வ ஆய கோகனநறுமலரிரண்டு என இயைத்துப் பொருள் கொள்க. உலகத்திலுள்ள சாதாரணமான தாமரைமலர்கள் மதிக்கும் பனிக்கும் உவவாது குவியுந்தன்மையுடையன. சேக்கிழா

ருடைய பாதகமலங்களோ நெஞ்சம் நெக்கு நெக்கு உருகுகின்ற அடியவரின் மதிக்கும் அவர்களுடைய கண்களிலிருந்து பெருகும் பனிக்கும் [மகிழ்ச்சிக் கண்ணீருக்கும்] உவப்பன. இந்த அடியில் தாமரை மலரோடு சேக்கிழாரின் கோகனக மலரிரண்டுக்கும் வேற்றுமை தோன்றக் கூறியது வேற்றுமையணி. மதியென்பது சிலேடையால், சந்திரன், அறிவு என்ற இருபொருளது. இவ் விரண்டுக்கும் வேற்றுமையிருப்பினும், சொல்லொப்புமைபற்றி ஒன்ருகக் கொண்டது.

கலவு - கலந்துள்ள, உடைமைக்கு இணங்க - தம்மிடத்துக் கொண்டிருத்தற்கு ஏற்ப. எவர்கடையின் - எவ்விடத்தில். கடை ஏழனுருபு. அவை-அந்தச்செம்மையும் மணமும். உள்ள ஏனும் - இருக்கின்றனவென்ருலும். காமுறுவ - (அந்த இடத்தை) விரும்புவன. அளி விராவுற மலர்வ - அளிபொருந்த மலர்வன. ஆய - ஆகிய. கோகநகம் - தாமரை; ஈண்டு பாதகமலங்கள். இனத்தோடு இனம் சேர்தல் வழக்கமாதலால், தம்மிடத்துச் செம்மை, மணம் என்ற இவற்றையுடைய கோகனக நறுமலர்கள் இரண்டும், அவ் வாருன [செம்மை மணங்களையுடைய] அடியவரினகத்திடத்தை விரும்புகின்றன என்க. பின்னும், அளிபொருந்த மலர்வன என்றது, தாமரைக்கும் பாதகமலங்கட்கும் ஒற்றுமை கூறும். ஈண்டு, 'செம்மை' என்பது - செந்நிறம் நேர்மை என்ற இரு பொருளையும், 'மணம்' என்பது - நறுமணம், நல்லநிலை என்ற இரு பொருளையும், 'அளி' என்பது - வண்டு, காத்தல் என்ற இரு பொருளையும் உடையன. திருவடித்தாமரைகள் செந்நிறஞ் சேர்ந்து நறுமணத்தைக் கொண்டவை, அளித்தலைப்பொருந்தியவை. சாதாரணத் தாமரைகள் செம்மையையும் மணத்தையும் கொண்டனவாய் வண்டுகள் பொருந்தப்பெற்றுள்ளன என்க.

[திருவடித்தாமரைகள் இரண்டும்] உலவுதல் இல் - மாறுதலில்லாத, அன்பு - பத்தி, செறியும் - நிரம்ப நெருங்கியுள்ள, தலை - இடத்தைவிட்டு, பெயராமை - நீங்காமல், உள்ளவேனும் - இருக்கின்றனவென்ருலும், பெயர்த்து - இடத்தைவிட்டு எடுத்து,— எங்கட்கு மகிழ்ச்சி தோன்றவும் வேறு சமயத்தார்க்கெல்லாம் அச்சந்தோன்றவும் புன்சிரிப்புச்செய்து நீ வருக என முடிக்க. உட்கு - அச்சம். முறுவல் - புன்சிரிப்பு. உனது திருவடித்தாமரைகளிரண்டும் ஒழியாத அன்புநெருங்கிய இடத்தைவிட்டுப் பிரியாதனவாயினும், அடிபெயர்த்துவருக என்று வேண்டுகின்றனர். மற்றும், அங்ஙனம் அடிபெயர்த்துவருவதனுல் அடியவரான தங்கட்கு, மகிழ்ச்சியும் பரசமயத்தார்க்கு உட்கும் உண்டாகுமென்கின்றனர். தம்முடைய நாவல்லமையால் புறச்சமயத்தாரை வெல்லவல்ல

வராதலால், இந்தச் சேக்கிழார் வருகை மறுசமயத்தார்க்கு உட்கையுண்டாக்கும்; அந்தச் சேக்கிழாரின் சமயத்தவரான இந்நூலாசிரியர் போல்வார்க்கோ மகிழ்ச்சி தருமெனக. புகழ் அந்தச் சேக்கிழாரைக் கவிந்துகொண்டிருத்தலால், 'புகழே போர்வையாக் கொண்டசிகாமணி' என்றது. (53)

3\. நீடுமின் பரிவையர் புணர்ப்பென்ம ரும்மைந்து
நிகழ்கந்த முங்கெடுதலே
நிலவுமின் பென்மருங் குணமூன்று மொழிதலே
நிரம்பலுறு மின்பென்மரு
நாடுமின் பிறவினைக் கேடென்ம ரும்மல
நசித்தலே யின்பென்மரு
நவில்விக்கி ரகநித்த மின்பென்ம ருந்தோன்று
ஞானமே யின்பென்மரும்
பாடுமின் புயிர்கெடுத லென்மரும் பகுதிமேற்
கெடுதலே யின்பென்மரும்
படுசித்தி யின்பென்ம ரும்பிறரும் வாதம்
படர்ந்துவரு திறனறவளங்
கூடுசெந் தமிழருமை யறிபெருஞ் சேவையார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே.

(கு-ரை.) இப்பாடல், உமாபதிசிவாசாரியரருளிய சிவப்பிரகாசத்தில் முத்திபேதங்களதியல்புகூறும் திருப்பாட்டின பொருளை அடியொற்றியது. அப்பாடல் வருமாறு:— "அரிவையரின் புறுமுத்தி கந்த மைந்தும், அறுமுத்தி திரிகுணமு மடங்கு முத்தி, விரிவுவினை கெடுமுத்தி மலம்போ முத்தி, விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி; பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி, பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி, திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி, திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்த தாமே" என்பது. நீடும் இன்பு- பேரின்பம்; முத்தி. அரிவையர் புணர்ப்பு - பெண்களின் கூட்டுறவு. என்மர் - என்று கூறுபவர். இவர் உலகாயதர். உலகாயதன் மதத்தை" ஈசனொ ரயனார் மாலோ டிந்திரன் றெரிவை மார்பாற், பேசொணு வகைக ளெல்லாஞ் செய்தன்றே பெரியோ ரானூர், ஆசையா லவர்போ னூழு மாகவே வேண்டுமாயின், வாசமார் குழலாரோடும் வல்லவா கூடி வாழ்மின்" என்ற சித்தியார் பரபக்கத்தால் அறிக. ஐந்து நிகழ்கந்தம்-பஞ்ச ஸ்கந்தம்; -ஸ்கந்தம்—கூட்டம். அவையாவன - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் இவ்வைந்தும். அவற்றுள், உருவக்கந்தம் -

பூதவுரு உபாதாயவுரு என இருவகைப்படும். பூதவுரு - பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்குமாம்; உபாதாயவுரு - வலி, இரதம், வன்னம், கந்தம் என்னும் நானகுமாம். வேதனைக்கந்தம் - குசல வேதனை (சுகவறிவு), அகுசல வேதனை [துக்கவறிவு], குசலா குசல வேதனை (சுகதுக்கவறிவு) என்னும் மூன்றுமாம். குறிப்புக் கந்தம் - மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐந்தும் மன மொன்றும் ஆகிய ஆறுமாம். பாவனைக்கந்தம் மனோவாக்குக் காயங் களினுல் உண்டாகும் பத்துவகைப் புண்ணியம், பத்து வகைப்பாவம் ஆகிய இருபதுமாம். விஞ்ஞான கந்தம் - ஏனையநான்கு கந்தங்களின் உண்மைநிலையையறியும் அறிவு. இந்த பஞ்சகந்தங்கள் கெடுதல் இன்பம் என்பவர் - பௌத்தரிற் சௌத்திராந்திகர். சௌத்திராந் திகன் மதத்தை "ஓங்கிய வுருவ மோடும் வேதனைக் குறிப்பி னோடுந், தாங்குபா வனைவிஞ் ஞானந் தாமிவை யைந்துங் கூடிப், பாங்கினுற் சந்தா னத்திற் கெடுவது பந்த துக்க, மாங்கவை பொன்றக் கேடா யழிவது முத்தி யின்பம்" என்றது சித்தியார் பரபக்கம். குணம் மூன்று - சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்றும் என்றும், பிறவகையாகவும் கூறுவர்; இவையொழிதல் இன்பம் என்பார் - நிர்க்குணவாதிகள்; சமணருள் நிகண்டவாதியர் என்பாருமுளர். இருவினை - நல்வினை, தீவினை. இவைகெடுதல் இன்பம் எனபார் - அமணருள் நிகண்டவாதிகள் எனபதனை, "சீர்சால் நல்வினை தீவினை யவைசெயும், வருவழி யிரண்டையு மாற்றி முன்செய், அருவினைப் பயனனு பவித்தறுத் திடுதல், அதுவீடாகு மென்றனன் (மணி: 27:198-201) என்ற மணிமேகலையால் தெளியலாம்: சிலர் பிரபா கரன் மதம் என்றனர். மலம் - ஆணவம். மலம் நசித்தலே இன்பம் என்பார் – பேதவாத சைவர். விக்கிரக நித்தம் - உடம்பு அழி யாமை; ஈங்கு, விக்கிரகம் என்பது சுத்தமாயா சரீரத்தை என்பர். விக்கிரக நித்தம் இன்பம் என்பார் சிவசமவாத சைவர்; இந்த அகச்சமயத்தவர் சிவசாரூப முதலிய பதமுத்திகளைப் பெறுவதே முத்திமுடிவு என்பர். ஞானமே இன்பம் என்பார்-மாயவாதிகள்: மாயவாதி மதத்தை "மாயாதேநின்று, நானே பிரம மெனத் தெளியு ஞானம் பிரம ஞானமே" என்றது சித்தியார் பரபக்கம். பாடும் இன்பு - உண்டாகும் இன்பம். உயிர்கெடுதல் இன்பம் என்பார் பாற்கரியர். பாற்கரியன் மதத்தை "சித்தே யுலகாய்ப் பரிணமித்துச் சீவனுகித் ... லொத்தே கெட்டுப் பிரமத்தோ டொன்ருய்ப் போமென்றுரைத்தனனே" என்றது சித்தியார் பர பக்கம். பகுதி - பிரகிருதி என்பதன் சிதைவு. பகுதிமேற்கெடுதல் இன்பம் என்பார் - பாடாணவாத சைவர். இவர் கொள்கை யாவது, ஆன்மா ஒன்றும் விளங்குதலின்றிக் கல்லுப்போற் கிடப் பதே முத்தியென்பது. படு - தோன்றுகின்ற. சித்தி - பசுகரணங்

கெட்டுச் சிவகரணமாவது. சித்தி இன்பம் என்பார் - சங்கிராந்த வாத சைவர் என்பர். இங்கு, பிள்ளையவர்களின் சைவசித்தாந்தப்பேரறிவு புலனாகின்றது. ஒல்லும்வகை முயன்றேன். இந்த அரிய கருத்துக்களை சைவநலங்கனிந்த மகான்கள்பாற் கேட்டுணர்க. பிறரும் - ஒழிந்த மதவாதிகளும். வாதம் படர்ந்து வருதிறன் அற - வாதம் பேசி வருகின்ற தன்மை அடியோடு கெடும்படி, வளம் கூடு செந்தமிழ் அருமை அறி - [உண்மை முத்திநிலையின்] வளங்கூடிய செந்தமிழ் நூல்களின் பெருமைகளை அறிந்த. வளங்கூடு செந்தமிழ் என்றது - சைவத் திருமுறைகளை. அருமை-பெருமை யென்றது திவாகரம். வளம் என்றது - உண்மை முத்திநிலையாகிய சாயுச்சியத்தை. (54)

4. செற்றசெங் கன்னல்படு தரளங் கந்திச்
செழுஞ்சோலை படுதரளமுந்
திண்மருப் புக்கடாக் களிறுமறை யப்போய
செஞ்சாலி படுதரளமுந்
துற்றபைங் கதலிபிற் படுதரளமும்பாலி
துறைதொறு மெடுத்துவீசுஞ்
சுடர்மணிக ளுங்கரும நடவுவோர் வாருபு
சுமந்துகொடு வந்துதூய
முற்றமெங் கணுநிறை தரக்குவித் திடல்கண்டு
மோகமுற் றேடியாடி
முகந்திடறி யெற்றியொன் றுக்கிவிளை யாடுசிறு
முண்டகத் தாள்பெயர்த்துக்
கொற்றவன் றருமுதன்மை கொண்டுமிளிர் சேவையார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே.

(கு - ரை.) செற்ற - நெருங்கியுள்ள. கன்னல் - கரும்பு. படு - தோன்றுகின்ற. தரளம் - முத்து. கந்தி - பாக்குமரம். திண்மருப்பு - வலிய தந்தம், கடாம் - மதநீர்ப்பெருக்கு. போய - மிக வளர்ந்திருக்கின்ற. செஞ்சாலி - செந்நெற்பயிர். சாலி மிகவும் ஓங்கி வளர்ந்துள்ளமையைத் தெரிவிக்க 'களிறு மறையப் போய செஞ்சாலி' என்றது; 'களிறு மாய்க்கும் கதிர்க்கழனி' என்றது, மதுரைக்காஞ்சியும் (247). துற்ற - நெருக்கமாகவுள்ள. பைங்கதலி - பசுமையாயுள்ள வாழை. பாலி - பாலாறு. துறை - நீர்த்துறை. மணிகள் - இரத்தினங்கள். கருமம் நடவுவோர் - உழவுத் தொழிலை நடத்துபவர்; இனி, நடவுத் தொழிலைச் செய்வோர்

என்று கூறுவாருமுளர். வாருபு - வாரி; செய்பு என்னும் வாய் பாட்டிறந்தகால வினையெச்சம். கொடு - கொண்டு; தொகுத்தல். முற்றம் - வீட்டின் முன்னிடம் மோகம் - (அவற்றில்) விருப்பம். இடறி எற்றி - காலாலிடறித்தள்ளி. ஒன்றுக்கி - மணிமுத்துக் களைக் கலக்குமாறு செய்து. முண்டகம் - தாமரை. முண்டகத் தாள் - உவமைத்தொகை பெயர்த்து - எடுத்து. கொற்றவன் - அநபாயன். முதன்மை - முதலமைச்சுத்தன்மை. மிளிர் - 'உத்தம சோழபல்லவன்' என்னும் உயர்பட்டங்கொண்டு விளங்குகிற.

இச் செய்யுளிற் கூறிய கன்னல், கந்தி, சாலி, கதலி என்பன - முத்துத் தோன்றும் இடங்களாம். முத்துப் பிறக்கும் இடம் இன்னவை யென்பதை "தந்தி வராக மருப்பிப்பி பூகந் தனிக் கதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு ஒளினன்மின்னார், கந்தரஞ் சாலி கழைக்கன்ன லாவின்பல் கட்செவிகா, ரிந்து வுடும்பு காரமுத்த மீனு மிருபதுமே" என்றதனாலறிக. (55)

5\. மாயா மலங்கரும மலமிவைக் கேதுவா
மலம்வே றொடுங்கழன் று
வலியதன் சத்திகெடு மாறுகிரு வருள்பதிய
வந்துபதி செம்மலர்த்தாள்
ஆயாத வெம்மனமு மகலாத தாளடிய
ரவிர்புதல்வர் தோழர்தாங்க
ளடைந்தமார்க் கம்பொலிய வெண்ணுந் திருத்தா
ளராவுரி நிகர்த்ததூசு
காயாத கானீத்த மலரொடு விரித்தவிக்
கடையிற்பெ யர்த்துவைத்துக்
கருங்கொண்டல் போல்மொனு மிகையெனக் கடல்சூழ்ந்த
காசினியு ளாரையெல்லாம்
கூயா தரிக்குங் குணந்தழுவு சேக்கிழார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவி பர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே.

(கு - ரை.) இப்பாடலில், சேக்கிழாரின் திருத்தாள்களின் சிறப் பும், அவர் உலகுபுரக்குங்குணமும் கூறப்பட்டுள்ளன. மாயாமலம் - மும்மலத்து யொன்றான மாயையாகிய மலம். இதன் இலக் கணத்தை "நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர், வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமல னுக்கோர், சத்தியாய்ப் புவன போகம் தனுகர ணமும் உயிர்க்

காய், வைத்தோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே'' என்றது சித்தியார். கருமமலம் - இதுவும் மும்மலத்துளொன்றான கன்மமாகியமலம்: ''இருவினை யினப துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து, வருவது போவ தாகு மனனிய வினைப்பலன்கள்'' (சிவஞான.சித்தி) என்ற தற்கேற்ப, கன்மமாகிய இதுவே, உயிர்கள்பாற் காணப்படும் பல்வேறு இன்பதுன்பங்கட்கும் பிறவிமாறுதலுக்கும் காரணமாமென்பது தெளிவு. இவைக்கு ஏதுவாம் மலம் - இவ்விரண்டுக்கும் மூலமாகிய ஆணவம். ஆணவமலத்தின் இலக்கணத்தை அருணந்தி சிவாசாரியர், ''ஒனறதாய் அநேக சத்தியுடையதாய் உடனாய் ஆதி, யன்றதாய் ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை யார்த்து, நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திம்செம் பினிற்க ளிம்பேய்ந், தெனறுமஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே'' என்று கூறினர். தன் சத்தி - ஆணவத்தின் சக்தி. திருவருள் பதியவந்து - சத்திநிபாதமாகி எனறபடி. சத்திநிபாதம் - மும்மலம் நீங்கிப் பக்குவமுடைய ஆன்மாவிலே திருவருள் பதிகை. பதி - கடவுளின், செம்மலர்த்தாள் - செவ்விய திருவடித் தாமரைகளை, ஆயாத - கொண்டாடாத, எம் மனமும் - எங்களுடைய [அற்ப] மனமும், அகலாத - (விட்டு) நீங்காத, தாள் - (உன்) திருவடிகள் என்று சேக்கிழாரின் திருவடிகளைக் கொண்டாடியபடி. மனமும், உம்மை - இழிவுசிறப்பு. அடைந்த மார்க்கம் - விசேடணமாகக் கொண்ட மார்க்கம்; அடை - விசேடணம். அடியார், அவிர் புதல்லர், தோழர், தாங்கள் என்ற நான்கினையும் விசேடணமாகக்கொண்ட மார்க்கம் என்றது - தாசமார்க்கம், சத்புத்ரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றவற்றை. ''சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந், தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையு, நன்மார்க்க நாலவைதா ஞான யோக, நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்'' என்றது சித்தியார் சுபக்கம்: அகலாத தாள், எண்ணுந் திருத்தாள் பெயர்த்துவைத்து வருக என மேல் இயையும். அராவுரி நிகர்த்த தூசு - பாம்புரித்த தோல்போல் மெல்லிய ஆடை. காயாத கால் நீத்த மலர் - மல்லிகை, முல்லை போல்வன. கால் நீத்த மலர் - காம்பு நீக்கிய பூ. தூசு மலரொடு விரித்த இக்கடை எங்க. இக்கடை - இவ்விடத்தில், இவ்வாசலில். கடை - இடம், வாசல். கருங்கொண்டல் போல்வானும் - (காத்தற் கடவுளாய) திருமாலும். மிகை - அதிகம்; அதாவது. இனி (காத்தற்கு) வேண்டியதில்லை. காசினி - பூமி. கூய் - கூவி, அழைத்து; இறந்தகால வினையெச்சம். ஆதரிக்கும் - புரக்கும், காக்கும்.

(56)

வேறு

6\. நலத்தி னுயரும் பழையனூர்
நாளும் பொலியு மவையகத்து
நலிவு புரிநீ லியைக்கண்டு
நடுங்கா நின்ற வணிகனுக்கு
நிலத்தி லியனின் னுயிர்க்கிறுதி
நேரு மாயி னியாமெல்லா
நெருப்பின் முழுகி யுயிர்துறப்போ
நீயோ ருதியென் றுரைத்தபடி
வலத்தி னுயரச் சொற்றவரு
வண்ண மெழுநாக் குழிமுழுகி
வடவா ரணியத் தாடொருவர்
மலர்த்தா ளடைந்த வெழுபதின்மர்
குலத்தி னுதித்தா ருண்மழைபெய்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே.

(கு - ரை.) நலத்தின் - சிறப்பினால். உயரும் - மேம்பட்ட. பழையனூர் - சென்னைப்பட்டினத்துக்கு மேற்கே நாற்பதுமைல் தூரத்திலுள்ள திருவாலங்காடு என்ற தலத்திற்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்திலிருக்கிறது இவ்வூர். அவையகத்து - சபையிலே (வந்து முறையிட்ட). நலிவு புரிநீலி - (உயிர்க்கு) அழிவு செய்ய வல்ல [பேயாய்விட்ட] நீலியென்பாள். நடுங்காநின்ற - (இவள் நம்முயிரைக் கொள்வாள் என்று) நடுங்குகின்ற. நிலத்தில் - இவ்வூரிலே, இயல் - (இவளோடு) பொருந்தியுள்ள. இறுதி - அழிவு. ஆயின் + யாம் = ஆயினியாம். 'தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்' என்றது விதி. ஓருதி - ஆராய்ந்தறிவாய். உரைத்த படி - சொல்லியபடியே. வலத்தின் உயர - மனவலிமையால் மேன்மைபெற. எழுநாக்குழி - தீக்குழி. தீ எரியும்போது சுவாலைகள் கொண்டு எரிவதாலும், தன்னிற் பெய்யும் பண்டங்களை யெரித்துச் சாம்பராக்குதற்கு அவை உதவுவன ஆதலால் அவை 'நா' எனப்படுதலாலும் தீக்கு 'எழுநா' என்று பெயர். முழுகி - விழுந்து. வடவாரணியம் - திருவாலங்காடு: (வடம் - ஆலமரம்). ஒருவர் - சிவபிரானார். இந்தத் திருவாலங்காடு பஞ்சசபைகளு ளொன்றாகிய இரத்தின சபையை யுடைய தலம். சிவபெருமான் காளியுடன் நிருத்தஞ் செய்தருளிய தலம்: ''ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே'' என்றது தேவாரம். காரைக்காலம் மையார் கைலையிலிருந்து வந்து, சுவாமியைத் தரிசித்து, அவரு

டைய குஞ்சிதபாதத்தின்கீழ்ச் சிவாநந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் தலம். இது அவ்வம்மையார் பாடிய திருப்பதி கத்தைப் பெற்றுள்ளது. மற்றும், மூவர் பாடலும் பெற்றுத் திகழ்வது. மலர்த்தாளடைந்த - பிறிதினவிற்சி. எழுபதின்மர் - எழுபது பேராகிய சபையோர் தோன்றிய, குலத்தின் - வேளாள குலத்திலே. இந்த வரலாற்றால், சொல் தவறாமையாலான சிறப் பைப் பெற்ற குலத்தவர் சேக்கிழார் என்றவாறு. ஆர் - நிரம்பிய. கொண்டல் - மேகம் போன்றவனே! குன்றை என்ற சொல் இரண்டனுள் முதலது - குன்று என்பதன் இரண்டாம்வேற்றுமை. இரண்டாவதான குன்றை - குன்றத்தூரென்பதன் மரூஉ. பொரு மாளிகை - வினைத்தொகை.

இச்செய்யுளிற் குறித்துள்ள வரலாறு:—அயலார் மனைவியரிடத் துக் காதல் பொருந்தி ஒரு வணிகன் திரிந்துகொண்டிருப்ப, அவனுக்கு மனைவியான நீலியென்பவள் 'இச்செயல் தகாது' எனத் தடுத்து வந்தாள்: அதனால் அந்த வணிகன் அவளைக் கொன்றிட் டான். அகாலமரணத்தினால் அந்த நீலி பேயாகிப் பழிக்குப் பழி வாங்க நினைத்துத் திருவாலங்காட்டைச் சேர்ந்த ஒரு காட்டில் திரிந்து கொண்டிருந்தாள். கணவனான வணிகன் வர்த்தகத்திற் காகப் பழையனூர்க்குப் போய்க்கொண்டிருந்தான். செல்லும் வழியிலே அந்தப்பேய் முன்னைய வடிவுகொண்டு கள்ளிக்கட்டை யைக் குழந்தையாக்கி இடுப்பிலேகொண்டு 'என்னைக் காட்டிலே விட்டிட்டுப் போகலாமோ?' என்று முறையிட்டுக்கொண்டு தொடர்ந்தாள். வணிகன் பேயென அறிந்து, திரும்பிப்பாராது ஊர் சேர்ந்தான். பேயும் சபையோரிடம் தான் உண்மையான மானிடமகளைப்போலவே முறையிட்டுக் குழந்தையைக்கொண்டு, அவன் தன் கணவனே என்று மெய்ப்பித்தது. வணிகன் இது பேய்க்கூத்து என்ன, சபையோர் எழுபதின்மரும், 'நீ இவளோடு இணங்கியிரு: உன்னுயிர்க்குக் கேடு நேருமாயின் எம்முயிரைத் தருவோம்' என்றனர். வணிகனும் சபையோர் சொல்லை மறுக்க முடியாமல் அப்பேயோடு இணங்கியிருக்க, அப்பேய் அவ்வணிக னுயிரை மாய்த்துச் சென்றதாக, வேளாண்மரபினரான சபை யோரும் தாம் சொன்ன சொல் தவறாமல் தீக்குழியிற் பாய்ந்து இறைவனடியைச் சேர்ந்தனரென்பதாம். இதனைத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்துச் சேக்கிழாரே "நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந், துற்ற போது தம்முயி ரையும் வணிகனுக் கொருகாற், சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப், பெற்ற மேன்மையினிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு" என்ற திருப்பாட்டிற் குறித்துள்ளார்.

இதனையே,'' "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள், கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை, யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப னண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற் பிரித் தளவிட் டிவளவெனப் பேசலாமோ'' என்றது சேக்கிழார் புராணம். (57)

**7.** **அண்ட மளவும் வரைநாட்டி**
**லரசர் கலக மாதலினு**
**லாங்காங் கொருவி வணிகரொலா**
**மயனுட் டகம்புக் கினிதமர்ந்து**
**விண்ட கலகத் திறந்தெரிந்து**
**மேய தத்த மிடம்புக்க**
**விதமுள் ளுணர்ந்து தஞ்சரணு**
**மேவி யிருந்த மடக்கொடியை**
**மண்ட வழைத்துக் கொடுசென்றிம்**
**மடமா தினைக்கொள் ளுதிரென்ன**
**மயங்கல் கண்டு தங்கையெனும்**
**வாய்மை கொடுமைத் துனக்கேண்மை**
**கொண்ட குலத்தி னுதித்தருள்பெய்**
**கொண்டல் வருக வருகவே**
**குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்**
**கோமான் வருக வருகவே.**

(கு - ரை.) அண்டம் அளவும் - வானுற அளாவியுயரும். வரை நாடு - மலைநாடு: சேரநாடு. ஆங்காங்கு - வெவ்வேருக என்றபடி. ஒருவி - நீங்கி. விண்ட கலகத்திறம் - வடமொழி நடை; கலகம் நீங்கிய தன்மை. உள்ளுணர்ந்து - [வேளாளர்கள்] உள்ளத்தில் உணர்ந்து. சரண் - அடைக்கலம். மடக்கொடி - பெண். மண்ட - விரைந்து. கொள்ளுதிர் - ஏற்றுக்கொள்ளுங்கள். மயங்கல் - வயது நிரம்பிய மங்கையாயிருத்தல் கண்டு கற்பு நிலையை ஐயுற்று மயங்கல். தங்கையெனும் வாய்மைகொடு - தமக்குப் பின்பிறந்தாள் போலே வளர்த்தோம் என்று சத்தியஞ் சொல்லி. மைத்துனக் கேண்மை - மைத்துனராயிருக்கும் உறவு முறைமை கொண்ட. குலம் - வேளாளர் குலம். அருள்பெய் கொண்டல் - வேற்றுமையணி.

மைத்துனமுறை கொண்ட வரலாறு :—ஒருகாலத்திற் சேர நாட்டிலே பெருங்கலகம் நேர்ந்ததனுல் அந்நாட்டவரான வணிகர்

வேற்று நாட்டுக்குச் செல்ல வேண்டிவர, அப்பொழுது அவர்களைச் சார்ந்த ஒருபெண் தவறித் தொண்டைநாட்டு வேளாளர்களிடம் வளர்ந்து கொண்டிருக்க, பின்பு கலகந்தீர்ந்தவுடனே வணிகர் திரும்பித் தம்மூர்க்குப் போய்ச்சேர்ந்து தம்மரபிற் பிறந்த பெண் ணொருத்தி தவறியது கண்டு தேசமெங்கும் தேடித்திரிந்து காஞ்சீ புரத்தில் அப்பெண் வேளாளரிடம் வளர்வது கண்டு தமது பெண்ணை யழைத்துப்போகும்படி அவர்களை அனுமதி கேட்க, அவர்கள் 'நாங்கள் இதுவரையிலும் எங்கள்புத்திரிபோல வளர்த்து ஒரு பழுதுமின்றிக் காத்தோம்: ஆதலால், நீங்கள் இவளைப் பற்றிக் குறைவாக நினையாமல், உங்கள் சாதிவணிகனொருவனுக்கு மணஞ்செய்து கொடுத்தற்கு ஒப்புக்கொள்வீர்களாயின், தடையின்றி அனுப்புவோம்' என்றாராக, அதற்கு அவர்கள் அப்படியே சம்மதித்துத் தங்கள் குலத்திற் சிறந்த ஒரு பிள்ளைக்குக் கலியாணஞ் செய்துகொள்ள, இவ்வேளாளர்கள் சீதனம் முதலானவைகளையும் கொடுக்க, மலைநாட்டுவணிகர்கள் இவர்களுடன் மைத்துனமுறை கொண்டாடினார்களென்பதாம். இவ் வரலாற்றை "கொத்தலர் கோதைவியன் சேரமண்டலக் கொம்பைத் தம்பால், வைத்திருந் தாங்கவ டன்கேளிர் நேடிவர வவர்க்கே, யுய்த்திருவோர்க்கும் வரிசையு மாற்றி யுடனுஞ் சென்று, மைத்துனக்கேண்மை படைத்ததன்றோ தொண்டை மண்டலமே" என்ற தொண்டைமண்டல சதகத்தாலும் உணரலாம். 'நேடிவர' என்றதை 'அழைத்துக்கொடு சென்று'... கொள்ளுதிர்' என்று மாற்றிப் பிள்ளையவர்கள் சிறப்பித்தார். இந்த வரலாற்றால், அடைக்கலம் புகுந்தோரை யாதரிக்குங் கடப்பாடும், ஆடூஉக்குணம் நான்கனுளொன்றான நிறைதவறாமை யுமான சிறப்பைப் பெற்ற குலத்தவர் சேக்கிழார் என்றவாறு. இதனைத் திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்துச் சேக்கிழாரே "ஆணை யாமென நீறுகண்டடிச்சேர னென்னுஞ், சேனுலாவுசீர்ச் சேரனார் திருமலை நாட்டு, வாணிலாவுபூண் வயவர்கண் மைத்துனக் கேண்மை, பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு" என்ற திருப்பாட்டிற் குறித்துள்ளார். (58)

8. விற்றங் கியவி பூதியினால்
விளர்ப்புற் றன்பின் வழியியங்கி
வேறு வேறும் பரசமய
வெய்ய கோடை முழுதொழியச்
சிற்றம் பலநா யகர்கருணைத்
திரைவா ரிதியிற் படிந்துண்டு
திசையெங் கணுந்தோற் றிடமின்னித்

தீய வொழுக்கந் தபக்கறுத்துக்
கற்றங் கமையார் மலத்துன்பங்
கழல வரமா முழக்கெழுப்பிக்
கருதா நின்ற திருத்தொண்டர்
காமர் வாய்ந்த சரித்திரமாங்
கொற்றம் பொலியு மழைபொழிந்த
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே.

(கு - ரை.) இப்பாடலில் சேக்கிழாரைக் கொண்டலாக உருவகமாக்கி அக்கொண்டலுக்கேற்ற செய்திகள் நயம்பட உருவகித்துக் கூறப்பட்டுள்ளன. வில் - ஒளி. மேனியொளியொடு ஞானவொளியும். விபூதி - திருநீறு; பெருஞ்செல்வம். விளர்ப்புற்று - வெண்ணிறம் பொருந்தி; புகழ்பெறறு. கோடை - வெப்பம்; தாபம். சிற்றம்பல நாயகர் - நடராசர். திரை - அலை. வாரிதி - கடல். உண்டு - முகந்து; அநுபவித்து. மின்னி - மின்னலைச் செய்து, ஒளிவீசி. தப - கெடுமாறு. கறுத்து - கருநிறம்பெற்று; கோபித்து. 'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள்' (தொல்: உரி; 76) கறறு அங்கு அமையார் - கற்றவற்றுக்கேற்ப அநுஷ்டானமில்லாதவராய்த் தருக்கி வந்தவர்கள்; மலத்துன்பம் இருபெயரொட்டு மலம் - குற்றம். கழல - கழலும்படி. அரமா முழக்கு - 'ஹரஹர' எனனும் ஒலி. எழுப்பி - அடியார் அனைவரும் யாண்டும் செய்யுமாறு செயது. கருதாநினற - யாவராலும் கருதப்படுகின்ற. திருத்தொண்டர் - தொகையாரொன்பதினமரும் தனியார் அறுபத்து மூவரும். காமர் - அழகு; விருப்பம். சரித்திரமாம் மழை என இயையும் ஓடுஞ் செம்பொனும் ஒப்பவே நோக்கிக் கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின ராதலின் 'கொற்றம் பொலியும்' என்றது. விளர்ப்புறுதல், வான்வழி யியங்குதல், வெப்ப மொழியக் கடலிற் படிந்துண்ணல், எங்கணும் தோற்றி மின்னுதல், கருநிறங் கொள்ளல், இடிமுழக்கஞ் செய்தல், அழகுற வளமழை பொழிதல் ஆகிய மேகத்தின் செயல்கள் சேக்கிழார்க்கேற்றிக் கூறப்பட்ட திறன் சுவைத்தற்குரித்து. (59)

9. விள்ளு மலரா தனத்தானும்
வெய்ய சுதரி சனத்தானும்
விரும்பு மதிகா ரக்கதையா
விளம்பா நின்ற கோல்கொள்ள

நள்ளும் பிரம சரியரெலா
நாடும் பலாசக் கோல்கொள்ள
நான்கா மாச்சி ரமத்தமைந்தார்
நயந்து முந்நூழ்க் கோல்கொள்ளத்
தெள்ளும் வணிகர் குலமெல்லாந்
தேற்றுந் துலாக்கோ லதுகொள்ளச்
செம்பொன் மோலி யரசரெலாஞ்
செங்கோல் கொள்ளச் சிறுகோல்கைக்
கொள்ளுங் குலத்தி லுதித்தவருட்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே,

(கு-ரை.) இப்பாடலில், சேக்கிழார் பெருமானுதித்த வேளாண் குலத்தினர் கைக்கொள்ளுந் தாற்றுக்கோலின் சிறப்புச் செம்மையுறப் பெறவைக்கப்பட்டுள்ளது. விள்ளுதல் - மலர்தல். மலராதனத்தான் - மலரை ஆசனமாகவுடையவன்; பிரமன். ஆதனம் - ஆசனம், இருப்பிடம். வெய்ய - கொடிய, விரும்பத் தக்க என்ற இருபொருளிலும் வந்தது. பகைவர்க்குக் கொடிதாயும் அன்பர்க்கு விரும்பத்தக்கதாயும் இருப்பது சுதரிசனம் என்னுந் திருமாலின் சக்கரம். சுதரிசனத்தான் - திருமால். அதிகாரக் கதையா - அதிகாரத்தைக் காட்டுஞ் சின்னமாகிய தடியாக. கதை - தடி; தண்டு. விளம்பாநின்ற - சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற; கோல் கொள்ளல் - கோலேந்துதல். படைத்தற் றொழிலைச் செய்யும் பிரமனும், காத்தற்றொழிலைச் செய்யும் திருமாலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துதற்கு அடையாளமாகக் கோலேந்தியுள்ளனர் என்க. அதிகாரஞ்செலுத்துவோர் பிரம் பேந்துதல் வழக்கு. நள்ளும் - வேதாத்தியயனத்தை விரும்புகின்ற. பலாசக்கோல் - முண்முருக்கங்கோல். பலாசக்கோலேந்துதல் பிரமசரியர்க்கு விதிக்கப்பட்டுள்ளது. இது ஏந்தினல் வேதத்தைக் கிரஹிக்குஞ்சக்தி அதிகமாகுமென்பர். இதற்கு 'ஸுச்ரவஸ்' என்ற பெயருண்மையும் நோக்குக. அங்ஙனமே மூங்கிற் கோலேந்துதல் சந்நியாசிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. நான்காம் ஆச்சிரமத் தமைந்தார் - வருணாசிரமக்கிரமத்தில் நான்காம் நிலையிலிருப்பவர்; சந்நியாசிகள். ஆச்சிரமம் - நிலை. முந்நூழ்-மூங்கில். முந்நூழ்க்கோல் - ஏகதண்டம், திரிதண்டம் என்பன. தெள்ளும் - தெளிவான அறிவையுடைய. தேற்றும் - (நிறையைத்) தெளிவிக்கின்ற. துலாக்கோல் - தராசுகோல். வணிகர் வாணிபஞ் செய்பவராதலின் அவர் நிலைக்கேற்பத் துலாக்கோல் கூறினர்;

அங்ஙனமே அரசர்தம் நிலைக்கேற்பச் செங்கோல் கூறினர். மோலி-கிரீடம். சிறுகோல் - தாற்றுக்கோல். இதனைக் கைக்கொள்ளுங் குலம் - வேளாளர்குலம். வேளாளர் தாற்றுக்கோலைத் தம் கையிற் கொள்ளுதலால்தான் ஏனைய மூன்று ஆசிரமத்தார்க்கும், திரு மூர்த்திகளுள் இருமூர்த்திக்கும் தத்தங் கடமைகளைச் செவ்வன் செய்யும் வலிமை யுண்டாகின்றது என்பது பெறவைத்த கருத்து. (00)

10. எள்ளுந் திறத்துப் பரசமய
ரேறு வருக தேறுதலி
லெங்க ளுணர்வின் கணுமதுரித்
தினிக்கு மிருங்கோற் றேன்வருக
தெள்ளும் புலத்தர் பெறுகாம
தேனு வருக வருகந்தர்
சிந்தா மணியைப் பொருட்படுத்தாச்
செல்வச் சிந்தா மணிவருக
வுள்ளு மவருக் கெய்ப்பிடைவைப்
பொத்துள் ளெழுமொள் ளொளிவருக
வொழியாப் பத்திக் கடல்வருக
வுலவா தமைந்த சிவபோகங்
கொள்ளுஞ் சைவப் பயிர்வளர்க்குங்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே.

(கு - ரை.) எள்ளும் திறத்து - இகழ்கின்ற [பழிக்கின்ற] தன்மையையுடைய. ஏறு - கோளரி: சிங்கம். தேறுதல் இல் - தெளிந்த அறிவில்லாத. கணும் - உம்மை, இழிவுசிறப்பு. மதுரித்து - மதுரத்தன்மையுடையதாய்; தித்தித்தலையுடையதாய். இரும் - பெரிய. கோற்றேன் - கொம்புத்தேன். கோற்றேன் சிறப் புறக் கொண்டாடப்படுதலை "கோற்றே னெனக்கென்கோ குரை கடல்வா யமுதென்கோ" என்ற திருவாசகத்தாலும் (உயிருண்ணிப் பத்து: 8) "காலனையோலமிட வடர்த்த கோற்றேன்" என்ற திருக்கோவையாராலும் (150) தெளியலாம். தெள்ளும் புலத்தர் - தெளிந்த அறிவினையுடைய ஞானிகள். காமதேனு - வேண்டியதை வேண்டியபடி வழங்கவல்ல தெய்வப்பசு. சேக்கிழாரை அப்பசுவாக உருவகஞ் செய்தபடி, அருகந்தர்-சமணர். அவரது சிந்தாமணி-சீவக சிந்தாமணியென்னும் நூல். செல்வச் சிந்தாமணி - வேண்டியதை

வேண்டியபடி வழங்கவல்ல தெய்வமணி. ஈண்டு, சொன்னயம் சுவைக்கற்பாலது. உள்ளுமவர் - தியானிப்பவர். எய்ப்பிடை வைப்பு - இளைப்பு வந்தகாலத்து [வறுமைவந்தடைந்த காலத்து] உதவுமாறு வைக்கப்படும் சேமதனம். 'நல்லடியார் மனத்தெய்ப் பினில் வைப்பை' என்றது தேவாரமும். உலவாது - நீங்காது, கெடாது. சிவபோகம் கொள்ளும் சைவப்பயிர் - சிவம் விளைக்கும் சைவப்பயிர். போகம் - விளைவு; விளைச்சல். பயிருக்கேற்பப் போகம் என்றது. சிவபோகம் - ஆன்மாவின் ஆனந்தானுபவ நிலை. 'உள்ள மலநீங்கி ஓங்கு சிவானந்த வெள்ளம் திளைத்து அதுவாய் மேவுதல்' என்றும், 'பிரியா இருள் அருளால் நீங்க இன்பாய்த்துன்றல் சிவபோகம்' என்றும் கூறுப. மேகம் நீரைப் பொழிந்து நெற்பயிர் வளர்த்து நெற்போகம் கொள்ளச் செய்வது போலே, சேக்கிழார் அருளைப்பொழிந்து சைவப்பயிர் வளர்த்துச் சிவபோகம் கொள்ளச் செய்தார் என்றபடி. (61)

# 7. அம்புலிப் பருவம்

1. பாடுமதி யோனெனப் படுதலால் வாய்விண்டு
பதினு யிரஞ்சுரும்பர்
பண்பாட வின்னறவு வீசுகழு நீர்மாலை
பாங்குற வுவந்திடுதலா
னீடுசுடர் படுசமபு வொடுகூட லாற்கலை
நிரம்பத் தழைத்திடுதலா
னெடியவம் பரவைபல றத்தோன்ற லாலென்று
நிகழ்சாந்த மேயுடைமையால்
வாடுதலில் சேக்கிழா னுதலா னகுமேர்
வளந்தழுவ லாலெமையன்
மானுத றெரிந்துவரு கென்றழைத் தான்மழைபெய்
வானங்கிழித்து மேற்போ
யாடுகொடி மாளிகைக் குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) அம்புலிப்பருவம் :—பிரபந்தத் தலைவனாகிய குழந்தையோடு விளையாடவரும்படி சந்திரனையழைக்கும் பருவத்தைக் கூறும் பகுதி. (அம்புலி - அழகுபுல்லப்பெற்றிருப்பது என்ற காரணம் பற்றிச் சந்திரனுக்கு வந்த பெயர்.) இது, பதினெட்டாம் மாதத்திற் கூறப்படும். "மதியீரொன்பதில் மதியையழைத்

தலும்'' என்பது, பிங்கலந்தை. இந்த அம்புலிப்பருவத்தில், சாம பேத தான தண்டம் என்ற நால்வகை யுபாயங்களைக் கொண்டு சந்திரனையழைத்தல் கவிமரபு.

இப்பாடலில், சேக்கிழார்க்கும் சந்திரனுக்கும் ஒப்புமை கூறப்படுகின்றது. பாடு - பெருமை; கொண்டாடுகின்ற. மதி யோன் - புத்திமான். சந்திரனுக்கு மதியென்ற பெயருண்மை பிரசித்தம்: சேக்கிழார்க்குப் பெருமை - தெய்வக்கவிபாடும் மதியுடைமை: சந்திரனுக்குப் பெருமை - சிவன்முடியிலேறியமை, அமுதமுடைமை. விண்டு - திறந்து. பதினாயிரம் - அளவின்மை குறித்தபடி. சுரும்பர் - சுரும்பு என்ற மென்றொடர்க்குற்றிய லுகரம் 'அர்' போலிபெற்றுவந்தது. சுரும்பர் - வண்டு. நறவு - தேன். கழுநீர் மாலையை யுவந்து தரித்தவர் வேளாண்மரபின ராகிய சேக்கிழார். கழுநீர்மாலை வேளாளர்க்குரியது. கழுநீர் என்றது செங்குவளையை: இது, ஆம்பல் வகையினைச்சேர்ந்தது. ஆம்பல், அல்லி, குவளை அபேதமாக்கோடலுண்டு. "மடல்சூழ்ந்த செங்குவளை மாலையணி திண்டோள் வலத்தனை'' எனமுன் முன்னரும் (காப்பு: 9) சந்திரன் கழுநீர்மாலையை யுவந்திடுதல் என்றது, அப்பூ சந்திரனைக்கண்டு அலர்தல் நோக்கி. பாங்குற - நன்மை பொருந்த. சம்பு – சுகத்தைத்தருபவன்: சிவபெருமான். சம்புவொடு கூடுதல் - முத்திநிலையில் சேக்கிழார் சிவனோடு இரண் டறக்கலத்தல். சந்திரன் சிவன்முடியிலேறிக் கூடியிருத்தல். கலை - சாத்திரங்கள்; (சந்திரனது) பதினாறு கலைகள். சேக்கிழார் நூற் கலைகளில் வல்லவர்; சந்திரன் பதினாறுகலைகளையுமுடையவன். நெடிய வம்பர் அவை அலறத் தோன்றலால் என்று பிரித்துச் சேக்கிழார்க்கு ஆக்குக. நெடிய அம் பரவை அலறத் தோன்ற லால் என்று பிரித்துச் சந்திரனுக்கு ஆக்குக. வம்பர் அவை - வம்பு பேசி வாதாடுவோர் சபை. அம் பரவை - அழகிய சமுத்திரம். சந்திரனைக்கண்டு கடல் பொங்குதல் இயற்கை. "இந்து வின்கதிர் கண்டுமேன் மேலுற் றிரங்கிவான் கரைகடந் தேறும், சிந்து வெண்டிரைச் சிந்துவொத்து'' என்றது வில்லி பாரதம். (உத்தியோக: கிருட்: 248). சாந்தம் - சேக்கிழார்க்கு மனவமைதி; சந்திரனுக்குக் குளிர்ச்சி. சேக்கிழான் ஆதலால் - சேக்கிழார் மரபினராதலால்; இடபராசிக்குரியனாதலால். சந்திரன் இடபராசியில் உச்சஸ்தானமுடையவன் என்பது அறிய வேண்டுவது. சே - இடபம்; இங்கு இராசிக்காயது. நகும் - விளங்குகின்ற. ஏர் – உழுங்கருவியாகிய ஏர்; அழகு. ஏர்வளம் - சேக்கிழார்க்கு உழவு ஏர்வளம்; சந்திரனுக்கு அழகு வளம். ஐயன் - தலைவன்: ஈண்டு சேக்கிழார் எம் ஐயன் என்றது பிள்ளையவர்

களுக்குச் சேக்கிழாரிடமுள்ள பத்தி தெரிவிப்பது. மானுதல் - தான் உன்னோடு ஒத்திருத்தல். வருகென்று, வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். வானங்கிழித்து மேற்போய் ஆடு கொடி - உயர்வு நவிற்சியணி. தேசு - தேஜஸ்: ஒளி, அருண்மொழித்தேவன் சேக்கிழாரின் இயற்பெயர். இப்பாடல் சாமோபாயங்கொண்டு கூறியது. மேலைப் பாடலும் இப்படியே. (62)

2. மேயவம் போருக மெலாங்குவி கரத்தினை
விராமனை யடங்கவளவா
வியன்சாலி யொடுபொலிய மகிழ்வையா லோரறவர்
விழியின்வெளி வந்தொளிருவை
பாயபர மன்சடா டவியமரும் வரநதிப்
பந்தமுளை நந்தமர்கரப்
பண்ணவனு மிகைபெனப் பல்லுயிரு மோம்பிடப்
படுகருவி யாய்நின்றனை
நேயமிகு மிவையாதி யாலெங்கள் பெருமானை
நிகரா திராயடுக்கு
நிலையேழு கொண்டமையி னுலகேழு மேயென
நிரம்புமா வலர்புகழுதற்
காயமணி மாளிகைக் குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளூறத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) இப்பாடலிலும் சந்திரனுக்கும் சேக்கிழார்க்கும் ஒப்புமை கூறப்பட்டுள்ளது. அம்போருகம் - தாமரை. கரம் - கதிர்; கை. சந்திரன் தன் கதிர்களைக்கொண்டு தாமரைகளைக் குவியச் செய்கின்றான். சேக்கிழாரும் தம் பெருமைகண்டு எல்லாரும் தத்தம் தாமரைக்கைகளைக் குவித்துக் கூப்புமாறு செய்கின்றார். இராமனை - இராத்திரிக்கு அரசனாயிருக்கிறாய்; [இருந்து] அடங்க - எல்லாவற்றோடும், அளவா - கலந்து, வியன் சாலியோடு - பரந்து பட்டுள்ள நட்சத்திரங்களோடு, பொலிய மகிழ்வையால்- இது சந்திரனுக்காயது. சாலி - அருந்ததி; ஈண்டு நட்சத்திரப் பொது. இனி, சேக்கிழார்க்கு ஆக்குங்கால், விராம் - பொருந்திய மனையடங்க - வீடு முழுவதும், அளவா - அளந்து கொட்டிய, வியன்சாலியொடு பொலிய - மிக்க செந்நெல்லோடு விளங்க, மகிழ்வையால் எனப் பிரித்துப் பொருள்கொள்க. சாலி - செந்நெல். ஓர் - ஒப்பற்ற. அறவர் - அத்திரி என்னும் முனிச்சிரேட்டர். சந்திரன் அத்திரி முனிவரின் விழியினிற் றோன்றிய வரலாறு:- உபப்பிரமராகிய அத்திரி முனிவர் இந்திரிய நிக்கிரகஞ்செய்து

மூவாயிரம் வருடந் தவம்புரிகையில், தேஜோரூபியாகிய அவருடைய கண்களிலிருந்து பத்துத் திக்குக்களிலும் பேரொளி வீசிக்கொண்டு நீர்பெருகவே, அந்தக் கருப்பத்தைத் திக்குத்தேவிகள் பதின்மரும் வகிக்கத்தொடங்கிப் பின்பு தங்களாற் பொறுக்க முடியாமல் சந்திரரூபமான அந்தக் கருப்பத்தோடு பூமியில் விழ, அப்பால் நான்முகக்கடவுள் அந்தச் சந்திரனை வேதமயமான தேரின்மீது ஏற்ற, ஸப்தரிஷிகள் வேதவாக்கியங்களைக்கொண்டு துதித்ததனுல் அச்சந்திரன் மிக்க ஒளிபெற்று உலகத்துக்குப் பேரொளியைத் தருபவனுயின னென்பது. இனி, சேக்கிழாரை ஓர் அறவர் விழியின் வெளிவந்தொளிருவையென்றது. சிவபிரானின் விழித்த கண்போல் பொலிகுவை என்றபடி. பரமன் — மேலானவன்; இறைவன். சடாடவி - சடைக்காடு. வரநதி-கங்கை. பந்தம் - சம்பந்தம். கங்கையின் சம்பந்தமுடையது சந்திரன் என்றது - சடையில் அதனேடு தானும் தங்கியிருத்தல்பற்றி. "சந்திரனை மாகங்கை திரையான் மோத" என்றது தேவாரம். சேக்கிழார் கங்கைசம்பந்தமுடையவர் வேளாண்குலத்தவராதலின் வேளாளரைக் கங்கை குலத்தவர் என்பர். நந்து - சங்கு. நந்து அமர் கரப் பண்ணவன் - திருமால். மிகை - வேண்டாமென்னும்படி. திருமால் காத்தற்கடவுளென்பது பிரசித்தம். சந்திரன் தனது அமுதகிரணங்களால் பல்லுயிரும் புரக்கின்றுன். சேக்கிழார் சோழ அமைச்சராய்ப் பல்லுயிரும் புரந்தார் "கருங்கொண்டல் போல்வானு மிகையெனக் கடல் சூழ்ந்த, காசினியு ளாரையெல்லாம், கூயாதரிக்குங் குணந்தழுவு... சிகாமணி" என முன்னருங் கூறியமை நினைக. (வாரானை: 5). நேயம் = பண்பு. நிகராதிராய் - இரண்டு எதிர்மறைகள் ஒருடன்பாட்டுப் பொருளை வற்புறுத்தின. அடுக்காகவுள்ள ஏழு நிலைகளைக் கொண்ட மாளிகைகளை அடுக்காகவுள்ள உலகமேழனுக்கும் ஒப்புச் சொல்லிப் புகழ்வர் பாலலர் என்றபடி. (66)

3. இரவோ னெனத்திரிவை நீமகாப் பிரபுவென
வெங்களை யன்பொலிகுவ
னிகழ்ச்சிசால் கள்வனை யுவப்பைநீ யுவவாம
லிவன்வெறுப் பானெஞான்று
முரவோனெம் வள்ளலே நல்லோ னெடுத்தினி
யுரைப்பதெவ னீயல்லோனே
யுயர்வினு லெமன்வான வன்கா ணுரைப்பா
ருனக்குமொரு தானவப்பேர்
பரவோன லாதவ னெனல்குறித் தல்லவோ
பாதிகொண் டானின்னையெம்
பண்ணவனை முழுமையுங் கொண்டனன் காண்மணிப்
பணியெனத் தோள்புனைந்த

வரவோ னுணர்ந்திடுதி குன்றைநக ராளியுட
　　　னம்புலீ யாடவாவே
　　யருளுருத் தேகபொலி யருண்மொழித் தேவனுட
　　　னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) இப்பாடலில், சந்திரனுக்கும் சேக்கிழாருக்கும் வேற்றுமை கூறப்பட்டுள்ளது. இரவோன் - யாசிப்பவன்; இராத்திரிக்குரியவன் என்பது நேர்பொருள். நீ இரவோன் எனத் திரிகுவை; எங்கள் ஐயன் மகாப்பிரபுவெனப் பொலிகுவன். மகாப் பிரபுவாகப்பொலிதல் - இறைவன் முதலெடுத்துக்கொடுப்பத் தொண்டர்சீர் பரவி, யானைமேலேறிச் சோழமன்னன் கவரி வீசத் தில்லை மூவாயிரவர் வேதமோதித்தொடர, அனைவருங் கைகுவித்து ஏவல் கேட்கும்படி பொலிந்தமை. இகழ்ச்சி, நிகழ்ச்சி என இரு வகையிலும் பிரிக்கலாம். கள்வன் - நண்டு; திருடன் நேர்பொருள். கள்வனையுவப்பை - கடகராசியை விரும்பி வீடாகத்தங்குவை. உவவாமல் - விரும்பாமல். இவன் கள்வனை வெறுப்பான். எஞான்றும் என்க. எஞான்றும் - எஞ்ஞான்றும் என்பதன் தொகுத்தல். உரவோனுகிய எம் வள்ளலே நல்லோன்; நீ அல்லோனே; எடுத்து இனி உரைப்பது எவன்? எனக் கூட்டிப் பொருள் கொள்க. உரவோன் - அறிவுவலிமையுடையவன். அல்லோன் - உரவோனு மல்லன்; நல்லோனுமல்லன் என்றபடி; இராத்திரிக்குரியவன் என்பது நேர்பொருள். (அல் - இருட்டு). எவன் - என்னவிருக்கிறது? வினுவினைக் குறிப்புமுற்று. உயர்வினுல் எமன் வானவன் காண். எமன் - எங்கள் தலைவன்; என்றது, சேக்கிழாரை; வானவன் - தேவன், மேலானவன். தானவன் - ராக்ஷதன். (தானவன் சந்திரன் என்ற பொருளும் உண்டு; இது நேர்பொருள்). மணிப்பணியெனத் தோள்புனைந்த அரவோன் பரவோன் ஆலாதவன் எனல் குறித்து அல்லவோ பாதிகொண் டான் நின்னை; [ஆனுல்] எம் பண்ணவனை முழுமையும் கொண் டனன்காண் என இயைத்துப்பொருள் காண்க. மணிப்பணி - மணிகளாலாகிய ஆபரணம். அரவோன் - சர்ப்பத்தினை யுடையவன்; சிவபிரான். பரவோன் அலாதவன் - கொண்டாடத் தகாதவன். பரவுதல் - கொண்டாடுதல். பாதிகொண்டது - பிறை யாய் அணிந்தது; "பாதிமதிநதி போதும் அணிசடை" என்றுர் அருணகிரியும். பண்ணவனை - தேவனை; என்றது, சேக்கிழாரை, முழுமையுங் கொள்ளுதல் - பூரணகடாக்ஷம் புரிந்து ஆட் கொள்ளல். காண் - தோற்றப்பொருளது. உணர்ந்திடுதி - [மதியே] நீ தெரிந்துகொள். இப்பாடல், பேதோபாயங்கொண்டு கூறியது. மேல் மூன்று பாடல்களும் இப்படியே. (64)

4. சாறுசால் வீதித் திருத்தில்லை யம்பலந்
தன்னிலெஞ் ஞான்றுநின்று
தாண்டவ நவிற்றியுல குய்பச் செயும்பரம
சற்குரவ னினிதுசெய்யும்
பேறுமே வியவனுக் கிரகமுழு தும்பெற்ற
பெரியோ னிவற்குவானோர்
பேணுகுர வன்பாங்கர் நிக்கிரக மேபெற்ற
பேதைநீ மாற்றுயர்ந்து
வீறுசெம் பொன்னோ டிரும்பொத்த போதினும்
மேவொப் புருமைமண்ணும்
விண்ணு முண ருங்கருணை நினையழைத் தனைந்த
விதமோர்ந்து கொடியோடும்வா
றுதோய் சூளிகைக் குன்றைநக ராளியுட
னமபுலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னமபுலீ யாடவாவே. '

(கு - ரை.) இப்பாடலிலும், சந்திரனுக்கும் சேக்கிழார்க்கும் வேற்றுமை கூறப்பட்டுள்ளது. சாறு - திருவிழா. சால் - நிறைந்த. தாண்டவம் - திருநடனம். நவிற்றி-செய்து. 'நட்டமே நவில்வாய்' என்றது தேவாரம். பரமசற்குரவன் - மேலான ஞானசாரியன்: இறைவன். இவனே எவ்வெச் சந்தானத்திற்கும் ஆதிகுரவனுவன். அப்படிப்பட்டவன் இனிதாகச் செய்யும் பேற்றையும், மேவிய அனுக்கிரகமுழுதையும் பெற்ற பெரியோன் சேக்கிழான் என்றபடி. பேறு - பாக்கியம். மேவிய - தாமே விரும்பிச் செய்யும். 'நம்பு மேவு நசையாகும்மே'. அனுக்கிரகம் - அருள். இவற்கு - இந்தச் சேக்கிழானுக்கு. அனுக்கிரகம் பெற்ற இவற்கு நிக்கிரகமே பெற்ற பேதை நீ ஒப்புருமை மண்ணும் விண்ணும் உணரும் என முடியும். வானோர் பேணுகுரவன் பாங்கர் - தேவகுருவாகிய பிருகஸ்பதியிடத்தில். நிக்கிரகம் - தண்டனை; சாபம். பிருகஸ்பதி [வியாழன்] என்னும் தேவகுருவின் பத்தினியான தாரையைச் சந்திரன் கண்டு காதல்கொண்டு அன்னாளோடு கூடிப் புதனென்ற புதல்வனைப் பெற்றனன்: அதற்காகக் குருவினிடத்துச் சாபம் பெற்றுத் தள்ளப் பட்டான். மாற்று - உரைமாற்று, வீறு - மேன்மை. வீறு செம்பொன் - சாம்புநதம்: 'பொன்னுக்குச் சாம்புநதம்' (திருவள்ளுவ மாலை: 36) 'ஒத்துபோதினும்' என்றது ஒவ்வாமையே கருதிற்று. இனி, செம்பொன் என்பதற்கேற்ப இரும்பைக் கரும்பொன் என்பது முளதாதலின், அப்பெயரொப்புமை நோக்கி, ஒரு சிறிது ஒப்புமையிருந்தபோதினும் என்னவுமாம், விண், மண் -

இடவாகு பெயர். நினை அழைத்தஃது கருணையாலாகும். நினை - நின்னை: தொகுத்தல். அழைத்தஃது - அழைத்தது; ஆய்தம், விரித்தல் என்னலாம். இந்த விதம் - இந்த விடயத்தை. ஓர்ந்து ஆடவா என இயையும், கொடியோடும் வானாறு தோய் சூளிகை - உயர்வு நவிற்சியணி. வானாறு - ஆகாசகங்கை. சூளிகை - நிலா முற்றம். "மாடமலி சூளிகையிலேறி மடவார்கள் பாடலொலி செய்ய" என்றது தேவாரம். (65)

5. எம்மையினி தாள்பவன் செம்மைமதி யவனீ
யியற்கையே வெண்மைமதியோ
னெற்றைக்கு மிகுதண்மை யுடையரோ டுறவுகொளு
மியலபினு னெங்களையன
வெம்மையுடை யவர்களொடு மதிதொறும் மதிதொறும்
விராயுறவு கொள்ளுவோனீ
வியக்குமொரு தன்மையோ னெங்கள்கிரு பாமூர்த்தி
மெய்ம்மையொரு கால்வளருவாய்
மும்மையுல கறியவொரு காற்றேய்த வாயிவை
முயங்காதொர் காலொழிதுவாய்
மொழியுநீ யிவையோர்ந்து மாடவா வென்றது
முழுக்கருணை காணெஞ்ஞான்று
மம்மையனை யார்மருவு குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னமபுலீ யாடவாவே.

(கு - ரை.) இப்பாடலிலும், சந்திரனுக்கும் சேக்கிழார்க்கும் வேற்றுமை கூறப்பட்டுள்ளது; செம்மை மதியவன் - செவ்விதான அறிவையுடையவன். இயற்கையே - சுவபாவமாகவே. வெண்மை மதியோன் - புல்லறிவுடையோன், அறிவுமுதிராதோன். வெண்மை - இளமை: அஃதாவது அறிவுமுதிராமை என்றனர் பரிமேலழகர். "வெண்மையுடையார் விழுச்செல்வ மெய்தியக் கால்" (69) என்ற நாலடியாராலும் "வெண்மையில்லை பல் கேள்விமேவலால்" என்ற கம்பன் வாக்காலும் தெளிக: எற்றைக் கும் - என்றைக்கும். தண்மை - குளிர்ந்த அருள். மாதந்தோறும் அமாவாசையன்று சூரியனோடு சந்திரன் சேர்ந்திருத்தலேயன்றி, மற்றைய தீக்கோள்களான சனி, செவ்வாய், இராகு கேதுக் களோடு சேர்ந்திருத்தலும் குறித்தபடி: ஒரு தன்மையோன் - ஒருபடிப்பட்டவன். மெய்ம்மை - (யான்கூறுவது) உண்மை. வளருவாய் - பிரதமை முதல் பௌர்ணமி வரை வளர்தல்.

மும்மை - மூன்று: எண்குறித்துவந்தது. தேய்குவாய் - பிரதமை முதல் அமாவாசைவரை தேய்தல். இவை முயங்காது - வளர்தலும் தேய்தலும் இரண்டுமே யில்லாமல். ஒழிகுவாய் - மறைந்தே விடுவாய்: இஃது அமாவாசையன்று. இவை ஓர்ந்தும் - இந்தக் குறைபாடுகள் தெரிந்திருந்தும். மொழியும் நீ-சொல்லப்படுகின்ற உன்னை, [எம் ஐயன்] ஆடவா என்றது முழுக்கருணையாலாகும். அமை அனையார் - அந்த மேகம் போன்றவர்; கைம்மாறு கருதாத கொடையாளர் என்றபடி. இனி, அம்மை அனையார் - தாய்போற் சிறந்த மாதர்கள். (66)

6. குறையுடைய பாம்பொன் றெடுத்துண் டுமிழ்ந்திடக்
குலைகுலைந் துழல்வையெங்கள்
கோமான் பெருங்கல்வி யாட்சியை யுணர்ந்துசெங்
குருமணிச் சூட்டுமோட்டு
நிறைவுகெழு துத்திப் பணுடவிப் பாம்பொன்று
நேரடைய மன்றுணுணு
நினையீன்ற தொருபரவை யிலகுவே பாரமென
நென்னுனைத் தனையுமெண்ணேன்
முறையினெரு சிறுதூக்கி னெழுபரவை யும்புக
முடித்துற நிறுத்தானிவன்
மொழியெங் கடம்பிரான் வல்லப முணர்ந்திலைகொன்
முத்தமா ளிகைவானயாற்
றறைமணித் திடராய குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) இப்பாடலிலும், சந்திரனுக்கும் சேக்கிழார்க்கும் வேற்றுமை கூறப்பட்டுள்ளது. குறை - உடற்குறை. உடற்குறையுடைய பாம்பொன்று - ராகு. உண்டு உமிழ்ந்திடல் - கிரகணம் பற்றிப் பின்புவிடுதல். 'உண்டு, உமிழ்ந்திடக் குலைகுலைந்து உழல்வை' என்றவிடத்து வரலாறு: - திருமால் அசுரர்களை மோகினி வடிவால் மயக்கிவிட்டுக் கடல்கடைந்து எடுத்த அமுதத்தைச் சுரர்கட்குப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டிருக்கையில், சிம்ஹிகை யென்பவரின் புதல்வனான சைம்மிகேயனென்னும் நாக வடிவுடையோன் தேவரிடையே வேற்றுவடிவு கொண்டுவந்து அமுதம்பெறுமாறு கைந்நீட்டி அமுதத்தைப்பெற, பின்னர் உடனே சூரியசந்திரர்கள் அவனை அசுரனென்று திருமாலுக்குக் காட்டிக் கொடுக்க, அக்கடவுள் அமுதமீயும் அகப்பைகொண்டு அவனைத்

தாக்க, அவன் தலைவேறு உடல்வேறாகியும் அமுத முண்டதனால் இறவாமல் இராகு கேது என்ற இரண்டு கிரகமாகி, கோள் சொல்லிய அந்தச் சூரிய சந்திரரைச் சிற்சில காலத்திற் பீடிக் கின்றனனென்பது, புராணகதை. (உடற்பகுதி கேது என்றும், தலைப்பகுதி இராகு என்றும் கூறுவர்.) எங்கள் கோமானது பெருங் கல்வியாட்சியைக்கண்டு சபையில் நேரில்வருதற்கு ஆதிசேடனும் நாணுவன். பணுடவிப் பாம்பு-படங்களின் தொகுதியையுடைய பாம்பு: எனவே, ஆதிசேடன். ஆதிசேடன் ஆயிரந் தலையுடையவன் என்பர். குரு - நிறம்: குரு மணி - மாணிக்கம். சூட்டு - உச்சி. மோட்டு - பருத்த. துத்தி - புள்ளி: படப்பொறி. நேரவையமன்றுள் நாணும் என ஆதிசேடனையெடுத்துக் கூறியது, அறிவிற் சிறந்தவன் ஆயிரம் நாப்படைத்த (அவனேயாதலின்). பேரறிவு படைத்த ஆயிரந்தலையுடைய ஆதிசேடனாகிய பாம்பும் எங்கள் கோமான்முன் எதிரில் சபைக்குவர நாணுவன்; உன்னையோ உடற் குறையையுடைய ஒரு சிறுபாம்பும் உண்டு கக்கும் என்று மதியின் சிறுமை குறித்தபடி. பரவை - சமுத்திரம். இலகுவே - இலேசானதே. ஏகாரம், தேற்றம். பாற்கடல் கடைந்தகாலத்து அதனிலிருந்து சந்திரன் தோன்றினானதலின், 'ஈன்றது ஒரு பரவை' என்றது "அம்புராசியி னாரமுதுடனவ தரித்தோன்' என்றது வில்லிபாரதம். (குருகுல: 4) பாரம் - பெருமை. நெல் நுனைத் தனையும் - நெல்லினுடைய நுனியளவேனும்; 'சிறிதேனும், எண்ணேன்' என்றது - பாற்கடல் கடைந்தபோது எல்லாம் உண்டானவைபோல நீயும் தோற்றினாய்: அவ்வளவே என்றபடி. இதனால், உன்னை ஒரு பரவை பெற்றெடுத்ததென்பது [என்னைப் பொறுத்தமட்டில்] இலேசான காரியமே; பெரிய கௌரவகாரிய மாக அதனை நெல்நுனைத்தனையும் எண்ணேன் என்பது குறித்தபடி.

முறையின் - கிரமமாக. ஒரு சிறு தூக்கின் - ஒருசிறு பாட்டில். தூக்கு - பாட்டு, செய்யுள். எழுபரவையும்புக - 'எழுபரவை' என்ற சொற்றொடரும் புக; ஏழுமுறை 'பரவை' என்ற சொல்லும் புக. நிறுத்தான் - நிறுத்தியிருக்கிறான். ஈண்டுக் கருதிய பாட்டு பின் வருமாறு:—"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும் பல்குல் ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை, சீர் பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்,ஏர்பரவை யிடைப்பட்ட என்னுசை எழுபரவை" என்பது (தடுத்தாட்கொண்ட புராணம்; 148).[இப்பாடலின் சுவை பேச்சுக்கு நிலமன்று: இதில்,'எழுபரவை' என்ற சொற்றொடரேயன்றி, ஏழுமுறை 'பரவை' என்ற சொல் வந்திருக்கும் திறமுங் காண்க]. ஈண்டு, "ஒருசிறு தூக்கின் எழு பரவையும் புக முடித்துற நிறுத்தான் இவன்" என்ற சொல்லாற்

றலாற்போந்த நயம் - இவன் இலேசாக ஒரு தூக்கிலேயே ஏழு கடலையும் புகச்செய்து உறளடுத்து நிறுத்துக்காட்டினுன் என்பது; இப்பொருளில், தூக்கு-தராசுக்காகும். வல்லபம்-வலிமை; திறமை: அருஞ்செயல், உணர்ந்திலைகொல் மொழி எனக் கூட்டுக. மொழி - (நீ) சொல்லு; முன்னிலை ஏவல். வானயாறு - ஆகாசகங்கை. அறை - வரையறுக்கப்பட்ட. திடர் - திட்டு: மேடு. குன்றை நகரிலுள்ள முத்தமாளிகை வானயாற்று அறைமணித்திடராயது என்றது, தொடர்புயர்வுநவிற்சியணி பின்பாற்படும். (67)

7\. செறிதமிழ்ச் சங்கத்து முதன்மையோ னன்பினைந்
திணையென நவின்றநூலிற்
செப்பிய விதிப்படிக் கரிகுழைத் தெழுதுகட்
செய்யவாய வெண்ணகைநலார்
முறிவற வணங்குதோ றெருவிடுத லால்வளரு
மொய்ம்பு பெற்றனையெநாளு
மொய்த்தவெரு விடுதலந ழுல்வளர்த லுழவுதொழின்
முயலிவன் காட்டுதொழிலே
மறிவரிய விந்நன்றி யுள்ளுணர்ந தனையென்னின்
வாரா திருப்பைகொல்லோ
மதியோ னெனும்பெயர் குறிப்புரு மற்கவிக
மகன்வாதி வாக்கியாய
வறிவர்கழ கம்பரவு குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) செறி - புலவர்கள் செறிந்த. தமிழ்ச் சங்கம் என்றது - கடைச்சங்கத்தை. ''தரணியிற் பொய்ம்மையிலாத் தமிழ்ச் சங்க மதிற்கபிலர் பரணர் நக்கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்'' எனக் குறித்தார் நம்பியாண்டார் நம்பியும். முதன்மையோன் - இறையனுர்; ஆலவாயின் அவிர் சடைக் கடவுள் ஒரு புலவராயிருந்து தமிழாராய்ந்தமையின் அவரை 'முதன்மையோன்' என்றது. 'அன்பினைந்திணை' என நவின்ற நூல்: இறையனுரகப் பொருள். அந்நூலுள் ''அன்பினைந்திணை'' யெனப்படுவது முதற்சூத்திரம்; ''மாறனும் புலவரும் மயங்குறு காலை, கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோல், அன்பினைந் திணையென் றறுபது சூத்திரம், பரப்பின் றமிழ்ச் சுவை திரட்டி மற்றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்'' என்ற கல்லாடம் நினைக. அந்நூலிற் செப்பிய விதிப்படி நலார் வணங்குதோறும், என்க. விதி - அகப்பொருளில்

நாணநாட்டத்தின்பாற்பட்ட 'பிறைதொழுக' என்பது. 'கரீ குழைத்து......வெண்ணகை' என்ற முரண்தொடை 'நலார்'க்கு அடை, கரி - மை, செய்ய - சிவந்த. வெண்ணகை - வெண்மையான பல். நலார் - நல்லார் என்பதன் தொகுத்தல்: மகளிர்: இங்குச் சந்தர்ப்பத்திற்கேற்பக் கன்னிப்பெண்களைக் காட்டிற்று. எருவிட்டுப் பிறைச்சந்திரனை வணங்குபவர் அவரேயாதலின். வளருமியல்பினையுடைய பிறைச்சந்திரனிடத்து, நலார் வணங்குந்தோறும் எருவிடுதலால் நீ வளரும் மொய்ம்பினைப்பெற்றனை எனக் காரணங் கற்பித்துக் கூறியது ஏதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும். கன்னிச் சிறுமியர் விரைவில் மணமாதற்கு நிலாச் சோறட்டுச் சந்திரனுக்குப் படைக்குந்தோறும் எருவிட்டு வணங்குவர் என்ப. முறிவு - மனவருத்தம். மொய்ம்பு - வலிமை எ நாளும் - எந்நாளும்; தொகுத்தல். மொய்த்த - நெருங்க. நெருங்க எரு விடுதல், அதனால் வளர்தல் என்ற உண்மைகளை உழவுதொழின் முயற்சியில் இவன் காட்டிய தொழிலே. முயல் - முயலுதல், முயற்சி; முதனிலைத்தொழிற்பெயர். தொழிலே - வேலைத் திறமையே; உபயோகிக்கும் முறையே. 'முயலிவன் காட்டுதொழிலே' என்றவிடத்து 'முயல்நீகாட்டுதலும் இவனைப் பின்பற்றியே' என்பது தொனி. சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயலென்றல் கவிசமயம். "ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலாலோங்கிய, அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்" என்று நாலடியார்கூறுமிடத்தும் காண்க. மறிவு, திரும்புதல் மறிவு அரிய இந்நன்றி-கைம்மாறு கருதாத இந்நன்மை. 'இந்நன்றி யுள்ளுணர்ந்தனை யென்னின் வாராதிருப்பை கொல்லோ' என்றதால், இப்பாடல் தானோபாயத்திற்கூறியதாகுமென்னலாம். உன்னைப்போலே 'மதியோன்' என்னும் பெயரை வைத்துக்கொள்ளாமலேயே, கவி, கமகன், வாதி, வாக்கி ஆகிய அறிவர் கழகம் பரவும் சிறப்புடையர் சேக்கிழார் என்பது கருத்து; நீயோ மதியோன் என்ற பெயர் பெற்றிருந்தும் உன்னை அறிவர் கழகம் பரவுதலில்லை யென்பது குறிப்பு. குறிப்புறுமல் - [தனக்குக்] குறியாக வைத்துக்கொள்ளாமல்: குறி-பெயர். "குகனென்னுங்குறியுடையான்" என்றார் கம்பரும். "கவியே கமகன் வாதி வாக்கியெனப், புவிமேற் சொல்லும் புலவர் நால்வர்" ஆதலின். அந்நால்வரினுடைய அறிவர் கழகம் என்றது இவரியல்புகளை "ஆசு மதுரஞ் சித்திர மகலம், பாவகை பாடுவோன் கவியெனப் படுமே"; "நிறைந்த கல்வியாலிறைந்த வறிவான், அறைந்த ஒருபொருளதனை விரிக்க வல்லவன் கமகன் சொல்லுங் காலை;" ஏதுவு மேற்கோளும் எடுத்துக்காட்டித் தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுக்கும், வன்புடை யோனே வாதி யாவான்"; "அறம் பொரு ளின்பம் வீடென நான்கும்,

திறம்பா திவரச் செஞ்சொற் கொண்டருள், நோக்கி யுரைப்போன் வாக்கி யாவான்'' என்று இலக்கணவிளக்கம் தெரிவிக்கின்றது. (பாட்டியல், 170-173). சேக்கிழார் மேற்குறித்த புலவர் நால்வரின் இயல்புகளும் ஒருங்கேபெற்றுத் திகழ்ந்தனராதலின், அறிவர் கழகம் பரவுவதாயிற்று. (68)

8. பெருநாவ லோவெனு முழக்கரு மென்பாற்
பிறங்குபயிர் கொடிசெடியெலாம்
பேணுங் கருக்கொள்ள நீயுப கரித்தலுட்
பேணு திருந்தானலன்
திருநாவ லூரர்சீ காழியார் கூனறத்
திருவாய் மலர்ந்ததொப்பச்
செயிர்கொணின் கூனொழிப் பான்வாய் மலர்ந்துகூன்
செய்யுளினு முறவைத்திலான்
ஒருநாவ லொடுபெயர் பெறும்பொலத் தினுமருமை
யுறநவில் புராணத்தினே
ரொப்பிலா வெங்கள்பெரு மானட்பு மதிநிற்
குயிர்க்குறுதி செய்வதாகும்
அருநாவ லோர்பரவு குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு-ரை.) நாவலோ எனும் முழக்கு - 'நாவலோ' என்று இசைக்கும் ஓதை. நாவல் என்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல். ''காவ லுழவர் கடுங்களத்துப் போரேறி, நாவலோஒஒ வென்றிசைக்கு நாளோதை' என்ற முத்தொள்ளாயிரமும் நினைக. மென்பால் - மருதம். கருக்கொள்ள உபகரித்தல் - சந்திரன் 'ஓஷதிராஜா' எனப்பட்டுப் பயிர் வர்க்கங்களை வளர்க்கின்றான் என்பது குறிப்பு. உட்பேணுதிருந்தானலன் என்றதால் சேக்கிழாரின் செய்ந்நன்றிமறவாமை குறித்தபடி. திருநாவலூரர் - சுந்தரமூர்த்திகள். சீகாழியார் - திருஞானசம்பந்தமூர்த்திகள். இருவரும் கூனறத் திருவாய் மலர்ந்தது - இருவரும் கூன் நீங்கச் சொற்றது. சுந்தரர் கூன் நீங்கச் செய்தது:—திருவாரூரில் பரவைநாச்சியாரின் ஊடல் தீர்த்தபோது, அவள் வீட்டிற் சின்னாள் தமக்குத் திருமாலை தொடுத்துக்கொடுத்து வந்து கூனனையும், அடைக்காய் கொடுத்து வந்த குருடனையும் முறையே கூனுங் குருடும் தீரக் கருணைபுரிந்து ஏவல் கொண்டவர் சுந்தரர் என்பர். இதனை ''தேனுங் குழலும் பிழைத்ததிரு மொழியால் புலவி தீர்க்கமதி, தானும் பணியும்

பகை தீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாள், கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம், யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழுபிறப்பின் முடங்கு கூன்'' என்ற சேக்கிழாரின் பெரியபுராணச் செய்யுளாலும், ''கூற்றுக்கெவனோ புகல்திரு வாரூரன் பொன்முடிமேல், ஏற்றுத் தொடையலும் இன்னடைக் காயும் இடுதருமக், கோற்றொத்து கூனனும் கூன்போய்க் குருடனும் கண்பெற்றமை, சாற்றித் திரியும் பழமொழியாமித் தரணியிலே'' என்ற நம்பியாண்டார்நம்பி திருவந்தாதிச் செய்யுளானும் தெளியலாம். திருஞானசம்பந்தர் கூன் நீங்கச் செய்தது-மதுரையில் சமணரோடிட்ட புனல்வாதத்தில் சம்பந்தர் 'வாழ்க வந்தணர்' என்று தொடங்கும் திருப்பாசுரத்தை ஏட்டிலெழுதி, அவ்வேட்டை வைகையிலிட அது எதிரேறியது பிரசித்தம். அப்பாசுரத்தில் 'வேந்தனு மோங்குக' எனப்பாடிய நிறைமொழியாற் பாண்டியமன்னன் தனக்கிருந்த கூன் நீங்கப் பெற்று 'நின்றசீர் நெடுமாறனுயினன்' என்பது. இதனை ''எம்பிரான் சிவனே எல்லாப் பொருளுமென் றெழுது மேட்டில், தம்பிரான் அருளால் வேந்தன் றன்னைமுன் னேங்கப்பாட, அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னுஞ் சீர்த்திச், செம்பியன் செங்கோ லென்னத் தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே''என்ற பெரியபுராணச்செய்யுளாலும், ''எவர்க்குந் தீராத வடவையனல் வெப்பு முதுகூனும் திருத்தி யொருவாதுவென்று'' என்ற பகழிக்கூத்தர் வாக்காலும் அறியலாம். ஒப்ப - நிகராக. செயிர் - குற்றம். நின் கூன் - உன் வளைவை. பிறையாயிருக்கும் நிலை நோக்கி இங்ஙனம் கூறியது. இருவரும் கூனறத் திருவாய்மலர்ந்ததொப்ப இவனும் நின் கூனொழிப்பான் வாய்மலர்ந்தது என்க. இனி, இவன் வாய்மலர்ந் தால் கூனொழியுமோ என்ற ஆசங்கையைப் போக்குதற்கெழுந்தது ''கூன் செய்யுளினுமுற வைத்திலான்'' என்ற சொற்றொடர். ''அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு, முடிய நிற்பது கூனென மொழிப'', ''வஞ்சியினிறுதியுமாகு மதுவே'', ''அசைகூனாகு மென்மனார் புலவர்'' எனச் செய்யுளிற் கூன் வருதற்கு இன்னோரன்ன விதிகளிருப்பவும், இவன் தான் வாய்மலர்ந்த பெரிய புராணச் செய்யுட்களில் ஓரிடத்துங்கூடக் கூன்வாராமற் பாது காத்தவனுவன் என ஏதுக் காட்டியவாறு. கூனைத் தனிச்சொல் என்று வழங்குவாருமுளர். ஈண்டுக் கூறியவாற்றால், பிள்ளையவர்கள் பெரியபுராணத்தைத் துருவியாய்ந்து தெளிந்தவர் என்பது பெறப்படுகிறது. ஒரு நாவலொடு பெயர் பெறும்பொலம் - சாம்பு நதம். சம்பு - நாவல். பொலம்-பொன். 'பொன்னுக்குச் சாம்புநத மாதலின்'. அதனை விதந்தோதியது. அதனினும் அருமையுறப் போற்றவேண்டியது பெரியபுராணம் என்பது கருதியபடி. நட்பு

*மதி - நட்பினைப் பெரிதாக எண்ணுவாய்: அது நின் உயிர்க்கு உறுதிசெய்வதாகும், அழிவினவை நீக்கி யாறுய்ப்பதாகலின். என்னை உறுதியென்பதை மேற்செய்யுளிற் கூறுகிறார் பிள்ளையலர்கள். இனி, மதி-விளிவேற்றுமையெனினுமாம். இச்செய்யுள் தானோபாயத்திற் கூறியதாகும். அடுத்த செய்யுளும் இவ்வுபாயம் பற்றியதே.* (*69*)

9. தலைமயிர் பறித்துமரை யிற்பா யுடுத்துந்
தழைத்திரள்கை வைத்துமுழலுஞ்
சழக்கர்மத மாங்களங் கம்பரவ னீக்கியுயர்
சைவநிலை யெங்குமாக்கு
நிலையுடைய தம்பிரா னின்களங் கம்போக்கி
நிகழ்புனித மேயாக்குவா
னீடுமிதன் மேலுறுதி யென்னைகொ னினக்கின்னு
நேரளப் பரியசான்றோர்
கலைபலவு மோருருக் கொண்டனைய ரருணோக்கு
காதலார் நிற்கவுநினைக்
கடைக்கணித் தாடவா வென்றழைத் ததுபெருங்
கருணையே கங்கைபினுமிக்
கலைமரு புனல்வளக் குன்றைநக ராளியுட
னமபுலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

*(கு - ரை.) "மேவாத பாயுடீஇத் தலைமயிர் பறித்துழறன் மேய" என்றார் முன்னரும் (சப்பாணி - 3). தழைத்திரள் - மயிற்பீலிக் கற்றை. சமணர் மயிற்பீலி கைவைத்திருப்பரென் பதை "மீதுதம் பீலிகொண்டு தடவிட மேன்மேல் வெப்புத்தீதுற" என்ற சேக்கிழார் வாக்காலும் அறிக. உழலும் - வேதவேள்வியை நிந்தனை செய்து உழலும் என்றபடி. சழக்கர் - தீயவர்; ஈண்டுச் சமணர். களங்கம் பரவல் நீக்கி...ஆக்கும் தம்பிரான் நின் களங்கம் போக்கிப் புனிதமேயாக்குவான்: நினக்கு இன்னும் நீடுமிதன்மேல் உறுதி என்னை கொல்? என இயைத்துப் பொருள் கொள்க. புனிதம் - பரிசுத்தம். நேர் - ஒப்பு. சான்றோர், அனையர், காதலார் - ஒரு பொருண்மேனின்ற பலபெயர்கள். அருணோக்கு காதலார் - சேக்கிழாரின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாக விரும்புபவர். பெருங்கருணையே - அவனிடத்துக் குடிகொண்ட அருள் அடியேயன்றி நின்மாட்டொன்றுமில்லை; கங்கையையோதியது தெய்வநதி யாதலின்.* (*70*)

10. காதலொடு வாவென் றழைத்தவுடன் வந்திலான்
கருதியதெ னென்றுசற்றே
கறுக்கச் சிவத்தல்கூ டாதுநாண் பூண்டான்
களங்கத் திறத்தி னென்று
போதலுற யாம்புகன் றேமினி முனிந்திடிற்
போக்குவே றில்லையாகும்
புன்மையா னிவனென்றொர் கவிகூறின் முக்கட்
புராதனனு முனைவெறுப்பன்
வீதலுற லேயன்றி வேறொன்று முள்ளதுகொல்
விளைகுவ தனைத்துமோர்ந்து
மேயினேன் மேயினே னென்றடையி னலமுண்டு
மேலுலக வாழ்க்கையோர்மிக்
காதலுற விழைதருங் குன்றைநக ராளியுட
னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ யாடவாவே.

(கு - ரை.) 'அழைத்தவுடன் வந்திலான்; இவன் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றான்' என்று சற்றே கோபிக்கக் கூடாது: இவன் திறத்துக் களங்கமிருத்தலின், நாண்பூண்டான் என்று அவன் உளங்கொளுமாறு யாம் சொன்னோம். அதனால், இதுவரை சும்மாவிருந்தான். இனி அவன் முனிந்திடில் உனக்குப் போக்குவேறில்லை—என்பது முதலாக அம்புலியைநோக்கிச் சேக்கிழாரின் உழையர் கூறுவது போலே சொற்றது இது. 'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள'. திறத்தின் - உள்ள வகையினாலே. களங்கமுடையோர் நாணுதலியற்கை. போதலுற-செவிபோத லுற: உளங்கொள்ளும்வகை, போக்கு - கதி. புன்மையான் - அற்பன். ஓர் கவிகூறின் என்றது - கவிபாடுதல் இவர்க்குத் தண்ணீர் பட்டபாடு என்று குறித்தபடி. புராதனன் - பழைமையான வன். உம்மை, உயர்வுசிறப்பு. வீதல் - சாதல்; கெட்டொழிதல் கொல்,வினப் பொருளைத் தந்தது.மேயினேன் மேயினேன்-அடுக்கு, விரைவு பற்றியது: காலவழுவமைதியும் அவ்விரைவு பற்றியே; "வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி, இறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள வென்மனார் புலவர்" என்பது இலக்கணம். மேலுலக வாழ்க்கையோர் - தேவர். இதன்பின் சிறப்பும்மை தொக்கது. மிக்கு ஆதல் உற - மேன்மையடைய. மிக்காதல் - மேன்மை. விழைதரல் - விரும்புதல்; தா, துணைவினை. விழைதரும் குன்றை என்க. தேவலோகத்து வாழ்பவரும் மேன்மை பெறுதற்காகப்

பூவுலகத்துக் குன்றைநகரை விழைகின்றனர் என்று குன்றை நகர்ச் சிறப்புக் கிளந்தபடி; சேக்கிழார் பிறந்தமையால் குன்றை நகர்க்கு இத்தகைய சிறப்பு ஏற்பட்டது. இப்பாடல், தண்டோ பாயத்திற் கூறியதாகும். (71)

## 8. சிற்றிற் பருவம்.

1. வாருந் திருவீ தியினெருசார்
வண்ணித் திலங்கள் கொடுமுயன்றில்
வகுக்குந் திறத்தே யறிவுசெலு
மாண்பா னினது வரவுணரா
தாரு மிருக்கை யெழாதிருந்தே
மறிந்து தருக்கி யிருந்திலமா
லண்ண லஃதுட் கொண்டுபகை
யமையப் பாராட் டுதலழகோ
வோரும் புகழ்க்கற் பகத்தளிக
ளொருங்கு மொய்ப்ப தெவனென்றே
யும்பர் நடுங்கி நிலைகுலைய
வொருவேற் றுமையு முணர்வரிதாச்
சேரும் பொழிற்றண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) சிற்றிற் பருவம்—சிறுவீடு கட்டுஞ் சிறுபெண்கள் தாம் வருந்திக் கட்டிய சிற்றிலைச் சிதைக்கவருங் குழந்தையை அவ்வாறு செய்யவேண்டாவென்று சொல்லும் பருவத்தைக் கூறும் பகுதி. சிறுமை+இல்=சிற்றில்: சிறுமையெனனும் பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்னொற்று இரட்டிற்று. இத்தொடர்—சிற்றிலைச் சிதைத்தலெனனும் பொருளைத் தந்தது: சிறுபறை முதலியவற்றிலும் இங்ஙனமே காண்க. "சிறுபறை முழக்கலையும் சிற்றில் சிதைத்தலையும் சிறுதேருருட்டலையும் சிறுபறை சிற்றில் சிறுதேர் என்றுர், பெயரொடு தொழிற்கு ஒற்றுமையான்" என்ற இலக்கணவிளக்கவுரை இங்கு நோக்கத்தக்கது. சிற்றில் இரண்டா மாண்டிலும் சிறுபறை மூன்றுமாண்டிலும் நிகழும். [இனி, சிறுபறை கொட்டுதல் முன்னும் சிற்றில்சிதைத்தல் பின்னும் கூறப்படுவதுமுண்டு: இம்முறைக்கேற்ப, இரண்டாமாண்டிற் சிறுபறை கொட்டலும் மூன்றுமாண்டிற் சிற்றில் சிதைத்தலும் கூறப்படுமென்ப; "இரண்டாமாண்டிற் சிறுபறை கொட்டலும், மூன்றுமாண்டிற் சிற்றில் சிதைத்தலும்" என்பது பிங்கலந்தை].

வாரும் - நீண்ட: இனி, உயர்வு குறித்து வரும் முன்னிலைவினை முற்றுக்கொள்ளினுமாம். வள் நித்திலங்கள் - வளவிய முத்துக்கள். கொடு - கொண்டு: தொகுத்தல். திறத்தே - தொழிலில். ஆரும் - யாரும். எழாதிருந்தேம் - சிற்றலிழைக்கும் பெண்கள் கூறுவது இது. தருக்கி - அகங்கரித்து; செருக்கி. அண்ணல் - விளி. அழகோ - ஓகாரம், எதிர்மறை. இனி, ஓகாரம் வினாப்பொருள தெனக்கொண்டு, ஒரும் - ஆராய்ந்துபாரும் எனினுமாம். இனி, ஒரும் – அறிதற்கரிய எனினுமாம்; அசைநிலையென்பாருமுளர். அளிகள் - வண்டுகள். எவன் - என்ன காரணம்பற்றி? உம்பர் - மேலிடம்; மேலிடத்துள்ள தேவர்க்கு இடவாகுபெயர். சேரும் - தேவருலகையடையும். பொழிலிலுள்ள மரங்கள் தேவருலகு வரை ஓங்கியிருப்பவே, அம்மரங்களில் அளிகள் மொய்ப்ப, அதனைக் கற்பகமரத்திற்றான் அளிகள் மொய்க்கின்றன என்று மாறாகக்கருதி உம்பர் நடுங்கி நிலைகுலையும்படி வேற்றுமை தெரிவது அரிதாயிருக்கிறது என்றார். தேவதருக்களில் வண்டு மூசாவென்பர். தண்டகநாடு - செங்கீரைப்பருவத்து ஈற்றுச் செய்யுளுரையிற் காண்க. செருக்குதல் - மயங்குதல்: "மொய் வளஞ்செருக்கி' (பதிற்: 49-8). அருள் - பெற்றெடுத்த. (72)

2. ஒழிக்குந் திறத்தி னருகந்த
னுறையா நின்ற பாழிகொலவ்
வுறுவ ரமரும் பள்ளிகொன்மற்
றுள்ளா ராய பரசமயர்
பழிக்கும் படிவா ழிருக்கைகொல்யாம்
பாங்கிற் புரியிச் சிறுவீடு
பதத்திற் சிதைத்தால் வருகின்ற
பயன்புண் ணியமோ புகழ்கொல்லோ
சுழிக்குஞ் செலவிற் பாலிநதி
சுரந்து பாய மாலியானைத்
தொண்டை யெடுப்பு மறையும்விதந்
துவன்றி வளர்ந்து விளைசெந்நெல்
செழிக்கும் வயற்றண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) ஒழிக்கும் திறத்தின் - ஒழிக்கவேண்டியதாயிருக் கின்ற. அருகந்தன் - அருகதேவன். உறையாநின்ற - தங்கியிருக் கின்ற. பாழி - கோயில். உறுவர் - முனிவர்: "உறற்பால் நீக்க லுறுவர்க்கு மாகா" (நாலடி: 104). பள்ளி - முனிவருறைவிடம்;

ஆசிரமம்: ''மாதவி மாதர் பள்ளியு ளடைந்ததும்'' (மணி. 18,8) மற்றுள்ளாராய பரசமயர் = பௌத்தர் போன்ருர். பழிக்கும்படி - நம்மால் பழிக்கும்படி. பாங்கு - அழகு. இச்சிறுவீடு பாழி கொல், பள்ளிகொல், இருக்கைகொல் எனக்கூட்டுக. பதம் - பாதம். வருகின்ற - விளையக்கூடிய. புண்ணியமோ புகழ் கொல்லோ - இரண்டுமில்லையென்றபடி. ஈண்டு, பிள்ளையவர் களின் சைவப்பெரும்பற்றும், பரசமயவெறுப்பும் தொனிக் கின்றன. செலவு - போக்கு, ஓட்டம். பாய விளைசெந்நெல் என மேலியையும். மால் - பெரிய. மால் + யானை = மாலியானை: ''தன்னொழிமெய்ம்முன் யவ்வரினிகரந்துன்னும்''. தொண்டை - யானைத்துதிக்கை என்றது பிங்கலந்தை. எடுப்பு - தூக்குகை. யானை தூக்கிய துதிக்கையும் மறையும்படி யோங்கி நெருங்கி வளர்ந்துள்ளது செந்நெற்பயிர் என்று மிக்கவளந் தெரித்தபடி.

(73)

3. வெய்ய வமையும் பரசமய
விருப்பஞ் சுமந்த திருவில்லார்
வினையைச் சிதைத்தி யவர்மாயை
வீயச் சிதைத்தி யாணவமு
நையச் சிதைத்தி யிவைசிதைத்தா
ஞடும் புகழ்புண ணியமிரண்டு
நாளு நினக்கு மேன்மேலா
நகையா மெங்கள் செயல்சிதைத்தல்
வையம் வியக்குஞ் செங்கரும்பும்
வாழைக் குலையும் பசுங்கமுகும்
வயங்கு மிளநீ ரிலாங்கலியு
மகவா னவைக்கோ ரலங்காரஞ்
செய்ய வுயர்தண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) வெய்ய - கொடுமையுடையவனாய்: வினையால லையும் பெயர். சுமந்த-இச்சொல்லாற்றலால், பிள்ளையவர்கட்குப் பரசமயவிருப்பமே ஒரு சுமையாகத்தோற்றுகிறது. திருவில்லார் - பாக்கியஹீனர். ஈண்டு, திரு என்றது - நிரதிசயவின்பமாகிய திரு. வினை - கன்மம். சிதைத்தி - அழிக்கின்ருய்; முன்னிலை வினைமுற்று. ஆணவமும் - கன்மம் மாயை இரண்டுக்கும் ஏதுவாகி யுடன் தோன்றிய ஆணவமலத்தையும்; உம்மை - அழித்ததற்கருமை

காட்டியது. ஆதலினால், 'நையச் சிதைத்தி' என்றார். நைய - வேரோடுங்கழன்று வலிய தன் சத்தி கெடுமாறு. கீழ்ச் செய்யுளில், 'புண்ணியமோ புகழ்கொல்லோ?' என வினையவர் இச்செய்யுளில் அவ்விரண்டும் உண்டாம்படியைத் தெரிவிக்கின்றார். எங்கள் செயல் - எங்கள் சிற்றில். செயல் - செயலாலுண்டாய சிற்றிலுக்குத் தொழிலாகுபெயர். நகையாம் - ஏளனத்திற்கிடமாகும். வையம் - வையத்துள்ளார்க்கு இடவாகுபெயர். இலாங்கலி - தென்னை. மகவான் – இந்திரன்; மகம் - யாகம். நூறு அசுவமேதயாகங்களைச் செய்து தேவராஜபதவி பெறுதலால், இந்திரனுக்கு இப்பெயர். அவை - சபை. இந்திரசபை 'சுதன்மை' எனப்பெயர் பெறும். வையத்துள்ள கரும்பும் வாழையும் கமுகும் வானிலுள்ள தேவருலகு வரை உயர்ந்து அணிசெய்கின்றன என்று தொடர்புயர்வுநவிற்சியணி பட ஓர் அலங்காரஞ்செய்தனர் பிள்ளையவர்களும். (74)

4. பொருந்து நிலத்தே ராலுழுதல்
புகழாம் விதியு மதுவாகும்
பொருந்தா நிலங்கா லாலுழுதல்
புகன்ற விரண்டு ளொன்றுமோ
வருந்து மரிய திருவடியு
மண்டு புழுதி யடையுநறு
மலர்தோய் பவைமற் றிதுதோய்தல்
வழக்கோ கண்டார் சகிப்பாரோ
முருந்து முறுவன் மடமாதர்
முயங்கும் பொழில்வாய்க் கருஞ்சுரும்பர்
முரலா நின்ற பண்கேட்டு
முகந்து கொடுக்கும் பொற்காசிற்
செருந்து மலர்தண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) பொருந்து - உனக்கு ஏற்ற. விதி - கடமை, நெறி, நூற்கொள்கை. பொருந்தா நிலம் - மணல்நிலம். புகன்ற இரண்டு- புகழ் விதி என்று கீழ்க்கூறிய இரண்டு. ஒன்றுமோ - ஒன்றிலுஞ் சேராது. விளைநிலத்து ஏராலுழுதல் வேளாண்மரபினராய நுமக்கு விதியுமாகும் புகழுமாகும்; அதற்கு மாறாக விளைதற்குப் பொருந்தாத மணல்நிலத்தில் காலாலுழுதல் புகழுமாகாது, விதிக்கும் மாறானது. மற்றும், அரிய நும் திருவடியும் வருந்தும்; புழுதியும்

நிரம்பப் படிந்து நிற்கும்; இவைநிற்ப, நறுமலர்தோயும் திருவடிகள் இப்புழுதியில் தோய்தல் முறையோ, பார்ப்பவர்தாம் சகிப்பாரோ என்கிறார். திருவடி நறுமலர் தோய்தல்- அன்பர் பூக்களைக் கொண்டு அருச்சித்தலால். மற்று - வினைமாற்று. வழக்கோ - நீதியோ, நெறியோ. முருந்து - மயிலிறகினடி. முறுவல் - பல். முருந்தினைப் பெண்களின் பற்களுக்கு உவமை குறித்தலை, ''முருந்தேரிளநகை காணாய்'' (சிலப்: 12) என்பதாலும் அறிக. முயங்கும்- தங்கும்; அணையும். சுரும்பர் - வண்டு: மென்றொடர்க்குற்றிய லுகரம் அர் போலிபெற்றது. முரலுதல் - ஒலித்தல், இசைத்தல். காசின், இன் - ஒப்புப்பொருளது. செருந்து - செருந்தி. இதன் மலர் பொன்னிறமுடையதென்பதை ''பொன்னலர்ந்த நறுஞ் செருந்திப்பொழில்'' (திருநெடுந்: 25), 'செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே'' (சம்ப: தேவாரம்) என்பனவற்றாலறியலாம். தண்டகநாடு, சுரும்பர் பண்பாட ,அது கேட்டுச் செருந்திப்பூவைப் பொற்காசுபோலே கொடுக்கின்றது என்றார். பண் பாடும் பாணர்க்கு வள்ளல்கள் பரிசிலீதல் மரபு. தண்டகநாட்டு வள்ளன்மை தெரிவித்தபடி. (75)

5\. உற்றார் சகியார் புனலாட்ட
லூரியார் பலரு மடிக்கடியிவ்
வொல்லாப் புழுதி தோய்வெவனென்
றுரைப்பார் தவஞ்செய் தருமருந்திற்
பெற்றார் செவியோ ரினும்பதைப்பார்
பிறங்கக் காணி லென்படுவார்
பேசா வருமை பாராட்டிப்
பேணி யெடுப்பா ரையுஞ்சினப்பார்
கற்று ரரிய நூல்பலவுங்
கண்டார் விளங்க நூலினுரை
கரைந்தார் வரைந்து சிவளடியிற்
கலந்தார் கடிந்து பரசமயஞ்
செற்றார் செறிதண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) உற்றார் - உன்னிடத்தில் அன்புடையர். புனலாட்டலுரியார் - உன்னை நீராட்டுபவர். ஒல்லா - (உன் சொரூபத்துக்குச்) சேராத. தோய்வு - படிதல். எவன் - வினாவினைக் குறிப்புமுற்று. அருமருந்தின் - தேவாமிருதம்போலே. செவியோர்தல் - கேட்டல். பிறங்க - உன்னை நேரே புழுதியோடு விளங்க.

பேசா அருமை - பேசுதற்கரிய பெருமை. இனி, அருமை பேசா என முன்பின் மாற்றி, அருமைபேசி எனப் பொருள் காணினுமாம். எடுப்பாரையும் - ஐ, சாரியை. எடுப்பாரும் சினப்பார்-உன்னை அருமைபேசிப் பாராட்டிப் பேணித் தூக்கிவைத்துக் கொள்பவரும் கோபிப்பர்: உம்மை, சினவாதவரும் சினப்பரென்றபடி. நூல் கண்டார் - நூல்களைத் தாங்களே பாடியவர். உரை கரைந்தார் —உரை சொன்னவர்: கரைதல் - சொல்லுதல்: 'அறங்கரை நாவின்' (தொல்: பாயிரம்). வரைந்து - மற்றைப் பொருள்களை விலக்கி. வரைதல் - விலக்குதல். பரசமயஞ் கடிந்து செற்றார் - சைவமல்லாப் புறச்சமயங்களைக் கோபித்தழித்தவர். கற்றார், கண்டார், கரைந்தார், கலந்தார், செற்றார் செறி தண்டகநாடு என இயையும். இதனால், தண்டகநாட்டின் கல்விமேம்பாடு தெரிவித்தபடி. தண்டகநாடாகிய தொண்டைநாடு, அந்தகக்கவி வீரராகவ முதலியார், இராமசந்திர கவிராயர்,படிக்காசுப்புலவர். தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், கந்தப்பையர், விசாகப் பெருமாளையர், முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார், நல்லாப் பிள்ளை, அநாதாரியப்பர், வீராசாமி செட்டியார் போன்ற கற்றோர்களையும், திருவள்ளுவர், கச்சியப்ப சிவாசாரியர், அருணகிரிநாதர், குணவீர பண்டிதர், பவணந்தி போன்ற நூலாசிரியர்களையும், பரிமேலழகர், சரவணப்பெருமாளையர் போன்ற உரையாசிரியர்களையும், ஐயடிகள் காடவர்கோன், கண்ணப்பர், கலியநாயனார், திருக்குறிப்புத் தொண்டர், மூர்க்க நாயனார், வாயிலார், கூற்றுவநாயனார், பூசலார், சிவநேசர், பூம்பாவை போன்ற சிவனடியிற் கலந்தார்களையும், சிவப் பிரகாசர், அப்பைய தீட்சிதர் போன்ற பரசமயஞ்செற்றவர் களையும் கொண்டிலங்கியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. (76)

6. தாங்கும் வளவ னனபாயன்
றன்கண் மணியா யவனமைச்சர்
தங்கள் சூளா மணியாயுத்
தமச்சோ ழப்பல் லவனெனும்பே
ரோங்கும் படிகொள் விண்மணியா
யுவக்கு மடியார் சரித்திரமுற்
றுரைசெய் தருள்சிந் தாமணியா
யுயர்வுபூணி னிளம்பருவ
வாங்கும் பிறைநன் னுதலார்செய்
வண்டல் சிதைக்க வேண்டுவதோ
வாழைக் குருத்து மதிநடுப்போய்
மாரன் குடைக்கோர் காம்பாகித்

தேங்குந் திருத்தண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) தாங்கும் - உலகந்தாங்கும். வளவன் - சோழன். கண் மணி - கண்ணிற் கருமணி. சூளாமணி - முடிமணி. அமைச்சர்க்குள் முதல்வனாய் என்றபடி. உத்தம சோழப்பல்லவன் என்பது சேக்கிழார்க்கு அநபாயன் வழங்கிய பட்டப்பெயர்; "அருண் மொழித்தேவர்க்குத் தத்துபரி வளவனுந்தன் செங்கோலோச்சுந் தலைமையளித் தவர்தமக்குத் தனது பேரும் உத்தமச் சோழப் பல்லவன்தான் என்றும் உயர்பட்டங் கொடுத்திட" என்றார் உமாபதிசிவமும். படி - பூமி. விண்மணி - சூரியன். பரசமய திமிரபானுவானதால் 'படிகொள் விண்மணியாய்' என்றது. சேக்கிழாரை 'உவக்கும் அடியார் சரித்திரமுற்றும் உரைசெய்தருள் சிந்தாமணியாய்' என்று உயர்த்தியது, அமண்முருட்டுக் கையர் பொய்யே கட்டிநடத்திய சிந்தாமணி போலன்று இவர் செய்தருளிய நூல் என்று தொனித்தற்கு. சிந்தாமணி - நினைத்ததை நினைத்தபடி யளிக்கவல்ல தெய்வமணி. பூணின் - பூண்டால். கண்மணியாய், சூளாமணியாய், படிகொள் விண்மணியாய், சிந்தாமணியாய், உயர்வு பூணின் சிதைக்க வேண்டுவதோ என முடிக்க. வாங்கும் - வளைந்த. வண்டல் - வண்டலினிழைத்த சிற்றில். நடு - அகடு, வயிறு. மாரன் - மன்மதன். சந்திரனை மாரனுக்குக் குடையென்பது மரபு. தேங்கும் - அமையும். (77)

7. ஏத மகல வளவன்முன
மேற்று குடிக ளொருநாற்பத்
தெண்ணு யிரத்து ளொருகுடியென்
றியம்பே மபய னமாத்தியருட்
போத மருவு மொருவனெனப்
புகலேம் புராணஞ் செய்தாருட்
பொலியு மொருவ னெனநவிலேம்
புகலின் மூவ ருளுமொருவ
னாத மகன்ற பரமனென
நவிலி னடைவ தடையுமென
நன்று தெரிந்தே மெங்கள்செய
னயவா திருக்குந் திறமென்னே

**சீத வளத்தண் டகநாடா**
**சிறியேஞ் சிற்றில் சிதையேலே**
**செல்வஞ் செருக்கு குன்றையருட்**
**செல்வா சிற்றில் சிதையேலே.**

(கு - ரை.) ஏதம் – குற்றம். வளவன் - சோழன்: ஈண்டு கரிகாலனைக் காட்டிற்று. கரிகாலன் குடியேற்றிய விவரம்: கரிகாற்சோழன் சிந்துமேதன் என்னும் வேடுவனால் காஞ்சிநகருள்ள இடத்தைத் தெரிந்து மதிலமைத்துக் குடியேற்றிப் பெருநகராக்கி வளம்பெற ஆண்டான் என்றது காஞ்சிப்புராணம். அங்ஙன், சோழவரசனால் உழுதொழில் புரியுமாறு தெரிந்து பல இடங்களி லிருந்து தொண்டைமண்டலத்துக் குடியேற்றப்பெற்ற கூடல் கிழான் புரிசைகிழான் முதலிய நாற்பத்தெண்ணாயிரங் குடிகளுள் சேக்கிழார் குடியுமொன்று. இதனை "நாடெங்கும் சோழன்முனந் தெரிந்தே ஏற்றும் நற்குடிநாற் பத்தெண்ணாயிரத்து வந்த, கூடல்கிழான் புரிசைகிழான் குலவுசீர்வெண் குளப்பாக்கி ழான் வரிசைக் குளத்து ழான்முன், தேடுபுக ழாரிவருஞ் சிறந்து வாழச் சேக்கிழார் குடியிலிந்தத் தேசம் உய்யப், பாடல்புரி அருண் மொழித்தே வரும்பி னந்தம் பாலரு வாயரும்வந் துதித்து வாழ்ந் தார்" என்று உமாபதிசிவாசாரியர் கூறுமாற்றால் அறியலாம். ஒரு குடியென்று இயம்பேம் என்றது - தொண்ணூறோடு துவரம் பருப்பு என்பதுபோலே இகழ்ச்சி தோன்ற எண்ணோம் என்றபடி. அபயன் - அநபாயன். அமாத்தியர் - பக்கத்திலிருப்பவர்; அமைச் சர். 'உழையிருந்தான் கூறல்கடன்' (குறள், 638) என்றவிடத்துப் பரிமேலழகர் 'உழையிருந்தான்' எனப் பெயர் கொடுத்தார். 'அமாத்யர்' என்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அது வாகலின் என்று உரைத்தது நோக்குக. போதம் - அறிவு. ஒருவன் - ஒருத்தன் இவன். 'அமைச்சராயிரவருள் இவனுமொருவன்' என்பது போலப் புகலேம் என்றபடி. அங்ஙனமே, புராணஞ் செய்தார் பல்லோருள் இவனுமொருவன் என்பதுபோல நவிலேம் என்றபடி. எனவே, அவ்வவ்வகையினரோடு ஒருசேர வைத் தெண்ணப்படுந் தன்மையரல்லராய் ஒப்பிறையும் பெறலரிய வொருவராயிலங்குபவரென வறிந்து போற்றுவோம் என்கின் றனர். புகலின் - அப்படி இகழ்ச்சி தொனிக்க 'ஒரு குடி' 'ஒருவன்' எனச் சொல்வோமாயின் என்றபடி. புகலின் அடைவது அடையும் என இயையும். மூவருளும் ஒருவன் நாதமகன்ற பரமன் என நவிலின், அது சிவநிந்தையாகும். அந்தச் சிவநிந்தையால் அடைவது கோர நரகம். எனவே, நாததத்துவத்தைக்கடந்த துரியசிவனை மும்மூர்த்திகளுளொருவனாக வைத்துச் சரிசமமாகப் பாவித்துக் கூறினால், சிவநிந்தையாலாகிய கோரநரகம் கிட்டும்

என்பது சித்தாந்தமாயிற்று. அந்தக் கொடியநரகமே கிடைக்கும் சேக்கிழாளுகிய உன்னையும் குடியினரமைச்சர் புராணஞ்செய் தோருள் ஒருவனுக வைத்துப் பாவித்துக் கூறிஞலென்பது நன்று தெரிந்தேம் என்கின்றனர் சிற்றிலிழைக்கும் சிறுமிகள். இதனுல், சேக்கிழாரைச் சிவனின் அமிசமாகவே கருதியமையும் பெறப்படு கிறது. மூவர் - அயன், அரி, அரன்: தொகைக்குறிப்பு. நாதம் - நாததத்துவம்: மும்மூர்த்திகட்கும் அதீதமான சிவபெருமான் துரியசிவன் எனப்படுவன். இவ்விடத்து, "மூவரென் றேயெம் பிராஞெடு மெண்ணி விண்ணுண்டு மண்மேல், தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந்திரிதர்வரே" என்ற திருவாசகத் திருச்சதகத் தையும் (4) "மூவா முதலா முதல்வனையு மூவுலகிற், சாவார் பிறப்பார்க டங்களையும்—தேவாக, ஒக்க நினைவாருக் கல்லவோ வோரேழு, மிக்க நரகம் விதித்ததுகாண்" என்ற இரட்டையர் கூற்றையும் நினைக. இனி, 'ஒரு குடி' 'ஒருவன்' என்ற சொற்களில் ஒப்பற்றகுடி, ஒப்பற்றவன் என்ற சீரிய பொருளும் தொனிப்பது போல உட்பொதிய வைத்துப் பாடியுள்ள திறம் பாராட்டற் குரித்து. செயல் - சிற்றில்; ஆகுபெயர். நயவாதிருத்தல் - பாராட்ட வேண்டியிருப்ப விரும்புதலுஞ் செய்யாதிருத்தல். சீதம் - குளிர்ச்சி. (78)

8. பொன்னஞ் சிலம்பு புலம்படிமண்
பொருந்தித் துளையும் விழைவடையிற்
பொலியும் பற்ப லுபங்கடதம்
புகறல் கேட்டு நீரொருவு
முன்னங் கொள்சிற் சிலர்நுதலின்
முயங்கிப் படிந்த மண்டோய்ந்து
முருங்கத் துளைதல் கூடிடினம்
மோக மவர்நீத் துய்வாரே
கன்னங் கரிய கடாப்பாய்ந்து
காமர் பொய்கை நீர்கலக்கல்
கழிந்தோட் டெடுக்க வாலெழுந்து
கடுக மோதப் பலவுதிருந்
தென்னம் பழத்தண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) இப்பாடலில், பிள்ளையவர்கள் வைணவர்களுக்கு உய்யும் வழி கூறுகிறுர். பிள்ளையவர்களின் சமயப்பற்றின் உச்ச நிலை தெரிப்பது இப்பாடல். பொன்னஞ் சிலம்பு புலம்பும் அடி - பொன்மயமான சிலம்பு ஒலிக்கும் [சிறு] பாதம். ஆண் குழந்தை

களும் சிலம்பணிவதை "சிறு சிலம்படியிற் காணேன்" (திருவிளை யாடற்புராணம்: மாமனுக)என்ற பரஞ்சோதிமுனிவர் திருவாக்கா லறியலாம். துளைதல் - அழுந்திக்கிடத்தல். விழைவு - விருப்பம். 'அடையின்' என்றமையால், அடைதல் கூடாது என்பது பெற வைத்தார்; அங்ஙனின்றி, ஒருகால் விழைவு இருக்குமாயின், "சிற்சிலர் நுதலின்...படிந்த மண் தோய்ந்து...துளைதல்" என மேலியையும். "பொலியும்......சிற்சிலர்" என்றது நெற்றியில் திருமண்காப்புத் தரிக்கும் வைணவர்களை. பொலியும் - அருத் தத்தால் (பொருளால்) பொலியும். பற்பல் உபநிடதம் - நான்கு வேதங்களுக்கு ஆயிரத்து நூற்றெண்பது உபநிடதங்களிருப் பினும் அதிசாரமாயும் இரகசியமாயுமுள்ளன நூற்றுநாற்பது உப நிடதங்கள் என்பர், இவற்றுள்ளே அதர்வசிகோபநிடதம், அதர் வசிரோபநிடதம், காலாக்கினிருத்திரோபநிடதம், கைவல்லியோப நிடதம், சுவேதாச்சுவதரோபநிடதம், என்ற ஐந்து உபநிடதங்கள் பஞ்சருத்திரம் எனப்படும். இவைகள் புகறல் - திருநீறு தரித்தலின் பெருமையும் இன்றியமையாமையும், 'வேதத்திலுள்ளது நீறு' என்றூர் புகலிநிலாவுபூசுரன் ஞானசம்பந்தன். வேதம் வகுத்த வியாதனைப்பற்றி வில்லிபுத்தூரார் கூறும்போது "தொழுது நெற்றியில் விபூதியா லன்னைதன் றுணையடித் துகணீக்கி" என்றூர். (ஆதி: சம்பவ: 10). நீறு ஒருவு முன்னம் - விபூதியை நீக்குங் கருத்து. ஒருவுதல் - நீக்குதல். முன்னம் - கருத்து, மனம். சிற் சிலர் என்றது - வைணவர்களை, மேல்வருந் தொடர் நோக்கி. நுதலின் - நெற்றியில், முயங்கிப் படிந்த - பொருந்திப் படிந்துள்ள, மண் - திருமண்காப்பில், தோய்ந்து - உன் திருவடிகள் தோயப் பெற்று, முருங்க - உருவமாறும்படி, [ஊர்த்துவ புண்டரம் திர்யக் புண்டரமாகும்படி,] துளைதல் - அழுந்தித் திளைப்பாயாக. துளைதல்- தல்லீற்று வியங்கோள்முற்று, 'மாசிலனுதல்' என்ற விடத்துப் போல. கூடிடின் - அங்ஙன் திளைத்துத் திர்யக் புண்டரமாம்படி செய்தல் கைகூடின், அம் மோகம் - அந்த ஊர்த்துவ புண்டரத் துள்ள மோகம், [திருமண் தரித்தலிலுள்ள மயக்கவாசை], நீத்து - நீங்கப்பெற்று; உய்வார்-ஈடேறுவர். உய்வாரே, ஏகாரம் - தேற்றப்பொருளது.[புண்டரம்-நெற்றிக்குறி. ஊர்த்துவபுண்டரம்- மேனேக்கியிடுந் திருமண். அதனையுடையவர் வைணவர். திர்யக் புண்டரம் - குறுக்காக இடும் விபூதி] ஈண்டு, "உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக் கேட்டு, மண்மாசு படப்பூசும் வடிவுடைய ரகன்றதற்பின் மனையில் வைகும், பெண்மாசு கழியவொரு சிவனடியார் தமைக்காணப் பெரும வின்றெ‌ன், கண்மாசு படுவதெனக் கனிந்தொழுகு தலையன்பாற் கவலை கூர்வாள்" என்ற திருவிளையாடற்புராணச் செய்யுளை நினைக.

(விருத்த குமாரபாலரான படலம். செ. 16). 'கன்னங்கரிய' என்றது - மிகு கறுப்பின் குறிப்பாய் வழங்கிவருவதொரு சொல் விழுக்காடு. நீர் கலக்கல் - கலக்கிய நீர் என மாறுக. கழிந்து - கரைகடந்து. ஓட்டெடுக்க - விரைந்தோட. "ஒப்ப வனைவரு மோட்டெடுத்தாரே" என்றது திருமந்திரம். (முதற்றந்திரம்: 42) வரால் முட்டத் தென்னம்பழம் பலவுதிரும் தண்டகநாடு என்றதால், வரால்மீனின் கொழுமையும், தென்னம்பழத்தின் செறிவும் காட்டித் தண்டக நாட்டின் பெருவளந் தெரித்தபடி. (79)

9. மாறு படுமன் னவரெனினும்
வளவன் கழற்கா ஞெழினவர்வாழ்
மணிமா ளிகைகண் மிக்குயரு
மாறு விடுப்பாய் மறையோர்முற்
கூறு படுநம் பரனடியார்
குறிப்புள் ளுணர்ந்து நெடுவானுங்
குறுக நிமிர்மா டங்கள்பல
குயிற்றிக் கொடுத்துக் குடியமைப்பாய
வேறு படுமா றியாம்வகுத்த
வீட்டை விடுத்துச் செலின்வரலென்
வேழக் கரும்பின் சாறோடி
விரிந்த கரம்பும் பாய்ந்துகுழை
சேறு படுதண் டகநாடா
சிறுயேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) மாறுபடு மன்னவர் - பகையரசர். வளவன் - அநபாயன். தொழின் - தொழுதால்; கீழ்ப்படிந்தால். விடுப்பாய் என்றது முதலமைச்சாதனைநோக்கி. முற் கூறு படும் மறையோர் நம்பரனடியார் என்க. முற் கூறு படும் - முதன்மையராக வைத்துக் கூறப்படும். கூறு - கூறுதல்: முதனிலைத் தொழிற்பெயர். இனி, மறையோர் முதலாகப் பிரிவுபட்டுள்ள அடியார் என்று கூறுதலு முண்டு. பரன் - சிவபிரான். குறிப்பு - மனக்கருத்து, குயிற்றுதல் - அமைத்தல். வேறுபடுமாறு வகுத்தவீடு - மிக்குயராதும் குடியமைக்காதும் செய்துள்ள சிற்றில். வரல் என்? - உனக்கு என்ன நஷ்டம் வருகின்றது? ஒன்றுமில்லையே யென்றபடி, என் - வினாவினைக்குறிப்புமுற்று. வேழக்கரும்பு - இருபெயரொட்டு. கரம்பு - சாகுபடி செய்யாத நிலம். குழைசேறு - வினைத்தொகை. (80)

0. அலைக்கும் புனல்சூ ழம்பலத்தி
லாடும் பெருமா னருள்பெற்று
லவன்செய் தொழிலோ ரைந்துண்டு
வமைந்த தொழிலோ மேற்கோட

ணிலைக்குங் கடையென் றொழித்தனையோ
நினையா நிற்கு மனுக்கிரக
நீயே யதுசெய் யாவிடினெங்
நிரப்பு நீக்கு பவரியாரே
மலைக்கும் பிறவிப் பிணிமருந்தே
வாழ்த்து வார்சிந் தாமணியே
வயங்குஞ் சைவப் பெருவாழ்வே
மாறாக் கருணை மாக்கடலே
சிலைக்குந் தழிழ்த்தண் டகநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட்
செல்வா சிற்றில் சிதையேலே.

(கு - ரை.) தில்லையம்பலவன் செய்தொழில் ஐந்தாவன - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். "ஆக்கி யளித்துலகை நீக்கி மறைத்தருளி, ஐந்தொழில் புரிந்திடும் அம்பலவாணரே" என்று பாடுவதும் ஓர்க. ஐந்துள் + நடு = ஐந்துணடு: "ணள முண்டணவும் ஆகும் தநக்களாயுங் காலே" என்றது நன்னூல். (மெய்யிற்: 34) நடு அமைந்த தொழில் - அழித்தல். நடு - இடைப் பட்டது. அழித்தல் தொழிலோ மேற்கோடல் - ஓகாரம் தகுதி யின்மை காட்டுவது. இனி, மேற்கோடல் நடு அமைந்த தொழிலோ- நீர் மேற்கொண்ட தொழில் நடுவொடு பட்டதோ? எனினுமாம். நடு-நீதி. எனவே, நடு இரட்டுறமொழிதல். நிலைக்கும் கடை என்று - நம் ஸ்வரூபத்துக்குஞ் சேராது கடைப்பட்டதென வெண்ணி, நினையா நிற்கும் - எல்லாராலும் பிரார்த்திக்கப்படும். அனுக்கிரகம் - அருளுதலை, ஒழித்தனையோ - கைவிட்டனையோ? ஈண்டு, 'இரக்கமொன்றிலீர் எம்பெருமானீரே" என்ற அப்பர் வாக்கு ஒப்பு நோக்குக. அனுக்கிரகத்தைக் கடையென்று ஒழித் தனையோ? என்றவிடத்துக் 'கடை' யென்பது - ஈற்றிலுள்ளது, இகழப்படுவது என இரட்டுறமொழிதலாயிற்று. நீயே - சரணி யணுகிய நீயே. அது அனுக்கிரகம். நிரப்பு - வறுமை: வறுமை என்றது, திக்கற்ற தன்மையை. மலைதல் - வருத்துதல். சிலைக்கும் - ஒலிக்கின்ற. தண்டகநாட்டுப் பல்வகையொலிகள் எழுகின்றன என வளச்சிறப்புத் தெரிவித்தபடி. அனுக்கிரகம் ஒழித்தனையோ? என வினவிப் பின்னர் "மாறாக் கருணை மாக்கடலே" என்றது முரணுதேோவெனின், அற்றன்று, சொல்லுவார் குறிப்பு நோக்க- மருந்தே, மணியே, வாழ்வே, கடலே என்றது உருவகம். (81)

## 9. சிறுபறைப் பருவம்

1. ஆயபர சமயக் கருங்கடா யானைக்
கரிக்குருளை வாய்முழக்கு
மரும்புகழ்ச் சைவப் பசும்பயிர்க் குலகுரூ
ழாழியுண் புயன்முழக்கும்
பாயமிடி யாளருக் களவில்பொன் செறிசெய்த
பண்டார வாய்திறந்து
பலவுங் கவர்ந்திடுமி னெனஜெறித் திடுகொடைப்
பயன்முரசி னெழுமுழக்கு
நேயமிகு வளவர்பெரு மாற்காக வப்பாரி
னேர்ந்ததன் படையெழுப்பு
நிலாம்பணை முழக்குமா கக்குணின் மலர்க்கைகொடு
நிகழ்பாலி வளனுணர்ந்து
தேயமுழு தும்பரவு துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

(கு – ரை.) *சிறுபறைப் பருவம்:—பிரபந்தத் தலைவனை குழந்தையைச் சிறுபறை கொட்டும்படி வேண்டிக்கொள்ளும் பருவத்தைக் கூறும் பகுதி. இது, மூன்றுமாண்டில் நிகழும். இப்பாடலில், சேக்கிழார் கொட்டும் சிறுபறை முழக்கினல் ஆகும் பிற முழக்கங்கள் கூறப்படுகின்றன. கடாம் - மதநீர். செருக்குற்ற பிறமதத்துக்கு மதயானை நல்லுவமை. யானைக்கு - நான்கனுருபு பகைப்பொருளது. அரிக்குருளை - சிங்கக்குட்டி. குருளை கூறியது சேக்கிழாரின் குழவிப்பருவத்துக்கேற்ப. சிங்கத்தின் கர்ச்சனைகேட்டே யானையொடுங்கும் என்பர். பரசமயகோளரி என்றபடி. சைவத்துக்கு அரும்புகழாவது - வேதோபநிடத ஆகமப்பிரமாணங்களால் சித்தாந்தமாக்கப்பட்டமை. பசும் பயிர் - பசுமை, ஈண்டு, அழகின் மேலது. ஆழி - கடல். உண்புயல் - வினைத்தொகை. உண்ணுதல் - பருகுதல். ''பாடிமிழ் பனிக்கடல் பருகி'' என்றது முல்லைப்பாட்டு. புயன்முழக்கு - மேகமுழக்கம். பாய - பரவியுள்ள. மிடியாளர். தரித்திரர். அளவுஇல் - அளவில்லாத. செறிசெய்த - செறித்து வைத்திருக்கிற. பண்டாரம் - கருவூலம், பொக்கிஷம். கவர்ந்திடுமின் - பெற்றுக்கொண்மின். எனல் - தொழிற்பெயர். கொடைப் பயன் முரசு - கொடைப்பயனைத் தெரிவிக்கும் முரசு : கொடைமுரசு எனப்படும் இது. ''வம்மி னெனப் புலவோரை யழைத்திடு வண்கொடை முரசம்'' என்றார் குமரகுருபரரும்.*

பெருமாற்கு - நான்கனுருபு பொருட்டுப் பொருளது. ஆகவம் - போர். ஆகவப்பாரில் - போர்க்களத்தில். நேர்ந்த - [போர் செய்தற்குப்] பொருந்திய. நிலாம் - நிலாவும்: செய்யுமெனைச் சத்து ஈற்றுயிர்மெய் சென்றது. பணை - முரசு: இது, வெற்றி முரசு. ஆக- உண்டாக, உவமவாசகமுமாம். வாய்முழக்கும் புயன்முழக்கும் முரசினெழு முழக்கும் பணைமுழக்கும் ஆகச் சிறுபறை முழக்கியருள் என இயையும். குணில் - குறுந்தடி. மலர்க்கை - உவமைத் தொகை, கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். மலர்கை கொடு முழக்கியருள் என இயைக்க. நிகழ்பாலி - [இடையறுது] செல்லும் பாலாறு: நிகழ்தல் - செல்லுதல். தேயம் - தேயத்திலுள்ளார்க்கு, இடவாகு பெயர். பரவும் - கொண்டாடுகின்ற. துண்டீர நாடு - தொண்டை நாடு. துண்டீரன் என்ற மன்னன் தொண்டை நாட்டின் தலைநகராய காஞ்சியிலிருந்து ஆண்டனனாதலின், இந்நாடு துண்டீரநாடு எனப்பட்டது. "துண்டீரனும் ...அரசு செய் தளித்ததந் நகரம்" (திருநகரப்:87), "காஞ்சி துண்டீர புரமெனப் புகலநின்றதுவே" (திருநகரப்:73) என்றது கந்த புராணம். தென்றலங் கன்று - மந்தகதியாக வருகிற இளைய தென்றற்காற்று. "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" என்னுஞ் சூத்திரத்துக் 'கொள்ளவும்' என்னும் உம்மையால், 'தென்றலங்கன்று' என்றார். மன்றம் - வெளியிடம்: ஊருக்கு நடுவாயுள்ள மரத்தடிப் பொதுவிடம் எனினுமாம். (82)

2. ஓங்குமுனி வரரிருவர் கைகுவித் தரமுழக்
குறவெழுப் பிக்களிக்க
வுலகுமுழு தீன்றசிவ காமவல் லித்தா
யுலோசனம் விடுத்துநிற்கப்
பாங்குபுனை செம்பொனம் பலநடன நவிலும்
பரஞ்சோதி மதுவொழுக்கும்
பச்சைத் துழாயண்ணன் மத்தள முழக்கினும்
பரவுபே ருவகைபூப்ப
வாங்குதிரை யாற்பாலி வீசுசெம் மணியும்வெள்
வயிரமுங் கரைவிராவ
வண்படுகர் மேயும்வளை கோட்டெருமை யதுகண்டு
வாய்வெரீஇ யோட்டெடுக்குந்
தேங்குதிரு வம்பரவு துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

*(கு - ரை.) முனிவரர் இருவர் - பதஞ்சலி, வியாக்ரபாதர் என்ற இருவர். அரமுழக்கு - 'ஹர ஹர' என்ற ஒலி. உற - மிகவும். களிக்க - திருநடனத்தைப் பேரன்பு கொண்டு தரிசித்துக் களிப் படைய. இவ்விரு இருடிகளுக்காக இறைவன் கனகசபையிலே எக்காலமும் ஆநந்ததாண்டவஞ் செய்தருளுகின்றார். சிவகாம வல்லித்தாய் - அம்பிகையின் திருநாமம். உலோசனம் - கண். விடுத்து நிற்க - நன்கு விழித்துப்பார்க்க. பாங்கு - அழகு. செம் பொனம்பலம் - சிற்றம்பலம். நவிலும் - பழகும். பரஞ்சோதி - சிவபெருமான்; 'அலகில் சோதியன்' என்றார் சேக்கிழாரும். பரஞ் சோதி பேருவகைபூப்ப முழக்கியருள், அண்ணல் மத்தளமுழக்கி னும் முழக்கியருள் என இயைத்துப் பொருள் முடிபுகொள்க. மது - தேன். ஒழுக்கும் - ஒழுகப்பண்ணும்; பெருகச் செய்யும் என்றபடி; துழாய் - துளவு; துளசி. துழாயண்ணல் - திருமால். திருமால் சிவபிரான் நடனஞ் செய்யும்போது மத்தளம் முழக்குவர். பூப்ப - உண்டாக, முகிழ்க்க. வாங்கு - மடிந்த. படுகர் - மருதநிலம். வளைகோடு - [முதுகுநோக்கிப் பின்புறமாக] வளைந்த கொம்பு. வாய்வெரீஇ - பயந்து. ஒட்டெடுத்தல் - விரைந்தோடுதல். தேங்குதல் - நிறைதல். திருவம், திரு - செல்வம், அம், சாரியை.* (83)

3\. புகழ்சரியை கிரியையை யனுட்டித்து வருகின்ற
புண்ணியப் பேற்றினர்க்குப்
புலரியிற் சிவபிரான் றளியெழுஞ் சங்கமுற்
போதரு முழக்காகவு
மிகழ்வில்சிவ யோகசா தனமரீஇ யம்முறை
யியங்குதிற லாளருக்காங்
கெழுகின்ற சங்கபட கம்பேரி யாதியி
னிசைப்பெரு முழக்காகவு
மகிழ்கின்ற பாலியாற் றலையெழீஇக் கற்பக
மலைத்தோட வதனடிக்க
ணவாய்நின்ற காமதே னுவைநோக்கி நின்று
லமைந்ததிப் படரெனநனி
திகழ்கின்ற செல்வமுயர் துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

*(கு - ரை.) கிரியையை - ஐ, இரண்டனுருபு. புலரி - விடியற் காலம். தளி - கோயில். சங்கம் - சங்கின் ஒலிக்கு ஆகுபெயர் விடியற்காலையில் திருக்கோயில்களில் மங்கலச்சங்கு ஊதுதல் மரபு*

முற்போதரும் - முன்னால் போகும்; எனவே, வழித்துணையாகும் என்றபடி. சரியை கிரியையை அனுட்டித்து வருவார்க்கு அவ்வழியில் அனுட்டான காலத்தொடக்கத்தை முற்கூட்டியறிவிப்பது இச்சங்கொலி யென்றபடி. இகழ்வு இல் எனப்பிரிக்க. மரீஇ; மருவி. ஆங்கு - அத் தளிகளில். தியானசமாதிகளான அகத்தொழிலினாலே சிவனது அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாட்டினையுடைய யோகசாதனம் மரீஇயவர்க்குத் தளிகளி லெழுகின்ற சங்கபடகம்பேரி யிவற்றினொலி அவர் செய்யும் வழிபாட்டுக்கோர் உபகரணமாயிற்று என்றபடி. போதரு முழக்காகவும் இசைப்பெரு முழக்காகவும் [நீ] சிறுபறை முழக்கியருள் என முடியும். சரியை கிரியை யோகம் - இவைபற்றி முன்னர்ச் செங்கீரைப்பருவத்து 9 - ஆஞ்செய்யுளுரையிற் கூறினும். அகழ்கின்ற - மண்ணைத் தோண்டி வரும். பாலாற்றின் அலை மிக்கெழுந்து கற்பகத்தருவை யலைத்து ஓடிவர, அதனடியிற் பொருந்தி நின்று கொண்டிருந்த காமதேனுவைப் பார்த்து அக்கற்பகத்தரு 'நின்னாற்றான் எனக்கு இந்தத் துன்பம் உண்டாயது' என்று கூறும்படி திகழ்கின்ற நாடு துண்டீர நாடு என்றார். காமதேனுவின் திருமடிசொரிபால் பெருகிப் பாலியாறு இழிந்ததாகலின், அதனைக் குறைகூறிற்று கற்பகத்தரு. அவாய் - பொருந்தி. படர் - துன்பம். இப்பொருளில் வருதலை 'படர்மெலிந்திரங்கல்' என்றவிடத்துங் காணலாம். (84)

4\. ஆன்றசிவ புண்ணிய முழக்கமும் பற்பலவ
ராயவடி யவர்தம்வரலா
றாகிய சரித்திர முழக்கமுந் தெய்வமண
மகலாத தமிழ்முழக்கு
மேன்றபல வரமுழக் கமுமிணை யிலாதாய
வினியதிரு வருண்முழக்கு
மெய்துதற் கரிதாஞ் சிவானு போகப்பே
ரிரும்பெரு முழக்குமான
மான்றபைங் கமுகம் பொழிற்றலைத் தவிர்செய்ய
மதுவநிறை தேத்தடைக்கண்
வான்பிறைக் கோடுதற் கவரின னெனக்கீள
வாவிகுள மோடையெங்குந்
தேன்றவழ வதுவிழுந் துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

(கு - ரை.) சிவபுண்ணிய முழக்கமும், சரித்திர முழக்க மும் தமிழ் முழக்கமும், அரமுழக்கமும், திருவருண்முழக்கமும், இரும் பெரு முழக்கமும், மான [நீ] சிறுபறை முழக்கியருள் என முடியும். மான - ஒப்ப; உவமவுருபு. சிவபுண்ணியமாவது - சிவனுவப்பச் செய்யும் நற்கருமங்கள். 'அரமுழக்கம்' - 'அரன் நாமமே சூழ்க' என்றார் சம்பந்தரும். பல என்றது, பலமுறையெழுப்புதல்பற்றி. திருவருண்முழக்கு-தெய்வ கிருபை யிருந்தவா போற்றும் முழக்கம். சிவானுபோகம் - சிவனோடு இரண்டறக் கலக்கும் அநுபவம்; இது எய்துதற்கு அரிதாகலின், அவ் வருமைதோற்றப் 'பேரிரும்பெரு முழக்கு' என்றார். 'பேரிரும்பெரு' என மும்முறை கூறியது, சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்திகளைக் கடந்தது இரண்டறக்கலத்தலாகிய இந்த சாயுச்சியநிலையென்று தெரிவித் தற்கு. ஈண்டு, சிவபுண்ணியங்களான் ஆன்மாவுக்கு இருவினை யொப்பு நிகழ, அவ்விருவினையொப்பினுன் மலபரிபாக முண்டாக, அம் மலபரிபாகத்திற் சத்திநிபாதம் நிகழ, அதனில் தீவிரதர மெய்தினுர்க்குச் சிவன்தானே குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து ஞானத்தையுணர்த்த, அவ்வாறுணர்த்தப்பெற்றோர் அதனைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டைகூடிப் பாசத்தை வேரோடு களைந்து சிவத்திலழுந்தி இரண்டறக்கலத்தலாகிய சாயுச்சியத் தினையடைந்து சிவானுபோகத்துள் திளைப்பர் என்று உணரவேண்டு வது. மான்ற - மயங்குதற்கான: மான்றல் - மயக்கம். பொழிற் றலை - பொழிலிடத்து: தலை - ஏழனுருபு. தவிர் - தங்கும். செய்ய - சிவந்த. மதுவம் - தேன். 'வண்டினம்......சிறிது மதுவமுங் குறைவற எருந்தி' என்றது கல்லாடம். தேன்+அடை=தேத் தடை. ''ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே'' என்றது தொல்காப்பியம் (தொல்: புள்ளி: 49) பிறைக்கோடு - பிறைச் சந்திரன். தன்கவர் இனன் - தன்னைக் கவர்கின்ற சூரியன். இனன்- சூரியன். சிவந்த தேனடையைத் தன்னைக் கவர்கின்ற சூரியனென மயங்கிப் பிறைக்கோடு கீள என்றவிடத்து மயக்கவணியும் ஏதுவணியும் வந்தன. கீளுதல் - கிழித்தல். தவழ - தவழுமாறு. அது - தேனடையிலுள்ள அத்தேன். (85)

5\. **வில்லூரு மணிமோலி வளவர்பெரு மான்பொனடி**
**வீழாத மருவலர்க்கும்**
**வெண்ணீறு கண்மணி புனைந்தைந் தெழுத்தெணு**
**வீணராஞ் சமயருக்கும்**
**எல்லூரு மொண்சிவ மணங்கமழ்த லில்லா**
**தியைந்தசிந் தாமணிமுத**
**லெந்நூற்கு நெய்தலம் பறைமுழக் கேயாக**
**வெல்லொளி மழுக்குமேனிச்**

சொல்லூரு மெம்பிரான் பெருமதம் பொழிமண்
டுழாங்கைமா லியானைதந்த
தோற்போர்வை போர்த்தெனத் தென்றல்வந் துலவவழ
ரேற்றுதே மாஞ்சோலைமேற்
செல்லூரு மேன்மையமை துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

(கு - ரை.) வில் - ஒளி. ஊர்தல் - பரவுதல். மோலி - கிரீடம்; முடி. வளவர்பெருமான் - அநபாயன். மருவலர் - பகைவர். கண்மணி - உருத்திராக்கம். ஐந்தெழுத்து - பஞ்சாக்ஷரம்; 'நமசிவாய' என்பது. எணு - எண்ணுத. சமயர் - புறச்சமயர். எல் - ஒளி. சிந்தாமணி - சீவகசிந்தாமணி. எந்நூற்கும் - அவகதை யாய்ப் பயனற்ற கதையாகும் எந்நூலுக்கும். நெய்தலம்பறை - சாப்பறை. நெய்தலம்பறை - முழக்கேயாக [நீ] சிறுபறை முழக்கியருளே என முடியும். நீ சிறுபறை முழக்கினுல், அம் முழக்கம் மருவலர்க்கும், பரசமயவீணர்க்கும், அவகதையாம் நூலனைத்திற்கும் சாப்பறை கொட்டும் முழக்கமாகும் என்ருர். எல் - சூரியன். மழுக்கு - மழுங்கச் செய்யும். சொல் - புகழ். எம்பிரான் - சிவபெருமான். எம்பிரான் யானை தந்த தோற் போர்வை போர்த்தெனச் சோலைமேற் செல்லூரும் என இவை யும். பெருமதம்பொழி மண்துழாங்கை என்றது மாலியானைக்கு அடை. மண்ணைத்துழாவித் தலைமேலிட்டுக்கொள்ளல் மதயானைக் கியல்பு. மால் - பெருமை. 'யானை தந்த' என்றது, விளக்கினில் விட்டில்தானேவந்து வீழ்ந்து மாய்வதுபோலே யானை மாய்ந்தபடி தெரிப்பது. அழல் - செம்மாந்தளிர். தென்றல்வரத் தேமா தளிர் காட்டும் என்ருர் சிவப்பிரகாசரும். செல் - மேகம். சூரியனுெளியையும் மழுங்கச் செய்யும் செந்நிறத் திருமேனியை யுடைய பகழ் பரவிய சிவபெருமான் கரிய மதயானையை யுரித்த தோற்போர்வையைப் போர்த்தாற்போலச் செந்நிறம் படைத்த மாந்தளிரைக்கொண்ட சோலை தன்மேற் கரிய மேகங்களைப் போர்த்ததென்று நயம்படக் குறித்தார். உவமையணி.

சிவபெருமான் யானை தந்த போர்வை போர்த்தது:—பரம சிவன் மேற் கோபங்கொண்ட தாருகவன முனிவர்கள் அபிசார யாகமொன்று செய்து அவ்வோமத் தீயினின்றெழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை, முயலகன், வெண்டலை முதலிய வற்றைப பரமசிவனைக் கொன்றுவிடும்படி ஏவ, சிவபெருமான், தம்மேற் சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத்

தமது கணங்களாகவுங்கொண்டு, மானைக் கையிலேந்தி, புலியைத் தோலையுரித்து உடுத்து, யானையினுட் சென்று உடல்பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்டு, முயலகனை முதுகிற் காலால் ஊன்றி, வெண்டலையைக் கையிற்பற்றிச் சடை மேலணிந்து, அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்துவிட்டன ரென்பது கதை. அருந்தவமியற்றிப் பெருவரம்பெற்ற கஜாசுர னென்பவன் தேவர் முனிவர் முதலியோரை இடைவிடாது வருத்தித்துரத்த, அஞ்சியோடிய அவர்களது வேண்டுகோளாற் பரமசிவன் தம்மையெதிர்த்துப் போர்செய்ய வந்த அவ்வசுரனைக் காலாலுதைத்துத் தள்ளிக்கொன்று தோலை யுரித்துப் போர்த் தருளினரென்ற கதையையுங் கொள்ளலாம். (86)

வேறு

6. பிதிருந் தரமற வின்பா லளவிப் பிழிசுவை மதுவிரவிப்
பிறங்கிய புல்ல கண்ட நிறீஇச்சுவை பெறுகண் டுங்கூட்டி
யெதிரும் பொருளில் பலாக்கனி மாங்கனி யிவைவா ழைக்கனிமு
னியையு முழுக்கனி முந்திரி கைக்கனி யிவ்விர தமுநாட்டி
யதிருங் கடலமிர் தமுமு ளுறுத்தி யவாங்குழல் வீணையிசை
யத்தனை யும்புக வைத்துச் சிவமண மகலா தேகமழ
முதிரு மருட்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே.

(கு - ரை.) இப்பாடல் சேக்கிழாரின் கவியின்பச்சுவை தெரி விப்பது. பிதிரும் தரம் அற - திரியுந் தன்மையின்றி. பிதிர்தல் - பால் திரிந்துபோதல். பிழிசுவைமது - பிழிந்த சுவையுடைய தேன். புல்லகண்டம் - சருக்கரை. நிறீஇ - நிறுத்தி; சேர்த்து. கண்டு - கற்கண்டு. எதிரும் பொருள் இல் - ஒப்பாகச் சொல்லும் பொருள் இல்லாத; எனவே, (சுவையில்) ஒப்பில்லாத. பலா, மா, வாழை இவை மூன்றும் முக்கனி எனப்படும். பலாக்கனி, மாங்கனி, வாழைக்கனியிவை—, முன் இயையும் - முதலாகப் பொருந்திய, முழுக்கனி - பழுக்கும் பருவத்துக்கனியாயிருக்கும், முந்திரிகைக் கனி-திராட்சைக்கனி, இவ் இரதமும் நாட்டி - இவற்றின் இரசங் களையும் ஒன்று சேர்த்து. என்றபடி. கடலமிர்தம் - தேவாமுதம். உள் உறுத்தி - உள்ளே பதித்து. அவாம் = அவாவும்; யாவரும் விரும்புகின்ற. குழல் - புல்லாங்குழல். இசை - அதன் சுவைக்கு ஆகுபெயர். முதிரும் கவி - சொற்சுவை பொருட்சுவைகளிலே பக்குவப்பட்ட கவி. கூட்டி, நாட்டி, உளுறுத்தி, புகவைத்து, கமழ, பாடிய புலவன் என இயையும். பால், தேன், சருக்கரை, கற்கண்டு இவற்றின் சுவையொடு முக்கனி திராட்சைபிரசங்களை

யும் ஒன்று சேர்த்துத் தேவாமுதத்தை யுள்ளேபதித்துக் குழல் வீணையிசை யொலியின்பத்தைப் புகவைத்துச் சிவமணமருதே கமழச் சொற்பொருட்சுவைகள் முதிர அருட்கவி பாடிய புலவர் சேக்கிழார் என்று பாராட்டியவாறு. இப்பாடலில் வாய், செவி, மூக்கு என்ற மூன்று பொறிகளும் பெறுமின்பம் கூறியிருப்பவே, ஏனைய இரண்டு பொறிகள் பெறுமின்பத்தையும் உபலட்சணத்தாற் கொள்க. சேக்கிழாரின் அருட்கவிகளைப் பாடுங்கால் ஆனந்தக் கண்ணீர் சொரிதலும், மெய்சிலிர்த்தலுங் கண்கூடு. (87)

7\. அத்தி தருங்கவி யென்மரு நன்று வறைகுதி ரம்மட்டோ
வவாவிய புத்தி தருங்கவி யென்மரு மதுமட் டோவின்னுஞ்
சித்தி தருங்கவி யென்மரு மெல்லாத் தீர்த்தங் களுமுறுமா
செய்யாச் சுத்தி தருங்கவி யென்மருஞ் செப்பிய வம்மட்டோ
பத்தி தருங்கவி யென்மரு மாகிப் பாரிற் புலவரெலாம்
பல்லா ரோதுபு பாராட் டக்கதி பற்றிய பல்லோர்க்கு
முத்தி தருங்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே.

(கு - ரை.) இப்பாடல், சேக்கிழாரின் கவி யளிக்கும் நற் பேறுகள் கூறும். அத்தி - உண்டு: அஸ்தி என்ற வடசொல் லின் தற்பவம். அத்தி தருங்கவி - ஆஸ்திகம் தருங் கவி; உலகத் தார் உண்டென்பதை நிலைநிறுத்துங் கவி; அதாவது, கடவுள், ஆன்மா, மறுபிறப்பு, இருவினைப்பயன் முதலாகப் பல ஆஸ்திக உண்மைகளை நிலைநிறுத்துங்கவி. நன்று அறைகுதிர் - நன்றாகச் சொன்னீர்: அம்மட்டோ - அவ்வளவினது தானோ [அவர்கவி]? புத்தி - ஞானம். சித்தி - பரலோகசித்தி; அஷ்டமாசித்தி என்றுரு மாம். உறுமா - உறுமாறு. ஆ - ஆறு என்பதன் விகாரம். செய்யா-ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். இவர் கவி பயில் வோர் மனமாசு போக்கத் தீர்த்தத்துறைகளில் படியவேண்டு மென்பதில்லை என்பது குறிப்பு. சுத்தி - திரிகரணசுத்தி. செப்பிய அம்மட்டோ - இதுவரையிற் சொல்லிய அவ்வளவுதானோ? [மேலும் உண்டு என்றபடி]. பத்தி - இறைவன்மாட்டு அன்பு. பல்லாறு-பல வகைகளாக. இனி, 'பல்லார்' என்ற பாடங் கொண்டால், பாரிற் புலவர் பல்லாரெலாம் எனக்கூட்டிப் பொருள்கொள்க. ஓதுபு-ஓதி. கதி - நற்கதியாகிய சிவகதி. முத்தி - மோட்சம்; அந்தமிலின்பத் தழிவில் வீடு: சேக்கிழாரின் கவி அத்தி, புத்தி, சித்தி, சுத்தி, பத்தி, முத்தி ஆகிய இவை யனைத்தையும் ஒருங்கே தரும் என்ற படி. [ஈண்டு, ஏரானைக்காவில் ஆனைக்கன்றைப் போற்றிய காள மேகத்தின் பாடற்போக்கை ஒப்பு நினைக.] (88)

8. கனிவி லெமைப்பொரு வார்களு நெஞ்சு கரைந்து கரைந்துருகக்
காமரு பத்தியும் வயிராக் கியமுங் கவினக் குதிகொள்ளத்
தனிவில்பொன்மேரு வெனக்கொடு திரிபுர தகனம் புரிபெருமான்
றயங்குபொ னம்பல நின்றுபல் லோரஞ் சலிசெய நடநவில
நனிவி லிடும்புகழ் மிகுசம் பந்தரு நாவுக் கிறையவரு
நாவலர் கோவுஞ் சிரகர கம்பித நன்கு புரிந்தருள
முனிவி றமிழ்க்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே.

(கு - ரை.) *இப்பாடல், சேக்கிழார் **கவிபாட** நிகழ்ந்த செயல்கள் கூறும். கனிவு இல் - (மனம்) இளகுதலில்லாத. எமைப் பொருவார்களும் - எம்மை யொத்தவர்களும்.* **எனவே, கன்னெஞ்சுடையோரும்** *கரைந்துருக என்றார். பத்தி - பக்தி.* **வயிராக்கியம்**- *உலகப்பற்றின்மை. கவின - அழகு பொருந்த. குதி கொள்ள - நர்த்தனஞ் செய்ய. தனி வில் - ஒப்பற்ற வில்லாக. கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். திரிபுரதகனகாலத்துச் சிவபிரான் மகா மேருவை வில்லாகக் கொண்டமை பிரசித்தம். நற்சாபம் கற்சாப மாதலின் 'தனிவில்'* **என்றது.** *தயங்கு - விளங்குகின்ற. அஞ்சலி செய -* **கைகூப்பி வணங்க.** *நட நவில -* **ஆநந்த** *தாண்டவஞ் செய்ய. வில் - ஒளி. சம்பந்தர் புகழ் நாவிலடங்காமை தெரிக்க 'நனிவிலிடும்புகழ் மிகு' என்று தொடரமைத்தார். நாவலர்கோ - திருநாவலூரர், சுந்தரமூர்த்திகள். சிரகர கம்பிதம் - அங்கீகாரம் பாராட்டு முதலியவற்றின் அறிகுறியாகச் செய்யும் தலையசைப்பு கையசைப்பு. கம்பிதம் - அசைத்தல். சிறப்புடை மூவரை மொழிந்தமையின், இஃது ஏனையோர்க்கும் கொள்ளப்படும். முனிவு - வெறுப்பு, இல் - இல்லாத; எனவே, அனைவரும் விரும்பத்தக்க. உருக, குதிகொள்ள, நடநவில, புரிந்தருள, பாடிய புலவன் என இயையும். (89)*

9. நந்து புராணமெவ் வளவா யிற்றென
நாடுறு மனபாய
னகைமகிழ் பூப்ப மணிக்கா லாயிர
நண்ணிய மண்டபவாய்
வந்து விழாவு மிடத்தி னமர்ந்து
வயங்குறு கையேட்டின்
மாண்பார் கண்டங் கொண்டங் கெழுதுநர்
மாறு தேயெழுதப்
பிந்து வரைந்த வெழுத்தினு மொன்றும்
பெயரா தக்கரமாம்
பெயர்ப்பொரு ளேற்றுபு நிலைபெற யார்க்கும்
பெட்கும் விருப்பமெழ

முந்து தமிழ்க்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே.

(கு - ரை.) இப்பாடல், பெரியபுராணம் தில்லை ஆயிரக்கால் மண்டபத்து எழுதப்பட்டது என்கிறது. நந்துதல் - வளர்தல். 'பிறைபோல நாளும் வரிசை வரிசையா நந்தும்' என்ற நாலடியாரி லும் இப்பொருளதாதல் காண்க. 'ஒப்பரிய பொருள் தெரிந்து விளங்கித் தோன்ற உவமையுடைத் தாய கதை கற்க நிற்கத், தப் பில்பெருங் காவியமாய் விரித்துச் செய்து தருவீர்' என்றனனாத லின் எவ்வளவாயிற்றென நாடுவானாயினன் அநபாயன். "கதை சென்ற தெவ்வளவி ருந்ததெங், காவ தென்னிவைகள் அறிய வேண்டும தறிந்து வாரும் என வளவர்கோன், ஏவி னனுரிய தூதர் தூதரறி யாம லொற்றரையு மேவினன்" என்ற சேக்கிழார் புராணம் நினைக. வாய் - ஏழனுருபு. விராவு மிடத்தின் - பொருத் தமான இடத்தில். அமர்ந்து - உட்கார்ந்து. கையேட்டில் மாண்பு ஆர் கண்டம் கொண்டு அங்கு எழுதுநர் மாறாதே எழுதப் பாடிய என முடியும். கண்டம் - எழுத்தாணி. அமர்ந்து பாடுதற்குத் தக்க இடம் வேண்டுமென்பதும், பாடிக்கொண்டேவரக் கையேட் டில் எழுத்தாணி கொண்டு பட்டோலை கொள்ளுங்கால் எழுதுநர் ஒரு புள்ளிகூட விடாமல் மாறாதே யெழுத வேண்டுமென்பதும் பிள்ளையவர்கள் இதனாற் பெறவைத்தார். மாறாதே - வேறுபடுத் தாமல், பின்வாங்காமல், சளைக்காமல். பிந்து - எழுத்தின்மேற் புள்ளி. பிந்து வரைந்த எழுத்து - மெய்யெழுத்து. பெயராது- போகாதபடி; விட்டுவிடாமல். அக்கரமாம் பெயர்ப்பொருள் தேற்றுபு - 'அக்கரம்' என்னும் பெயர்ச்சொல்லின் பொருளைத் தெளிவித்து. அக்கரம் என்ற சொல்லுக்கு - அழியாதது என்ற பொருள். 'என்றும் கிழியாதென் பாட்டு' என்றது நினைக. பெட்கும் - கற்க ஆசையுண்டாகுமாறு. [இனி, 'பெட்ப' என்ற பாடம் சிறக்குமெனத் தோன்றுகிறது.] பூப்ப, அமர்ந்து, விருப்ப மெழப் பாடிய என இயையும். (90)

10\. தங்கு தமக்கெதிர் நின்றுள முருகத்
தரிசித் திடுவளவன்
நன்செவி பரிசன ரஞ்செவி மறையவர்
தஞ்செவி யுங்கேட்க
வெங்கு மனாம்புக ழிச்சே வையர்கோன்
யாமே முதனல்க
வெம்மடி யார்வர லாறு முழுக்க
வினிக்கப் பாடினனாற்

பொங்கு விருப்பிற் கேட்குக வென்றுப்
பொன்னம் பலவாணர்
பொலிதிரு வாக்கடி ஞெகிழியி ஞெலியொடு
பொற்ப வெழுப்பவருண்
முங்கு தமிழ்க்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே.

(கு - ரை.) இப்பாடல், வானிழல்வர்க்கும் சிலம்பொலியும் கனக சபையில் அனைவரும் கேட்ப எழுந்தமை கூறும். தங்கு - [பொன்னம்பலத்தில்] நித்தியவாசஞ்செய்கின்ற. தமக்கு - சிவ பெருமானாகிய தமக்கு. எதிர் நின்று - எதிரே கைகூப்பிநின்று. வளவன் - அநபாயன். பரிசனர் - அவனது பரிவாரம்: 'சேவித் தணையும் பரிசனங்கள்' (பெரிய: சேரமான்:84) என்றது காண்க. இனி, பரிசனர் - கடவுட்டிருப்பணிசெய்வோர் எனினுமாம். மறை யவர் - தில்லைமூவாயிரவர். இவர்கள் அனைவர் செவியுங் கேட்க... பொன்னம்பலவாணர் திருவாக்கு எழுப்ப என முடியும். 'கேட்க" என்றாலே அமைய 'செவி' என வேண்டாது கூறியது, செவி படைத்த பயன் தெரித்தற்கு. பொன்னம்பலவாணர் எழுப்பிய திருவாக்கு இது:—"எங்கும் அளாம் புகழ் இச்சேவையர்கோன் யாமே முதனல்க எம்மடியார் வரலாறு முழுக்க இனிக்கப் பாடின ஞல் பொங்கு விருப்பிற் கேட்குக" என்பது. அளாம் - அளாவும்: செய்யுமெனெச்சத்து ஈற்றுயிர்மெய்சென்றது. முதல் நல்க - 'உலகெலாம்' என முதலெடுத்துக்கொடுக்க. முழக்க - முழுவதும். முழுக்க இனிக்க - கண்டு கடிக்குமிடந்தோறு மினிக்குமாபோலே என்க. பாடினஞல், ஆல் - அசை; வியப்பிடைச்சொல் எனினு மாம். பொங்கு - மிகுந்த. அடி - திருவடி. ஞெகிழி - சிலம்பு. முங்குதல் - மூழ்குதல்: 'முன்னிய வங்க முங்கிக் கேடுற' (மணி:29, 16.) 'அடிஞெகிழியிஞெலியொடு பொற்பவெழுப்ப' என்றது - 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்றுபாடியமை தமக் குப்பேருவகை நல்கியமை தெரிவிக்க. இதனாலேயே, சேக்கிழாரை, இறையருண் முங்கிய புலவன் என்றது.

குறிப்பு:—முதிருமருட்கவி, அத்திதருங்கவி, புத்தி தருங்கவி, சித்திதருங்கவி, சுத்தி தருங்கவி, பத்திதருங்கவி, முத்தி தருங்கவி, முனிவிறமிழ்க்கவி, முந்துதமிழ்க்கவி, (அருண்) முங்கு தமிழ்க்கவி என்று,—ஆரூரர் 'பரவை பரவை' என்று பிதற்றியதுபோலே— பிள்ளையவர்கள் 'கவி கவி' என எழுமுறைக்குப் பத்துமுறை வாய்வெருவுகிறார்; பத்தியின் உச்சநிலை தெரிப்பது இது. (91)

# 10. சிறுதேர்ப் பருவம்

1. மருவாய் நறுந்தா தகித்தொங்கல் வளவர்கோ
மகனுட னிவர்ந் திருகையு
மணிக்கவரி வாங்கிவீ சக்கற் பகப்பூ
மகிழ்ந்துவா னுடர் தூற்றப்
பெருவாய் திறந்துபட கம்பேரி முதலாம்
பெரும்பணை யெலா முழங்கப்
பிறங்குமு வாயிரவர் முதலியோர் மறையொலி
பிறங்கத் தொடர்ந்து போதக்
கருவா யுருமற்றை யாருந் தலைக்குமேற்
கைகுவித் தேத்தி மேவக்
கருதும் புராணமுடி விற்குஞ் சரத்தில
கடத்திவர்ந் தோங்கு தில்லைத்
தெருவா யுலாப்போது சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) சிறுதேர்ப் பருவம்:—பிரபந்தத்தலைவனுகிய குழந்தையைச் சிறுதேருருட்டி விளையாடும்படி வேண்டும் பருவத்தைக் கூறும் பகுதி. இது, நான்காமாண்டிற் கூறப்படும்; "நான்காமாண்டிற் சிறுதேருருட்டலும்" என்பது, பிங்கலந்தை.

இப்பாடல், பெரிய புராணத்தைப் பாராட்டியவகை தெரிப்பது. மருவாய் - வாசனை பொருந்திய. தாதகி - ஆத்தி. தொங்கல் - மாலை. ஆத்திப்பூமாலை சோழமன்னர்க்குரித்து. வளவர் கோமகன் - சோழன் அநபாயன். இவர்ந்து - யானைமீது ஏறி. கவரி - வெண்சாமரை. பணை - வாச்சியங்கள். கரு - கருப்பம். கருவாயுரு - பிறவாதபடி; பிறவித்துன்பம் நீங்க. புராண முடிவில் - பெரியபுராணத்தைப் பாடி முடிக்கும்போது. குஞ்சரம் - யானை. இலகடம் - அம்பாரி. உலா - பவனி; வீதிவலம். குலாதிபன் - குலத்தலைவன். ஈண்டு "செறிமதயானைச்சிரத்தில் பொற்கலத்தோ டெடுத்துத் திருமுறையை யிருத்தியபின் சேவையர்கா வலரை, முறைமைபெற யேற்றியரச னுங்கூட வேறி முறைமையினல் இணைக்கவரி துணைக்கரத்தால் வீச, மறை முழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி மழை பொழியத் திருவீதி வலமாக வரும்போ திறைவர்திரு வருளைநினைந்தடலரசர் கோமான் இதுவன்றோ நான்செய்த தவப்பயனென்றிசைத்தான்" என்ற சேக்கிழார் புராணச்செய்யுளை நினைக. (92)

2. முறியுமல ரும்பொருவு திருமேனி யுமையம்மை
மூவுல குயத் தழுவுபு
மூரிப் புனற்கம்பை யெம்பிரான் றிருமேனி
முற்றுங் குழைத்த ஞான்றில்
அறியும்வகை யறமெலாம் பொலியவிரு நாழிநெல்
லளந்தப் பிரான் கொடுக்க
வனையமா தேவியேற் றேற்றனகை யுயிர்த்தமக
ளாலுயிர்த் தோர்க ளேநன்
னெறியுநல னும்பெருக வுளரெனல் குறித்தவர்கை
நீட்டப் பணிந்து வாங்கி
நீடுங் கொழுக்கொடுதம் மனையுதவி யானனி
நிரம்பப் பெருக்கு குடியுட்
செறியுமொரு குடியாய சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல், சேக்கிழார் குடியின் பெருமை கூறும். முறு - தளிர்; இது மென்மைக்கு வந்தது, தளிரியன் மலைமகள் என்றார் மதுரைக்கலம்பகத்துக் குமரகுருபரர். மலர் அழகுக்கும் நறுமணத்துக்கும் வந்தது. பொருவும் - ஒத்த, உய - உய்ய. தழுவுபு- தழுவ. உமையம்மை [காமாட்சியம்மை] தழுவியதால் மூவுலகமும் உய்ந்தது என்றார். மூரி - வலிமை. கம்பை - கம்பா நதி. கம்பை எம்பிரான் - [கச்சிப்பதியிலுள்ள] ஏகாம்பரநாதர். பார்வதீ தேவியாருக்கு அருள்புரிந்திடவேண்டிக் கம்பை வெள்ளமா வரத் திருவுள்ளஞ் செய்தார் ஏகாம்பரநாதர் என்பது அறிக. உமை வரிவளை முழுகு தழும்பும் திருமுலைச்சுவடும் அழகாக அழுந்தத் தழுவவே எம்பிரான் குழைந்து மெல்கினன். ஞான்றில் - பொழுதில். அறியும்வகை - உலகு அறியும்வகை. அறமெலாம் என்றது, முப்பத்திரண்டு தருமங்களையும் உட்படுத்த. இருநாழி நெல்லில் உமாதேவியார் வளர்த்த முப்பத்திரண்டு தருமங்களை, ''வண்ணான் புன்னாவிதன் காதோலை சோலை மடந்தடம்வெண், சுண்ணம் பறவைப்பிணஞ்சுடற்றூரியஞ் சோறளித்தல், கண்ணாடி யாவிற்குரிஞ்சுகல் வாயுறை கண்மருந்து, தண்ணிர்ப்பந்தல் தலைக் கெண்ணெய் பெண்போகந்தரலையமே''; ''மேதகுமாதுலர்க்குச் சாலை யேறு விடுத்தல் கலை, யோதுவார்க்குண்டி விலங்கிற்குணவொடுயர் பிணிநோய்க், கீதன் மருந்து சிறைச்சோறளித்த லியல் பிறரின், மாதுயர்காத்தல் நற்கன்னியர் தானம் வழங்கலுமே''; ''கற்றவறு சமயத்தார்க்குணவு கருதும்விலை, யுற்றதளித்துயிர்

மீட்டல் சிறுர்க்குதவனற்பால், மற்றுமகப்பெறுவித்தல் சிறுரை வளர்த்தலெனப் பெற்ற விவற்றினை யெண்ணுன்கறமெனப் பேசுவரே'' என்பவற்ருலுணர்க. ஏகாம்பரநாதர் காமாட்சி யம்மைக்கு இருநாழி நெல்லளித்ததைச் சேக்கிழார் ''இடையரு அறம்வளர்க்கும் வித்தாக இகபரத்திரு நாழிநெல்லளித்து'' என்ருர். (திருக்குறிப்பு:70) மற்றும், அவரே, ''எம்பிராட்டி தம்பிரான் மகிழ்ந்தருள...புண்ணிய திருக்காமக்கோட்டத்துப் பொலிய முப்பதோடிரண்டறம் புரக்கும்'' என்ருர். (திருக் குறிப்பு; 71). ஏல் + தகை = ஏற்றகை: 'அல்வழியவற்ருேடுறழ்வும்' (நன்: மெய்யீற்: 24) என்ருலும் ஏற்புழிக்கோடலால், திரிந்தே வந்தது. ஏற்றகை - பொருந்திய தகை எனப்பொருள் பட்டுத் தகைமையுடையானுக்கு ஆகுபெயராயிற்று; பெருந்தகை என்பது போலக் கொள்க. அங்ஙன் கொள்ள ஏற்றகை - சிவபிரான், அவர் உயிர்த்த மகள் - கங்கை. உயிர்த்தல் - வெளிப்படுத்துதல்: ''கொங்குயிர்த்த பூந்தடத்துலாய்'' என்ற நைடதத்திலுங் காண்க. (நாட்டுப்; 5). உயிர்த்தோர்களே - ஈனப்பட்ட வேளாளர்களே, வேளாளரைக் கங்கைகுலத்தவர் என்ப. இங்கு, உயிர்த்தல்-ஈனுதல் என்ற பொருளது: 'குழந்தையையியுர்த்த மலடிக்குவமை கொண்டாள்' (கம்ப: உருக்காட்: 65) என்று வந்துள்ளமையுங் காண்க. 'உயிர்த்தோர்களே' என்றவிடத்து ஏகாரம் தேற்றம். குறித்து - எண்ணி. அவர் கைநீட்ட - அவ் வேளாளர் கையில் கொடுக்க, [அவர்கள்] பணிந்து வாங்கிப் பெருக்கு குடியுள் எனமேல் இயையும். ஆகவே, இருநாழிநெல் அளந்து அப்பிரான் கொடுக்கத் தேவியேற்று, குறித்து, நீட்ட, வாங்கி, பெருக்குகுடியுள் செறியும் ஒருகுடி என்பதுமுடிவு. கொழு-ஏர்க்காறு. தம் மனை - தம் வாழ்க்கைத் துணைவியர். இனி தம் அனை எனப்பிரித்து, தமது அன்னையாகிய உமாதேவியார் எனப் பொருள் காணினுமாம். குடியுள் என்றது,— கூடல்கிழான்குடி, புரிசை கிழான்குடி, குளப்பாக்கிழான்குடி, குளத்துழான்குடி போன்ற வற்றுள். ஒருகுடி - சேக்கிழார்குடி, இப்பாடல், சேக்கிழார் புராணம் 13-ஆஞ் செய்யுளோடு ஒப்புக்காணத்தக்கது. அச்செய்யுள் பின்வருமாறு:—''இமயமலை யரையன்மகள் தழுவக் கச்சி ஏகம்பர் திருமேனி குழைந்த ஞான்று, சமயமவை யாறினுக்குந் தலைவிக் கீசர் தந்தபடி எட்டுழக்கீ ராழி நெல்லும், உமைதிருச்சூ டகக்கையால் கொடுக்க வாங்கி உழவு தொழி லாற்பெருக்கி உலக மெல்லாம், தமது கொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண் தலைவர்பெரும் புகழ்உலகில் தழைத்த தன்றே'', என்பது. சிறுகோல் - ஏரடிக்குஞ் சிறுகோல், அரசு - சோழவரசு. நிறுத்தினேன்- நிறுத்தியமை, முதலமைச்சராய். (93)

3. வெருவப் பகைக்கடல் சுவற்றழ லரும்புகண்
விரைத்தாத கித்தொ டையலான்
வீசவீ சப்பெற்று வாம்பரி யுகைத்துமிளிர்
வெங்கடாக் களிறு கைத்து
முருவக் கதிர்த்தரள மாலைகால் யாத்திட்ட
வொள்ளொளிய யான மூர்ந்து
மொருநம்பி யாரூர னைப்புகலி யாண்டகையை
யொப்பாயி னுய தாஅன்று
மருவப் பொலிந்தமட் டேரூரின் முதலடி
மரீஇயவிரு வரு ளொருவரு
மானுவாய் வையக மெடுத்தேத்த நிறைபுனல்
வயங்கமூ ருணிநி கர்த்த
திருவப் பெருக்கினமை சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன்
சிறுதே ருருட்டி யருளே.

*(கு - ரை.) இப்பாடல். சேக்கிழார்பெருமான் நம்பியாரூரர் ஞானசம்பந்தர் இறைவன் ஆகிய மூவரையும், ஊருணியையும் நிகர்ப்பவர் எனக்கூறும். பகைக்கடல் - உருவகம். சுவறுதல் - வற்றச்செய்தல். அழல் அரும்பு கண் - கோபாக்கினியைத்தோற்று விக்குங் கண் : சிவபிரானின் நெற்றிக்கண். விரை - வாசனை. தாதகித்தொடையலான் - ஆத்திப்பூமாலையை யுடையவன். இது, சோழன், சிவபிரான் இருவரையும் காட்டும் இருவர்க்கும் ஆத்திப் பூமாலை உரித்தாகலின். இருவரும் பகைக்கடல் வெருவிச்சுவற அழலரும்பு கண்ணுடையர். வீச வீசப்பெற்று - கவரி இடை விடாது வீசப்பெற்று; அடுக்கு, இடைவிடாமை காட்டுவது. அநபாயன் கவரி வீசியமை இப்பருவத்து முதற்பாட்டிலும் குறித் தாம். வாம் - வாவும்: செய்யுமெனெச்சத்து ஈற்றுயிர்மெய் சென் றது. பரி - குதிரை. உகைத்தல் - ஊர்தல், செலுத்துதல். கடாம் - மதநீர். உருவம் - அழகு. தரளம் - முத்து, கால் யாத்திட்ட - மறைத்த. கால்யாத்தல் - மறைத்தல்: "சொன்றி...வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்" (பெரும்பாண்; 133) என்ற விடத்துங்காண்க. யானம்-பல்லக்கு, சிவிகை. யானம் தொங்கலாக விட்ட முத்துமாலைகளால் மறைக்கப்பட்டுள்ளது என்றபடி; எனவே, முத்துச் சிவிகை. வாம்பரியுகைத்தும் களிறுகைத்தும் நம்பியாரூரரையும், முத்துச்சிவிகையூர்ந்து திருஞானசம்பந்தரை யும் ஒப்பாயினுய். புகலியாண்டகை - திருஞானசம்பந்த மூர்த்தி கள். புகலி - சீகாழி; இப் பெயர்க்காரணம் முன்னரே கூறப்*

பட்டது. (காப்பு-3). சுந்தரமூர்த்திகள் பரிபெற்றிருந்தா ரென்பதை "அணியாரூர் புகப்பெய்த வருநிதிய மதனிற், ரூற்றமிகு முக்கூறி லொருகூறு வேண்டுந் தாரீரே லொருபொழுது மடியெடுக்க லொட்டேன், காற்றனைய கடும்பரிமா வேறுவதும் வேண்டும் கடனுகைக் காரோண மேவியிருந் தீரே" என்ற அவர் பாசுரத்தால் அறியலாம். சுந்தரர் யானையுகைத்தது, திருக்கைலாயச் செலவில்; "வீர வெண்களிறுகைத்து விண்மேற்செலும் மெய்த் தொண்டர்" என்ருர் சேக்கிழாரும். திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகை பெற்றது, திருநெல்வாயில் திரு அரத்துறையில். சேக்கிழார் முத்துச்சிவிகையூர்ந்தது - வளவனுந்தன் செங் கோலோச்சுந் தலைமை யளித்துத் தலையளி செய்த ஞான்று எனக் கொள்க. அதான்று - அதுவல்லாமலும், அது + அன்று - அதான்று: "அதுமுன் வருமன் ருன்ருந் தாக்கின்" (நன்: உயிரீற்: 30) மட்டேர் = மண் + தேர்: 'ணளமுன் டணவும் ஆகுந் தநக்களாயுங் காலே' மண்தேர்-மண்ணில் தேர்; மண்ணுகிய [பூமியாகிய] தேர் என இருபொருள்பட்டது. முதலடி - இச்செய்யுளின் முதலடி. அதனில் மரீஇய இருவர் - சோழனும், சிவபெருமானும்: (தாதகித் தொடையலான் என்றதால்) அந்த இருவருள் ஒருவர் என்றது - சிவபிரானை. அவனை மானுவாய் என்றது. சிவபிரான் மண் தேரூர்ந் தமைபற்றி. சிவபிரான் திரிபுர தகனகாலத்துப் பூமியைத் தேராக அமைத்துக்கொண்டு ஊர்ந்தமை குறித்தபடி. மானுவாய் - ஒத்திருப்பாய்: சேக்கிழார் மண்ணில் [பூமியில்] தேரூர்ந்தமை பற்றி: அவர் தேரூர்ந்தது முதலமைச்சாய் அரசுசெலுத்திய காலத்து எனக் கொள்க. வையகம் - இடவாகுபெயர். ஊருணி - ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம் : இது காரணப்பெயர். 'ஊர்' ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர் : உண் என்பது - பொது வினையுமாமாதலால், 'ஊர்பருகி' என்னுமல் 'ஊருணி' எனப் பட்டது. ஈண்டு பிள்ளையவர்கள், "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம், பேரறிவாளன் றிரு" என்ற குறளின் கருத்தை யெடுத் தாண்டிருக்கிருர். திருவம்-சிறப்பு; அம், சாரியை. (94)

4. வசைதவிர் வினைத்திட்பம் வாய்ந்தாக வப்பாரின்
மாற்றல ரெதிர்ந்த காலை
மழைமதக் களியானை வாம்பரி சயந்தனமுன்
மற்றுள வருதி னியெலா
மசைவில்பல் படைக்கலங் கொடுநூழி லாட்டுபுப
லாரு வெழுந்த நெய்த்தோ
ர்வ்வனிக வழனிமுத் தோடியுவ ராழிபுக்
களவிறிடர் செய்ய நோக்கி

யிசைமல ரலங்கலொடு வாகையுஞ் சூடியா
ரெய்தப் புனைந்த பெருமா
னிரும்புலியை மேருமுடி யேற்றிப் பெருந்தே
ரிணங்குற வுருட்டி நேமி
திசைதிசை யுருட்டச் செய் சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல், சேக்கிழார் அநபாயனின் போர் வென்றிச் சிறப்புக்குக் காரணமாவது கூறும். வசைதவிர் வினைத் திட்பம் - தூயவினைக்கு வேண்டிய மனவுறுதி. வினைத்திட்பம் - நான்காம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. ஆகவப் பார் - போர்க்களம். ஆகவம் - போர். சயந்தனம் - தேர். முன் - முதலாக. வருதினி - சேனை. எலாம் - நாற்படையும் குறித்தது. அசைவு இல் - தப்பாத. சொடு - கொண்டு; தொகுத்தல். நூழிலாட்டுபு - கொன்று. நூழில் - கொன்றுகுவித்தல். பலாறு - பல ஆறு. நெய்த்தோர் - இரத்தம். அனிகம் - சேனை. அழன் - பிணம். உவராழி - உப்புச் சமுத்திரம். அளவில் - அளவற்ற. திடர் - மேடு; திட்டு. நோக்கி - நோக்குபவன், அநபாயன். இது மேலே பெறப்படும்: இசைமலரலங்கல் - புகழாகிய மலர்மாலை. இசைமலர் - உருவகம். வாகை - வெற்றிமாலை; வென்றோர் சூடுவது வாகை. ஆர் - ஆத்தி: சோழர்க்குரிய அடையாளமாலை. பெருமான் - சோழன் அநபாயன். புலியை - புலிக்கொடியை. புலிக்கொடி சோழர்க்குரிய கொடியாகும். அதனை மேருமலைச் சிகரத்தில் நாட்டியென்றது, இமயம்வரை சென்று சிறந்தமை பெறவைப்பது. கரிகாற்சோழன் செய்த இவ்வருஞ்செயலை அவன் மரபிற் பின்வந்தோர் மேலேற்றிக் கூறுதல் கவிசமயம். நேமி - ஆஞ்ஞா சக்கரம். நோக்கி, புனைந்த பெருமான், ஏற்றி, உருட்டி, உருட்ட, உருட்டியருள் என முடியும். சோழன் முதலமைச்சாகிப் பின்னர் அவனேமி திசைதிசையுருட்ட, இது போது சிறுதேருருட்டியருள் என்றது பாவம். (95)

5. சாதகப் பறவைக் கிரும்புயற் றுளியுஞ்
சகோரத்தி னுக்கு திக்குஞ்
சந்திரன் விடுங்கரமு மம்புயத் திற்கேழு
தாம்பரித் தேரி ரவியு
மேதக வுறுந்தவத் திற்கருளு மவ்வருள்
விளக்கத் தினுக்கு ழுவலு
மேவருங் கல்விக்கு நுண்ணறிவு நுண்ணறிவு
வீக்கத்தி னுக்கொ ழுக்கு

நோதக விலாதமைந் தாங்கருள் வழிச்செலீஇ
நோய்ப்பிறவி போக்கு வார்க்கு
நோற்றவர் புராணமில் லாதமை தராதா
நுவன்றெம்மை யாண்ட பெம்மான்
நீதக மதித்திடாச் சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினோன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல், பிறவிநோய்க்குத் திருத்தொண்டர் புராணம் மருந்தாவது கூறும். சாதகப்பறவை - வானம்பாடிப் புள். இது வானினின்று விழும் மழைநீர்த்துளியையே யுண்ணும். சகோரம் - நிலாமுகிப்புள்- சந்திரன் விடுங்கரம் - நிலாக்கதிர். தாம் - தாவும்; செய்யுமெனெச்சத்தீற்றுயிர்மெய் சென்றது. அம்புயம் - தாமரை. இரவியின் தேரில் ஏழு குதிரைகள் பூட்டப் பட்டதென்பர்; "பச்சைமா ஏழு மேறப்போ யாறு மேறினர்" (பால: கையடைப்-23) என்றார் கம்பரும்; 'எழுவயப் புரவியூரு மிரதத்திரவி' என்றார் வில்லிபுத்தூராரும். (வீட்டும: 2:30) சூரியனது தேர்க்குதிரை ஏழெனப் பெயர்பெற்ற தொன்றே யென்பாரும், ஒரு குதிரைக்கு ஏழுபெயர்களென்பாரும், ஏழு குதிரைகளென்பாரும், ஏழுகுதிரைகளில் ஒன்று ஏழென்று பெயர் பெற்றதென்பாரும் எனப் பலதிறத்தவராவர். உழுவல் - அன்பு: எழுமையுந் தொடர்ந்த அன்பு உழுவலன்பு எனப்படும். நுண்ணறிவு - அரம்போலுங் கூரிய அறிவு. வீக்கம் - மிகுதி. ஒழுக்கு - ஒழுக்கம்; அநுட்டானம். நோதகவு இலாது - கேடில்லாது. அமைந்தாங்கு - (இன்றியமையாதது) பொருந்தி யிருப்பது போல; ஆங்கு - உவமவுருபு. செலீஇ - போய். நோய்ப்பிறவி - பிறவிநோய் என மாறுக. நோய் - துன்பம். நோற்றவர் புராணமில்லாது அமைதராது - திருத்தொண்டர் புராணம் இல்லாது முடியாது; எனவே, அது இன்றியமையாதது என்றபடி. இரண்டு எதிர்மறை ஒருடன்பாட்டுப்பொருளை வற்புறுத்த வந்தது. திருத்தொண்டர் புராணத்தை, 'நோற்றவர் புராணம்' என்றது, அத் திருத்தொண்டர்கள் தமக்கு வந்த துன்பங்களைச் செயற்கரிய செய்து பொறுத்தனராதலின் என்க. நுவன்று - அத்தகைய சீருடைப் புராணத்தைச் சொல்லி. பெம்மான் - விளி. சாதகப் புள்ளுக்கு மழைத்துளியும், சகோரப் புள்ளுக்கு' நிலாக்கதிரும், தாமரைக்குச் சூரியனும், தவத்திற்கு அருளும், அவ்வருள் விளக்கத்துக்கு உழுவலன்பும், கல்விக்கு

நுண்ணறிவும், நுண்ணறிவுக்கு ஒழுக்கமும் இன்றியமையாத தெனும்படி அமைந்திருப்பது போலப் பிறவிநோய்க்குத் திருத்தொண்டர்புராணம் இன்றியமையாததெனை உவமான முகத்தாற் காட்டினர். (96)

6. எய்குன்ற வார்சிலைப் பெருமா னுளத்துவகை
யெய்த மறையோர்கள் குழுமி
யியையவுப கரணமெல் லாந்தகச் சேர்த்தினிய
தென்னுமொரு தேத்த மர்ந்து
பொய்குன்ற யாககுண் டத்தழ லெழுப்பமேற்
போயபூம் புகைவா னொடு
பொலியுமுச் சைச்சிரவ மயிராவ தந்தான்
பொறுத்த நிறமே வச்செயா
மெய்குன்ற வந்தவா றென்னெனக் கற்பகம்
வெதும்பப் புரிந்து பின்னும்
விண்ணு டடங்கவு நண்ணு வரம்பையர்
விழித்துணை யொருங்கி மைப்பச்
செய்குன்றை யம்பதிச் சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினை
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல், குன்றைநகரில் மறையோர் எழுப்பும் வேள்விப்புகை செய்யும் அற்புதங்கள் கூறும். குன்றம் - மேருமலை. வார் - நீண்ட. சிலை - வில். மேருவை வில்லாக்கொண்ட பெருமான் - சிவபிரான். குழுமுதல் - திரளுதல். குழுமி, சேர்த்து, அமர்ந்து, எழுப்ப என இயையும். உபகரணம் - துணைக் கருவி; சாமக்கிரியை; ஈண்டு யாகஞ்செய்தற்கு வேண்டிய துணைப் பொருள்கள். தக - பொருத்தமுற. தேத்து - 'தேம்' என்னுஞ் சொல் அத்துச்சாரியை புணர்ந்து கெட்டது. தேம் - இடம்; தேத்து - இடத்து. அமர்ந்து - உட்கார்ந்து. பொய் குன்ற - அதருமம் நீங்க, அழல் - அக்னி. புகை - வேள்விப்புகை. வானொடு - வானில்: உருபுமயக்கம். உச்சைச் சிரவம், அயிராவதம் - இரண்டும் முறையே தேவேந்திரனது வெள்ளைக்குதிரையும், வெள்ளையானையுமாகும். இவை பாற்கடல் கடைந்தபோது அதினின் றெழுந்தவை. புகை தான் பொறுத்த நிறம் மேவச் செயா என்றது-புகையானது(மேற்குறித்த (பரி யானை) இரண்டும் வெள்ளை நிறம் நீங்கித் தன் கருநிறமடையும்படி செய்து என்றபடி. செயா - செய்து: உடன்பாட்டெச்சம். இது, மேல் 'புரிந்து' என்ற வினையெச்சத்தோடு இயையும். மெய் குன்ற வந்த ஆறு

என் என - [இவ்விரண்டும்] உடம்பின் நிறம் மாறும்படி வந்த வகை என்னை? என்று, கற்பகம் வெதும்பப் புரிந்து - [தேவ லோகத்துக்] கற்பகத் தரு வருந்தும்படி செய்து. அடங்கவும் - முழுவதும், நண்ணு - [புகை] நண்ணி: உடன்பாட்டெச்சம். அரம்பையர் - தேவமாதர். விழித்துணை - விழிகளிரண்டு. இமையாத தேவமாதரையும் இமைக்கச் செய்கிறது வேள்வியி லெழுப்பும் ஆகுதிப்புகை. இதனால், குன்றை நகர் மறையோர்கள் வாழுஞ் சிறப்புடைத் தென்றார். நகர்க்கு இங்ஙன் சிறப்புக் கூறுதலை, "ஏய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற்பதி......கடவூ ராகும்' (பெரிய, குங்கிலிய: 1); "புடையார் கமலத்தயன்போ லவர் பாதிரிப்புலியூர்'', "மொய்த்தகதிர்மதிபோல்வாரவர் பாதிரிப்புலியூர்'' (திருநாவுக்: தேவாரம்). (97)

7. புழுங்குங் கதிர்ப்பருதி யெழமுறுக் குடைமுகப்
புண்டரீ கத்த டத்துப்
பொலிதரச் சூழ்ந்துநிற் கின்றதரு விடபமலர்
பொழிமது முழுக்க வீழ்ந்தே
யெழுங்குங் குமத்தோ ளிணைந்தமுலை யார்கள்கன
விரதமன் றென்று நீங்க
வெறிதிரை கொளுங்காலை யளவிலோ திமமாங்க
ணெய்திப் படிந்து துளையா
வழுங்குந் தரத்தவாய் மேலெழமுன் னீங்கியோ
ராகமுழு வதுந னைந்தே
யருமைவெண் முகில்செய்ய தேன்பொழித லெனவியந்
தாகாய நோக்கி நிற்குஞ்
செழுங்குன்றை யம்பதிச் சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திநேன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல், குன்றையம்பதியில் மதுமழை பொழிதற் சிறப்புக் கூறும். புழுங்கும் - புழுங்கச்செய்யும் வெப்பத்தையுடைய. பருதி - சூரியன். முறுக்கு - பொதி. புண்டரீகம் - தாமரை. தருவிடபம் - மரக்கிளை. தருவிடப மலர் - கோட்டுப்பூ. மது - தேன். முழுக்க - எங்கணும். வீழ்ந்தே - வீழ்தலால். கனவிரதம் - நீர்: (கனம் - மேகம்; இரதம் - இரசம்: எனவே, நீர்). நீராட வந்த மகளிர் நீர்த்தடமன்று, மதுத்தட மென்று மயங்கவெண்ணி நீங்க என்றபடி. இங்கு, மயக்கவணி. ஓதிமம் - அன்னம். துளையா - நீரில் விளையாட. அழுங்கல் - ஆரவாரித்தல். "நொதுமற் கழறுமிவ் வழுங்கலூரே'' (குறுந்: 12).

தரத்தவாய் - தன்மையை யுடையவாய். முன் நீங்கியோர் - முன் நீரன்று என்று போன மகளிர். ஆகம் - உடம்பு. செய்ய - சிவந்த. வெண்முகில் செய்யதேன் - முரண்தொடை. இங்கு, ஐயவதிசய வணி. நிற்கும் - நிற்றற்குக் காரணமான. (98)

8. **வெங்கடிய வாணவ மலக்குருட் டிருளுளம்**
**வெரீஇப் பதறியோட் டெடுக்கும்**
**வெண்ணீறு சாதனம் விழைந்தவர்த முககமல**
**மேவுற் றெருங்கு மலரும்**
**பங்கமுற மேவுபர சமயர்வா யாம்பல்பல**
**வுந்துயர மைந்து குவியும்**
**பரவுவே தாகம புராணமெனு மங்கலப்**
**பணைமிக் கெழுந்தொ லிக்கும்**
**அங்கலுழு மாதரா ருடலி னெறிந்தகுழை**
**யன்றித் தடுப்பா ரில**
**ரவைகளையு மகலுற வகற்றினே மண்ணகத்**
**தமைய வெழுகின்ற தூய**
**செங்கதி ரெனச்சொலச் சேக்கிழார் குலாதிபன்**
**சிறுதே ருருட்டி யருளே**
**சிறுகோ லெடுத்தரசு செங்கோ லிருத்தினோன்**
**சிறுதே ருருட்டி யருளே.**

(கு-ரை.) இப்பாடல் சேக்கிழாரை மண்ணகத்துச் சூரியன் என்று சொல்லும்படி தேருருட்டி வரும்படி வேண்டுவது; சூரியன் நிகழ்த்துஞ் செயல்களும் சேக்கிழார்க்கேற்றி நயம்படக் கூறப்பட்டுள்ளது. ஆணவமலத்தை, 'வெங்கடிய குருட்டு இருள்' என்று உறுத்திச் சொன்னது - அதனை நீக்கலருமைபற்றி. ஆணவமல விருள் புறவிருள்போலன்றி அனைத்தையும் தான் மறைத்து நிற்ப தோடு தன்னையும் மறைத்து நின்று, ஆன்மாவோடு உடனுண்டாய தாய் ஏனையமலங்களுக்கும் மூலமாய் வலிமிக்கு நிற்பது என்பது அறிக. ஓட்டெடுக்கும் - விரைந்தோடும். சூரியனைக்கண்டு புறவிருள் விரைந்தோடுவதுபோல, சேக்கிழாராகிய சூரியனைக் கண்டு ஆணவமலவிருள் விரைந்தோடும். சாதனம் - உருத்தி ராக்கம் முதலிய சின்னம். சூரியனைக்கண்டு தாமரைமலர்தல் இயல்பு; அதுபோலச் சேக்கிழாரைக்கண்டு சிவசின்னந்தரித்த அடியார் முகத்தாமரை மலரும். பங்கம் - இழிவு; சேறுமாம். 'குழியில் விழுந்தளறு பாய்ந்து, என்றார் உமாபதிசிவமும். சூரியனைக் கண்டு ஆம்பல் குவியும்; அதுபோலச் சேக்கிழாரைக் கண்டு பரசமயத்தவர் வாயாம்பல் குவியும். ஆம்பலை வாய்க்கு ஒப்பிடுதல் மரபு. மங்கலப்பணை - மங்கல வாச்சியங்கள். சூரியோ

தயத்தில் பல வாத்தியங்கள் மங்கல வொலிகளையெழுப்பும்; அது போலச் சேக்கிழார் தோன்றியபின் வேதம், ஆகமம், புராணம் இவை மங்கலமாக மிக்கு ஓதப்பட்டன. கலுழும் - கலங்காநிற்கும். அம் குழை எனக் கூட்டுக. ஊடல் - காதற்பிணக்கு. ஊடலில் மகளிர் வீசியெறிந்த காதணிகள் நீ யுருட்டிவருஞ் சிறுதேரைச் செல்லவொட்டாதபடி தடுத்தால் தடுக்குமேயன்றிப் பிறரெவரும் தடுப்பாரிலர். இதனால், அம்மாதரார் ஒன்றுனும் முட்டில் செல்வத்தாரென்றபடி. "கனங்குழை, பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும், முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்" என்ற பட்டினப்பாலையடிகளின் கருத்தினைப் பிள்ளையவர்கள் உள்ளத்துக் கொண்டுளார் என்று ஈண்டு தெரிகிறது. அகலுற - அகலலுற. சொல - சொல்லும்படி. (99)

9. சுவையமையு மோதகங் கனிபலவு மற்றவுந்
தும்பிமுக வற்கு நல்கித்
தொழவமுது செய்தலா னூறென்ப திந்தநகர்
சூழ்நக ரினும்பு காது
நவையதடை யாதென்னி னச்சுமுதல் வலியவே
நவிலவேண் டுவதி னியெவன்
நன்னுதற் றிருநீறு நிலவெறிக் கக்குழை
நலங்கொண்மணி வெயிலெ றிக்க
அவையகம் வியக்குமுப் புலவருண் முக்கனி
யருந்தமிழ்ச் சுவைய னைத்தும்
ஆராய்ந் தெடுத்துப்பல் செய்யுண்முக மாவறிய
வறிவித்த பெருநா வலன்
சிவையுதவு சொற்கொண்ட சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினோன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) மோதகம் - கொழுக்கட்டை. மற்றவும் - பால் தேன்பாகு பருப்பு அப்பமொடு அவல் பொரி இன்னோரன்னவை. தும்பி முகவன் - யானை முகத்தான்; விநாயகன். அமுது செய்தலால் - அவ் விநாயகர் விரும்பியங்கீகரித்தலால் என்றபடி. ஊறு - விக்கினம்; இடையூறு: இந்த நகர் சூழ்நகரினும் - இந்தக் குன்றை நகரைச் சூழவிருக்கும் நகரங்களிலும்: தும்பிமுகவன் திருவருளிருந்தபடி யித்தன் மைத்து! நவையது அடையாது என்னின் - ஒரு குற்றமும் இங்கு வாராது என்னில், அச்சு முதல் வலியவே - (நினது) சிறு தேரின் அச்சு முதலிய தேர்ப்பகுதிகள் வலியனவே: பழுதுறு என்றபடி. நவையது, அது - பகுதிப் பொருள்

விகுதி. அச்சு - உருள்கோத்த மரம். முதல் என்றதால், ஆணி, உருள், கொடிஞ்சு, தட்டு, சுவர், மொட்டு முதலியனவுங்கொள்க. எவன் - என்னவிருக்கிறது? ஒன்றுமில்லையென்றபடி. எவன் - வினுவினைக்குறிப்புமுற்று. திருநீறு நிலவெறிக்கக் காதணியினிரத்தினம் வெயிலெறிக்கச் சிறு தேருருட்டியருள் என முடிக்க. அவையகம் வியக்கும் - சபையிலுள்ளோர் வியக்கும்படி. முப்புலவர் அருண்முக்கனி யருந்தமிழ்ச் சுவையனைத்தும் - தேவாரத்தின் சுவையெல்லாம். முப்புலவர் - சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர். முப்புலவர்க்கேற்ப முக்கனி கூறியவளவே கொள்ளவேண்டுவது. முக்கனி - மா, பலா, வாழை, முகமா - மூலமாக. அறிய அறிவித்த - அறிதற்குரியனவற்றை அறிவித்த. சிவை - உமையம்மை. உதவிய - கொடுத்த. சொல் - நெல். உமை வேளாளர் குலத்தார்க்கு நெல் கொடுத்த விவரத்தை இப்பருவத்து இரண்டாஞ்செய்யுளிற் குறித்தோம். ஆங்குக் காண்க. இனி, 'சத்தியின்றிச் சிவனில்லை' என்ற உண்மைக்கேற்பச் சிவையுதவிய சொல் என்பதற்கு - 'உலகெலாம்' என்ற சொல்லை எடுத்துதவிய எனப்பொருள் கொள்ளினுமாம். (100)

10. பண்புகெழு நின்சரித் திரமினிய பாவாற்
பரப்பிய திருக்கை லாய
பரம்பரை யுமாபதி சிவன் புகழு மவன்முனோர்
பைம்புகழு மவன் வழிவரு

நண்புபுனை தவர்புகழு மினிமேலும் வருபவர்
நயப்புகழு நீடு வாழ
நாடுவித நீசெய்த மாபுரா ணத்தமரு
நாயன்மார் பெருமை வாழ
விண்புகழு நால்வர்திரு வாய்மலர்ந் தருடிரா
விடவேத மென்றும் வாழ
மெய்யன்பி னின்னு லயப்பணி முதற்புரி
விருப்பமிக் கார்கள் வாழத்
திண்புவி யெடுத்தேத்து சேவையர் குலாதிபன்
சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினோன்
சிறுதே ருருட்டி யருளே.

(கு - ரை.) இப்பாடல் மங்கலமாக வாழ்த்துச் சொல்லோடு முடிகிறது. நின் சரித்திரம்-சேக்கிழார் புராணம். உமாபதிசிவன் - கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர். இவர் திருக்கைலாய பரம்பரையினர் என்பது குருவணக்கச் செய்யுளிற் காட்டப்பட்டது.

அவன் முனோர் - அவருக்கு முன்னிருந்த தேசிக குரவர். பைம்புகழ்- பசுமை, என்றும் மாறுமை மேலது: அவன் வழிவருநண்புபுனை தவர் என்றது, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை. இனி மேலும் வருபவர் என்றது - ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்குப்பின் பட்டத்துக்கு வருங்குரவர். நாடும் விதம் - எல்லோரும் நாடுமாறு; அனைவரும் விரும்பிக்கற்குமாறு. நால்வர் - சைவசமயகுரவர் நால்வர்; சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். நால்வர் - தொகைக் குறிப்பு. திராவிடவேதம் - )தமிழ்மறை; தேவார திருவாசகங்கள். மெய்யன்பு - உண்மையான பத்திமை. நின் ஆலயப்பணி - நீ செய்ததுபோலக் கோயிற்றிருப்பணிகள். சேக்கிழார் தாம் பிறந்த குன்றத்தூரில் ஓர் ஆலயப்பிரதிஷ்டை செய்து அதற்குத் திருநாகேச்சுரமென்று பேரிட்டு அதில் நித்திய நைமித்திக உற்சவங்களை வழுவாது நடப்பித்துக்கொண்டுவரச் செய்தமை நினைக. முதல் - முதலியவற்றை; மண்திணிந்த நிலனுதலின், திண்புவியென்றது. (101)

## ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முற்றிற்று

# சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

# சிறப்புப்பாயிரம்

★

இது

திருவாவடுதுறை ஆதீனத்து
அடியார்குழாத்தொருவரும், இந்நூலாசிரியடத்திற்
கல்விபயின்றவருமாகிய

## ஆறுமுக சுவாமிகளியற்றியது

★

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1. சீர்பூத்த பாலாற்றின் புனல்பரந்து காலாற்றிற் சேரலாலே, பார்பூத்த குடிதழைப்பப் பலவளனு மாங்காங்குப் பரவவாக்கிக், கூர்பூத்த வறிவான்மிக் கோபலரைத் தழுவியெளவை கூறுங் கூற்றை, நார்பூத்த நாடொறும்பார் நிறுவிவருந் தொண்டைவள நாட்டின் மாதோ.

2. மன்னியசீர் மறையொலியுந் தமிழ்வேத மறையொலியும் வயங்கு சீர்த்தி; துன்னியவா சகவொலியுந் தொண்டர்கள்செய் யரவொலியுந் துவன்றி யெங்கு, முன்னியமற் றவர்க்குவே ளாண்குலத்தோ ருபசரிக்கு மொலியு மேன்மேன், மின்னியகாலந்தொறும் விண் ணுடுசெவிடுறச் செய்குன்றை வியனூர் தன்னில்.

3. நிலந்தழைப்ப வெண்ணீற்று நெறிதழைப்ப வஞ்செழுத்து நிலவி மேன்மேல், வலந்தழைப்ப வுயர்சைவம் வலிதழைப்ப மறுசமயம் வறப்பத் தொண்டர், புலந்தழைப்ப வடியேம்விண் டலந்தழைப்ப நலந்தழைப்ப பொலிவே ளாளர், குலந்தழைப்பச் சேவையர்கள் குடிதழைப்பத் தமிழ்தழைப்பக் குறிப்பா ருய்ய.

4. உலகுய்யத் திருத்தில்லை நடநவில்வார் திருவருளா லொருவர் வந்து, கலவபுகழ்ப் பாலறு வாயர்முனந் தோன்றியருட் கார ணார்த்தம், விலகிலருண் மொழித்தேவ னெனும்பிள்ளைத் திருநாமம் விளங்கிப் பின்பு, சுலவுசேக் கிழார்மரபு விளக்கலிற்சேக் கிழாரெனும்பேர் துலங்கப் பூண்டு.

5. காற்றுபகை யநபாய னமாத்தியராய்ப் பெருமுதன்மை கதிர்ப்பப் பெற்றுத் தோற்றுபுறச் சமயமெலா மொருங்கவிய வென்றருளித் தொழுவார்க் கன்பு, தேற்றுதில்லை நடராசர் முதலருளத் திருத்தொண்டர் திருப்புராண, மாற்றுமல மருந்தெனவாய் மலர்ந்தருளும் பெரும் புகழார் மலர்ப்பூந் தாளில்.

6. தேக்குபுகழ்ச் சோணாட்டிற் றிரிசிரா மலையின்மிகு திருவ மோங்குந், தூக்குபுகழ் வேளாளர் குலாம்புதியிற் சிதம்பரவே டுலங்கப் பன்னு, ளாக்குபுக ழெனத்தோன்றிப் பலகலையு மொருங் கேயாய்ந் தான்றோர் பல்லோர், வீக்குபுகழ் பரந்தகயி லாயபரம் பரையாகி விளங்கா நின்ற.

7. எங்கடுறை சையையடைந்தம் பலவாண தேவனடி யினிது சூட்டத், துங்கமுடி வாய்ந்துசிவ ஞானகலை யகங்கை நெல்லித்தோற்றத் தாய்ந்து, கங்கைதரித் தருள்சடையோன் பலதலத்து மான்மியந்தன் கருத் னோர்ந்து, சங்கையில்செந் தமிழின்மொழி பெயர்த்தியற்றுங் பாட்டிற்றலைமை யானேன்.

8. மின்னுமர னடியன்றிச் விலும்வே றெண்ணாத விரதம் பூண்டோன், இன்னுமெம்போ ர்பருக் கிலக்கியமு மிலக் ணமு மெளிது தந்தோன், அன்னவ மீனாட்சிசுந்தரநா யலவனென வாய்ந்தோ ரியாரும், பன் பூதலமு மீதலமும் பாதலமும் பரவ நின்றோன்.

9. மற்றவர்மான் பெருமை யருமையுட னுளத்துணர்ந்து மகிழ்பே ரன்பாற், கற்றடய னின்றடைந்தோ மிம்மைமறு மைப்பயனுக்கதிர்க்கு மீதென், றுற்றருமை பெருமைதொண்டர் புராணவிரா சியமுழுது மொருங்கே தோன்றச், சொற்றபிள்ளைத் தமிழெனவோர் பாமாலை தொடுத்தனன்மெய்த் துறவோர் போற்ற.

10. வென்றபுக ழிணையார்மான் மியந்தமிழால் விரித்தருளு மேன்மை யாள, ரொன்றுபுகழ் மரபிலுளா ரிதுநயத்தற் குரியரென வுவந்து சான்றோர், நன்றுபொலி துறைசையிற் சுப்பிரமணிய குருமணியுண் ணயந்து நன்றென், றென்றுமுடி யடிகடொறுந் துளக்கவவை வியக்கவரங் கேற்றினனே.

———

# ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

## செய்யுள் முதற்குறிப்பகராதி

★


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அடியார் பெருமை | 38 | சொல்லும் பொருளுநனி | 56 |
| அண்டமளவும் வரை | 75 | சோறுமணக்கு | 36 |
| அத்தி தருங்கவி | 114 | தங்குதமக்கெதிர்நின்று | 116 |
| அலைக்கும்புனல்சூழ | 105 | தலைமயிர்பறித்துமரை | 93 |
| ஆயபரசமயக்கருங்கடா | 107 | தாங்கும் வளவனன | 100 |
| ஆன்றசிவபுண்ணிய | 110 | தாயவொளி யிருடபுபொன் | 24 |
| இரவோனெனத்திரிவை | 83 | திருநின்றசெய்யுள் | 10 |
| இலைமலியெனுங்கவி | 7 | திருப்பஞ்சாதிமறை | 53 |
| இவர்சரியையரிவர் | 30 | துங்கமிகுந்த | 37 |
| ஈற்றுத் தலையொருமவுலி | [illegible] | துருமமலர்கொய்து | 46 |
| உண்டலுடுத்தன்மணத்தல் | [illegible] | தோம்பல வுடையேம் | 27 |
| உற்ரு[illegible]சகியார் | [illegible] | நண்பாலெவரு | 33 |
| எண்ணியவையெண்ணிய | [illegible] | [illegible]நந்திவரைத்தலை | 31 |
| எ[illegible]ணியிதுசெய் | [illegible] | [illegible]நந்துபுராணமெவ்வள | 115 |
| எண்ணி[illegible]பொலி | 5[illegible] | [illegible]லத்தினுயரும் | 73 |
| எம்மையினிதாள்பவன் | 8[illegible] | [illegible]டிய விரிநூல் சொற்றிடு | 51 |
| எய்குன்றவார்சிலைப் | 125 | [illegible]ஞ்சார்தெய்வ | 58 |
| எள்ளுந்திறத்துப் | 79 | [illegible]யநாகேசுரரினி | 52 |
| ஏதமகலவளவன்முன | 101 | [illegible]விரிமதியுமொண் | 66 |
| ஒண்கொண்டபொதுவகத் | 21 | நீடுமன் பரிவையர் | 68 |
| ஒப்பரியதொண்டர்தம் | 23 | [illegible]ளைநேர்மாதரொடு | 63 |
| ஒழிக்குந்திறத்தினரு | 96 | நூலாறு தேர்ந்தவ | 59 |
| ஓங்குகயிலாய | 3 | படியிடையொருபை | 50 |
| ஓங்குமுனிவரரிருவர் | 108 | பண்புகெழுநின்சரித்திர | 129 |
| கடல்சூழ்ந்தயாப்பம | 16 | பத்தராயென்றெடுத் | 18 |
| கறைக்கண்டன்யாப்பினை | 15 | பத்திச்சுவை நனிசொட்ட | 38 |
| கனிவிலெமைப்பொரு | 115 | பாடுமதியோனெனப் | 80 |
| காதலொடுவாவென் | 94 | பிதிருந்தரமறவின்பா | 113 |
| கார்க்கோலமாலோன் | 43 | புகழ்சரியை கிரியை | 109 |
| கார்கொண்டசோலை | 5 | புண்ணியமுதலே | 28 |
| குறையுடைய பாம்பொன் | 87 | புழுங்குங்கதிர்ப்பருதி | 126 |
| சாதகப்பறவைக்கிரும் | 123 | பெருநாவலோவெனு | 91 |
| சாறுசால்வீதித்திரு | 85 | பொய்யடிமையில்லாத | 14 |
| சுவையமையுமோதகங் | 128 | பொருந்துநிலத்தே | 98 |
| சூழிய மேவியகொண்டை | 29 | பொருந்துமாயிரமுக | 26 |
| செற்றசெங்கன்னல்படு | 70 | பொருவரிய தொண்டர்கள் | 22 |
| செறிதமிழ்ச் சங்கத்து | 89 | பொன்னஞ்சிலம்பு | 103 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| மண்டலமதிக்குமணி | 64 | வசைதவிர் வினைத்திட்பம் | 122 |
| மண்டலைவேலைப் புவி | 41 | வம்பருயாப்புநவில் | 11 |
| மருவாய்நறுந்தா | 118 | வம்பிட்டொளிர்முலை | 48 |
| மன்னியதிருப்பாட்டி | 20 | வார்கொண்டவனமுலை | 13 |
| மாமேவு வான்பிறை | 1 | வாருந்திருவீதியினொரு | 95 |
| மாயாமலங்கருமமல | 71 | வில்லூருமணிமோலி | 111 |
| மாறுபடுமன்னவரெனி | 105 | விழையற முதற்கல்வி | 42 |
| மிக்குவருவெள்ளத் | 61 | விள்ளுமலராதனத்தானும் | 77 |
| முந்தவெழுமாற்றுயர் | 34 | விற்றங்கியவிபூதி | 76 |
| மும்மைமறையும் பரவு | 8 | வீங்குகருமேதிபிணர் | 62 |
| முரிவில்வயிரங்கால் | 35 | வெங்கடியவாணவமல | 127 |
| முறியுமலரும்பொருவு | 119 | வெண்ணந்துரறி | 32 |
| மேயபலவாரியர் | 60 | வெய்யவமையும்பர | 97 |
| மேயவம்போருக | 82 | வெருவப்பகைக்கடல் | 121 |
| மேவாத பாயுடஇ | 44 | | |